# சிவப்பு அங்கி



**கோட்டயம் புஷ்பநாத்**

**தமிழில்: சிவன்**

# சிவப்பு அங்கி

## கோட்டயம் புஷ்பநாத்

தமிழில் சிவன்

**சேது அலமி பிரசுரம்**

G-7. அரவிந்த் நரேன் என்கிளேவ்
8, மாசிலாமணி தெரு, பாண்டி பஜார்,
தி. நகர், சென்னை – 600 017.
© 044 2436 4243, 2432 2177

# சிவப்பு அங்கி

கோட்டயம் புஷ்பநாத் / தமிழில் சிவன்

முதற்பதிப்பு : நவம்பர், 2014

விலை : ரூ.180/-

**Sivappu Angi**
**by Kottayam Pushpanath / Translated by : Sivan**
**First Edition : November. 2014**
**288 Pages**
Published By :
**Sethu Alami Prasuram**
G.7,Arvind Narain Enclave,
8, Masilamani Street
Pondy Bazaar,
T.Nagar,Chennai - 600 017.
✆ 044-2436 4243, 2432 2177
Telefax : 044-24364243
e-mail : kavitha_publication@yahoo.com
Website: www.kavithapublication.in

**ISBN NO** : 978-81-8345-450-6
**PRICE** : Rs. 180/-

**DTP** : S.SUDHA, Chennai - 33

**Printer** : Ganapathy Process, Chennai.

# என்னுரை

மலையாள மொழியின் பிரபலமான 'மலையாள மனோரமா' இதழில் 1989-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் இருந்து ஆகஸ்ட் மாதம் வரை 27 வாரங்கள் கோட்டயம் புஷ்பநாத் எழுதிய தொடர்கதைதான் 'சிவப்பு அங்கி'. 'சாவி' வார இதழின் 1995-ஆம் ஆண்டு பொங்கல் மலரில் இதை ஒரு புதுமையான நாவலாக வெளியிட்டவர் ஆசிரியர் திரு. சாவி, இந்த நாவலின் முதல் இரண்டு பக்கங்கள் படக் கதையாகவும், மீதமுள்ளவை வழக்கமான நாவல் பாணியிலும் வெளியானது, துரதிருஷ்டவசமாக சாவி இதழ் இதன் இரண்டாவது அத்தியாயத்துடன் நின்று போனது,

கோட்டயம் புஷ்பநாத்தின் ஒரு நாவலை, நான் முதன்முறையாக மொழிபெயர்த்தது 'மங்களம்' தமிழ் வார இதழில்தான். ஆனால், நான் ஒரு மொழிபெயர்ப்பாளனாக அறியப்பட்டது, 'சாவி' வார இதழில் 'மோகினி ' தொடர் வெளியான போதுதான். ஆசிரியர் திரு.சாவி என்றென்றும் என் நன்றிக்கு உரியவர். என் தந்தையாருக்குப் பிறகு நான் காலில் விழுந்து ஆசி பெற்ற இரண்டாவது மனிதரும் அவர்தான். அவரது புண்ணியம் இன்றும் எனது மொழி பெயர்ப்பு எந்தவிதத் தடங்கலுமின்றித் தொடர்கிறது, நல்ல மனிதர்கள் தொடங்கி வைப்பதெல்லாம் நல்லதாகவே தொடர்கிறது.

ஆங்கில நாவலின் தன்மையில் வாராவாரம் ஆவலை ஏற்படுத்தும் விதமாக ஒரு நாவலைத் தொடரும் வித்தையைக் கைவரப் பெற்றவர் திரு. கோட்டயம் புஷ்பநாத்.

மொழிபெயர்க்க அனுமதி அளித்த கோட்டயம் புஷ்பநாத், வெளியிட்ட சாவி இதழ் மற்றும் புத்தகத்தை வாங்கி ஆதரிக்கும் வாசகப் பெருமக்களான உங்களுக்கும் என் நன்றி உரித்தாகிறது.

தோழமையுடன்
சிவன்

# சிவப்பு அங்கி

# 1

பகல் பொழுது எரிந்து அடங்கியது, இருளின் கனமான கம்பளிக் கோட்டு, பூமியைச் சுற்றிக் கொள்ளத் தொடங்கியது.

மௌனம் நிறைந்த நிமிடங்கள் கடந்து செல்லச் செல்ல, ஃபாதர் பிரான்சிஸின் மனத்தில் பரபரப்பும் படபடப்பும் நிரம்பிக் கொண்டிருந்தது.

மாலை நேரப் பிரார்த்தனைக்குப் பிறகு அவசர அவசரமாக இரவு உணவை அருந்தினார் அவர். அதைத் தொடர்ந்து பிரான்சிஸ் ஏதோ சீரியஸான வேலையில் ஈடுபடப் போவது போல் தோன்றியது.

தேவாலயத்தை ஒட்டிய தனது படுக்கை அறையின் கதவு மற்றும் ஜன்னல்களை பத்திரமாக இழுத்து மூடினார். பிறகு நடுங்கும் கைகளுடன் புத்தகம் ஒன்றை எடுத்துப் பிரித்தார்.

அது ஒரு பழைய புத்தகம். அதன் தாள்கள் இற்றுப் போயிருந்தன, வெளிப்புற அட்டை ஏறத்தாழச் செல்லரித்து ஓட்டைகள் நிரம்பியிருந்தன. அன்று மதியம்தான் ஃபாதர் பிரான்சிஸ் அதைத் தனது பரம்பரை வீட்டிலிருந்து எடுத்து வந்திருந்தார்.

மொத்த தைரியத்தையும் வரவழைத்துக் கொண்டு பிரான்சிஸ் அந்தப் புத்தகத்தின் முதல் வரியை வாசித்தார்.

இதைப் படிப்பவர்கள் அவர்களது முழுமனத்தையும் சாத்தானுக்குச் சமர்ப்பிக்க வேண்டும். அதற்கான வழிகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

பயந்து நடுங்கி வியர்த்து விதிர்விதித்த அவர், சட்டென்று புத்தகத்தை மூடி வைத்தார். பிறகு நீண்ட நேரம் கண்ணை மூடியபடி அப்படியே உட்கார்ந்திருந்தார். அவர் உடம்பிலிருந்து வியர்வை கிளை கிளையாக வாய்க்காலிட்டு வழிந்தோடியது. சற்று நேர அமைதிக்குப் பிறகே மூச்சுத் திணறும் அந்த மனநிலையிலிருந்து அவர் விடுபட்டார்.

அவரிடம் அந்தப் புத்தகம் வந்து சேர்ந்ததே முற்றிலும் எதிர்பாராத விதமாகத்தான்.

புராதனமான கிறிஸ்தவக் குடும்பம் ஒன்றைச் சேர்ந்தவர் பிரான்சிஸ். புனித தோமா ஸீஹா கேரளாவுக்கு வந்தபோது பிராமணக் குடும்பம் ஒன்று கிறிஸ்தவ மதத்தை ஏற்றுக் கொண்டது. கல்லம்பள்ளி மங்கலம் என்பது அந்த வீட்டாரது பெயர். ஒரு காலத்தில் மிகவும் புகழ் பெற்ற ஜோதிடர்களாவும், மாந்திரீகர்களாகவும் விளங்கியவர்கள் அந்தக் குடும்பத்தினர்.

அந்தச் சமயத்தில் மாந்திரீக வித்தையில் தேர்ந்த புரோகிதர் ஒருவர், வடக்குத் திருவிதாங்கூரிலிருந்த வந்து அந்த வீட்டில் தங்க நேர்ந்தது. மாந்திரீகரான நம்பூதிரி ஒருவரைத் தோற்கடித்து விட்டு வரும் வழியில் அவர் அங்கு சற்று ஓய்வெடுக்க வந்தார்.

எதிர்பாராமல் வந்தவர் என்றாலும் ஏறத்தாழ ஒரு வருட காலம் அந்த வீட்டில் தங்கினார். கல்லம்பள்ளி மங்கலத்து வீட்டுக்காரணவரான அந்த்ரயோஸ், வந்தவரிடமிருந்து வியப்புக்குரிய மந்திரங்கள் பலவற்றைக் கற்றுக் கொண்டார். மட்டுமன்றி, அவர் அங்கிருந்து புறப்படும் போது அந்த்ரயோஸிடம் ஒரு புத்தகத்தை வழங்கினார். அந்தப் புத்தகத்துடன் எச்சரிக்கை ஒன்றையும் தரத்தவறவில்லை அவர்.

“எந்தக் காரணம் கொண்டும் இந்தப் புத்தகத்தை அநாவசியமாக எவரும் திறந்து பார்க்கக் கூடாது. சாத்தான் மற்றும் அவன் பரிவாரங்களைச் சுவாதீனம் செய்து மற்றவர்களுக்குத் தொல்லை தருவதுதான் இந்தப் புத்தகத்தின் நோக்கம். இருப்பினும், இதன் கடைசிப் பகுதியில் பைசாசிக சக்திகளை எவ்வாறு அழித்து ஒழிப்பது என்பது பற்றியும் கூறப்பட்டுள்ளது. எதனால் இந்தப் புத்தகத்தை அழிக்காமல் இன்னும் வைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று நீங்கள் யோசிக்கக்கூடும். இந்தப் புத்தகத்தை அழிக்க முடியாது. நெருப்பிலெறிந்தாலும் இது எரியாது. கடலில் போட்டாலும் கரைந்து போகாது. மண்ணுக்குள் புதைத்தாலோ, ஆழமான பாழடைந்த இடத்தில் போட்டு வைத்தாலோ கூட இது அழியாது!

விவேகமற்ற ஒருவன் கையில் இது அகப்பட்டால், இதில் கூறப்பட்டுள்ளதையெல்லாம் படித்து, பைசாசிகசக்திகள் பெற்று, மோசமான ஒருவனாக அவன் நடமாடுவான். இளமையை இழக்காமல் அனேக வருடங்கள் அவன் உயிர் வாழவும் கூடும். நான் இனிமேல் அதிக நாட்கள் உயிர் வாழ்வேனா என்பது சந்தேகத்துக்குரிய விஷயம். எனவே, நீங்கள் இந்தப் புத்தகத்தைக் கவனமாகப் பாதுகாத்து வையுங்கள்...”

எனவே, அந்த்ரயோஸ் அந்தப் புத்தகத்தை மரத்தாலான சுவர் கொண்ட அந்த வீட்டின் அறையொன்றில் பத்திரமாகப் பூட்டி வைத்தார். அவருக்குப் பிந்தைய தலைமுறையினர் இதைத் தெரிந்து கொள்ளாமலே தங்களது காலத்தைக் கழித்தனர்.

அந்தக் குடும்பத்தில் முதன் முதலாகப் புரோகிதரானவர் பிரான்சிஸ். இரட்டைக் குழந்தைகளாகப் பிறந்தவர்களில் மூத்தவர். அவரின் உடன் பிறந்த தம்பி பர்னாண்டஸ்.

ஒரே அச்சில் வார்த்தது போலத் தோற்றமளித்தனர் இந்த இரட்டையர். முகம், உயரம், உடல்வாகு மட்டுமல்ல, குரலும் பேச்சும்கூட ஒரே மாதிரி இருந்தன. பெற்றோரோ இந்த இருவரையும் பிரித்தறிய மிகவும் சிரமப்பட்டனர்.

உயர்நிலைப்பள்ளி மற்றும் கல்லூரிகளில் படித்த காலத்தில் இருவரும் நடிப்பு, பாட்டு போன்றவற்றிலும், புகழ்பெற்று விளங்கினர். பர்னாண்டஸ், 'நல்ல நடிகன்' என்று பலமுறை பாராட்டப்பட்டு பரிசுகளும் வாங்கியிருந்தான்.

ஒரு சில நடவடிக்கைகளில் பர்னாண்டஸ், பிரான்சிஸ் மாதிரி இல்லை. படிக்கும் பருவத்திலேயே அழகான ஆடை அணிந்து, பெண்களை வசியப் படுத்துவதில் பர்னாண்டஸ் கெட்டிக்காரனாக விளங்கினான்.

இந்தக் குடும்பத்திலிருந்து யாரவது ஒருவர் வைதிகனாக வேண்டும் என்பது அவர்கள் அம்மாவின் ஆசை. அவர்களின் மூத்தமகன் ஆண்ட்ரூஸ், இளமையிலேயே திருமணம் செய்து கொண்டான். எனவே, பிரான்சிஸிடம் செமினாரியில் சேர்ந்து கொள்ளுமாறு அம்மா கூறினார். அவருக்கும் அது விருப்பமானதாக இருந்தது. ஆனால், பர்னாண்டஸைப் பிரிந்திருப்பது பிரான்சிஸுக்கு மிகவும் வருத்தமாக இருந்தது.

"அம்மா! என்னுடன் பர்னாண்டஸும் செமினாரியில் சேரட்டும். அவனுடைய இந்தப் பழக்க வழக்கங்களிலும் மாற்றம் நேரலாம்..." பிரான்சிஸ் ஆலோசனை கூறினார்.

கடைசியில் அம்மாவின் வற்புறுத்தலுக்கு இணங்கி வேறு வழியில்லாமல் மனமில்லா மனதோடு செமினாரியில் சேர்ந்தான் பர்னாண்டஸ். சேர்ந்த ஒரு வருடத்திலேயே அங்கிருந்து ஓடி வந்துவிட்டான். அதன் பிறகு அவனது வாழ்க்கை நாடக மேடைகளிலும், இசைக்குழுக்களிலுமாகக் கழிந்தது.

வைதிகப் படிப்பை முடித்த பிரான்சிஸ் வீட்டிற்குத் திரும்பி வந்தார். சற்றுத் தொலைவிலுள்ள மாதாகோயில்

ஒன்றில் ஞானத் தந்தையாகப் பதவி ஏற்றார். வேலையில் சேர்ந்து மிகக் குறுகிய நாட்களுக்குள்ளேயே, அக்கம் பக்கத்து மனிதர்களையும் கவரவும் செய்தார்,

வருடங்கள் சில கடந்தன.

அவ்வப்போது ஃபாதர் பிரான்சிஸ் தமது வீட்டிற்கு வந்து உறவினர்களைச் சந்தித்துப் பேசுவதுண்டு. அதே போல் ஒரு தடவை வந்த போது வீட்டில் மராமத்து வேலை நடந்து கொண்டிருந்தது. சிறிய சிறிய அறைகளைப் பிரித்து, பெரிய அறைகளாக மாற்றிக் கொண்டிருந்தனர். சுவர்கள் எல்லாம் மரத்தாலானதால் தச்சர்கள் தீவிரமாக வேலையில் ஈடுபட்டிருந்தனர்.

எத்தனையோ தலைமுறைகளின் நினைவுகளுடன் தூசும் தும்பும் உறைந்து கிடந்த அறைக்குள்ளாக நடந்த போது சுவரில் இருந்த ஒரு சாவித்துவாரம் பிரான்சிஸின் கண்ணுக்குத் தட்டுப்பட்டது.

சிறிய கோடரியால் பூட்டைத் தட்டி உடைத்துத் திறந்த போது, சிவப்பு நிறப் பட்டுத் துணியில் முடியப் பட்டிருந்த ஒரு புத்தகம் அவரது நினைவுகளைக் கிளறவே, காலத்தில் அவர் பின்னோக்கிக் கடந்தார்.

அந்தப் புத்தகத்தின் உள்ளடக்கம் என்ன என்பதைத் தெரிந்து கொள்ளும் ஆர்வத்துடன், தேவாலயத்தை ஒட்டிய அறைக்கு அதை எடுத்து வந்திருந்தார்.

ஆனால், பகல் நேரத்தில் இடைவிடாமல் வந்த பக்தர்கள் மற்றும் பார்வையாளர்களால் அதைப் பற்றி நினைக்கக் கூட முடியவில்லை. எனவே, இரவை ஆவலுடனும், பரபரப்புடனும் எதிர்பார்த்துக் காத்திருந்தார் பிரான்சிஸ்.

மனத்தைச் சற்றுத் திடப்படுத்திக் கொண்டவராக மீண்டும் அந்தப் புத்தகத்தைப் பிரித்தார். மிகுந்த கவனத்துடன் அவர் கண்கள் புத்தகத்தின் ஒவ்வோர் எழுத்தையும் கடந்தன.

'கவனிக்கவும்.... பிசாசுகளின் தலைவனான லூஸிஃபரை ஆராதனை செய்து வரவழைத்து, அந்தப் பிசாசின் அனுக்கிரகத்தைப் பெறுவதற்கான பூஜை முறைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன'.

அதே சமயம் வெளியே ஒரு கார் வந்து நிற்கும் சத்தம் கேட்டது. பிரான்சிஸ் அசவர அவசரமாகப் புத்தகத்தை மெத்தைக்கு அடியில் மறைத்து வைத்துவிட்டுக் கதவைத் திறந்தார்.

வந்தது பிரான்சிஸின் உடன் பிறந்த சகோதரன் பர்னாண்டஸ்தான். ஒரு பெட்டியுடன் அவன் அந்த அறைக்குள் நுழைந்தவுடன், வெளியே கார் புறப்படும் சத்தம் கேட்டது.

பிரான்சிஸ், பர்னாண்டஸை ஒரு தடவை ஊன்றிக் கவனித்தார். அவனைப் பார்ப்பது தன்னையே நிலைக் கண்ணாடியில் பார்த்துக் கொள்வது போலிருந்தது. உண்மை தான்! இப்போதும் தனக்கும் அவனுக்கும் எந்த விதமான வேறுபாடும் தெரியவில்லை.

"இத்தனை நாட்களாக நீ எங்கே இருந்தாய்?"

"அதையெல்லாம் விவரமாகச் சொல்கிறேன். முதலில் நான் குளிக்க வேண்டுமே?" என்றபடி லுங்கியில் புகுந்து கொண்ட பர்னாண்டஸ், துண்டு மற்றும் சோப்பை எடுத்துக் கொண்டு ஏதோ ஒரு பாட்டை முணுமுணுத்தபடி குளியலறையை நோக்கி நடந்தான்.

பர்னாண்டஸை குளியலறையருகே பார்த்த சமையல்காரன் லூக்காஸ் அதிசயமாகக் கேட்டான்: "நீங்கள் தான் குளித்து, சாப்பிட்டுவிட்டுப் படுக்கப் போய் விட்டீர்களே? மறுபடியும் குளிக்கவா போகிறீர்கள்? "

"நீங்கள் சமையற்காரரா? "

யாரோ ஒரு புதிய மனிதனிடம் பேசுவதைப் போல் கேட்கவே, சமையற்காரர் ஒரு கணம் தடுமாறினார்.

“நான் பிரான்சிஸ் அல்ல; அவர் தம்பி பர்னாண்டஸ்?”

“கடவுளே.... இப்படிக் கூடவா அதிசயங்கள் நடக்கும்? உங்களைப் பற்றிக் கேள்விப்பட்டிருந்தேன். ஆனால், இப்படி இருப்பீர்கள் என்று நான் எதிர்பார்க்கவே இல்லை! ”

குளித்து முடித்துவிட்டு வந்த பர்னாண்டஸ் ரொட்டியையும் டீயையும் சாப்பிட்டு ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்தான்.

“உன்னைப் பார்த்து வெகு நாட்களாகி விட்டதே? இத்தனை நாள் எங்கே இருந்தாய்?”

“நான் ஒரு நாடக ட்ரூப்பில் இருந்தேன். ‘டிராகுலாவின் மறு வரவு’ என்பது நாடகத்தின் பெயர். அதில் நான்தான் ராஜபார்ட் அதாவது டிராகுலா”.

“நல்ல வேளையாக, உனது குணத்தில் அப்படிப்பட்ட மாற்றம் எதுவும் இல்லையே?”

“அப்படி நடித்து நடித்துக் கடைசியில் டிராகுலாவாகி விடுவேனோ என்று பயம் தோன்றுகிறது. ஒழுங்காக ராத்திரி வேளையில் தூங்கியே எத்தனை நாளாயிற்று தெரியுமா?”

சிகரெட்டின் அடிப்பகுதியை விரலால் சுண்டியபடி கட்டிலில் அமர்ந்தான் அவன்.

பிரான்சிஸ் ஒரு கணம் என்ன செய்வதென்று புரியாமல் தடுமாறினார். புத்தகத்தை மறைத்து வைத்த படுக்கை மீதுதான் பர்னாண்டஸ் உட்கார்ந்தான். இந்த நேரத்தில் அங்கிருந்து அந்தப் புத்தகத்தை எடுத்தால் துருவி விசாரிப்பான். அதற்கெல்லாம் பதில் சொல்லி, அவனிடம் அதைப் பற்றி விளக்க நேரிடலாம். எனவே, அறையிலேயே விட்டு விட்டு

மற்றோர் அறையில் போய்ப் படுத்துக் கொண்டார் பிரான்சிஸ். பயணக் களைப்பில் இருந்த பர்னாண்டஸ், உடனே விளக்கை அணைத்து விட்டுப் படுத்துக் கொண்டான்.

தூக்கத்தில் புரண்டு படுத்தபோது, முதுகில் ஏதோ உறுத்துவது போலத் தோன்றவே பர்னாண்டஸ் முதலில் கையால் அதைத் தடவிப் பார்த்தான். சற்றுப் பருமனான ஒரு புத்தகம். சரி; வேதப் புத்தகமாக இருக்கும் என்று நினைத்து அதை அருகிலிருந்த மேஜை மீது வைக்கப் போனவன். அந்தப் புத்தகத்தின் அட்டையிலிருந்த இரண்டு கண்கள் இருட்டிலும் ஜொலிப்பதைப் பார்த்தான்.

திடுக்கிட்ட பர்னாண்டஸ் துள்ளி எழுந்து டேபிள் விளக்கைப் போட்டான்.

வியப்புடன் புத்தகத்தின் அட்டையைப் புரட்டினான். தொடர்ந்து பக்கங்களைத் திருப்பினான். ஆவல் அதிகரித்தது. பார்த்தாலே எவரும் நடுங்கி விடக்கூடிய ஒரு படம். லூஸிஃபர் என்ற சாத்தானின் படம். பயங்கரமான வடிவம்!

பர்னாண்டஸ் அந்தப்படம் இருந்த பக்கத்தை மட்டும் கிழித்து எடுத்தான். அதை விளக்கிற்குப் பின்புறமிருந்த டேபிளில், ஜன்னலருகே வைத்தான். பிறகு ஆரம்பத்திலிருந்து அந்தப் புத்தகத்தை ஒரு வரி விடாமல் வாசிக்கத் தொடங்கினான். அந்த அறைக்குள் லூஸிஃபரை வெளிப்படுத்த முடியாது என்று பர்னாண்டஸுக்கு விளங்கியது.

அந்தக் கட்டிடத்தின் பின்புறத்தில், விருந்தினர்கள் வந்தால் தங்க வைப்பதற்காக ஓர் அறை இருந்தது. பர்னாண்டஸ் ஏற்கெனவே அந்த அறையைப் பார்த்திருக்கிறான். அதன் சாவி எதிரேயிருந்த ஆணியில் தொங்கிக் கொண்டிருந்தது. பர்னாண்டஸ் கிழித்த தாளையும், சாவியையும் எடுத்துக் கொண்டு அந்த அறையை நோக்கி நடந்தான்.

மேஜை மீது இருந்த விளக்கைக் கொளுத்தி, அந்தப் படத்தை அதன் மீது சாத்தி வைத்தான். புத்தகத்தில் படித்ததை

நினைவுபடுத்தி, அதே போல் தன் விரலை லேசாக வெட்டி அந்தப் படத்தின் முன்பாகச் சொட்டுச் சொட்டாக ரத்தத்தைச் சொரிந்தான்.

ஆச்சரியம்...!

கை விரலிலிருந்து கீழ் நோக்கி இறங்கிய ரத்தத் துளிகள் பாதி வழியிலேயே காணமாற் போயின. அமைதியாக இருந்த சுற்றுப்புறம் நடுங்குவது போல் தோன்றியது. வெளியே காற்று விசிலடிப்பது மாதிரி ஊளையிட்டது. கூடவே, ஏதேதோ தெளிவற்ற குரல்களின் கலவையான சத்தமும் கேட்டன.

அறைக்குள் ஒளிந்திருந்த இரவுப்பூச்சிகள் பயந்து மிரண்டவை போல் தீனக்குரலில் ஒலியெழுப்பின. அவற்றையும் மீறி சட்டென்று கண்ணாடித் துண்டுகள் உடைந்து நொறுங்குவது போன்ற ஒரு சத்தம் கேட்டது.

"போதும்... முதலில் ரத்தத்தை நிறுத்து! இதுவே போதும் எனக்கு!"

பயங்கரமானதும் பைசாசிகமானதுமான அந்தக் குரலைக் கேட்டதும், பர்னாண்டஸ் காயத்தை விரலால் அழுத்திப் பிடித்தபடி தலையை உயர்த்திப் பார்த்தான்.

ஜொலிக்கும் தீக்கொழுந்துகளின் நிறமுள்ள தெளிவற்ற உருவம் ஒன்று அந்தப் படத்திற்கு முன்னால் நின்று கொண்டிருந்தது. நீண்டு வளைந்த, கழுகின் அலகு போன்ற மூக்கு. பளபளக்கும் கண்கள். மேற்புறமாக வளைந்து எழும்பியிருந்த தடித்த புருவங்கள், தலையின் இருபுறமும் காதுகளின் மேற்பகுதியில் வளர்ந்து வளைந்திருந்த இரண்டு கொம்புகள். ரத்தம் போன்ற ஓர் ஆடையை அணிந்திருந்தது அந்த உருவம்.

"லூஸிஃபர்! பிசாசுகளின் தலைவன்!"

"பர்னாண்டஸ்...கேள். உனக்கு என்ன வேண்டும்?" பீதியேற்படுத்தும் மோசமான மனநிலை கொண்ட பர்னாண்டஸின் மனத்திற்குள் மகிழ்ச்சி பொங்கி வழிந்தது.

“எனக்கா... எனக்கு எல்லாமே வேண்டும். நான் நினைப்பதெல்லாம் நடக்க வேண்டும். எனது இளமை ஒரு போதும் அழியவே கூடாது!”

அவனது பேராசையைக் கேட்ட லூஸிஃபர் வாய்விட்டுச் சிரித்தான்.

“எனது தேவை மனித ரத்தம்தான். அதுவும் அழகாக இளம்பெண்களின் சூடான ரத்தம். அவர்களைக் கவர்தவற்கான முழுச் சக்தியையும் இந்த நிமிடத்திலிருந்து உனக்கு வழங்குகிறேன்”.

எல்லாவற்றையும் ஒரு கனவோ என்று பார்த்துக் கொண்டிருந்த பர்னாண்டஸ், சற்று தயக்கத்துடன் கேட்டான்: “எனக்குக் கிடைத்திருக்கிற இந்தச் சக்திகளை நான் எந்த இடத்தில் செயல்படுத்துவது?”

“நல்ல கேள்வி. பொருத்தமான ஓர் இடத்திலிருந்து கொண்டுதான் இந்தக் கேள்வியைக் கேட்கிறாய். நீயும் உன் சகோதரனைப் போலவே இருக்கிறாய். உன் சகோதரனை இல்லாமல் செய்துவிட்டு, அதே இடத்தில் ஒரு போலிப் புரோகிதனாக நீ இங்கேயே இவற்றைக் தொடரலாம். அப்படிச் செய்தால், யாருக்கும் எந்த விதமான சந்தேகமும் தோன்றாது!”

“என்ன... சகோதரனைக் கொல்வதா?” - பர்னாண்டஸ் திடுக்கிட்டவனாகக் கேட்டான்.

“அதற்கு ஏன் உனக்கு இவ்வளவு தயக்கம்? உனக்குத் தான் இதில் ஏற்கெனவே நல்ல பழக்கம் உள்ளதே. நாடக ட்ரூப்பில் ஒருத்தியை மூச்சுத்திணற வைத்து நீ கொல்ல வில்லையா?”

பர்னாண்டஸ் ஒரு கணம் ஆடிப் போனோன்.

“அப்படியே இதையும் செய்தால் போதும். அவன் நல்ல தூக்கத்தில் இருக்கிறான். தலையணையைப் போட்டு அவன்

முகத்தை அழுத்து... மூச்சு தானாக நின்றுவிடும். பிண உடம்பை, கல்லறையிலுள்ள ஏதாவது ஒன்றின் ஸ்லாப்பைச் சற்று நகர்த்தி அதற்குள் போட்டு விடு. காரியம் சுலபமாக முடிந்து விடும். நான் இனிமேல் எப்போதும் உன்னுடன் இருப்பேன். அதாவது உன்னுடம்பில் நான் இருப்பேன்! "

அதே விநாடியில் தனக்கு அசாதாரணமான பலமும் தைரியமும் ஏற்பட்டு விட்டதாக பர்னாண்டஸுக்குத் தோன்றியது. பூனை மாதிரி, காலடியோசை கேட்காமல் பிரான்சிஸின் அறையை நோக்கி நடந்தான். லூஸிஃபர் சொன்னபடியே எல்லாவற்றையும் செய்தான். சற்று நேரத்தில் பிரான்சிஸின் துடிப்பு அடங்கியது. அந்த உடம்பைத் தோளில் போட்டவாறு பர்னாண்டஸ் அறைக்கதவைத் திறந்து கொண்டு பின்புறமிருந்த கல்லறைகளை நோக்கிக் காரிருளில் நடந்தான்.

தேவாலயத்தை ஒட்டிய கல்லறை அது. பைசாசிகமான சக்தி இருந்ததால், கல்லறையின் மூடியான ஒரு சிமெண்ட் ஸ்லாப்பை நீக்குவது அவனுக்குக் கஷ்டமாக இருக்கவில்லை. உடம்பை அதற்குள் வீசி எறிந்த பின், பழையபடி அதை மூடிவிட்டுத் தனது அறைக்குத் திரும்பினான்.

இரவின் அமைதியை பலவந்தமாகக் கிழித்துக் கொண்டு தூரத்தில் எங்கோ நாய்கள் ஊளையிடும் சத்தம் அதிகரித்துக் கொண்டே வந்தது.

பொழுது விடிந்தது முதல் பர்னாண்ட்ஸ், பிரான்சிஸாக நடிக்கத் தொடங்கினான். அதாவது ஒரு பாதிரியாராக. 'எங்கே நேற்று இரவு வந்தாரே உங்கள் தம்பி, காணவில்லையே?' என்று சமையற்காரன் கேட்டபோது கூட, பர்னாண்டஸ் சமத்காரமாக பதிலளித்தான்.

"அவன் எந்த இடத்திலும் நிரந்தரமாகத் தங்க மாட்டான். அவனது குணம் அப்படி. விடியற்காலையில் ஒரு கார் வந்தது. ஏறிப்போய்விட்டான்".

காலைப் பலகாரத்தை முடித்துக் கொண்டு பாதிரியாரது உடையை அணிந்தவனாக, பர்னாண்டஸ் தேவாலயத்தின் வெளிப்புறப் பகுதிகளைச் சுற்றிப் பார்த்தான். கல்லறை மைதானத்தை ஒட்டி ஓர் ஓரமாக இருந்த கட்டிடம் சட்டென்று அவனது கவனத்தைக் கவர்ந்தது. முன்னொரு காலத்தில் அதுவும் ஒரு தேவாலயமாக இருந்தது.

புதிய கட்டிடம் கட்டிய பிறகு, அந்தப் பழைய கட்டிடத்தை இடிக்காமல் அப்படியே விட்டு வைத்திருந்தனர். பர்னாண்டஸ் கவனமாக அந்தக் கட்டிடத்தைச் சுற்றி வந்தான். தனது பைசாசிகச் செயல்களுக்கு அதுதான் சரியான இடம் என்று அவனுக்குத் தோன்றியது.

உடனே லூக்கோஸை அழைத்து அந்தக் கட்டிடத்தைச் சுத்தம் செய்யச் சொன்னான். ஒரு கட்டில், மேஜை மற்றும் சில நாற்காலிகளை அங்கு கொண்டு வந்து போடச் சொன்னான்.

“எதற்காக இந்தப் பாழடைந்த கட்டிடத்துக்கு வருகிறீர்கள்? அதுதான் சௌகரியமான புதிய கட்டிடம் இருக்கிறதே?” - லூக்கோஸ் ஆவலுடன் கேட்டான்.

“நான் நிம்மதியாகப் பிரார்த்தனை செய்ய வேண்டும். அதற்கு இதுதான் சரியான இடம். புதிய கட்டிடத்தில் தனிமை என்பதே கிடையாது!”

அன்று இரவே பர்னாண்டஸ் அந்தக் கட்டிடத்தில் உறங்கினான். நள்ளிரவானபோது லூஸிஃபரது படத்திற்கு முன்னால் ரத்தத் துளிகளைச் சிந்தி, அவனை வரவரழைத்தான்.

“பர்னாண்டஸ், நீ ஒரு காரியத்தை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். என்னை முழுவதுமாக நம்பி ஏற்றுக்கொள்ள வேண்டும். முழுக் கவனமும் என் மீதுதான் இருக்க வேண்டும். இதில் ஏதாவது மாற்றம் நிகழ்ந்தால், உன்னை அணு அணுவாகச் சித்ரவதைப் படுத்திக் கொன்று விடுவேன்”.

குரூரமான அந்த வார்த்தைகள் பர்னாண்டஸை நடுங்க வைத்தன. இருப்பினும், தன்னைப் பூரணமாகச் சாத்தானுக்கே அர்ப்பணித்து விடுவதாக உறுதி எடுத்தான். பிசாசு கடுமையான குரலில் தொடர்ந்தது:

"அழகான கன்னிப் பெண்களுடன் என்றும் மாறாத இளமையுடன் வாழ வேண்டும் என்பதுதானே உனது ஆசை? தொண்ணூறு நாட்களுக்குப் பிறகு, நான் உனக்கு அந்தச் சக்தியைத் தருவேன். உன் மனம் தடுமாற்றமடைகிறதா என்று சோதிப்பதற்குத்தான் இந்தச் சிறிய இடைவெளி!

தொண்ணூறு நாட்களுக்குள் எனக்குத் தேவையான பெண்களை வசியப்படுத்தி, அவர்களைக் கீழடக்கும் வல்லமை உனக்கு உண்டு என்பதை நிரூபிக்க வேண்டும். என் மனத்தில் உன்னைப் பற்றிப் பூரணமான நம்பிக்கை ஏற்பட்ட பிறகே, நான் உனது ஆசைகளை நிறைவேற்றுவேன்!"

"உங்களது கட்டளைகளை நான் கவனத்துடன் பின் பற்றுவேன். அதில் உங்களுக்கு எந்தவிதமான சந்தேகமும் வேண்டாம்!" பர்னாண்டஸ் ஆவேசம் வந்தவனாக பதிலளித்தான். உடனே, தான் அணிந்திருந்த ரத்தம் போன்ற சிவப்பு நிற ஆடையை பர்னாண்டஸின் முன்பாக வீசி எறிந்தபடி சாத்தான் பேசியது:

"இந்தா... இந்தச் சிவப்பு அங்கியை நீ இரவு நேரத்தில் பயன்படுத்திக் கொள்ளலாம். இன்று முதல் இரவில் உனக்கு உறக்கமோ, சோம்பலோ ஏற்படாது! முன்னைவிட உற்சாகத்துடனும் சுறுசுறுப்புடனும் விளங்குவாய். ஆனால், பகல் வேளையில் வெயில் ஏறஏற நீ தளர்ச்சியடைவாய். அப்பொழுது நீ ஓய்வெடுத்துக் கொள்ள வேண்டியதுதான்".

உடனே அந்த அங்கியை எடுத்து அணிந்து கொண்டான் பர்னாண்டஸ்.

"எந்தக் காரணத்தாலும் இந்த அங்கியை நீ தொலைத்து விடக்கூடாது. ஆனால், தொண்ணூறு நாட்களுக்குள் என்னைத்

திருப்திப்படுத்த உன்னால் முடியாத பட்சத்தில், இந்த அங்கியை நான் உன்னிடமிருந்து திரும்பப் பெற்றுக் கொள்வேன். அது ஞாபகம் இருக்கட்டும்...”

உடல் முழுவதும் கறுப்பு நிற செதில்களுடன் விளங்கிய பயங்கரமும், கோரமுமான அந்த உருவம் முன்னெச்சரிக்கை செய்தது.

“இனிமேல் உன்னை யாரும் பர்னாண்டஸாகக் கருத மாட்டார்கள். பிரான்சிஸாகவே எண்ணிக் கொள்வார்கள். இத்துடன் நான் உனக்கு வேறு சில சக்திகளையும் வழங்குகிறேன். அவை என்னவென்று ஒவ்வொரு சந்தர்ப்பமும் உனக்கு உணர்த்தும். மற்றொரு நிபந்தனை, ஜபமாலையோ, சிலுவை கோத்த மாலையையோ நீ ஒரு போதும் கழுத்தில் அணியக்கூடாது. உன் கழுத்தில் அணிந்துள்ள மாலையை முதலில் அவிழ்த்து எறி! அதை என் முன்னால் நீ செய்யக் கூடாது. கண்மறைவான இடத்திற்குப் போய் எறிந்து விடு! ”

பர்னாண்டஸ் அவசர அவசரமாக அந்த அறையிலிருந்து வெளியேறினான். தன் கழுத்திலிருக்கும் மாலையைக் கழற்றி, இருட்டுக்குள் வீசியெறிந்த பிறகு திரும்பி வந்தான்.

“இந்தப் புத்தகத்தை ஒரு போதும் நீ கை நழுவ விடக் கூடாது!”

சாத்தான் மறைந்தது.

அன்று இரவு பர்னாண்டஸ் உறங்கவில்லை. தான் புத்துணர்ச்சி பெற்று விட்டதாக அவனுக்குத் தோன்றியது.

புத்தகத்தைப் பத்திரமாக ஓர் இடத்தில் எடுத்து வைத்த பிறகு, பர்னாண்டஸ் அங்கிருந்து வெளியே வந்தான். இருள் கவிந்தது பீதியை எழுப்பிய கல்லறையை நோக்கி நடந்தான். ஒரு கல்லறையை நெருங்கிய போது வேடிக்கைக்காக அதற்குள் நுழைந்து பார்த்தால் என்ன என்று தோன்றிது. ஆனால், அதற்கு என்ன செய்வது என்று புரியாமல் சற்று நேரம் குழம்பினான்.

பின்பு, பூட்டியிருந்த கதவை நெருங்கி, பூட்டின் மீது கை வைத்தவுடன் ஆச்சரியப்படத் தக்க விதத்தில் அந்தப் பூட்டு திறந்து கொண்டது. "டிக்!"

கல்லறைப் பகுதியின் அகலமான பாதையில் நடந்தான். இரு புறமும் கல்லறைகள் வரிசையாக இருந்தன. எல்லாவற்றின் மேற்புறங்களிலும் அடக்கம் செய்யப் பட்டிருந்தவரது பெயர், தோற்றம், மறைவு ஆகிய விவரங்கள் பொறிக்கப்பட்டிருந்தன.

பர்னாண்டஸ் ஒரு கல்லறையின் முன்னால் வந்து நின்றான்.

ஒரு வாரத்திற்கு முன்னால் மரணமடைந்த இளம் பெண் ஒருத்தியின் கல்லறை அது. டார்ச் லைட்டை எரிய விட்டு அவளது பிறப்பு - இறப்பு தேதியை கவனித்தான். இருபத்தோரு வயது!

"மிஸ். அன்னம்மா ஜேக்கப்".

சற்று உரத்த குரலில் அந்தப் பெயரை உச்சரித்தான்.

"என்னங்க?" - என்றபடி உடனே ஓர் இனிமையான பெண் குரல் உயர்ந்தது. திகைப்புடன் டார்ச் லைட்டை எரிய விட்டபடி சுற்றுமுற்றும் பார்த்தான். யாருமில்லை. சந்தேகத்துடன் அந்தப் பெயரை மீண்டும் ஒரு முறை உச்சரித்தான்.

"மிஸ். அன்னம்மா ஜேக்கப்".

"என்னங்க?"

மீண்டும் அதே குரல். கல்லறைக்குள்ளிருந்துதான் அந்தக் குரல் எழும்புகிறது என்பது தெளிவாகத் தெரிந்ததும் அவன் உடம்பு சிலிர்த்தது. மயிர்க்கால்கள் குத்திட்டு நின்றன.

# 2

அசாதாரணமானதாக இருந்தது அந்த அனுபவம்! இறந்து போன ஒருத்தியின் கல்லறைக்கு முன்னால் நின்று அவள் பெயரைச்சொல்லி அழைத்தால், பதிலுக்குக் குரல் கொடுக்கிறாள்!

அந்தப் பெண்ணின் குரல் உண்மைதானா அல்லது கனவில் தோன்றியதா என்பதைச் சட்டென்று பிரித்தறிய முடியாத பர்னாண்டஸ், ஒரு கணம் கல்லாகச் சமைந்து போனான். கனத்த இருட்டில் உறக்கத்திலாழ்ந்திருந்த அந்த மயானத்திலிருந்து, பயந்து மிரண்டவனாக, பர்னாண்டஸ் ஒருவாறு தனது அறைக்குத் திரும்பி வந்தான்.

வெகு நேரம் கழித்த பிறகே பர்னாண்டஸுக்குத் தனது பழைய நிலையை எட்டிப் பிடிக்க முடிந்தது. தனக்குப் புதிதாகக் கிடைத்துள்ள சக்திகளைப் பற்றி அப்பொழுதுதான் அவன் முதன் முதலாக உணர்ந்தான். இருப்பினும், தான் இப்போதும் பீதியின் பிடியில் அகப்பட்டிருப்பதாகவே அவனுக்குத் தோன்றியது.

படுப்பதற்கு முன்னால் வழக்கம் போல் சிறிது மது அருந்தினான். தூக்கத்தில் என்னென்னவோ கனவுகள் வந்தன. எப்போதோ மரணமடைந்தவர்கள் பர்னாண்டஸைச் சந்திக்க வந்தனர். அவர்களில் பலரிடமும் அவன் குசலம் விசாரிக்கவும் செய்தான்.

அழகான பெண்ணும் அவர்களில் ஒருத்தி. தனது பெயர் அன்னம்மா ஜேக்கப் என்றும் ஒரு கார் விபத்தில், தான் மரணமடைந்ததாகவும் அவள் தெரிவித்தாள். வந்திருந்த அனைவரும் பர்னாண்டஸின் வேலைக்காரர்களைப் போலவே, அவன் என்ன சொன்னாலும் செய்யத் தயாராக இருப்பதாக உறுதியளித்தனர்.

ஆழ்ந்த உறக்கம் வருவது வரை பர்னாண்டஸின் உள்மனம் அதிசயமான கனவுகளின் உலகத்தில்

அமிழ்ந்திருந்தது. ஆனால், வழக்கம் போல் விடியற்காலையில் எழுந்தான். இரவு வெகுநேரம் விழித்திருந்ததால், ஒரு விதமான அசதி அவனைப் பீடித்திருந்தது.

லூக்கோஸ் காபியுடன் வந்தான். பர்னாண்டஸ் காலைக் கடன்களை முடித்த பிறகு அவன், பர்னாண்டஸிடம் கேட்டான்: “நீங்கள் சர்ச்சுக்குப் போகவில்லையா?”

விடியற்காலை ஆறரை மணிக்கு ஒரு பிரார்த்தனை உண்டு என்பது பர்னாண்டஸுக்குத் தெரியும். அதற்கு நான்கு அல்லது ஐந்து பேர் வருவார்கள்.

சர்ச்சுக்குப் போகாவிட்டால், தன்னை மற்றவர்கள் சந்தேகத்துடன் பார்க்கலாம் என்ற பயம் தோன்றிது. எனவே, பாதிரியார் உடையை அணிந்து கொண்டு அவன் தேவாலயத்தை நோக்கி நடந்தான்.

சுற்றுப்புறம் அப்போது விடிந்தும் விடியாத அரையிருட்டில் ஆழ்ந்திருந்தது. பஞ்சுத்திட்டுகள் போல் பனிப்படலம் சன்னமாக எங்கும் பரவியிருந்தது.

தேவாலயத்தில் மணியடிப்பவர், தேவாலயக் கதவுகளைத் திறந்து வைத்திருந்தார். பிரார்த்தனையில் பங்கு கொள்பவர்கள் ஏற்கெனவே அங்கு வந்து காத்திருந்தனர்.

தேவாலயத்துக்குள் நுழைய முயன்ற பர்னாண்டஸ் ஒரு கணம் உடல் நடுங்கித் திடுக்கிட்டுப் பின்வாங்கினான்.

கண்ணைச் கூசச் செய்யும் ஒளியுடன் யாரோ ஒருவர் ஓங்கிய வாளுடன் தனக்கு முன்னால் நிற்பதை உணர்ந்தான்.

“நில் அங்கேயே. உனது ஆள்மாறாட்ட வித்தையை இங்கேயே பிரயோகிக்கிறாயா? இனிமேல் நீ இதற்குள் நுழையக்கூடாது. அப்படியே திரும்பிப் போ. ம்... சீக்கிரமாகப் போ!”

கடுமையான எச்சரிக்கைக் குரலைக் கேட்ட பர்னாண்டஸ் நடுங்கினான். மேற்கொண்டு என்ன செய்வது என்று தெரியாமல் அந்தக் கணத்தில் தடுமாறினான். மீண்டும் அந்தக் குரல் பேசியது:

“ஓர் எட்டு முன் வைத்தாலும் இந்த வாள் உன் இதயத்துக்குள் இறங்கி விடும். போ... பிசாசே; இங்கிருந்து முதலில் புறப்படு!”

பர்னாண்டஸ் மனம் தளர்ந்தான். அந்தப் பேரொளியை எதிர்த்து முன்புறமாக நீங்கத் தன்னால் முடியாது என்பது அவனுக்கு விளங்கியது. அதை நேருக்கு நேராகப் பார்க்கக் கூட முடியாமல் இருந்தது. நெற்றியில் கை வைத்துக் கொண்டு பர்னாண்டஸ் திரும்பி நடந்தான். பர்னாண்டஸ் தவிர வேறு யாருக்கும் அந்த ஒளி உருவம் தென்படவில்லை.

“என்ன படி வரை வந்துவிட்டு, திரும்பிப் போகிறீர்கள்! முகமெல்லாம் ஒரு மாதிரி இருக்கிறதே. ஏன், என்னவாகி விட்டது?” மணியடிக்கும் ஊழியர் கேட்டார்.

“எனக்கு ஒரே தலைவலியாக இருக்கிறது. இன்று காலைப் பிரார்த்தனை இல்லை என்று அவர்களிடம் சொல்லி விடுங்கள்”.

மிகவும் தளர்ந்து போனவனாகப் பேசியவன், தனது இருப்பிடத்தை நோக்கி நடந்தான். அறையை அடைந்ததும் கட்டிலில் பொத்தென்று விழுந்தான்.

தன்னுள் பைசாசிக சக்தி குடியேறியிருப்பதால், கோயிலுக்குள் போக முடியவில்லை என்பது பர்னாண்டஸுக்குப் புரிந்தது. அண்ணன் பிரான்சிஸின் பெயரை வைத்துக் கொண்டு தேவாலயத்துக்குள் நுழையவோ, பிரார்த்தனை செய்யவோ இனிமேல் தன்னால் முடியாது. எனவே, இனி அதைப்பற்றி நினைத்துப் பார்ப்பதில் அர்த்தமில்லை!

மதியத்தில் சாப்பிட்டவுடன் பர்னாண்டஸ், பிரான்சிஸ் எழுதுவது போல் பிஷப்பிற்கு ஒரு நீண்ட கடிதம் எழுதினான்.

தனது உடல் நிலை சரியில்லாததால் சில நாட்கள் ஓய்வு தேவைப்படுகிறது. ஓய்வு நாளில் தனிமை தியானம் செய்ய விரும்புவதால், தனக்குப் பதிலாக வேறொரு பாதிரியாரை அனுப்புமாறு அதில் விண்ணப்பித்திருந்தான்.

கடிதத்தை லூக்கோஸிடம் ஒப்படைத்து, பிஷப்பிடம் கொடுக்கச் சொன்னான்.

பிரான்சிஸ் மீது பிஷப்புக்கும் மற்ற பாதிரியார்களுக்கும் ஒரு நல்ல அபிப்பிராயமிருந்தது. எனவே, பிரான்சிஸ் இப்படி எழுதியிருப்பதால், அது உண்மையாக இருக்கும் என்று கருதினர். அந்த அடிப்படையில் அவர்கள் உடனே வேறொரு பாதிரியாரை அனுப்பி வைத்தனர்.

புதிய பாதிரியார் வின்சென்ட் பொறுப்பேற்றுக் கொள்ள வந்தபோது பர்னாண்டஸ் மிகவும் மகிழ்ச்சியுடன் வரவேற்றான். அவர்கள் இருவரும் வெகுநேரம் பேசிக் கொண்டனர். அதன் பிறகு பாதிரியார் தேவாலயத்துக்குள் போனார்.

அன்று நள்ளிரவு. சுவர்க்கடிகாரம் மணி பன்னிரண்டு முறை அடித்தது. பர்னாண்டஸ் ஆழ்ந்த தூக்கத்திலிருந்தான். பறை முழக்கம் போல் முழங்கிய அந்தச் சத்தம் ஓய்ந்ததும் சாத்தானின் கடுமையான குரல் உயர்ந்தது.

“பர்னாண்டஸ்! நீ தூங்கிக் கொண்டிருக்கிறாயா? இரவு நீ தூங்குவதற்கானது அல்ல. உனது செயல்கள் எல்லாம் வழக்கத்துக்கு விரோதமானது என்பதைப் புரிந்து கொள். ம்... விழித்தெழு! ”

பர்னாண்டஸ் திடுக்கிட்டுக் கண் விழித்தான். தரையில் கால் படாமல் நின்றிருந்த அந்தச் சிவப்பு உருவம் மீண்டும் பேசியது:

“நான் சொன்னதை நீ மறந்து விட்டாயா? நீ சுகமாக வாழ்வதற்கான சந்தர்ப்பத்தை உனக்கு வழங்கியிருக்கிறேன் நான். இங்கு அழகான பெண்கள் எத்தனையோ பேர் உள்ளனர்... அவர்கள் எல்லாம் உனக்குத் தேவையில்லையா? ”

“நான்தான் தேவாலயத்துக்குள் நுழைய முடியாதே...” பர்னாண்டஸ் ஏமாற்றத்துடன் கேட்டான்.

"எதற்காக நீ அதற்குள் நுழைய வேண்டும்? வெளியிலேயே நீ அவர்களுடன் பேசிப்பழக முடியாதா? நீ ஒரு தடவை பார்த்தாலே போதும்.... எப்படிப்பட்ட பெண்ணும் உனது வலையில் விழுந்து விடுவாள். முதல் தடவை முயன்று நீ இதில் வெற்றி பெற்றுவிட்டால்... அப்பொழுது தெரியும்; நான் சொன்னது எவ்வளவு சரியென்று!"

"சரி.... நீங்கள் சொன்னபடியே செய்கிறேன்!" அவனது பதில் உறுதியுடன் வெளிவந்தது.

**ம**றுநாள் ஞாயிற்றுக்கிழமை. அன்றுதான் புதுப் பாதிரியார் வின்சென்ட் பிரார்த்தனையை முதன் முறையாக அந்த சர்ச்சில் தொடங்கினார். ஐம்பது வயது நிரம்பியவர் வின்சென்ட். இரட்டை நாடி உடம்பு. வட்டமான முகம். சற்று வழுக்கைத் தலையாக இருந்தாலும் தாடியும் மீசையும் அடர்த்தியாக இருந்தது.

வின்சென்ட் பிரார்த்தனை மேடையை நெருங்கிய போது, பிரார்த்தனைக்கு வந்திருந்தவர்கள் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டனர். தினமும், ஷேவிங் செய்து புத்துணர்ச்சியுடன் வரும் பிரான்சிஸ் பாதிரியார் என்னவானார் என்று தங்களுக்குள்ளேயே ரகசியமான குரலில் கேட்டுக் கொண்டனர்.

பிரார்த்தனைச் சடங்குகள் முடிந்து எல்லாரும் வெளியே வந்தபோது, சற்றுத் தூரத்தில் பிரான்சிஸ் (பர்னாண்டஸ்) நிற்பதை கவனித்தனர். உடனே அவனைச் சூழ்ந்து கொண்டனர்.

"உடம்பு சரியில்லை. கொஞ்ச நாள் ஓய்வு எடுக்க விரும்புகிறேன். அத்துடன் தனிமையில் தியானம் செய்ய அமைதி தேவைப்படுகிறது.... அதுதான்".

கேள்விகளால் தன்னைத் துளைத்து எடுத்தவர்களிடம் பர்னாண்டஸ் சாதாரணமாகவே பதிலளித்தான்.

"இவ்வளவு சிறிய வயதிலேயே நீங்கள் துறவியாவ தென்று தீர்மானித்து விட்டீர்களா?" பெரிய பணக்காரரும் விவசாயியுமான ஔசேப் அவனிடம் கேட்டார்.

"அதெல்லாம் இல்லை! கொஞ்சநாள் தனிமையில் இருக்க வேண்டுமென்று தோன்றியது அவ்வளவுதான்".

"நீங்கள் இரண்டு பேரும் தங்கியிருக்க, சர்ச்சை ஒட்டிய கட்டிடத்தில் சௌகரியம் உள்ளதா என்ன? " - ஜேக்கப் முதலாளி சந்தேகத்துடன் கேட்டார்.

"அதனால்தான் நம்முடைய பழைய சர்ச் கட்டிடத்தில் நான் குடியிருப்பை மாற்றிக் கொண்டேன். அங்கு எந்த விதமான நொந்தரவும் கிடையாதே".

"கல்லறையை ஒட்டியுள்ள அந்தப் பழைய கட்டிடத்திலா? உங்களுக்கு பயமாக இல்லையா?" - யாரோ ஒருவர் கேட்டார்.

"இதில் பயப்பட என்ன இருக்கிறது. கல்லறைக்குள் புதையுண்டிருப்பவர்கள் அவ்வளவு சுலபத்தில் அங்கிருந்து எழுந்து வந்துவிட முடியாது. அப்படியே எழுந்து வந்தாலும் நான் குடியிருக்கும் பகுதியில் வருமளவுக்குத் அவற்றுக்குத் தைரியம் இருக்காது! "

தன்னைச் சூழ்ந்திருந்த ஒவ்வொருவரது கேள்விக்கும் பர்னாண்டஸ் பதிலளித்தாலும், அவனது கவனம் முழுவதும் அழகியான கிரேஸியின் மீதே பதிந்திருந்தது.

கல்லூரி மாணவியான கிரேஸி ஒரு நல்ல பாடகியும் கூட. சர்ச்சிலும் பிரார்த்தனை வேளைகளில் சில சமயம் அவள் பாடுவதுண்டு. கட்டான உடல். மென்மையான, சுருண்ட தலைமுடி. எப்படிப்பட்டவரையும் கவரும் இனிமையான நடவடிக்கைகள்!

சர்ச்சின் க்வயர் நிகழ்ச்சியை நடத்துவது கிரேஸிதான். பாட்டுப்பாடும், இனிமையான குரலுள்ள கிரேஸிக்கு

அப்படியொரு வாய்ப்பை ஏற்படுத்தித் தந்தவர் பிரான்சிஸ் தான். கிரேஸியைப் பார்த்தவுடன் பர்னாண்டஸின் மனத்தில் ஒரு புதிய திட்டம் உருவானது. அவன் அவளை, தலையிலிருந்து பாதம் வரை ஒரு தடவை அணுஅணுவாக ரசித்தபடி பார்த்தான். காமம் நிறைந்த அவனது பார்வையைக் கவனித்த கிரேஸியின் உடம்பு வெட்கத்தால் குன்றியது.

பிரான்சிஸுக்குத் தெரியாமலேயே அவள், அவரைக் கவனித்திருக்கிறாள். பாட்டுப் பயிற்சி மற்றும் ஒத்திகைகளின் போது பிரான்சிஸுடன் அவள் மிகவும் இயல்பாகப் பழகியிருந்த நாட்களை எண்ணிப் பார்த்தாள்.

குசலம் விசாரித்த ஒவ்வொரும் பர்னாண்டஸிடமிருந்து விடை பெற்றுப் பிரிந்தனர். கடைசியாக கிரேஸி விடை பெற்று அங்கிருந்து நடக்கத் தொடங்கினாள்.

“கிரேஸி ... கொஞ்சம் நில்! ”

அவனது அழைப்பைக் கேட்டதும் அவள் நின்று திரும்பினாள்.

“கிரேஸி, உனக்கு அவசரமான வேலை ஏதாவது இருக்கிறதா என்ன? நான் உன்னிடம் கொஞ்சம் பேச வேண்டுமே...” படபடக்கும் கிரேஸியின் கண்களைப் பார்த்த படி பேசினான் பர்னான்டஸ். கிரேஸி மகுடிக்கு முன்னால் மெய்மறந்தாடும் நாகத்தைப் போல் அப்படியே நின்று போனாள்.

“சில பாடல்களை ரிக்கார்டிங் செய்து காஸெட்டாக வெளியிடலாம் என்பது எனது ஐடியா. அதற்கு உனது உதவி தேவைப்படுகிறது கிரேஸி. நீ என்ன சொல்கிறாய்?” பர்னான்டஸின் பேச்சு உணர்வு பூர்வமாக இருந்தது.

“அதற்கென்ன, தாராளமாகச் செய்கிறேன்! ” கிரேஸி சட்டென்று பதிலளித்தாள்.

“எப்போது வருகிறாய்? ”

“சாயங்காலம் வருகிறேன். இருட்டிவிட்டால் எனக்கு வெளியே வர பயமாயிருக்கும் ”.

“எதற்காக பயப்பட வேண்டும். நீ எனது வீட்டுக்குத் தானே வருகிறாய்? ”

“சரி. கண்டிப்பாகச் சாயந்தரம் வருகிறேன்! ”உறுதியுடன் பேசினாள் கிரேஸி.

“ நான் உனக்காகக் காத்திருப்பேன், மறந்துவிடாதே ! ”

மனத்தில் வழியும் கனவுகளுடன் பர்னான்டஸ் அவளுக்கு விடை கொடுத்தான்.

அவள் வீட்டை நோக்கி நடந்தபோது, அவன் மனம் முழுவதும் பர்னாண்டஸே நிறைந்திருந்தான். அவனது அழகான தோற்றம் அவள் மனத்தில் கிளர்ச்சியை ஏற்படுத்தியது. இது தவிர வேறு ஏதோ ஒரு விதமான சக்தி அவளை, அவன்பால் ஈர்த்தது. மாலை நேரமானதும் பாட்டுக்கள் எழுதி வைத்துள்ள நோட்டுப் புத்தகம் ஒன்றைக் கையில் எடுத்துக் கொண்டு. சர்ச்சிற்குப் போவதாக அம்மாவிடம் கூறி விட்டுக் கிளம்பினாள் கிரேஸி,

பர்னான்டஸ் வசிக்கும் பழைய கட்டிடத்திற்கு வந்து சேர்ந்த கிரேஸியை, பர்னாண்டஸ் வரவேற்றான். “பரவாயில்லையே, சொன்ன வாக்கைக் காப்பாற்றி விட்டாய்!”

“நீங்கள் வரச் சொன்னபிறகு, நான் வராமல் இருக்க முடியுமா?” - அவளது பதிலில் ஏதோ ஒன்று தெரிந்தது.

ஹார்மோனியப் பெட்டி வைத்திருந்த இடத்துக்கு அவளை அழைத்துச் சென்ற பர்னான்டஸ் கூறினான்: “ இந்த ட்யூனைத்தான் நாம் பயன்படுத்தப் போகிறோம்! ”

சினிமாவில் காதலனும் காதலியும் இணைந்து பாடும் ஒரு காதல் பாட்டின் மெட்டு அது.

"நமது பக்திப் பாடலை இந்த டியூனிலா கம்போஸ் செய்ய வேண்டும்?" - கிரேஸி கேட்டாள்.

"ஆமாம்!" என்றபடி எழுந்த பர்னான்டஸ் தனது படுக்கையறைக்கு வந்து வெறும் லுங்கி அணிந்தவனாகத் திரும்பி வந்தான்.

"இந்தக் கட்டிடத்தில் ஏனோ பயங்கரமாக வெக்கையடிக்கிறது!" - தன் மார்பு ரோமங்களைத் தடவியவாறே பர்னாண்டஸ் கூறினான். கிரேஸி அவனையே பார்த்தபடி அமர்ந்திருந்தாள். கட்டுமஸ்தான அந்த உடம்பு அவளுள் புயலைக் கிளப்பியது.

இருட்டும் வரை பொழுது அங்கேயே போனது. கிரேஸி தன் வீட்டிற்குள் நுழைந்த பிறகும் பர்னான்டஸைப் பற்றியே நினைத்தாள்.

நேரம் ஊர்ந்து நகர்ந்தது. நள்ளிரவு பன்னிரண்டு மணி, பர்னான்டஸ் திடுக்கிட்டெழுந்தான். சிவப்பு அங்கியை எடுத்து அணிந்து கொண்டு, அந்தக் கட்டிடத்திலிருந்து வெளியேறினான். கிரேஸியின் வீடு தான் அப்போது அவனது லட்சியமாக இருந்தது.

ஜன்னலில் யாரோ மெதுவாகத் தட்டுவது போல் தோன்றவே... கிரேஸி சட்டென்று விழித்தாள். கண்ணைத் திறந்து பார்த்த போது, வெளியே யாரோ நிற்பது ஜன்னல் கண்ணாடி மூலம் தெரிந்தது.

"கிரேஸி ... கொஞ்சம் வெளியே வாயேன்!"

அது பர்னான்டஸின் அன்பான குரல் என்று கிரேஸிக்குப் புரிந்தது. அதன் பிறகு அவள் வேறு எதைப் பற்றியும் யோசிக்கவே இல்லை. ஏதோ ஒரு கட்டளைக் குரலுக்குக் கட்டுப்பட்டவளைப் போல் அவள், நைட் டிரஸ்சுடன் பர்னாண்டஸின் முன்னால் வந்து நின்றாள்,

"கிரேஸி ...! " அவன் குரல் குழைந்திருந்தது.

"என்னங்க ...?" - பர்னான்டஸின் பளபளப்பான கண்களைப் பார்த்தபடி கிரேஸி கேட்டாள்.

பர்னான்டஸின் கைகள் மின்னல் வேகத்தில் இயங்கி அவளை வாரியெடுத்துத் தோளில் போட்டுக் கொண்டன. அந்த விநாடியில், கிரேஸி வாயைத் திறக்கக் கூட முடியாமல் திகைப்பில் ஆழ்ந்திருந்தாள். பர்னாண்டஸ் வேகமாக நடந்து கொண்டிருந்தான். கண் மூடித் திறப்பதற்குள் பர்னான்டஸின் இருப்பிடம் வந்துவிட்டது போல் தோன்றியது.

பர்னான்டஸிடம் அமானுஷ்யமான சக்திகள் பல ஏற்பட்டிருந்தன. எனவே, விநாடி நேரத்திற்குள் ஏறத்தாழ ஒரு கிலோமீட்டர் தூரத்தை அவனால் கடக்க முடிந்தது.

பயந்து மிரண்டு போயிருந்த கிரேஸியை அறைக்குள் கொண்டு வந்து நிறுத்தினான்.

"பயந்துவிட்டாயா என்ன? பயப்படாதே கிரேஸி. உங்களது வீட்டில் நாம் உட்கார்ந்து பேசக்கூட முடியாது. அதனால் உன்னை இங்கு கொண்டு வந்தேன்!" - பர்னான்டஸ் அவளிடம் பேச்சுக்கொடுத்தான்.

அந்த அறை இருட்டில் மூழ்கியிருந்தது. பர்னான்டஸ் மெழுகுவர்த்தி ஒன்றை ஏற்றினான். ஒரு முறை தாழ்ந்து எரிந்த திரியின் ஜுவாலை மேற்புறமாகச் சர்ரென்று உயர்ந்தது. அதன் மஞ்சள் நிற வெளிச்சம் தீவிரமாகப் போராடி, முடிந்த மட்டும் இருட்டை விரட்டியது.

மெல்லிய சல்லாத் துணியாலான இரவு உடையில் இருந்த கிரேஸியை பர்னாண்டஸ் மௌனமாகப் பார்த்துக் கொண்டிருந்தான். காமம் நிறைந்த அவனது பார்வை அவளது உணர்வுகளைத் தட்டி எழுப்பியது. அவள் உடல் சிலிர்த்தது. அவன் கைகள் அவளது உடையின் பட்டன்களை ஒவ்வொன்றாகக் கழற்றின. கிரேஸி எதுவும் செய்யத்

தோன்றாதவளாகத் தன்னை மறந்த நிலையில் ஒரு பொம்மை போல் நின்றிருந்தாள். உடையற்ற அவள் உடம்பைக் கட்டிலில் மெதுவாகப் படுக்க வைத்தான் பர்னாண்டஸ். அவர்களது மூச்சுக்காற்றும், உடம்புச்சூடும் ஒன்றிக் கலந்தன. அந்தக் கணத்தில் அவள் புதிய ஓர் இன்ப நிலையில் தன்னை முற்றிலுமாக இழந்து விட்டிருந்தாள்.

"நான் இப்போது எங்கே இருக்கிறேன்?" அவள் குரல் குழைவாக வெளிவந்தது.

"பயப்படாதே... எனது வீட்டில் பத்திரமாகத்தான்!"

"நான் எப்படி இங்கே வந்தேன்?" மிகவும் களைப்படைந்து விட்டது போலிருந்தது அவளது குரல்.

"அதையெல்லாம் அப்புறமாகச் சொல்கிறேன். இனி எவ்வளவு விரைவாக இங்கிருந்து புறப்படுகிறாயோ அவ்வளவுக்கு நல்லது. வா, நானே உன்னைக் கொண்டு போய் விடுகிறேன்!"

பர்னாண்டஸ் தனது சிவப்பு மேலங்கியை எடுத்து அணிந்து கொண்டு அவளுடன் நடக்கத் தொடங்கினான்.

சுற்றுப்புறம் இருளில் மூழ்கியிருந்தது. புகை மாதிரி மூடுபனி படிந்திருந்தது. எங்கெங்கேயோ ராக்கோழிகள் கூவின.

கல்லறை ஓரமாக அவர்கள் நடந்தனர். ஆனால், கிரேஸி அந்தப் பக்கமாகத் திரும்பவே இல்லை. கிரேஸியை அவளது வீட்டில் கொண்டுபோய் விட்டுவிட்டு வந்தபோது லூக்கோஸ் பெட்காபி தயாரித்திருந்தான்.

"இவ்வளவு விடியற்காலையில் எங்கே போய்விட்டு வருகிறீர்கள் ஃபாதர்?"

"சும்மா ஒரு வாக்கிங்!" சுவாரஸ்யமில்லாமல் பதிலளித்த பர்னாண்டஸ் கேட்டான்: "ஆமாம், ஃபாதர் வின்சென்டுக்கு சமையல் செய்து கொடுப்பது யார்?"

"நேற்று ராத்திரி அவரது ஊரிலிருந்து ஒரு சமையற்காரர் வந்திருக்கிறார். அதனால்தான் விடியற்காலையிலேயே நான் இங்கு வந்துவிட்டேன்".

"இனிமேல் நீ இங்கேயே இருக்க வேண்டுமா?"தனக்கு அதில் விருப்பமில்லாதது போல் கேட்டான் பர்னாண்டஸ்.

"நான் வேறு எங்கு போவது ஃபாதர்?"

பர்னாண்டஸ் யோசனையிலாழ்ந்தான்.

"சரி... நீ இங்கே இருந்துவிடு. ஆனால், நீ இங்கே படுத்துக்கொள்வதற்கு வசதி இல்லை. அதனால் ராத்திரியாகி விட்டால், வின்செண்டின் சமையற்காரருடன் போய்ப் படுத்துக் கொள். அவருக்கும் ஒரு துணையாக இருக்கும்".

"நீங்கள் சொன்னதுதான் நல்ல யோசனை. நான் உங்களோடு இருந்தாலும் ராத்திரியில் இங்கே படுத்துக் கொள்ளும் அளவுக்கு எனக்கு தைரியம் கிடையாது!"

அன்று பகல் நேரத்தில் நிறையப் பேர் பர்னாண்டஸைப் பார்க்க வந்தனர். அதாவது பிரான்சிஸாக நடிக்கும் பர்னாண்டஸின் உடல் நிலை குறித்தும், தனிமை வாழ்க்கை குறித்தும் அவர்கள் விசாரித்தார்கள்.

பர்னாண்டஸ் எல்லோரையும் அன்புடன் வரவேற்று அவர்களுடன் வெகுநேரம் பேசிக் கொண்டிருந்தான். மதியம் சாப்பாட்டு நேரத்தின் போதுதான் அவர்கள் விடைபெற்றுக் கிளம்பினர்.

"இப்படி ஒட்டு மொத்தமாக எல்லோரும் வந்து தொல்லைப்படுத்தினால் உடம்பு எப்படி குணமடையும்? பாட்டை கம்போஸ் செய்யும் வேலையும் நடக்காது!" லூக்கோஸ், பர்னாண்டஸிடம் அலுத்துக் கொண்டான்.

"அதற்காக என்னைத் தேடி வருபவர்களிடம் வரவேண்டாம் என்று முகத்திலடித்த மாதிரி எப்படிக் கூறுவது?"

"அதை நான் பார்த்துக் கொள்கிறேன். அவர் தியானத்திலிருக்கிறார்... இப்போது அவரை யாரும் தொந்தரவு செய்யக்கூடாதென்று சொல்லிவிட்டால் போகிறது".

இரவு ஒன்பது மணிக்கு இருவரும் சாப்பிட்டனர். அதன்பிறகு லூக்கோஸ் தனது பழைய இடத்திற்குப் படுக்கப் போனான்.

நள்ளிரவு மணி பன்னிரண்டு.

கடிகாரம் அடித்து ஓய்வதற்குள் ஒரு குரல் கேட்டது. "என்ன பர்னாண்டஸ்! இன்னும் கண் விழிக்கும் நேரமாகவில்லையா உனக்கு?"

துள்ளியெழுந்தான். சட்டென்று அவன் தோள் மீது அந்தச் சிவப்பு அங்கி வந்து விழுந்தது.

"உனக்கு மேலும் ஒரு சக்தியை நான் வழங்குகிறேன். நள்ளிரவு தாண்டிவிட்டால், நான் எப்போதும் உன்னுடன் இருப்பேன். நீ பெறும் சுகத்தில் பாதி என்னையும் சேரும். எனவே, நீ ராத்திரிகளை வீணாக்கக்கூடாது.... புரிந்ததா?"

"புரிந்தது!"

"இன்னொரு விஷயம்... பெண்களை நேரடியாகச் சந்தித்து அறிமுகமாகவும் அவர்களை வளைத்துப் பிடிக்கவும் உன்னால் முடியும். உனக்கு நல்ல அழகும் உண்டு. இவற்றை நீ குறைந்தபட்சமாவது பயன்படுத்த வேண்டாமா? இப்போது நான் சொல்வதை கவனமாகக் கேள். அது வேறெருவருக்கும் தெரியாமல் ரகசியமாகவும் இருக்க வேண்டும்!"

பர்னாண்டஸ் ஆவலுடன் அந்த பயங்கர உருவத்தையே பார்த்துக் கொண்டிருந்தான்.

"உன்னுடன் படுக்கையைப் பங்கிடும் பெண்கள் பதின்மூன்று நாட்களுக்கு மேல் அதைத் தொடர முடியாது. பதின்மூன்றாவது நாளன்று, அவள் உடம்பிலுள்ள ரத்தத்தை நான் குடித்து விடுவேன்! "

"என்ன?" - பர்னாண்டஸ் திடுக்கிட்டான்.

"நீயேன் பயப்படுகிறாய்? யாரும் உன்னைச் சந்தேகப் படமாட்டார்கள். அவர்கள் எப்படி இறந்தார்கள் என்பதை எவராலும் கண்டுபிடிக்க முடியாது!"

"அந்த உடம்பை எப்படி மறைப்பது?" பதற்றத்துடன் கேட்டான் பர்னாண்டஸ்.

"இன்னும் எத்தனையோ ராத்திரிகள் உள்ளன. நேரம் வரும் போது சொல்லித்தருகிறேன்!" அந்தப் பைசாசிக உருவம் அத்துடன் மறைந்தது.

அசாதாரணமான தைரியம் தனக்கு வாய்த்திருப்பதை பர்னாண்டஸால் உணர முடிந்தது.

சட்டென்று ஏதோ ஒரு முடிவுக்கு வந்தவனாக விடுவிடு வென்று நடக்கத் தொடங்கினான். கிரேஸியின் வீட்டை நெருங்கினான்.

யாரோ தட்டி எழுப்பியதைப் போல் கிரேஸி திடுக்கிட்டு எழுந்தாள். கதவின் மறுபுறம் பர்னாண்டஸ் நிற்பதை உணர்ந்தாள்.

"இதோ வருகிறேன்".

அவள், அவனை நெருங்கினாள். பர்னாண்டஸ் அவளைத் தோளில் போட்டபடி நடக்கத் தொடங்கினான்.

இரவுகள் பல கடந்தன. நாளுக்கு நாள் கிரேஸியின் உடல் பலவீனமடைந்து வந்தது. அவளது சுறுசுறுப்பும் உற்சாகமும் வடிந்து கொண்டே வந்தன. இருப்பினும், நள்ளிரவு வேளையில் அவனது குரலைக் கேட்டால் திடுக்கிட்டெழுந்து அவனுடன் செல்வது என்பது எந்த விதமான தடையுமின்றித் தொடர்ந்தது. உடல்நிலை மிகவும் தளர்ச்சியடைந்திருந்த போதிலும் பர்னாண்டஸுக்கு இணங்காதிருக்க அவளால் முடியவில்லை!

வழக்கம் போல் ஒரு நாள்...

மிகவும் சோர்வடைந்தவளாக கிரேஸி வெளியே வந்தாள். வாடிப்போன சேம்புத்தண்டுபோல் துவண்டு விட்டிருந்தாள். பர்னாண்டஸும் அதை உணரவே செய்தான். அவனது கட்டிலை அடைந்த கிரேஸி கூறினாள்.

"என்னால் முடியவில்லை. நான் மிகவும் சோர்ந்து போயிருக்கிறேன்".

"அதெல்லாம் பரவாயில்லை. இன்று பதின் மூன்றாவது நாளல்லவா?" பர்னாண்டஸ் அவள் காதில் மந்திரம் போல் பேசினாள்.

## 3

பனிபொழியும் இரவு.

தொலைவில் எங்கிருந்தோ ராக்கோழிகள் கூவின. துவண்டு போய்க் கட்டிலில் படுத்திருந்தாள் கிரேஸி. ஒரு கிளாஸில் கொஞ்சம் விஸ்கியை ஊற்றி அவளிடம் நீட்டினான் பர்னாண்டஸ்.

"இந்தா, இதைக்குடி! உனது களைப்பெல்லாம் பறந்து போய்விடும்!"

மறுக்கும் நிலையில் அவள் இல்லை. கிரேஸி அதை வாங்கி ஒரே மூச்சில் குடித்தாள்.

வீரியம் நிறைந்த விஸ்கியின் போதை அவள் ரத்தக் குழாய்களில் விரைவாகப் பாய்ந்து ஊடுருவியது. சட்டென்று புத்துணர்ச்சி பெற்றதாக அவள் உணர்ந்தாள்.

அதற்குள் வேட்கை மிகுந்தவனாக பர்னாண்டஸ் ஆவலுடன் அவளை நெருங்கி அணைக்க முற்பட்டான்.

“நில்... இந்த இரவு உனக்குரியது அல்ல; நீ சற்று நேரம் வெளியே காத்திரு!” இடி முழக்கம் போன்ற அந்தக் குரலைக் கேட்டு அவன் நடுங்கினான். அவனுக்கு வேறு வழி எதுவும் தெரியவில்லை. சட்டென்று திரும்பிப் பார்த்தபோது, பிசாசின் தெளிவற்ற உருவம் அவனுக்குப் புலப்பட்டது. எதுவும் பேசாமல் அந்த அறையை விட்டு வெளியேறினான் அவன்.

சற்று நேரத்தில் கிரேஸியின் தேம்பியழும் குரல் கேட்டது. விரைவிலேயே அது படிப்படியாகக் குறைந்து... கடைசியில் ஓய்ந்தது.

பர்னாண்டஸ் அறைக்குத் திரும்பினான். மெழுகுவத்தி அணைந்து போயிருந்தது. ஏற்றினான். உடை எதுவுமற்ற கிரேஸியின் உடல் கட்டிலில் எக்குத்தப்பாக விழுந்து கிடந்தது.

“கிரேஸி....கிரேஸி...” பர்னாண்டஸ் அவளைத் தட்டி எழுப்ப முயன்றான். ஆனால், அவள் பதில் குரல் கொடுக்கவில்லை. அவளது உடல் வெளிறி அசைவற்றுக் கிடந்தது. உடனே அவளின் மூக்குப் பகுதியில் கை வைத்துப் பார்த்தான்.

“என்ன....!”

கிரேஸி உயிரைத் தொலைத்து விட்டிருந்தாள். பர்னாண்டஸ் திடுக்கிட்டான்.

தனக்கு வழங்கிய சுகத்திற்கு விலையாக பிசாசு, கிரேஸியின் ரத்தத்தைக் குடித்திருக்கிறது! மேற்கொண்டு என்ன செய்வது என்று புரியாமல் தவித்தான் பர்னாண்டஸ்.

அவன் கண்கள் அவனையும் மீறிக் கல்லறையின் பக்கமாகத் திரும்பின. உயிரற்றவர்களுக்குரிய இடம் அதுதானே!

சில நாட்களுக்கு முன்னால் ஒரு நள்ளிரவில் அந்தக் கல்லறை மைதானத்தில் பார்த்த ஒரு பெரிய கல்லறை அவன் நினைவில் மேலெழுந்தது. பிலிப்போஸ் முதலாளி கட்டிய கல்லறை அது!

ஏறத்தாழ பன்னிரண்டு பேரைப் போட்டு மூடுமளவுள்ள கல்லறை அது. அதன் உட்புறம் ஒரு பெரிய பள்ளமாக இருந்தது. அந்தக் கல்லறையின் மேற்புறத்தில் ஏதாவது ஒரு சிமெண்டுப் பலகையை உருவினால்... கிரேஸியின் உடம்பைச் சுலபமாக அதற்குள் வீசி எறிந்து விடலாம்!

உடனே கிரேஸியின் உடம்பைத் தோளில் போட்டுக் கொண்டு கல்லறையை நோக்கி நடக்கத் தொடங்கினான். அவன் நெருங்கித் தொட்டவுடன் செமித்தேரி பூட்டு தானாகவே திறந்து, கதவும் விரியத் திறந்து கொண்டது.

கிரேஸியின் உடம்பைப் புல் பரப்பின் மீது படுக்க வைத்துவிட்டு, ஓர் ஓரத்திலிருந்த ஸ்லாப்பைப் பிடித்துத் தூக்கினான். அது தக்கை போல் சுலபமாக மேலெழும்பியது. பர்னாண்டஸுக்கு வியப்புத் தோன்றியது. நேரத்தைக் கடத்தாமல் கிரேஸியின் உடம்பை உள்ளே வீசி எறிந்த பின் ஸ்லாப்பை மூடிவிட்டுத் திரும்பி நடக்கத் தொடங்கினான்.

அறைக்குள் வந்தபோதுதான் கிரேஸியின் நைட் டிரஸ் அங்கு இருப்பதை கவனித்தான். உடனே அதை எரித்துச் சாம்பலாக்கினான். கிரேஸி தொடர்பான எதுவும் தனது அறைக்குள் இருக்கக்கூடாது என்பதில் வெகு எச்சரிக்கையுடன் செயல்பட்டான்.

**வ**ழக்கம் போல் விடியற்காலையில் லூக்கோஸ் வந்த போது. பர்னாண்டஸ் நல்ல உறக்கத்திலிருந்தான்.

கண் திறந்தான். லூக்கோஸ் காத்திருந்தான்.

“இன்று ஞாயிற்றுக்கிழமையல்லவா.... நீங்கள் சர்ச்சுக்குப்

போகவில்லையா?"

"நான் இங்கு தியானத்தில்தானே நேரத்தைக் கழிக்கிறேன். பிறகு எதற்குத் தனியாக சர்ச்சுக்குப் போக வேண்டும்?"

"உங்களை சர்ச்சுக்கு வரச் சொல்லுமாறு வின்சென்ட் ஃபாதர் என்னிடம் கூறினார். இரண்டாவது பிரார்த்தனைக் கூட்டத்தை நீங்கள் நடத்த வேண்டும் என்பது அவரது ஆசை!"

"எனக்குக் கடுமையான தலைவலி. எழுந்திருக்கக் கூட முடியவில்லை!" - முகத்தை அஷ்டகோணலாக்கி, நடித்தான் பர்னாண்டஸ்.

"நீங்கள் சர்ச்சுக்குப் போய் இரண்டு வார காலமாகிறதே..." லூக்கோஸ் ஆச்சரியத்துடன் கேட்டான்.

"என்னால் சுத்தமாக முடியவில்லை என்பதை முதலில் அவரிடம் சொல்லிவிட்டு வா!"

"நான் சொல்கிறேன். ஆனால், அவர் என்னிடம் சொன்ன படியே ஏற்பாடு செய்திருப்பார் என்று தோன்றுகிறது".

"முதலில் அவரிடம் நான் சொன்னதைச் சொல்லி விட்டு, அதன் பிறகு காபி போட்டால் போதும். ம்.... உடனே புறப்படு!"

காலைச்சிற்றுண்டியை முடித்த ஃபாதர் வின்சென்ட் எங்கோ வெளியில் புறப்படத் தயாரான போதுதான், லூக்கோஸ் மூச்சிரைத்தபடி அவரிடம் வந்து சேர்ந்தான்.

முதல் பிரார்த்தனை முடிந்து இரண்டு மணி நேரம் கழிந்த பிறகே, இரண்டாவது பிரார்த்தனை ஆரம்பிக்கும். அது ஏறத்தாழ ஒன்பதரை மணி வாக்கில் அமையும்.

“ஃபாதருக்கு உடம்பு சரியில்லை”.

“நான் சொன்னதை அவரிடம் சொன்னாயா, இல்லையா? நான் இதோ புறப்பட்டுக் கொண்டிருக்கிறேன். பிஷப் ஹவுஸ் வரை நான் அவசரமாகப் போக வேண்டி உள்ளது. கார் கூட வெளியில் தயாராக நிற்கிறதே.... நீ பார்க்கவில்லையா? ”

“தாங்கமுடியாத தலைவலி என்றார். முடியுமானால் அவர் வந்திருப்பாரே! ”

“நானே வந்து சொல்லட்டுமா? ”

“அப்படிச் சொன்னால், ஒரு வேளை வருவாரோ என்னவோ?”

ஃபாதர் வின்செண்ட், பர்னாண்டஸின் இருப்பிடத்தை நோக்கி நடந்தார்.

அந்தச் சமயத்தில் பர்னாண்டஸ் மாந்திரீகப் புத்தகத்தை வாசித்துக் கொண்டிருந்தான். ஃபாதரைப் பார்த்தவுடன் புத்தகத்தை அவசர அவசரமாக மெத்தைக்கு அடியில் மறைத்து வைத்தான்.

“இரண்டாவது பிரார்த்தனையை இன்று நீங்கள் நடத்தும் படி இருக்கும். நான் அவசரமாக பிஷப்பின் வீடு வரை போக வேண்டி உள்ளது”.

“என்னால் எழுந்திருக்கக் கூட முடியவில்லை. பிறகும் என்னை வற்புறுத்தினால் எப்படி ஃபாதர்? ”

“அப்படியானால் நான் வற்புறுத்தவில்லை”.

அதன் பிறகு நேரத்தை வீணாக்காமல் ஃபாதர் வின்செண்ட் அங்கிருந்து கிளம்பினார்.

பர்னாண்டஸ் எப்படி வெளியே போவது என்று யோசித்தான். ஏதாவது ஒரு காரணம் இருக்க வேண்டும். இரண்டு நாட்களைத் தனிமையில் கழித்தான்.

மூன்றாவது நாளன்று அருகிலிருந்து ஒரு தனியார் கல்லூரியிலிருந்து நாலைந்து மாணவிகள் பர்னாண்டஸைச் சந்திக்க வந்தனர். அவர்கள் மாணவியர் சங்கப் பிரதிநிதிகளும் கூட!

இருவரில் ஒருத்தி சூஸன்; மற்றொருத்தி கிளாரா. மாதா கோயிலில் பாடுபவர்கள். ஒருத்தி சற்றுப்பருமனான உடல் வாகு கொண்டவள். மற்றொருத்தி மெலிந்தவள்.

"நீங்களெல்லாம் எதற்காக வந்திருக்கிறீர்கள்?" பர்னாண்டஸ் கேட்டான்.

"உங்களை சர்ச்சில் பார்க்க முடியவில்லை; அதனால் தான் இங்கு வந்திருக்கிறோம்".

"ஃபாதர் வின்சென்ட் இருக்கிறாரே, நீங்கள் அவரைப் பார்க்கலாமே?"

"அவருக்குப் பாட்டு விஷயங்களில் அவ்வளவாக ஈடுபாடு கிடையாது".

"எல்லோரும் ஒரே மாதிரியாக இருக்க முடியுமா? பாடுவதற்குத்தான் நீங்கள் எல்லாம் இருக்கிறீர்களே!"

என்ற பர்னாண்டஸ் லூக்கோஸை அழைத்தான். அவன் வந்தபோது, "நாலைந்து பேர் என்னைச் சந்திக்க வந்திருக்கிறார்களே. இவர்களுக்கு சாப்பிட ஏதாவது கொடு!"

இளம்பெண்களைப் பார்த்த உடன் அவர்களை உபசரிப்பதற்காக பிஸ்கெட் மற்றும் காபியுடன் வந்தான் லூக்கோஸ்.

பர்னாண்டஸ் அவர்களுக்கு முன்பாக ஹார்மோனியத்தை எடுத்து வைத்தான்.

"நாங்கள் பாட்டுப் பாடுகிறோம். அதற்கு நீங்கள் வாசியுங்கள்!" பெண்களில் ஒருத்தி கூறினாள்.

"தாராளமாக... நீங்கள் பாடுங்கள், நான் வாசிக்கிறேன்".

அவர்கள் பாடத் தொடங்கினர். பாடலின் மூன்றாவது வரியில் இயேசு மற்றும் சிலுவை என்ற வார்த்தைகள் வந்தபோது, பர்னாண்டஸ் ஹார்மோனியக் கட்டைகளை ஒன்றாகச் சேர்த்து அழுத்தினான். அந்த வார்த்தைகளை அவனால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

“பயங்கரமான தலைவலி. கொஞ்ச நேரம் பாட்டை நிறுத்துங்கள்!”

சாப்பிட்ட தட்டுகளையும், காலியான டீ கோப்பை களையும் எடுக்க வந்த லூக்கோஸ் அவர்களைப் பார்த்துக் கூறினான்: “அவருக்கு ஏற்கெனவே தலைவலி. வீணாகப்பாடி அவரைத் தொந்தரவு செய்கிறீர்கள்!” அந்தக்குரலில் கோபம் தெரிந்தது.

“மன்னியுங்கள். நாங்கள் வந்த விஷயத்தை இன்னும் சொல்லவில்லையே?” சூஸன் கூறினாள்.

“சொல்லும்மா...”

“நான் கல்லூரி மாணவிகள் தலைவி. இவர்களெல்லாம் மாணவிகள் சங்கப் பிரதிநிதிகள்...” என்ற சூஸன், அவர்கள் ஒவ்வொருவரையும் பர்னாண்டஸுக்கு அறிமுகம் செய்து வைத்தாள்.

“நீங்கள் எதற்காக வந்திருக்கிறீர்கள் என்று நான் சொல்லட்டுமா?” பர்னாண்டஸ் கேட்டான்.

“சொல்லுங்கள் பார்ப்போம்!”

“உங்கள் கல்லூரி ஆண்டு விழாவுக்காக என்னை அழைக்க வந்திருக்கிறீர்கள். ஆண்டு விழாப் போட்டிகளின் நடுவர்களில் நானும் ஒருவன். என்ன... சரிதானே?”

“ரொம்பக் கரெக்ட். இதற்குத்தான் என்பது உங்களுக்கு எப்படிப் புரிந்தது?”

“எல்லாம் ஒரு யூகம்தான்!”

“விழாவுக்கு நீங்கள் வந்து விடுகிறீர்களா அல்லது நாங்கள் வந்து அழைத்துச் செல்ல வேண்டுமா?”

“என்றைக்கு என்பதையே இன்னும் நீங்கள் சொல்லவில்லையே?”

“வருகிற வெள்ளிக்கிழமையன்று! நீங்கள் காலையிலேயே வந்துவிட வேண்டும். மதியச் சாப்பாட்டை அங்கேயே ஏற்பாடு செய்திருக்கிறோம்”.

“சரி. நானே வந்து விடுகிறேன். அதற்காக நீங்கள் யாரும் சிரமப்படவேண்டாம். அங்கே வந்தால் உங்கள் பாடகியையும் பார்த்த மாதிரி இருக்கும்”.

“வருகிற வெள்ளிக்கிழமையன்று நீங்கள் ஒரு தடவை அவருக்கு நினைவூட்டுங்கள், லூக்கோஸ்!” சூஸன் கூறினாள்.

வந்தவர்கள் விடை பெற்றனர்.

பர்னாண்டஸ் யோசனையில் ஆழ்ந்தான். ‘தன்னால் எப்படி அவர்களது நோக்கத்தை முன்கூட்டி அறிந்து கொள்ள முடிந்தது? ஒரு வேளை ஏதாவது அதிசயமான சக்தி நமக்குக் கை வந்து விட்டதோ?’

அவர்கள் சாப்பிட்ட பாத்திரங்களை அடுக்கி எடுத்த லூக்கோஸ், பர்னாண்டஸை பார்த்தபடி சொன்னான்: “ஃபாதர் உங்களுக்கு ஒரு சேதி தெரியுமா? பாவம் அந்த கிரேஸி காணமற் போய்விட்டாளாம்!”

செய்தியைக் கேள்விப்பட்டதும் பர்னாண்டஸின் மனத்தில் மின்னல் கிளைகள் ஊடுருவிப் பாய்ந்தன.

“கட்டியிருந்த துணியுடன் வெளியேறியிருக்கிறாள். யாரையோ இழுத்துக் கொண்டு ஓடி விட்டதாகவும் பேசிக் கொள்கிறார்கள். போலீஸீல் புகார் கொடுத்திருக்கிறார்கள்”.

பர்னாண்டஸ் பதிலேதும் பேசவில்லை. அவன் பார்வை அவனையும் மீறிக் கல்லறைப் பக்கம் திரும்பியது.

"அவள் யாரையோ காதலித்ததாகவும் பேசிக் கொள்கிறார்கள். அவள் காதலனையும் இப்போது காணவில்லையாம்!"

பர்னாண்டஸ் மௌனமாக இருந்தான்.

அன்று இரவு பர்னாண்டஸ் நல்ல தூக்கத்தில் ஆழ்ந்திருந்த போது, கிரேஸி தன்னருகில் வந்து நிற்பதாகத் தோன்றியது. திடுக்கிட்டுக் கண் விழித்தபோது, நைட் டிரஸ் அணிந்த ஓர் உருவம் கல்லறையை நோக்கிப் போவது தெரிந்தது.

பர்னாண்டஸ் எழுந்தான்.

சாத்தான் வழங்கிய தனது சிவப்பு அங்கியை அணிந்து கொண்டு கல்லறையை நோக்கி நடந்தான்.

சன்னமான நிலவொளியில்... புகைப்படலமாகப் பனி, பூமியை சல்லாத்துணி போல் போர்த்தியிருந்தது. நிலவாடையை அணிந்த பூமியை, ஆழ்ந்த உறக்கத்தில் மூழ்கியிருந்தது. காற்று கூட பயந்து போய் அசைவற்றிருந்தது.

கல்லறையின் கதவு திறந்தது. பர்னாண்டஸ் உட்புறம் நுழைந்தான். அங்கிருந்த பெரிய கல்லறையின் முன்னால் வந்தவன், "கிரேஸி!" என்று மெதுவாக முணுமுணுத்தான்.

"என்னைத்தானே கூப்பிட்டீர்கள்?" - கல்லறைக்குள்ளிருந்து கிரேஸியின் குரல் கேட்டது. அப்படியானால், இறந்து போனவர்களை எழுப்பும் வல்லமையும் தனக்கு வாய்த்திருக்கிறது. அது உண்மைதானா என்பதை மீண்டும் ஒரு முறை சோதித்துப் பார்க்க விரும்பிய பர்னாண்டஸ், அன்னம்மா ஜேக்கப்பின் கல்லறைக்கு முன்பாக வந்தான்.

# 4

டார்ச் லைட் வெளிச்சத்தில், பர்னாண்டஸ் அந்தக் கல்லறையையே சற்று நேரம் பார்த்தான்.

முன்பொரு தடவை இரவில் அங்கு வந்திருந்ததும் கல்லறையை நெருங்கி, பெயரைக்கூறியபோது ஒரு பெண் குரல் கொடுத்ததும் நினைவுக்கு வந்தது. அதற்கு என்ன பொருள் என்று புரியாமல் அன்று பிரமிப்படையவும் செய்தோம். ஆனால், இப்போது பய உணர்வு முற்றிலுமாக மறைந்து விட்டது.

"அன்னம்மா ஜேக்கப்...." சற்று உரக்கவே அந்தப் பேரை அழைத்தான்.

"என்னாங்க....?" - கல்லறையிலிருந்து எதிர்க்குரல் கேட்டது.

"ஒரு தடவை உன்னைப் பார்க்க வேண்டும் போல் தோன்றுகிறது!"

"அதற்கென்ன... வருகிறேனே!"

கல்லறையின் ஒரு மூலையிலிருந்து புகைச்சுருள் போன்ற ஏதோ ஒன்று உயரத் தொடங்கியது. சற்று நேரத்திற்குள் பரவிப் படர்ந்த அந்தச் சுருள்களுக்குள் அழகான பெண்ணொருத்தி வெளிப்பட்டாள். அவள்தான் அன்னம்மா ஜேக்கப்.

"நான் உங்களுக்கு ஏதாவது உதவி செய்ய வேண்டுமா?" மயக்கும் குரலில் பேசிய அவள், அவனை ஆராய்வது போல் பார்த்தாள்.

"இப்போது எனக்கு உனது உதவி தேவையில்லை.

சும்மா சோதித்துப் பார்ப்பதற்காக அழைத்தேன். தேவைப்படும் போது மறுபடியும் கூப்பிடுகிறேன்".

"அப்படியானால் நான் போகட்டுமா?"

பர்னாண்டஸ் சம்மதமளித்தான். அந்த உருவம் மறைந்தது. ரகசியமும் மர்மமும் நிறைந்த சில தீர்மானங்களுடன் தனது அறைக்குத் திரும்பினான் அவன்.

மூன்றுநாட்களுக்குப் பிறகு சூஸனும், கிளாராவும் பர்னாண்டஸைத் தேடி வந்தனர். கல்லூரி விழாவிற்கு அவனை அழைத்துச் செல்வதுதான் அவர்களது நோக்கம். உடைமாற்றி வந்த பர்னாண்டஸ் அவர்களுடன் புறப்பட்டான்.

கல்லூரி வாசலில் பர்னாண்டஸை வரவேற்க, கல்லூரி முதல்வரும் பேராசியர்கள் சிலரும் காத்திருந்தனர். நல்ல பாடகனான பிரான்சிஸ்மீது அவர்களுக்கும் ஒரு வாஞ்சை இருந்தது. கல்லூரியின் ஆண்டு விழா நாளில் நடைபெறும் கலை நிகழ்ச்சிக்கு நடுவராக இருக்க ஃபாதர் ஒப்புக் கொண்டதே அவர்களுக்கு மிகவும் மகிழ்ச்சியளித்தது.

"நீங்கள் தனிமை தியானத்தில் ஈடுபட்டிருப்பதால், ஒரு வேளை வராமற் போய்விடுவீர்களோ என்று சந்தேகப் பட்டோம்..." முதல்வர் பேசினார்.

"உண்மையைச் சொன்னால், உங்கள் மாணவியரது வற்புறுத்தலுக்காகத்தான் வந்தேன்!" சூஸனையும் கிளாராவையும் பார்த்தபடி பர்னாண்டஸ் கூறினான்.

அனைவரும் கல்லூரியின் அலுவலக அறையை நோக்கி நடந்தனர்.

நல்லபடியாக இயங்கும் ஒரு கல்லூரி அது. கட்டுப்பாடும், தேர்ந்த ஆசிரியர்களின் கடுமையான உழைப்பினாலும் அந்தக் கல்லூரி குறுகிய காலத்துக்குள்ளேயே நல்ல பெயர் பெற்றிருந்தது.

"என்ன சாப்பிடுகிறீர்கள்?" - பிரின்ஸ்பால் கேட்டார்.

"இப்பொழுது எதுவும் வேண்டாம்".

அதற்குள் விழாக் குழுவினர் நிகழ்ச்சி தொடங்கப் போவதை அறிவிக்கவே, நடுவர்களாக வந்திருந்த மற்றும் சிலரும் விழா மேடைக்குப் புறப்பட்டனர்.

முதலில் குழுநடனம். ஐந்து குழுவினர் நடனப் போட்டியில் பங்கெடுத்துக் கொண்டனர். அடுத்தது பாட்டுப் போட்டி. இருபது பேர் பங்கெடுத்தனர். பிறகு பரதநாட்டியம், மோகினியாட்டம் என்று நிகழ்ச்சிகள் தொடர்ந்தன.

போட்டி முடிவை அறிவித்தபோது யாரும் எதிர்பார்க்காத ஓர் அதிசயம் நடந்தது. அதாவது ஸெலின் என்கிற மாணவியே நான்கு போட்டிகளிலும் முதல் பரிசு பெற்றாள்.

தொடர்ந்து நடைபெற்ற பாட்டுப்போட்டி, மெல்லிசை நிகழ்ச்சி எல்லாவற்றிலும் ஸெலின் முதலிடம் பெற்று, அந்தக் கலை நிகழ்ச்சியின் ஹீரோயினாகத் திகழ்ந்தாள்.

ஒரு சிற்றுரைக்குப் பிறகு பரிசளிப்பு விழாவை நடத்துவ தென்று விழாக் குழுவினர் தீர்மானித்தனர்.

நடுவில் மற்றொரு கோரிக்கை எழுந்தது. வெற்றி பெற்ற பாடகியின் குழுவினர் மீண்டும் ஒரு முறை பாட வேண்டும் என்பதுதான் அது.

ஸெலின் மீண்டும் மேடைக்கு வந்து இரண்டு பாட்டுப் பாடினாள்.

பார்வையாளர்களது பார்வை, மேடையில் அமர்ந்திருந்த பர்னாண்டஸையும் கவனித்தது. ஃபாதர் பிரான்சிஸும் நல்ல பாடகராயிற்றே. "அவரையும் ஒரு பாட்டுப் பாடச் சொல்லுங்கள்" என்ற குரல் எழுந்தது. கோரிக்கை உரத்த குரலில் அதிகரிக்கவே... பர்னாண்டஸ் எழுந்தான்.

ஒரு பாடலைப்பாடினான். இனிமையான ஒரு பாட்டு. ஸெலின் அவனையே கவனித்துக் கொண்டிருந்தாள். அவளுக்கும் அந்தப்பாட்டு மிகவும் பிடித்துப் போயிற்று.

ஸெலின் பரிசு வாங்க மீண்டும் மேடையேறி வந்த போது, பர்னாண்டஸ் அவளை மிகவும் நெருக்கமாக நின்று கவனித்தான்.

பதினேழு வயது நிரம்பிய ஸெலின் பேரழகியாக இருந்தாள். சிவந்த துடிப்பான கன்னப்பகுதிகளும், குறும்பு விளையாடும் கண்களும் ஸெலினை மேலும் அழகாக்கிக் காட்டின.

வயதுக்கு மீறிய உடல் வளர்ச்சி. நடனமாடும் ஒரு பெண் சிலைபோல் அவள் வெகு கச்சிதமாயிருந்தாள். அவளது முன்னழகும் பின்னழகும் பர்னாண்டஸைக் கிறங்க வைத்தன.

தொடர்ந்து நிறைய முதல் பரிசு பெற்ற மாணவி என்ற முறையில், இறுதியாகப் பரிசளித்தபோது பர்னாண்டஸ் செல்லமாகப் பாராட்டுவது போல் அவள் கன்னத்தில் லேசாகத் தட்டினான்.

நிகழ்ச்சிகள் முடிவடைந்தபோது இரவு எட்டுமணி ஆகியிருந்தது.

“நீங்கள் இங்கேயே சாப்பிடலாமே?” பிரின்ஸ்பால், பர்னாண்டஸிடம் கேட்டார்.

“வேண்டாம்! சமையற்காரர் எனக்காகச் சமைத்து வைத்திருப்பார். அதை வீணாகக் குப்பையில் கொட்டும் படியாகி விடும்”.

அந்த நேரம் ஸெலின் அந்த அலுவலக அறைக்கு வந்தாள்.

“ஸெலின், இவ்வளவு கெட்டிக்காரியான ஒரு பெண் என்பது இவ்வளவு நாளும் எனக்குத் தெரியாது. அழகைப்

போலவே கலைத் திறமையும் அவளிடம் அதிகமாக உள்ளது!" பர்னாண்டஸ் கூறினான்.

இந்த வார்த்தைகளைக் கேட்ட அவள் மனம் ஆனந்தத்தால் துள்ளிக்குதித்தது. இதுவரை யாரும் அவளை இந்த அளவு புகழ்ந்ததே இல்லை.

"சார், நான் போய் வருகிறேன்!" ஸெலின் பிரின்ஸ்பாலிடம் அனுமதி வேண்டினாள்.

"உங்களது கார் வந்துவிட்டதா? "

"காத்திருக்கிறது சார்! "

"அப்பா - அம்மா விழாவுக்கு வந்திருப்பார்கள் இல்லையா?"

"இல்லை சார்! ரெண்டு பேருமே நேற்று பம்பாய் போய்விட்டார்கள். சிஸ்டரும், மாமாவும் நேற்று பம்பாய்க்கு வருவதாகத் தெரிவித்திருந்தார்கள்".

"அப்படியானால், அவர்களால் ஸெலினது நிகழ்ச்சிகளைப் பார்த்திருக்க முடியாது... இல்லையா?" பர்னாண்டஸ் கேட்டான்.

"ஏற்கெனவே நிறையப் பார்த்திருக்கிறார்கள் சார்! "

"ஸெலின் நினைத்தால் சினிமாவுக்கே முயற்சி செய்யலாமே?" - பர்னாண்டஸ் மீண்டும் கேட்டான்.

"ஒன்றிரண்டு சந்தர்ப்பம் வந்தது சார். அப்பாதான் வேண்டாம் என்று சொல்லி விட்டார்".

"ஸெலின் ஓர் உதவி... செய்யமுடியுமா?"

"சொல்லுங்கள் சார்".

"போகும் போது ஃபாதரை, அவரது வீட்டில் விட்டு

விட்டுப் போகமுடியுமா?"

"கண்டிப்பாகச் செய்கிறேன் சார்!"

"நேராக உங்கள் வீட்டுக்கே போய்விட்டு, அதன்பிறகு ஃபாதரைக்கொண்டுபோய் விட்டால் கூடப் போதும்!"

"எப்படி வேண்டுமானாலும் சரி சார்".

ஸெலினும், பர்னாண்டஸும் காரில் ஏறினர். கார் புறப்பட்டது.

தனது அறைக்கு வந்தபிறகும் பர்னாண்டஸின் இதயத்திலிருந்து ஸெலின் மறையவில்லை. இரவு உணவுக்குப் பறிகு பர்னாண்டஸ் அறையை விட்டு வெளியேறினான்.

இரவு நேரத்தில் இப்படிக் காற்றாட நடப்பது சுவாரஸ்யமானதாகத் தோன்றியது. மற்றொரு காரணம், இப்போதெல்லாம் பர்னாண்டஸால் தனியாகப் படுத்துத் தூங்க முடியாமல் ஆகிவிட்டிருந்தது.

அறைக்குத் திரும்பி வந்தபோது, நேரம் பன்னிரண்டு மணி ஆகியிருந்தது. கடிகாரம் கவனமாக ஒலித்தது. கூடவே மற்றொரு குரல்!

"அந்தப்பெண் மிகவும் அழகாக இருக்கிறாள். நீதான் முதன்முதலாக அவளைத் தொட்ட ஆடவன்!"

திரும்பிப் பார்த்தபோது, தெளிவற்ற அந்த உருவம் நின்று கொண்டிருந்தது.

"தயங்காதே. அவள் இப்பொழுது வீட்டில் தனியாக இருக்கிறாள். அவளது வீட்டார் திரும்பி வருவதற்குக் குறைந்தது ஒரு வார காலமாகும். நாளையிலிருந்து உனது லட்சியம் அவளாக இருக்கட்டும்".

பர்னாண்டஸுக்கு உற்சாகமூட்டிய அந்த வார்த்தைகள், உடனே அவனை அடுத்த கட்ட நடவடிக்கைகளில் ஈடுபடத்

தூண்டின.

மறுநாள் மதிய உணவு முடிந்ததும் பர்னாண்டஸ் ஸெலினது வீட்டை நோக்கிப் புறப்பட்டான்.

கேட்டை கடந்து அவன் உள்ளே காலெடுத்து வைத்ததும் ஸெலின் கதவைத் திறந்ததும் ஒரே நேரத்தில் நிகழ்ந்தன.

“நீங்கள் இன்று வருவீர்கள் என்று நான் நினைத்தேன். ஃபாதர்”.

“அப்படியா?”

“ஆமாம்... என் மனம் அப்படித்தான் கூறியது”.

“இதுவும் கெட்டிக்காரத்தனம் தான். ஆமாம்; இங்கே பெரிய பியானோவெல்லாம் வைத்திருக்கிறீர்களே?” என்றபடி பர்னாண்டஸ் வரவேற்பு அறையின் வடக்குப்புற மூலையிலிருந்த பியானோவை நெருங்கினான்.

“நீங்கள் என்ன சாப்பிடுகிறீர்கள்? உங்கள் கேள்விகளுக்கெல்லாம் பதில் பிறகு!” ஸெலின் கேட்டாள்.

பர்னாண்டஸின் கண்கள் அந்த அறையைத் துழாவின.

“ஸெலின், உன்னுடைய இந்தக் கலையார்வத்துக்குக் காரணம் அப்பாவா, அம்மாவா?”

“சந்தேகமே இல்லாமல் டாடிதான். மம்மிக்கும் இதிலெல்லாம் ஈடுபாடு உண்டு. ஆனால், அப்பாவுக்குத் தீவிரம் ஜாஸ்தி”.

அபூர்வமான விலையுயர்ந்த கலைப்பொருள்கள் ஆங்காங்கு அழகாகப் பொருத்திவைக்கப்பட்டிருந்தன. அவற்றுள் சங்குகளும், மரச்சிற்பங்களும் கூட இருந்தன,

“இதை எல்லாம் விட மிகவும் அழகான வேறொரு

பொருள் உண்டு. டாடி ரோம் நகருக்குப் போனபோது வாங்கி வந்தது".

"அது என்ன பொருள்?"

"வாருங்கள்..." - அவள் தென்புறமிருந்த ஒரு கதவைத் திறந்து கொண்டு நுழைந்தாள். தூணை ஒட்டியிருந்த கண்ணாடி பீரோவில் ஒரு சிலுவை இருந்தது.

"இது போப் ஆண்டவர் நேரடியாக வாழ்த்தி டாடியிடம் கொடுத்தது ஃபாதர்! "

பர்னாண்டஸ் ஒரே ஒரு விநாடிதான் பார்த்தான். "வேண்டாம்.... நான் பார்க்க வேண்டியதில்லை...." - என்றபடி திரும்பி ஓடத் தொடங்கினான்.

ஸெலினுக்கு அதில் எந்தவிதமான வேறுபாடும் தெரியவில்லை. அவர், அவரது அனுபவத்தில் இது போல் எத்தனை பார்த்திருப்பார்! அதுதான் அவர் திரும்பி ஓடக் காரணமாக இருக்கும் என்று நினைத்தாள்.

ஓடிவந்த பர்னாண்டஸ் பியானோவின் முன்பாக அமர்ந்து வாசிக்க முயன்றான்.

"அப்பாவுக்கு இதில் ரொம்பவும் பழக்கம் உண்டு".

"நானும் முயற்சி செய்து பார்க்கிறேன்! "

இசைக்கருவிகளை வாசிப்பது என்றாலே பர்னாண்டஸுக்குத் தனி உற்சாகம்தான்.

"ஃபாதர்! ஒயின் சாப்பிடுகிறீர்களா? வெளிநாட்டிலிருந்து கொண்டு வந்தது! " ஸெலின் கேட்டாள்.

"கண்டிப்பாகச் சாப்பிட வேண்டுமென்றால், கொஞ்சம் சாப்பிடுகிறேன்".

ஸெலின் அறைக்குள் நுழைந்தாள். கண்ணாடி தம்ளரை

எடுப்பதற்காகச் சமையற்கட்டுக்குள் நுழைந்தபோதுதான் வேலைக்காரி அவளது வீட்டிற்குப் போயிருப்பது நினைவுக்கு வந்தது. மூன்று நாட்களாகச் சொல்லிக் கொண்டிருந்தாள். வாட்ச்மேன், இரவு நேரத்தில்தான் வருவார்.

சீல் உடைக்காத ஓர் ஒயின் பாட்டிலுடன் கிளாஸையும் எடுத்துக்கொண்டு பர்னாண்டஸிடம் வந்தாள்.

அவன் பியானோ வாசித்துக் கொண்டிருந்தான். பாட்டிலைத்திறந்த ஸெலின், கிளாஸில் பாதியளவு ஒயினை ஊற்றி அவனிடம் நீட்டினாள்.

அவன் அதை வாங்கிக் குடித்தான்.

“அப்பாவும் சாப்பிடுவார் இல்லையா?”

“எப்பொழுதாவது!”

“நீயும் சாப்பிடுவாய் இல்லையா?”

“சிலசமயம் டாடி கொஞ்சம் தருவார்”.

“எனக்காகத் தயங்காதே வேண்டுமானால்... சாப்பிட்டுக் கொள்”.

அந்த வார்த்தைக்காகவே காத்திருந்தவள் மாதிரி கிளாஸில் அவசர அவசரமாகக் கவிழ்த்த கால்பாக ஒயினை மடக்மடக் கென்று குடித்தாள்.

ஒயின் உள்ளே போனபோது பர்னாண்டஸின் மனத்தில் ஆசை பொங்கியது. அந்தக் கண்ணில் அதுவரை இல்லாத வேறொர் உணர்வு தட்டுப்பட்டது.

ஸெலினின் கண்களை உற்றுப் பார்த்தான். அந்தப் பார்வை, அவள் மனதிற்குள் ஆழ்ந்து இறங்கியது.

தசைப்பிடிப்பான அவள் உடம்பு, அவனுள் தீ மூட்டியது. அதனால் ஸெலினால் அவள் நின்ற இடத்திலிருந்து

அசைய முடியாமற் போனது.

பார்வையை மாற்றாமல் ஸ்டூலிருந்து எழுந்த பர்னாண்டஸ், அவளை நெருங்கினான். அவன் கைகள் அவள் தோள்களில் பதிந்தன. கண்மூடித் திறப்பதற்குள் அவளை இழுத்து அணைத்து அவள் கன்னத்தில் எதிர்பாராத விதமாக முத்தமிட்டான்.

சட்டென்று நடந்த அந்தச் சம்பவத்தால் ஸெலின் பிரமை பிடித்துப் போய் நின்றாள். அவளால் எதுவும் செய்ய முடியவில்லை. பின்பு, பர்னாண்டஸ் அவளை அங்கிருந்து அவளை படுக்கையறைக்குத் தூக்கிச் சென்றான். அப்போது ஸெலின் ஒரு பொம்மை போல் செயலற்றிருந்தாள். பர்னாண்டஸ் சற்று நேரத்தில் அவளது கற்பைக் கவர்ந்தெடுத்தான்.

அந்த உடம்பிலிருந்து எழுந்தவன், அவசர அவசரமாகத் தனது உடைகளைச் சரிசெய்து கொண்டு வெளியேறவும் செய்தான்.

அதன் பிறகும் ஸெலின் வெகு நேரம் அப்படியே மரத்துப் போனதுபோல் படுத்திருந்தாள். பின்பு மயக்கத்திலாழ்ந்தாள்.

அன்று இரவு மணி பன்னிரெண்டானபோது பர்னாண்டஸின் அறையில் சாத்தான் வெளிப்பட்டது.

“பர்னாண்டஸ்! உனது புதிய இரை மிகவும் நல்லது. எனக்கும் அவளைப் பிடித்திருக்கிறது. அந்த உடம்பில் ரத்தம் நிறைய உள்ளது. இன்றிலிருந்து பதின்மூன்றாவது நாள் அவளை எனக்கு விட்டுத் தரவேண்டும்”.

சாத்தானது உருவம் மறைந்தது.

மறுநாள் மாலை நேரமானபோது ஸெலின் டிரைவரை அழைத்தாள்.

“உங்களுக்கு ஃபாதரின் வீடு தெரியுமா?”

"நீங்கள் அங்கே போகவேண்டுமா?"

"ஆமாம்... அவரைப் பார்க்க வேண்டும்".

"உங்களுக்கென்ன பைத்தியமா? இருட்டி விட்டால் அந்தப்பக்கம் பிசாசுகள் கூடப் போகாதேம்மா!"

"என்ன பேசுகிறீர்கள்! நீங்கள், இவ்வளவு பெரிய பயந்தாங்குளியா?"

"போயே தீரவேண்டுமென்றால்... போகலாம்".

உடனே திரும்பி விடுவதாக வேலைக்காரியிடம் சொல்லி விட்டுப் புறப்பட்டாள்.

"அதோ தெரிகிறது பாருங்கள். அதுதான் நான் சொன்ன கல்லறைப்பகுதி!"- நான்கு புறமும் இருள் சூழ்ந்திருந்த கல்லறை காம்பவுண்டுச் சுவரின் கறுத்த பகுதி மீது வெளிச்சத்தைப் பாய்ச்சியபடி கார் திரும்பியது.

## 5

**வீ**ட்டுக்கு வெளியே கார் நிற்கும் ஓசையைக் கேட்டு பர்னாண்டஸ் வெளியே வந்தான். காரிலிருந்து இறங்கும் ஸெலினைக் கண்டதும் அவன் வியப்படைந்தான்.

"உங்களைப் பார்க்க வேண்டுமென்று ஸெலினுக்கு ஒரே பிடிவாதம்!" டிரைவர் வாசு கூறினார்.

"அதற்கென்ன? எப்பொழுது வேண்டுமானாலும் இங்கு தாராளமாக வரலாமே!"- பர்னாண்டஸ் சிரித்தவாறு பேசினான்.

"வாசு இங்கேயே இருங்கள். நான் இதோ வந்து

விடுகிறேன்...”

ஸெலின், பர்னாண்டஸுடன் அவனது வீட்டுக்குள் போனாள்.

இந்தச் செய்கை வாசுவுக்கு அவ்வளவாகப் பிடிக்கவில்லை. ரொம்பவும் அடக்கமான பெண். ஆடல், பாடல்களில் ஆர்வமிருந்தாலும் கூட மற்றவர்கள் வற்புறுத்தினால் மட்டுமே ஸெலின் அதிலெல்லாம் கலந்து கொள்வாள். அநாவசியமாக வீட்டை விட்டு வெளியேறுவதுமில்லை. ‘இவள் எதற்காக இந்த நேரத்தில் ஃபாதரைப் பார்க்க வந்திருக்கிறாள்?’

“ஃபாதர்! இந்தக்குழந்தை யார்? இதுவரையில் பார்த்த முகமாகத் தெரியவில்லையே!” அறைக்குள் வந்த ஸெலினைப் பார்த்த லூக்காஸ் கேட்டான்.

“பாட்டு கற்குக் கொள்வதற்காக வந்திருக்கிற மாணவி தான். ஆமாம், நீ எங்கேயோ அவசரமாகப் போக வேண்டு மென்று சொன்னாயே; புறப்படு...”

ஒன்றும் புரியாதவனாகச் சந்தேகத்துடன் பர்னாண்டஸை ஒரு தடவை உற்றுப் பார்த்துவிட்டு வெளியே போனான் லூக்காஸ்.

“என்ன ஸெலின்... திடீரென்று இந்தப்பக்கம் வந்திருக்கிறாய்?”

“என்னால் உங்களைப் பிரிந்திருக்க முடியவில்லை...” -வெட்கத்தை விட்டவளாக அவள் பர்னாண்டஸின் மார்பில் சாய்ந்தாள்.

அவன், அவளை இறுக்கி அணைத்தான். பிறகு ஸெலினை வாரியெடுத்துப் படுக்கை அறையை நோக்கி நடந்தான். அரை மணி நேரத்துக்குப்பிறகுதான் அவர்கள் வெளியே வந்தனர்.

“எங்கள் டிரைவரை என்னால் நம்பமுடியவில்லை!”- ஸெலின் கூறினாள்.

“எனக்கும் அப்படித்தான் படுகிறது. நீயே கார் எடுத்து வந்திருக்கலாமே? ”

“எனக்கு டிரைவிங் தெரியும். ஆனால், நான் எப்படித் தனியாக வருவது? ”

“அப்படியானால் வரவேண்டாம். நாளைக்கு நானே அங்கு வருகிறேன்! ”

“எங்களது வீட்டு வாட்ச்மேனிடம் துப்பாக்கி இருக்கிறது”.

“இருந்தால் என்ன? நாளை இரவு பன்னிரண்டு மணிக்கு நான் அங்கே இருப்பேன்! ” பர்னாண்டஸ் உறுதியான குரலில் கூறினான். அவனுக்கு ‘குட்நைட்’ சொல்லிவிட்டு, ஸெலின் காரில் ஏறினாள். அவள் புறப்பட்டுப் போய் வெகுநேரம் கழித்துதான் லூக்காஸ் திரும்ப வந்தான். அவனிடம் மதுவாசனை கடுமையாக இருந்தது.

“ஃபாதர்! உங்களுக்குச் சாப்பாடு எடுத்து வைக்கட்டுமா? எனக்குத் தூக்கம் வருகிறது!” - அவனது குரல் குழறலாக இருந்தது.

“நீ எக்கச்சக்கமாக ஊற்றிக் கொண்டிருப்பதாகத் தோன்றுகிறதே. யார் வாங்கித் தந்தார்கள்?”

“யாரும் வாங்கித் தரவில்லை, என்னிடம் பணமிருந்தது, ரெண்டு பாட்டிலை இறக்கினேன்”.

“இதுவரை நீ இப்படியெல்லாம் நடந்து கொண்டதில்லையே?”

“படுத்தால் தூக்கம் வருவதில்லை. அதனால்தான் .....”

“கொஞ்சமாகச் சாப்பிடுவதால் எந்தத் தவறுமில்லை.

அப்புறம், நாளைக்கு நீ எங்களது வீடுவரை போய்வர வேண்டும். கொஞ்சம் பணம் தேவைப்படுகிறது!"

"எவ்வளவு ரூபாய் தேவைப்படுகிறது?"

"தற்சமயத்துக்கு ஓர் இரண்டாயிரம் தேவைப்படுகிறது. நம் இருவருக்கும் ஒரு மாத காலத்திற்காவது பணம் வேண்டாமா? சர்ச்சிலிருந்து ஒதுங்கியிருப்பதால், வேறு வருமானம் எதுமில்லையென்று உனக்கும் தெரியுமே! "

பர்னான்டஸுக்குப் பரிமாறியபிறகு லூக்காஸும் சாப்பிட்டான்.

அன்று நள்ளிரவு நேரத்திலும் பர்னான்டஸ் கல்லறைப் பகுதிக்குச் சென்றான். இப்பொழுதெல்லாம் பகல் நேரம் பர்னான்டஸை பயப்படுத்தியது, கருகும்மென்றிருக்கிற இரவுகள்தான் அவனுக்குப் பிடித்தமானதாகிவிட்டிருந்தது.

வழக்கத்துக்கு மாறாக ஒரு பெரிய தாழ்ப்பாளைப் பொருத்தி, கல்லறைப் பகுதியின் வாசலைப் பூட்டியிருந்தார்கள். கடந்த சில நாட்களாக இரவு வேளைகளில் கல்லறைக்குள் நுழைந்து, வேளியே போகும்போது அவன் கதவைப் பூட்ட மறந்து போனது நினைவுக்கு வந்தது. அப்படியானால், வேறு யாரோ இப்படிப் பூட்டியிருக்க வேண்டும்.

'இதை எப்படித் திறப்பது?' - அவன் சாதாரணமாகப் பூட்டின் மீது கையை வைத்து இழுத்தான். 'கிளிக்' என்ற ஓசையுடன் சிரமமில்லாமல் அது வாய் பிளந்தது.

கதவு திறந்து கொண்டதும் பர்னான்டஸ் நேராக அன்னம்மாவின் கல்லறையை நோக்கி நடந்தான், காணாமற் போன கிரேஸியைப் பற்றி போலீசில் புகார் செய்து, அவர்கள் விசாரிக்கத் தொடங்கியிருந்தனர். பத்திரிக்கைகளில் நாளொரு செய்தி யூகமாகவும், கருதப்படுவதாகவும் வெளியாயின. ஏதேதோ அமைப்பைச் சேர்ந்தவர்கள் போராட்டங்களை

நடத்திக் கொண்டிருந்தனர்.

கிறிஸ்தவ மத நம்பிக்கைப்படி கடவுள் ஆத்மாவை அழைக்கும் போதுதானே மரணம் சம்பவிக்கிறது. ஆனால், க்ரேஸியின் மரணமோ, பிசாசு அவள் ரத்தத்தை உறிஞ்சிக் குடித்ததால் அல்லவா நிகழ்ந்தது? எனவே, உண்மையில் கிரேஸி இறக்கவில்லை என்று பொருள்.

அவன் கல்லறையை நெருங்கினான். அந்த இடத்திலிருந்து பார்த்தால், அந்த கல்லறைப் பகுதி முழுவதும் கண்ணுக்குத் தெரியும். அவன் நடுவிலிருந்த சவ மேடையின் வலப் புறம் காட்டுச் செடிகள் கண்டபடி வளர்ந்திருந்தன, இருளால் நிறைக்கப்பட்டிருந்த அந்தப் பகுதிக்குள் பயங்கரமும் நிரம்பி இருப்பதாகத் தெரிந்தது. வடமேற்கு மூலையில் பெரிய சமாதி ஒன்று உள்ளது, இந்தக் கல்லறையின் முதல் பிணம் புதைக்கப்பட்ட இடம் அது.

ஆகாயத்தில் நிலா பாதியாகத் தேய்ந்திருந்தது. அதிலும் நடு நடுவே பாய்ந்து வந்த மேகங்கள் நிலவொளியை மறைத்துக் கல்லறைப் பகுதியுடன் கண்ணா மூச்சி ஆடிக் கொண்டிருந்தது.

பிரான்சிஸிடமிருந்து கைப்பற்றிய புத்தகத்திலிருந்த எல்லாவற்றையும் அதற்குள் பர்னாண்டஸ் மனப்பாடம் செய்து விட்டிருந்தான். பிசாசுகளின் வல்லமையும், அவற்றால் என்னவெல்லாம் செய்ய முடியும் என்பதும் அதில் தெளிவாக விவரிக்கப்பட்டிருந்தது.

இறந்து போனவர்களின் ஆத்மாவை வரவழைப்பதற்கும், அவர்களுடன் பேசுவதற்கும். தனது தேவைக்கேற்றபடி அவர்களைப் பயன்படுத்துவதற்கும் பர்னாண்டஸ் அதற்குள் கற்றுக் கொண்டிருந்தான்.

அன்னம்மாவை அழைத்த உடனேயே அவள் வெளிப்பட்டதும், பதிலளித்ததும் அவன் நினைவில் எழுந்தது. மேலும் இறந்து போனவர்களை எழுப்ப முடிந்த ஒரு பாதிரியாரையும் பர்னான்டஸுக்கு பழக்கமிருந்தது.

அவர்தான் ஃபாதர் காபிரியேல்! ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த அவர், மோசமான காரியங்களுக்குத் தனது மந்திரஸித்திகளைப் பயன்படுத்தியதில்லை. உயிருடன் இருப்பவர்களைப் பிரேதப் பிசாசுகள் தொல்லைப்படுத்துவதாக அறிந்தால், நேராகக் குறிப்பிட்ட அந்தக் கல்லறைக்குச் செல்வார். அங்கிருந்து அவற்றை விரட்டி ஓட்டும் வேலையைச் செய்து வந்த கேப்ரியேல் உண்மையிலேயே ஒரு மகான்! திவ்வியமான சக்திகள் நிறைந்தவர்.

மென்மையாக வீசிய இரவின் ஊதல் காற்றில், ஏதோ காட்டுப் பூவின் வாசனையும் கலந்து வந்தது.

"கிரேஸி ... கிரேஸி!"

பர்னான்டஸ் அவளை எழுப்ப முயன்றான். ஆனால், கல்லறையிலிருந்து எந்த விதமான அசைவோ. சத்தமோ கேட்கவில்லை. பர்னான்டஸுக்கு இது அதிசயமாக இருந்தது.

அதையொட்டியிருந்த மற்றோரு சமாதியில் முப்பது வயதாகியும் திருமணமாகாமல் இறந்து போன ஓர் இளம் பெண் புதைக்கப்பட்டிருந்தாள். புகழ் பெற்ற ஓர் ஓட்டலில் காபரே நடனக்காரியாக இருந்தவள் பெற்றி ஸ்டூவர்ட். அவள் ஏராளமான ஆண்களுடன் தொடர்புபடுத்திப் பேசப்பட்ட போதிலும், இறப்பதுவரை திருமணம் செய்து கொள்ளவில்லை.

வெளியுலகுக்கு அவ்வளவாகத் தெரியாமலிருந்த ஒரு பணக்காரர்தான் அவள் உடலை அடக்கம் செய்து சமாதி கட்டினார். ஆனால், சில நாட்களுக்குள்ளேயே ஆச்சர்ய படத்தக்க செய்திகள் ஊரெங்கும் பரவின. பெற்றி ஸ்டூவர்ட் நள்ளிரவு வேளைகளில் கல்லறையின் இரும்புக் கதவோரம் நிற்பதை பாதிரியாரும், சர்ச்சைச் சேர்ந்த ஊழியர்களும் வெளியாட்கள் சிலரும் கூடப் பார்த்திருக்கிறார்கள். கடைசியில் அவள் கல்லறையிலிருந்து என்றென்றைக்குமாக எழுந்திருக்காமலிருக்கவும், முற்றிலுமாகச் செயலற்றுப் போகும்படியானதுமான சில மந்திரப் பிரயோகங்களை

நடத்தினர். முத்தாய்ப்பாக அவளது கல்லறையின் மீது ஒரு சிலுவையையும் பதித்து வைத்தனர்.

இந்த விவரங்களையெல்லாம் பர்னான்டஸ், லூக்காஸிடமிருந்து தெரிந்து கொண்டிருந்தான். அந்தக் கல்லறையை உடைத்து, அங்கிருந்து சிலுவையை அகற்றி விட்டால் பெற்றி ஸ்டூவர்ட் எழுந்து வெளியே வருவாள் என்று பர்னாண்டஸுக்குத் தெரியும். எனவே, அதைச் செய்வதென்று தீர்மானித்தான்.

நடுநடுவே கிரேஸியை சமாதியிலிருந்து எழுப்புவதற்காக பர்னாண்டஸ் பல முறை முயன்றும் அது ஏனோ பலனளிக்கவில்லை. ஆனால். அதே சமயம் முற்றிலுமாக வெண்மையான உருவம் ஒன்று வெளியிலிருந்து கேட்டைத் தாண்டி கல்லறைப் பகுதிக்குள் நுழைந்தது. யதேச்சையாகத் திரும்பிய பர்னாண்டஸ் அந்த உருவத்தைப் பார்த்தான். சட்டென்று எங்காவது ஓடி ஒளிந்து கொள்ள வேண்டுமென்று சுற்றுமுற்றும் பார்த்தான்.

அந்ன உருவம் அவனுக்கு முன்பாக வந்து நின்றது.

அவள் கிரேஸிதான்!

பர்னாண்டஸ் தன்னையும் மீறி அவளை வீசியெறிந்த கல்லறையின் ஸ்லாபைப் பார்த்தான். அது அவன் போட்டது போட்டபடியே கிடந்தது.

"யா...ர்... கிரேஸிதானா இது!" - பர்னாண்டஸின் குரலில் ஒரு வித நடுக்கமிருந்தது.

"ஆமாம் ... தள்ளி நில். நான் இருப்பிடத்துக்குப் போக வேண்டும்!" - அவளது குரலில் பைசாசிகத் தன்மை நிறைந்திருந்தது.

பர்னாண்டஸ் சட்டென்று பின்வாங்கி நகர்ந்தான். ஒரு புகைச்சுருள் மாதிரி அவள் அந்தக் கல்லறைக்குள் வடிந்தாள். பர்னாண்டஸ் அதை வியப்புடன் பார்த்துக் கொண்டிருந்தான்.

கிரேஸியின் பிண உடம்பைக் கல்லறைக்குள் வீசிய நிகழ்ச்சி அவனது நினைவில் எழுந்தது. பைசாசிக சக்தி வாய்ந்த மனிதர்கள் உலகத்தில் இருப்பதாகவும், அப்படிப்பட்டவர்கள் இறந்தால், அவர்களது உடம்புகள் அழுகிச் சிதைவதில்லை என்றும் அவன் வாசித்திருந்தான். தான் எத்தனையோ முறை கூப்பிட்டும் கூட எழும்பி வராத கிரேஸி, தானாகவே கல்லறையை விட்டு எழும்பி நடப்பது தான் அவனை யோசிக்க வைத்தது!

மறுநாள் மாலை நேரத்தில் ஃபாதர் வின்சென்ட் சர்ச்சின் வரவு - செலவுக் கணக்கைச் சரி பார்த்துக் கொண்டிருந்தார்.

சர்ச்சின் நிர்வாகியான சக்ரியா தாமஸ். ஃபாதருக்கு முன்பாக வந்து நின்றார்.

"யார் தாமஸா வந்திருப்பது? இப்போதுதான் உங்களை நினைத்தேன்".

"நினைப்பதற்கு ஏதாவது ...?"

"காரணம் உண்டு. கணக்கு வழக்குகளைச் சரி பார்த்துக் கொண்டிருக்கிறேன். இந்தச் சமயத்தில் நீங்களும் உடனிருந்தால் வேலை சுலபமாயிற்றே என்று நினைத்த போதுதான் வந்தீர்கள் ".

ஃபாதர், சமையற்காரரை அழைத்து டீ கொண்டு வரச் சொல்லிவிட்டு, "விசேஷமாக ஏதாவது செய்திகள் உண்டா?" என்றார் தாமஸைப் பார்த்து.

"இருக்கிறது. அதைச் சொல்லத்தானே ஓடி வந்திருக்கிறேன்".

"சொல்லும்! " - என்றபடி பேரேட்டைமூடி வைத்தார் ஃபாதர்,

"முதலிலிருந்தே சொல்கிறேன். நமது கல்லறை வாசலை இந்தத் - தடவையும் யாரோ உடைத்துத் திறந்திருக்கிறார்கள்! "

“நேற்றுதானே நாம் புதியதாகப் பூட்டுப் போட்டோம்?” ஃபாதர் வியப்புடன் கேட்டார்.

“நூற்று இருபத்தைந்து ரூபாய் கொடுத்து வாங்கிய ஏழு லிவர் உள்ள பூட்டு அது, சரியான சாவியைத் தவிர வேறு எந்தச் சாவியைப் போட்டாலும் அதைத் திறக்க முடியாது. ஆனால் , அதையும் வெகு சுலபமாக திறந்திருக்கிறார்கள்”.

“திறந்திருக்கிறார்களா ... அல்லது உடைத்திருக்கிறார்களா?”

“நீங்களே பாருங்கள். நான் கையோடு கொண்டு வந்திருக்கிறேன்! ” - என்றபடி ஒரு காகிதப் பொட்டலத்தை மேஜை மீது வைத்தார் தாமஸ். “சாவி உங்களிடம் தானே உள்ளது?”

“ஆமாம், சுவரில் பத்திரமாகத் தொங்குகிறதே சாவி! ” - சுட்டிகாட்டி விட்டு, மேஜை டிராயரிலிருந்து அந்தச் சாவியின் இரட்டையை வெளியே எடுத்துக் காட்டினார்.

“சாதாரணமானவர்கள் இந்தப் பூட்டை அவ்வளவு சுலபத்தில் திறக்க முடியாது! ” - தாமஸ், பொட்டலத்திலிருந்த பூட்டைப் பார்த்தபடி பேசினார்.

“யார் இப்படிச் செய்கிறார்கன்? எதற்காக இருக்கும் இதெல்லாம்?” ஃபாதர் தனக்குத்தானே பேசிக் கொள்வது போல கேட்டுக் கொண்டார்.

“இது தொடர்பான வேறு சில செய்திகளையும் சொல்வதற்காகத் தான் வந்தேன்!” - பேசியபடியே மடியிலிருந்த பொட்டலத்தைப் பிரித்துக் கொஞ்சம் புகையிலையை எடுத்து வாயில் போட்டு க் கொண்டார் தாமஸ்,

தாமஸ் அந்த சர்ச்சை நிர்வகிக்கும் பணியை மேற்கொண்டு இருபத்தைந்து வருடங்களுக்கு மேலாகிவிட்டன. வயது அறுபதைக் கடந்து விட்டது. வழுக்கைத் தலையும், தடித்த மீசையும், தொப்பை விழுந்த வயிறும் குறிப்பிடத்தக்க அவரது அடையாளங்கள்.

அப்படியொன்றும் வசதியான வீட்டைச் சேர்ந்தவர் அல்ல அவர். நிறைய உறுப்பினர்களைக் கொண்ட பெரிய குடும்பம் அவருடையது. மூத்தவள் மகள். அதற்குப் பிறகு எல்லாம் ஆண் பிள்ளைகள்! அவரது கல்யாணமே ரொம்பவும் தாமதமாக நடைபெற்றதால், அவரின் மூத்த பெண்ணுக்கே அதிக வயதாகவில்லை.

பதினேழு வயதை எட்டிப் பிடித்த லிஸி பிளஸ்டூ இரண்டாமாண்டு மாணவி. மற்ற குழந்தைகளும் படித்துக்' கொண்டிருந்தனர்.

நேர்மைதான் தாமஸின் மூலதனம். அந்த நேர்மைக்குக் கிடைத்த பரிசு தான் சர்ச் வேலை.

சர்ச் சம்பந்தப்பட்ட எல்லா வேலைகளையும் அவர் இழுத்துப் போட்டுக் கொண்டு செய்வதால், அவருடைய சம்பளமும் அவ்வளவு மோசமில்லை. சர்ச்சுக்குச் சொந்தமான நிலத்தில் அவருக்கு வீடும் கொடுத்திருந்தார்கள். தென்னை, மா, பலா மரங்கள் அவரது வீட்டைச் சுற்றி தேவையான அளவுக்கு இருந்தன. ஒரு வகையாக அவரது குடும்பம். சிக்கல்கள் அதிகமில்லாமல் ஓடிக் கொண்டிருக்கிறது.

“விசேஷம் என்றீர்களே; இன்னும் ஏதாவது உண்டா?” - பூட்டைக் கையிலெடுத்து பூட்டியும், திறந்தும் பார்த்தபடி ஃபாதர் கேட்டார்.

“கிரேஸி காணாமல் போய் வெகு நாட்களாகி விட்டதே... அவளைப் பற்றி உங்களுக்கு ஏதாவது தகவல் தெரியுமா?”

“எனக்கு எதுவும் தெரியாது. நானும் தட்டுப் படுகிறவர்களிடம் விசாரிக்கத்தான் செய்கிறேன்! ”

“அதில் ஒரு ரகசியம்!” மெதுவான குரலில் தாமஸ் கூறினார்.

“ரகசியமா, என்ன அது? யார் சொன்னது?” ஃபாதர்

ஆவலுடன் கேட்டார்.

"கிரேஸியை கடந்த இரண்டு மூன்று நாட்களாக, இரவு நேரத்தில் பார்த்திருக்கிறார்கள் சிலர்! "

"யார் பார்த்தார்களாம்? "

"வர்க்கீஸும் தொம்மியும்தான்".

"எப்படி?"

"ரெண்டு பேரும் டவுனுக்குப் போய்விட்டுத் திரும்பி வந்து கொண்டிருந்தார்களாம். ராத்திரி பன்னிரண்டு மணிக்கு மேல் இருக்குமாம். கல்லறை இருக்கிறதே, அதன் தென்புறத்தில் புதர் மண்டிக்கிடக்கிறதில்லையா - அந்த இடத்தில்தான்! "

"சொன்னவர்கள் எப்படிப்பட்டவர்கள் என்பது நமக்குத் தெரியாதா என்ன? இருவரும் ஒன்று சேர்ந்தால் இரண்டு ஆட்களாகவா தெரிகிறார்கள்? அதுவும் டவுனுக்குப் போய் விட்டு வந்தால் கேட்கவும் வேண்டாம்! "

"ஃபாதர் இந்த வேடிக்கையைக் கேளுங்கள்.... அன்று ரெண்டு பேரும் தண்ணியைத் தொடவே இல்லையாம்!"

"அப்படியா?"

"ஆமாம்... நடந்து வரும்போது கிரேஸி ரோட்டின் நட்ட நடுவில் நின்றிருந்தாளாம். வர்க்கீஸ் 'கிரேஸி' என்று கத்திய படி அவளை நெருங்கினானாம்..." -தாமஸ் பேச்சைச் சற்று நிறுத்தினார்.

"பிறகு...?" -ஃபாதரால் ஆவலை அடக்க முடியவில்லை.

"கிரேஸியைப் பிடிப்பதற்காக நெருங்கிய வர்க்கீஸை, கிரேஸி ஒரு தள்ளுத்தள்ளினாளாம். ஆள் அப்படியே அட்டை போல சுருண்டு விழுந்தாராம். வர்க்கீஸைத்தான் உங்களுக்குத் தெரியுமே. ஆரோக்கியமும் வலுவும் வாய்ந்த இரண்டு பேர்

சேர்ந்தாலும் அவ்வளவு சுலபத்தில் வர்க்கீஸைக் கீழே தள்ளிவிட முடியாது!”

ஃபாதரால் சற்று நேரத்துக்கு எதுவும் பேசமுடியவில்லை. அவரின் நெற்றியில் சுழிகள் வட்டமிட்டன.

மறுநாள்- ஃபாதர், தாமஸை வரவழைத்தார். இரண்டாவதாக அவர் சொன்ன கதையைக் கேட்டு ஃபாதர் அப்படியே உறைந்து போனார்!

## 6

“அவளை நீங்களும் பார்த்திருக்க வேண்டும் ஃபாதர்! அவளது பார்வையே என்னை நடுங்க வைத்தது. ஒரு பிசாசு மாதிரி பார்க்கிறாள். இப்போது உங்களிடம் நான் கேட்கிறேன்... என்னை ஒரு பெண் பிடித்துக் கீழே தள்ளி விட்டாள் என்று சொன்னால் நீங்கள் நம்புவீர்களா?”

தாமஸின் முகத்தில் அப்போதும் பீதி நிறைந்திருந்தது. அவர் தொடர்ந்தார்:

“இந்த ஊரிலேயே பெரிய ரௌடியாக இருந்தவன் குட்டப்பன். நான் கொடுத்த ஒரே அடியில் ரத்த ரத்தமாக வாந்தியெடுத்தான். அப்படிப்பட்ட என்னை ஒரு நோஞ்சான் பெண் தள்ளிவிட்டாள் என்று சொன்னால் நம்புவீர்களா?” அவரது குரலிலும் கூட பயமும் பதற்றமும் தெரிந்தன.

தனது சந்தேகத்தைத் தீர்த்துக் கொள்வதற்காக ஃபாதர் கேட்டார்: “உண்மையாகவா, நீங்கள் பார்த்தது உறுதியாக அவளைத்தானா?”

“சந்தேகமே இல்லை. அது கிரேஸியேதான்! அவளை

ஏதோ ஒரு பிசாசு பிடித்திருக்கிறது என்றே எனக்குத் தோன்றுகிறது.''

''என்னமோ... நீங்கள் சொல்வது எதுவும் எனக்கு விளங்கவில்லை.''

குழப்பம் நிறைந்தவராக ஃபாதர் வின்செண்ட் பேசினார். பீதியுணர்வு காரிருள் போல் அவர் மனத்துள் ஆழ்ந்து இறங்கியது.

**அ**ன்று இரவும் பன்னிரண்டு மணிக்கு பர்னாண்டஸ் எழுந்தான். வழக்கம் போல் தனது அறையிலிருந்த வெளியேறினான்.

பக்கத்து டவுனுக்குப் போகும் மெயின் ரோட்டை அடைந்த போது, ஒரு டாக்ஸி ரோட்டோரமாக நின்றிருந்தது.

''சார், வண்டி வேணுமா?''

''டவுன் வரைக்கும் போகணும்.''

''ஏறுங்க சார்!''

பர்னாண்டஸ் ஏறி கதவை மூடியதும் டாக்ஸி புறப்பட்டது.

அது மெதுவாக நகர்வதாகத் தோன்றியது.

''என்ன இவ்வளவு மெதுவாகப் போகிறது கார்; வேகமாகப்போகட்டும்!''

''வழி சரியில்லை சார்!''

''எனக்கு அப்படித் தெரியவில்லையே!''

திடுமென்று காரின் வேகம் அதிகமானதாக டிரைவருக்குத் தோன்றியது. அவர் சட்டென்று ஆக்ஸிலேட்டரிலிருந்த தன் காலை தளர்த்தியது போல் உயர்த்தினார். அப்போதும் கார் சீறிப்

பாய்ந்து கொண்டிருந்தது.

ஒரு வேளை தூக்கக் கலக்கத்தில் அப்படித் தோன்றுகிறதோ என்று நினைத்த டிரைவர், பிரேக்கை மிதித்தவுடன் கார் பழைய நிலைக்கு வந்தது.

ஸெலினது வீட்டை அடைந்ததும் காரை நிறுத்திக் காத்திருக்குமாறு கூறிவிட்டு, பர்னாண்டஸ் கீழே இறங்கினான்.

ஸெலின் அவனை எதிர்பார்த்துக் காத்திருந்தாள்.

"நீங்கள் வருவீர்கள் என்று எனக்குத் தெரியும். எதிர்பார்த்தேன்!" ஸெலின் சிரித்தபடி வரவேற்றாள்.

"உன்னைப் பார்க்காமல் இருக்க முடியவில்லை!" அவள் தோளில் கை வைத்தபடி அவன் பேசினான்.

பர்னாண்டஸ் அந்த வீட்டிலிருந்து வெளியேறும் போது நேரம் இரண்டு மணி. டிரைவர் பின்ஸீட்டில் படுத்து தூங்கிக் கொண்டிருந்தார். பர்னாண்டஸ் அவரைத் தட்டி எழுப்பினான்.

"ஒழுங்காகத் தூங்கி மூன்று நாளாகிறது சார்!" தூக்கக் கலக்கத்துடன் முனகினார் டிரைவர்.

"அப்படியானால் காரின் சாவியை இப்படிக் கொடுங்கள். நான் கார் ஓட்டுகிறேன்."

டிரைவர் சாவியைக் கொடுத்தவுடன் டாக்ஸி புறப்பட்டது. கண்மூடித்திறப்பதற்குள் பர்னாண்டஸ் தனது இருப்பிடத்தை அடைந்தான். டிரைவர் அப்போதும் நல்ல தூக்கத்திலிருந்தார்.

ரூபாயையும், காரின் சாவியையும் பெற்றுக் கொண்ட டிரைவர் புறப்பட்டார்.

'எதற்காக இந்த நள்ளிரவில் ஃபாதர் டவுனுக்குப் போய் வந்தார்?' ஆனால், அந்தப்பயணம் நல்லதற்கு அல்லவென்பது மட்டும் டிரைவருக்குப் புரிந்தது.

டிரைவர் எதுவும் செய்யாமலே டாக்ஸியின் வேகம் திடுமென்று அதிகரித்தது. டிரைவர் காலை ஆக்ஸிலேட்டரிலிருந்து எடுத்த பின்னும் கார் வேகமாகப் பாய்ந்து கொண்டிருந்தது. காரின் வேகத்தைக் கட்டுப் படுத்துவதற்காக பிரேக்கில் கால் வைத்தார் அவர். பிரேக்கும் அழுத்தமின்றி இயங்கியது. கண் மூடித்திறப்பதற்குள் மலைமேலிருந்து ஆழமான பள்ளத்தாக்கில் விழுந்து நொறுங்கியது அந்த டாக்ஸி. சொல்லியிருந்தபடி அன்று பன்னிரண்டாவது நாள். மறுநாள் ஸெலினது வாழ்க்கையின் கடைசி நாளான பதின் மூன்றாவது நாள்.

**ஸெ**லினைப் பார்த்த பெற்றோர் வியப்படைந்தனர். தாங்கள் ஊருக்குப்போகும் போது இருந்த ஸெலினுக்கும் இவளுக்கும் ஏராளமான வேறுபாடுகள். ஏகத்துக்கு மெலிந்திருந்தாள். கண்களின் ஒளி குன்றி விட்டிருந்தது.

"என்னம்மா ஆச்சு உனக்கு?" - அப்பா கேட்டார்.

"எனக்கு ஒன்றுமில்லையேப்பா. நான் நன்றாகத் தானே இருக்கிறேன்!"

"நீ மிகவும் மோசமாக இளைத்து விட்டிருக்கிறாய்!"

"அப்படியெல்லாமில்லையப்பா. சில நாள் பிரிவில் உங்களுக்கு அப்படித் தெரிகிறது".

"சாப்பாடு சரியாக இருந்திருக்காது!" - அம்மா குறைப் பட்டுக் கொண்டாள்.

தாயும் மகளும் இரவு வெகுநேரம் வரை பேசிக் கொண்டிருந்தனர். ஆனால், அப்பா சீக்கிரமாகவே தூங்கி விட்டார்.

அம்மா பம்பாய்ச் செய்திகளைக் கதை கதையாகச் சொல்லிக் கொண்டிருந்தாள். லீவில் ஸெலினை பம்பாய்க்கு அனுப்பி வைக்கும்படி அண்ணன் கேட்டுக் கொண்டதாகக் கடைசியில் அம்மா கூறினாள்.

கடிகாரத்தில் மணி பதினொன்று அடித்தபோது, அம்மா படுத்துக் கொள்வதற்காக அங்கிருந்து எழுந்தாள்.

"ஸெலின், நீ தூங்கலையா?"

"இல்லம்மா. நான் கொஞ்சம் நேரம் படிக்க வேண்டும். நீங்கள் போய்ப் படுத்துக் கொள்ளுங்கள்!"

பர்னான்டஸ் எந்த நேரத்திலும் வரக் கூடுமென்று ஸெலின் எதிர்பார்த்தாள். இப்பொதெல்லாம் ஒரு நாள் கூட பர்னான்டஸை பார்க்காமலிருக்க அவளால் முடியவில்லை!

கேட்டில் வாட்ச்மேன் இருந்தான். அவனுக்கு ஃபாதரை நன்றாகத் தெரியும். ஏற்கனவே அவர்களுக்குள் அறிமுகம் ஏற்பட்டிருந்தது. இப்பொழுது என்ன செய்வது என்று யோசித்தாள் ஸெலின்.

வாட்ச்மேனுக்கு ஏதேதோ சந்தேகங்கள் ஏற்பட்டிருப்பதை அவளும் உணர்ந்திருந்தாள்.

தொடர்ந்து இரவு நேரங்களில் வரும் பர்னான்டஸை வாட்ச்மேன் மிகவும் சந்தேகத்துடன் கவனிக்க ஆரம்பித்திருந்தான். ஸெலின் அவ்வப்போது பண உதவி செய்வதால் அவன் எதையும் கண்டு கொள்ளாமலிருந்தான்.

கடிகாரத்தில் மணி பன்னிரண்டு அடித்ததும் பர்னாண்டஸ் எழுந்தான். சிவந்த நிறமுள்ள தெளிவற்ற உருவம் அவனை எழுப்பியது.

"இன்று பதின்மூன்றாவது நாள். உடனடியாக அவளைக் கொண்டு வந்து என்னிடம் ஒப்படைத்துவிடு!" பர்னாண்டஸிடம் அந்த உருவம் கட்டளையிட்டது.

சிவப்பு அங்கியை அணிந்து கொண்டு பர்னாண்டஸ் உடனே தனது அறையிலிருந்து வெளியேறினான்.

ஸெலினது வீட்டை நோக்கி ரோட்டில் நடக்கத்

தொடங்கினான். இரண்டு கிலோ மீட்டர் தூரத்தைக் கடந்த பின் எதிரே ஒரு கார் வருவதைப் பார்த்தான்.

மினுமினுப்பான சிவப்பு உடையணிந்த ஓர் உருவத்தைக் கண்டதும் டிரைவர் சற்றுத் தயங்கினார். அது ஒரு வாடகை கார்.

"நான் அவசரமாக ஓர் இடத்துக்குப் போய்க் கொண்டிருக்கிறேன்!" - டிரைவர் வெளிப்படையாகப் பேசினார்.

"நீ எங்கே வேண்டுமானாலும் போ. என்னை டவுனில் இறக்கிவிட்டால் போதும்!" பர்னாண்டஸின் கட்டளைக் குரல் டிரைவரை அசைய விடாமல் செய்தது.

பர்னாண்டஸ் ஏறிக் கொண்டதும் கார் டவுனை நோக்கிப் பறந்தது. ஸெலினது பங்களாவின் முன்பாக வந்து நின்றது கார்.

"நான் ஒருவரை இங்கிருந்து அழைத்து வர வேண்டி உள்ளது, உடனேயே வந்து விடுகிறேன்!" பர்னான்டஸ் காரிலிருந்து இறங்கினான்.

பர்னாண்டஸ் நெருங்கியதும் கேட்டைப் பூட்டியிருந்த பூட்டு திறந்து கொண்டது.

"யாரது?" - துப்பாக்கியை ஏந்தியபடி வாட்ச்மேன் கூண்டிலிருந்து வெளிப்பட்டார். "ஊரிலிருந்து ஸெலினின் அப்பா - அம்மா வந்திருக்கிறார்கள்".

"இருக்கட்டும். நான் ஸெலினைப் பார்க்க வேண்டி உள்ளதே!"

"தூங்கிவிட்டாள் என்று நினைக்கிறேன்".

நூறு ரூபாய் நோட்டு ஒன்று இருட்டில் கைமாறியது. பர்னாண்டஸ், ஸெலின் படுத்திருக்கும் அறையின் ஜன்னலை ஒட்டியபடி நின்று கொண்டு, ஜன்னல் கதவைத் தட்டினான். ஸெலின் எழுந்து வந்து பார்த்தாள். பர்னாண்டஸைப் பார்த்ததும் அவளது களைப்பெல்லாம் மறைந்தது. கதவைத்

திறந்து கொண்டு வெளியே வந்தாள் அவள்.

நிலைவாசலைத் தாண்டியவுடன் பர்னாண்டஸ் பாய்ந்து சென்று அவளைப் பிடித்தான்.

“அம்மாவும் அப்பாவும் வந்திருக்கிறார்கள்!” - பயந்த குரலில் பேசினாள் ஸெலின்.

“அதற்கென்ன? விழிப்பதற்குள் உன்னைக் கொண்டு வந்து திரும்பவும் விட்டு விடுகிறேன்”.

“வேண்டாம். அதெல்லாம் ஏதாவது வம்பில் போய் முடியும்”.

“அப்படி எதுவும் நடக்காது. இப்போழுது நீ என்னுடன் வந்தே தீர வேண்டும்” - அவன், அவள் தோள்களை அழுத்திப் பிடித்தபடி முன்புறமாக நடந்தான்.

“கண்டிப்பாக நான் இன்று வர முடியாது. அப்பாவுக்குத் தெரிந்தால் வெட்டிப் போட்டு விடுவார்!”

“இன்று நீ வராதிருக்க முடியாது!”- அவளை பலவந்தமாக இழுத்துக் கொண்டு நடந்தான் பர்னாண்டஸ். அவனது பலத்திற்கு முன்னால் அவளது பிடிவாதமும் கரைந்து போனது.

வாட்ச்மேனது கூண்டை நெருங்கியபோது ஸெலின் அலறினாள்: “என்னைக் காப்பாற்றுங்கள்!”

வாட்ச்மேன் துப்பாக்கியுடன் பர்னாண்டஸை நெருங்கினார்.

ஆனால், பர்னாண்டஸ் சற்றும் பயமில்லாமல் அந்தத் துப்பாக்கியை லாவகமாகப் பிடுங்கி அதன் பின்புறத்தால் வாட்ச்மேனின் தலையிலடித்தான். இத்தனையும் கண்மூடித் திறப்பதற்குள் நடந்தது. சத்தம் போடாமல் வாட்ச்மேன் பின்புறமாகச் சரிந்தார். பர்னாண்டஸ் முரட்டுத்தனமாக அவர் கழுத்தில் ஓங்கி மிதித்தான். ஒரு சில நிமிட நேரத் துடிப்புகளுடன்

அந்த உடல் அசைவற்று உயிரை விட்டது.

இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த ஸெலின் பயத்தால் நடுங்கினாள். வாய் திறக்க முடியாமல் அவளின் தொண்டை அடைத்துக் கொண்டது.

"ஆள் தெரியாமல் எதிர்க்க வந்துவிட்டான் பாவம்!" - பர்னாண்டஸின் குரலில் கேலியும், கொடூரமும் தெரிந்தன.

"ஐயோ ... எனக்கு பயமாக உள்ளது. என்னை விட்டு விடுங்கள்!"

அவள் வாயைப் பொத்தியபடி ஒரு குழந்தை மாதிரி அவளை காருக்குள் தள்ளிப் பக்கத்தில் அமர்ந்து கொண்ட பர்னாண்டஸ் டிரைவரிடம், "வண்டியைக் கிளம்புங்கள்!" என்றான்.

"எங்கே போக வேண்டும் சார்?"

"வந்த வழியிலேயே திரும்ப வேண்டியதுதான்!"

கார் புறப்பட்டது.

"நீங்கள் எங்கே போக வேண்டும்?" பர்னாண்டஸ் டிரைவரிடம் கேட்டான்.

"வின்சென்ட் பாதிரியார் விடியற்காலையில் எங்கோ போக வேண்டும் என்று சொல்லியிருந்தார், அவர் வீட்டிற்கு முன்னால் காரை நிறுத்திக் கொஞ்ச நேரம் தூங்கலாம் என்று நினைத்தேன்!"

"ஓகோ!" - பர்னாண்டஸ் கறுவினான்.

கார் பர்னாண்டஸின் இருப்பிடத்தை அடைந்தது. காரிலிருந்து வலுக்கட்டாயமாக ஸெலினை வெளியே இழுத்த பர்னாண்டஸ், "வின்சென்ட் பாதிரியாருக்குத் தானே கார் ஓட்டப் போகிறாய். போய்வா!" - அவனது குரலில் வஞ்சகம் தெரிந்தது. வாய்விட்டுச் சிரித்தான் அவன். அந்த வாடகை கார்

அங்கிருந்து புறப்பட்டது.

கல்லறையை வலம் வந்து இடப் புறமாகத் திரும்பிய கார் முன்புறமாகச் சீறிப் பாய்ந்தது. அதுதான் சரியான வழியென்று டிரைவருக்குத் தோன்றியது. விநாடிக்கு விநாடி காரின் வேகம் அதிகரிப்பதையும், கார் தனது கட்டுப்பாட்டிலிருந்து விடுபட்டதையும் டிரைவர் உணர்ந்தார்.

மலைப் பாதையின் திருப்பத்தில் திரும்பாத கார், அந்தரத்தில் பாய்ந்து அதன் பாதாளத்தை நோக்கிச் செங்குத்தாக விரைந்து இறங்கியது.

அறைக்குள் ஸெலினை இழுத்து வந்த பர்னாண்டஸ் அவளை, அவன் படுக்கும் கட்டிலின் மீது வீசி எறிந்தான்.

தெளிவற்ற ஏதோ ஓர் உருவம் தன் மீது பதிவதாகவும் அது தன்னோடு ஒன்றிக் கலப்பதாகவும் ஸெலினுக்குத் தோன்றியது, படிப்படியாக அவளின் கண்கள் இருளடையத் தொடங்கின. அதன் பிறகு விரைவிலேயே அவள் உடல் சலனமற்று நிலைத்தது.

பர்னாண்டஸ் ஸெலினது உயிரற்ற உடம்பையே பார்த்துக் கொண்டிருந்தான். இதே வடிவத்துடன் இவளைக் கல்லறைக்குள் வீசியேறிந்தால், ஒருவேளை கிரேஸியைப் போல் இவளும் கல்லறையிலிருந்து எழுந்து வெளியேறக் கூடும். எனவே, இதற்கு ஒரு மாற்று வழியைக் கண்டு பிடித்தே தீர வேண்டும்!

சற்று நேர யோசனைக்குப் பிறகு அவனுக்கு ஒரு வழி புலப்பட்டது. உடலை எரித்துவிட வேண்டியதுதான். சமயலறையில் சமையல் செய்வதற்காக வாங்கி வைத்திருந்த மண்ணெண்ணெய் டின்னுடன், ஸெலினது உடலையும் சுமந்தவனாக பர்னாண்டஸ் அந்த அறையிலிருந்து வெளியேறினான்.

அங்கிருந்து சற்று வடக்குப் புறமாக ஒரு சுடுகாடு

இருந்தது. அங்கு பெரும்பாலும் ஏதாவது பிணம் எரிந்து கொண்டிருக்கும். அநாதைப் பிணங்களைக் கூட, நகரத்திலிருந்து கொண்டு வந்து அங்கே எரிப்பார்கள்.

ஸெலினது உடம்பை ஓரிடத்தில் படுக்க வைத்த பிறகு உடைந்த சுள்ளிகள், சருகுகளை வாரிக் கூட்டினான். அதன் மீது உடலை வைத்து அதன் மீதும் சுள்ளிகளைப் போட்டு மூடி மண்ணெண்ணெய் ஊற்றி நெருப்பு வைத்தான்.

நெருப்பு நன்றாகக் கொழுந்து விட்டு எரியத் தொடங்கியதும் பர்னாண்டஸ் அங்கிருந்து கிளம்பினான்.

பர்னாண்டஸ் இரவில் வழக்கமாக 'வாக்கிங்' போவதுண்டு, சர்ச்சுக்குப் போகாததால் தெரிந்தவர்களைக் காண்பதே அபூர்வமாக இருந்தது. ஒரு வாரம் கழிந்த பிறகு கூட யாரும், எந்தப் பெண்ணுமே பர்னாண்டஸைத் தேடி வரவில்லை. அந்தச் சந்தர்ப்பத்தில் தான் சர்ச்சின் நிர்வாகி தாமஸ், பர்னாண்டஸைச் சந்திக்க அங்கு வந்து சேர்ந்தார்.

பர்னாண்டஸால் சட்டென்று அவரை அடையாளம் கண்டுகொள்ள முடியவில்லை. ஆனால், அதை வெளிக்காட்டிக் கொள்ளாமலேயே உபசரித்து நடித்தான்.

"ஃபாதர்! நீங்கள் எங்களையெல்லாம் ஒதுக்கிவிட்டு , சந்நியாசம் வாங்கிக் கொண்டீர்கள் இல்லையா? குழந்தைகள் உங்களைப் பற்றிப் பேசாத நாளில்லை. குறிப்பாக லிஸி உங்களைப் பற்றி கேட்டுத் துளைத்தெடுப்பாள்!" - தாமஸ் பேச்சை ஆரம்பித்தார்.

"லிஸி இப்போது என்ன செய்கிறாள்?" பர்னாண்டஸ் இயல்பாகக் கேட்டான்.

"என்ன அப்படிக் கேட்கிறீர்கள்? நீங்கள்தானே அவளை காலேஜில் சேர்ப்பதற்குப் பணம் கொடுத்தீர்கள். அதற்குள்ளாகவா மறந்து விட்டீர்கள்?"

"அதை மறக்க முடியுமா என்ன!" பர்னாண்டஸ் சட்டென்று பேச்சை மாற்றினான்.

"இன்னும் நான் வந்த விஷயத்தையே உங்களிடம் சொல்லவில்லையே! சின்னதாக நான் ஒரு வீடு கட்டியிருக்கிறேன். நாளைக்குக் கிரகப்பிரவேசம் வைத்திருக்கிறேன். நீங்கள் கண்டிப்பாக இந்த விழாவில் கலந்து கொள்ள வேண்டும்."

லிஸி என்கிற அந்த இளம் பெண்ணின் உருவத்தை பர்னாண்டஸ் ஒரு தடவை மனத்திற்குள் கற்பனை செய்து பார்த்தான். அழகான, கவர்ச்சிகரமான ஒரு பருவப் பெண்ணாக அவள் இருக்கக்கூடும் என்று அவனுக்குத் தோன்றிது. '/இந்தச் சந்தர்ப்பத்தையும் கெட்டிக்காரத்தனமாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டியதுதான்!' என்று அவன் மனம் கணக்கிட்டது.

"சரி. நாளைக்குத்தானே, வந்துவிடுகிறேன்!" - பர்னாண்டஸின் வார்த்தைகளைக் கேட்ட தாமஸ் மிகவும் மகிழ்ச்சி அடைந்தார்.

# 7

பூத்துக்குலுங்கிய கிராமத்து அழகின் உருவமான இருந்தாள் லிஸி. அவள் சர்ச் சம்பந்தப்பட்ட விழாக்களில் பங்கெடுத்து நன்றாகப் பாடுபவளும் கூட.

வறுமை நிலையிலிருந்த தாமஸுக்கு ஃபாதர் பிரான்சிஸ் முடிந்த வகையிலெல்லாம் உதவி செய்திருந்தார். பத்தாம் வகுப்பை முடித்துவிட்டு மேற்கொண்டு என்ன செய்வது என்று தெரியாமல் அவள் தவித்தபோது, அவளது எதிர்காலத்துக்காக தாமஸ் மூலமாக ஆலோசனையும், பணமும் தந்து உதவியவர் பிரான்சிஸ் - அதாவது பர்னாண்டஸின் சகோதரரான

உண்மையான பாதிரியார்.

லிஸிக்கும், பிரான்சிஸ் பாதிரியாரிடம் அளவு கடந்த மரியாதையும் அன்பும் இருந்தது. தன்னை பிரான்சிஸ் என்று நினைத்துதான் எல்லோரும் ஏமாந்து கொண்டிருக்கிறார்கள். யாராவது தனது உண்மையான அடையாளத்தைக் கண்டுபிடித்து விட்டால், அதன் பிறகு கொடுமையான கொலைகாரர்களது பட்டியலில் தனது பெயரும் இடம் பெற்றுவிடும். எனவே, ஒரு போதும் தான் பிரான்சிஸ் அல்ல என்கிற சந்தேகம் எவருக்குமே எழக்கூடாது. அப்படியொன்று நடந்துவிட்டால்... அதை நினைத்துப் பார்க்கவே முடியவில்லை! எனவே, இந்த விஷயத்தில் மிகவும் எச்சரிக்கையுடன் நடந்து கொள்ள வேண்டும். தாமஸ் விடைபெற்றுச் சென்று வெகு நேரமாகியும் பர்னாண்டஸ் தனது சிந்தனையிலிருந்து விடுபடவே இல்லை.

'நாளை நடைபெறவிருக்கும் தாமஸின் புதுமனை புதுவிழாவிற்கு ஃபாதர் வின்செண்ட்டும் கண்டிப்பாக வருவார். நானும் ஒரு பாதிரியார் என்ற நிலையில் என்னிடமும் அவர் பிரார்த்தனை செய்யும்படிக் கூறலாம். ஆனால், தனக்கு அது சாத்தியமே இல்லை. ஜபமாலையோ, சிலுவை அடையாளத்தையோ தான் தொடக்கூட முடியாது. நெருப்பை விட தகிக்கும் பொருள்களாக அவை இப்போது தனக்கு மாறி விட்டிருக்கின்றன.

எனவே, விழா முடிந்த பிறகு நான் அங்கு செல்வது தான் சரி!' என்று பர்னாண்டஸுக்கு தோன்றியது. அதனால் மதியத்திற்குப் பிறகு அங்கிருந்து புறப்பட்டான்.

பர்னாண்டஸை தொலைவில் பார்த்தபோதே லிஸியும், அவள் தங்கையும் அவனை வரவேற்கப் பாய்ந்து வந்தார்கள். அவர்கள் கையால் சிலுவையிட்டு கர்த்தருக்கு ஸ்துதி என்ற போது, அதை கவனிக்காமல் மறுபுறம் திரும்பிக் கொண்டான். அந்த வார்த்தைகள் அவன் நெஞ்சில் அம்பு போல் பாய்ந்தது.

"எவ்வளவு நேரமாக உங்களுக்காகக் காத்துக் கொண்டிருக்கிறோம் தெரியுமா? நீங்கள் வரப் போகிறீர்கள்

என்று கேள்விப்பட்டவுடன் வின்சென்ட் ஃபாதர் அவ்வளவு சந்தோஷப்பட்டார் பாருங்கள்!" லிஸி பேசினாள்.

தாமஸும் அதை ஆமோதித்தார்.

"என்ன சொன்னீர்கள்?" பர்னாண்டஸ் சுய சிந்தனையிலிருந்து விடுபட்டவனாகக் கேட்டான்.

"நீங்கள் எங்களுக்கு மிகவும் பழகிய, வேண்டப் பட்டவராயிற்றே! உங்களை வைத்தே இந்தச் சடங்குகளை நடத்திவிடலாமே என்று வின்சென்ட் ஃபாதரும் கூறியிருந்தார்."

"இன்று இந்த நேரம் எனக்குத் தவிர்க்க முடியாத வேலை!"- பர்னாண்டஸ் புது வீட்டுக்குள் காலை எடுத்து வைத்தபடி கூறினான். சட்டென்று அவன் ஒரு புறமாகத் துள்ளிச் சாய்ந்தான்.

"என்ன, ஆகிவிட்டது உங்களுக்கு?" தாமஸும் அவர் மனைவி குஞ்ஞேலியும் வியப்படைந்தபடி கேட்டனர்.

"கால்ஷூவின் முனைப்பகுதி சட்டென்று தட்டி விட்டது!" - பேசியபடி அருகிலிருந்த நாற்காலியில் அமர்ந்தான் அவன்.

ஆனால், அங்கு நடந்த நிகழ்ச்சி வேறாக இருந்தது. பர்னாண்டஸ், வீட்டுக்குள் நுழைந்தவுடன் முன்புறச் சுவரிலிருந்த சிலுவையின் பிரதிபலிப்பு அவன் உடம்பைத் தாக்கியது. தன் உடம்பில் யாரோ தீக்கொள்ளி வைத்துத் தேய்த்தது போல் அவன் உணர்ந்தான்.

லிஸி இனிப்பு, காரம் மற்றும் காபியை அவனுக்கு முன்புறமிருந்த டேபிள் மீது வைத்தாள். பர்னாண்டஸின் விழிகள் ஒரு கணம் அவள் உடலை ஊடுருவிப் பார்த்தன.

இளமையின் ஒரு நிறைகுடமாக இருந்தாள் அவள். ஷாம்பு போட்டுக் குளித்திருந்த அவளது தலைமுடியின் நுனி ஒரே சீராக வெட்டப்பட்டு, பளபளத்து மின்னியது.

நீல நிறத்தில் மின்னும் இரண்டு வைரக் கற்களைப் போல் அவளின் கண்மணிகள் பளபளத்தன. வானவில் போன்ற புருவங்கள், வளைந்த அழகான சிறிய மூக்கு, செம்பருத்திப் பூவை ஒட்ட வைத்தது போன்ற சிவந்த உதடுகள். செதுக்கியெடுத்தது போன்ற மார்புப் பகுதிகள்.

"என்ன, எதையும் சாப்பிடாமல் உட்கார்ந்திருக்கிறீர்கள்?" - லிஸி கேட்டாள்.

"மறந்தே போய்விட்டேன்!"

ஒரு விதமான அசட்டுத்தனத்துடன் அவள் உடம்பிலிருந்து கண்களை மீட்டெடுத்த பர்னாண்டஸ், ஒரு பிஸ்கட்டை எடுத்துக் கடித்தான்.

"நீ முன்பு பார்த்ததைவிட இப்போது பெரியவளாக வளர்ந்து ஆளே மாறிவிட்டாய்!" மிகவும் ரசனையுடன் நாடகத்தனமாகப் பேசினான். அவன் பார்வை அவள் கண்களையே மொய்த்துக் கொண்டிருந்தது.

'என்ன ஒரு பார்வை?' லிஸியின் மனம் உள்ளுக்குள் துணுக்குற்றது... ஃபாதர் இதற்கு முன் ஒரு போதும் இப்படியெல்லாம் பார்த்ததோ, பேசியதே இல்லை.

அவனது பார்வை நேராக இதயத்துக்குள் பாய்ந்தது. அதே நேரத்தில் தாமஸ் ஒரு கிளாஸில் கொஞ்சம் ஒயினைக் கொண்டு வந்து அவனுக்கு முன்பாக வைத்தார்.

சிவந்த திராட்சை ரசம்!

"என் மனைவி தயாரித்தது!" தாமஸ் சிரித்தபடி கூறினார்.

அந்தச்சிவப்பு - அவன் கண்களுக்கு ஒரு விதமான பிரத்தியேக நிறத்தை வரவழைத்தது. பர்னாண்டஸ் ஒயின் கிளாஸை எடுத்து உதட்டில் பதித்தான். சற்று உறிஞ்சியவுடன் அவன் கிளாஸை டேபிள் மீது வைத்தான்.

“நான் உங்களிடம் ஒன்று கேட்க வேண்டுமென்று நினைத்தேன்....” - அவனருகே அமர்ந்தபடி தாமஸ் பேசினார்.

“என்ன... என்ன....?” அவன் பரபரத்தான்.

“இவளுக்கு இங்கிலீஷ் அவ்வளவாக வராது. இந்த வருடம் பாஸாவாளா என்பதே எனக்குச் சந்தேகம் தான்!”

“அப்படியானால் டியூஷனுக்கு ஏற்பாடு செய்யுங்களேன்...”

“அதைப்பற்றித்தான் நானும் பேச நினைத்தேன்” - அப்போது அங்கு வந்த சேர்ந்த லிஸியின் தாயாரும் பேச்சில் கலந்து கொண்டாள்.

“நீங்கள்தான் இப்போது பழைய மாதிரி சர்ச், ஜபம் என்று பிஸியாக இல்லையே. தினமும் ஓர் அரைமணி நேரம் நீங்கள் டீயூசன் எடுத்தால் நல்லது. உங்களது உதவியால்தான் படிக்கிறாள். இதையும் நீங்களே செய்தால் மொத்தப் புண்ணியமும் உங்களுக்குத்தான்!”

“பரவாயில்லையே... கெட்டிக்காரத்தனமாகப் பேசுகிறீர்களே!” - பர்னாண்டஸ் சிரித்தபடி பதிலளித்தான்.

பர்னாண்டஸின் மனத்தில் சட்டென்று ஒரு வெளிச்சம் தெரிந்தது. சாத்தானது செயல் எவ்வளவு சுறுசுறுப்பாக உள்ளது. அவன் சரியான நேரத்தில், சரியான இடத்தில் சரியாகவே வெளிப்படுகிறான்.

“நீங்கள் சொன்ன யோசனையில் எனக்கு எந்த விதமான சங்கடமுமில்லை. ஆனால், அதற்காக லிஸி அவ்வளவு தூரம் தனியாக வரவேண்டியிருக்குமே?”

“பக்கத்திலேயே இவளின் சிநேகிதி ராஜம்மா வீடு இருக்கிறது. இரண்டு பேரும் வந்துவிட்டுப் போகிறார்கள். இரண்டு பேரும் படித்தது போலவும் ஆயிற்று!”

“அப்படியானால், நீங்கள் இதையெல்லாம்

முன்னாலேயே தீர்மானித்து ஏற்பாடும் செய்திருக்கிறீர்கள்" - அந்தப்பேச்சில் தான் தோல்வியடைந்ததை ஒப்புக் கொண்டவனைப் போல் பேசினான்.

"நான் அவளுக்கு அம்மா இல்லையா? அப்படியெல்லாம் அவளை தனியாக விட்டுவிட மனசு இடம் தருமா? அந்தப் பாதையில் அவ்வளவாக ஆள்நடமாட்டம் கிடையாது. போதாக்குறைக்கு அந்த முரடன் ஒளசேப்பு வேறு அந்த வழியில் தான் சுற்றிக் கொண்டிருக்கிறான்" - பேசியபடியே கொச்சேலி அவனது கிளாஸில் ஒயினை ஊற்றினாள்!"

அவள் குறிப்பிட்ட ஒளசேப்பு, கல்லறையின் வடக்குப் புறத்தில் வசிக்கிறான். தனிமை வாழ்க்கை. ஒரு காலத்தில் மனைவி அவனுடன் இருந்தாள். அவள் இருந்த வரை அந்த வீட்டில் இரண்டு பேருக்குமிடையே சண்டை சச்சரவுதான். கண்டபடி குடிக்கும் ஒளசேப்பிடம், உலகத்திலுள்ள எல்லாவித கெட்ட வழக்கங்களும் இருந்தன.

கல்லறையை ஒட்டிச் சற்றுத் தூரத்திலிருந்த சுடுகாட்டுக்கு, நள்ளிரவு நேரங்களில் ஒளசேப் வருவதுண்டு. அங்கிருந்து குறிப்பிட்ட சில எலும்புத் துண்டுகளைத் தேடி எடுப்பானாம், துர்மந்திரவாதம் செய்யும் யாரோ சில மந்திரவாதிகள் அவற்றை அவனிடமிருந்து விலைக்கு வாங்கிச் செல்வதுண்டாம்.

"வேண்டாம்... இந்த மாதிரியான கீழ்த்தரமான வேலை!" என்று அவன் மனைவி சண்டை ஆரம்பிக்க, பொழுது விடிவதற்குள் வார்த்தை தடித்து அவன் அவளைத் தட்ட, பட்டென்று அவள் உயிர் பிரிந்ததாம்.

"உங்களுக்கு எது நல்லதாகத் தோன்றுகிறதோ, அப்படியே செய்யுங்கள்!" பர்னாண்டஸ் கூறினான்.

பர்னாண்டஸின் பார்வை லிஸியையே மொய்த்தது. லிஸியோ. அந்தப் பார்வை தன் இதயத்தை ஊடுருவி நுழைவதாக உணர்ந்தாள். மாலை நேரமானதும் பர்னாண்டஸ் அங்கிருந்து விடை பெற்றான்.

அன்று இரவு லூஸிஃபர் அவனுக்கு முன்பாக வெளிப்பட்டது.

“பர்னான்டஸ்! நாளையிலிருந்து அவள் உன்னிடம் வருவாள் ... ” என்று குரல் கொடுத்து விட்டு மறைந்தது.

லிஸியும் ராஜம்மாவும் மறுநாளிலிருந்து டியூஷனுக்கு வரத் தொடங்கினர். கல்லறைச் சுவரை நெருங்கும்போது வடக்குப் புறமிருந்த ஔசேப்பின் வீட்டை பெண்கள் இருவரும் பயத்துடன் பார்த்தனர். அவனது வீட்டை நெருங்கியவுடன் ஔசேப், வீட்டிலிருந்து வெளியே வந்தான்.

பார்த்தவர்கள் யாராக இருந்தாலும் பயப்படும் உருவம் அவனுடையது. கறுத்த உடம்பு. ஐந்து அடி நீளமுள்ள தேக்கு மரத்துண்டை அறுத்து எடுத்தது போன்ற உடல். தொப்பை வயிறு.வட்ட முகம். தாழ்ந்து பதிந்த மூக்கு. சிவந்த. இடுங்கிய கண்கள். முகத்தில் அம்மைத் தழும்புகள்.சுருள்சுருளான ஜடை பிடித்தது போன்ற தலைமுடி.

“என்னம்மா குழந்தைகளே இந்தப் பக்கம்?” ஔசேப்பின் குரல் கனமாக ஒலித்தது.

“டியூசன் படிப்பதற்காக. பிரான்சிஸ் பாதிரியாரிடம் போகிறோம்! ” - லிஸி பதிலளித்தாள்.

“இருட்டுவதற்கு முன்னாலேயே திரும்பிப் போய் விடுங்கள். அப்புறம் இருட்டு ... பயம் ... என்று அலறி அடித்துக் கொண்டு ஓடக் கூடாது தெரிகிறதா?”

ராஜம்மா, அப்போழுதே பயப்படத் தொடங்கி விட்டாள். திரும்பிப் பார்த்தபடியே இருவரும் நடந்தனர். ஔசேப் அங்கேயே நின்று கொண்டிருந்தான்.

“சமீப காலமாக பிரான்சிஸ் ஃபாதரைப் பார்க்க நிறைய இளம் பெண்கள் வந்து கொண்டிருக்கிறார்கள்!” ஔசேப்

தகக்குத்தானே பேசிக் கொள்வது போல் முணுமுணுத்தான்.

பர்னாண்டஸ் தனது புதிய வசிப்பிடத்திலேயே இருந்தான். லிஸி அவனிருந்த அறையை ஒரு முறை ஆராய்வது போலப் பார்த்தாள். அந்த அறைக்குள் சிலுவையோ, இயேசுவின் படமோ ஒன்றுகூட இல்லை.

"நான் உங்களுக்காகத்தான் காத்திருக்கிறேன்!" - பர்னாண்டஸ் கூறினான்.

"இந்த இடத்தில் தனியாக இருக்கும் உங்கள் தைரியத்தைப் பாராட்டத்தான் வேண்டும்!"- லிஸி, பர்னாண்டஸைப் பார்த்தபடி பேசினாள்.

அவன் சிரித்துக் கொண்டான். பின்பு அவர்களது ஆங்கிலப் புத்தகத்தை வாங்கிக் கொண்டு அவர்களுக்கு விளக்கினான். வகுப்பில் புரிந்து கொள்வதை விட இது சுலபமாக இருந்தது.

ஐந்து மணியானதும் அவர்கள் இருவரும் எழுந்தனர். "நாங்கள் புறப்படட்டுமா ?" - லிஸி கேட்டாள்.

"ஆமாம் ..இந்த ராஜம்மா யார்? இதுவரை நான் பார்த்ததே இல்லியே ?"

"அப்பா பெயர் ராகவன். வைத்தியம் ஜோஸியம் எல்லாம் செய்வார், அதெல்லாந்தான் அவள் அப்பாவோட வருமானம்!"

"ஓகோ! நீங்கள் மொத்தம் எத்தனை பேர்?"

"ஒரு அண்ணன், பத்திரிக்கையில வேலை செய்யுறார்!"

"பேரு ?"

"ரவீந்திரன்"

"நேரம் ரொம்பஆகிவிட்டது. வா போகலாம். மீதியை நாளைக்குப் பேசி கொள்ளலாம்!" லிஸி, அவளை அங்கிருந்து

கிளப்ப முயன்றாள், பர்னாண்டஸ் கொஞ்ச தூரம் வந்து அவர்களை வழியனுப்பி வைத்தான்.

லிஸியும், ராஜம்மாவும் திரும்பி வரும்போதும் ஔசேப் அங்கேயே நின்றிருந்தான், அவர்களைத் தொடர்ந்து வந்த பர்னாண்டஸ் ஔசேப்பிடம் பேச்சுக் கொடுத்தான். "என்ன ஔசேப், நட்டுவச்ச மரம் மாதிரி அப்படியே நிக்கிறே?"

"உங்களைப் பார்த்ததால் அப்படியே நின்று விட்டேன். உங்களைப் பார்த்து ரொம்ப நாளாகிவிட்டது. ஃபாதர், உங்களுக்கு ஒரு விஷயம் தெரியுமா? கல்லறைக்குள் யாரோ திருடன் அடிக்கடி வருகிறானாம்".

"நீ அப்படி யாரையாவது பார்த்தாயா?" பர்னாண்டஸ் பரபரப்புடன் கேட்டான்.

"நான் ஒரு பெண்ணுருவைப் பார்த்தேன். அவளைப் பார்த்தால் திருட வந்திருப்பவளாகத் தெரியவில்லை. ஆமாம், கல்லறைக்குள் திருடுவதற்கு என்ன உள்ளது?" - கையிலிருந்த கத்தியினால் முதுகுப்புறத்தைச் சொறிந்தபடி பேசினான்.

"நீ நினைத்தால் உனக்கா கல்லறைக்குள் திருடுவதற்குப் பொருள் இல்லாமல் போகும்?"

"ஃபாதர்! நான் இதுவரையில் கல்லறைக்குள் நுழைந்து எதையும் தொட்டது கிடையாது. எனக்குத் தேவையானதெல்லாம் சுடுகாட்டிலிருந்து கிடைக்கிறது. என்னைத் தேடி வருபவர்களும் அதையேதான் கேட்கிறார்கள்".

"இந்த மண்டையோட்டையும் கை கால் எலும்புகளையும் வைத்துக் கொண்டு அவர்கள் என்ன செய்வார்கள்?"

"மந்திரவாதம் செய்வதற்குத்தான்!"

"இந்தக் காலத்தில் மந்திரவாதம் பலிக்குமா?"

"இல்லையென்றால், அவர்கள் எதற்காக அதைச்

செய்கிறார்கள்?"

"என்னிடம் கொஞ்சம் நல்ல சரக்கு உள்ளது வேண்டுமானால் வா ... சாப்பிடலாம்!"

இருவரும் பர்னாண்டஸின் இருப்பிடத்திற்கு வந்தனர். யோசித்துப் பார்த்தபோது ஔசேப் எல்லாவகையிலும் தனக்கு உதவக்கூடும் என்று பர்னாண்டஸுக்குத் தோன்றியது.

தன்னைப் போலவே அவனும் கடவுள் நம்பிக்கை இல்லாதவன்.லூக்கோஸுக்காக வாங்கி வைத்திருந்த சாராயம் பாட்டிலில் இருந்தது. அவனிடம் ரகசியமான சில வேலைகளைக் கூறும்போது மறுக்காமலிருப்பதற்காக பர்னாண்டஸ் வழங்கும் அன்பளிப்பு அது.

அரை பாட்டில் சாராயத்தை பர்னாண்டஸ், ஔசேப்புக்குக் கொடுத்தான். வாயிலிருந்த வெற்றிலை எச்சிலைத் துப்பி, வாயைக் கொப்பளித்த பிறகு ஔசேப் சாராயத்தை தொண்டைக்குள் இறக்கினான்.

"உண்மையிலேயே நல்ல சரக்குதான்!" ஔசேப் தனது கருத்தை வெளியிட்டான்.

"அப்படியே இந்தச் சுருட்டையும் இழுத்துப் பார் ... சொர்க்கம் கண்ணில் தெரியும்! "பர்னாண்டஸ் சுருட்டு ஒன்றை அவனிடம் கொடுத்தபடி கூறினான்.

சுருட்டைப் பற்றவைத்த ஔசேப் பேசினான்: "நேத்து ஒரு வேடிக்கை!"

"அப்படி என்ன பார்த்தே?"

"அழகான ஓர் இளம் பெண், நேத்து ராத்திரி கல்லறை மேலே உட்கார்ந்திருந்தாள்!"

"உண்மையாவா?"

"நான் அதுகிட்டக் கேட்டேன். எதுக்காக இங்கே

உட்கார்ந்திருக்கிறே? வெளியில பனி இந்தப் போடு போடுதே, வேணும்னா வீட்டுக்குள்ளே போய்ப் படுத்துக்கிறது தானேன்னேன். "நான் ஒரு ஆளை எதிர்பார்த்துட்டிருக்கிறேன்னு" பதில் சொன்னாள். அதுக்குப் பிறகு அங்கே நமக்கென்ன வேலைன்னு திரும்பி வந்துட்டேன்".

"இனிமேல் நீ கல்லறைக்குள் நுழைந்து இந்த மாதிரி சோதனைகள்ல அகப்பட்டுக்காதே!" - பர்னாண்டஸ் முன்னறிவிப்புச் செய்தான்.

""நீங்கள் பயப்பட வேண்டாம். அதுக்கெல்லாம் மருந்து என் கைவசம் இருக்கு!" - என்றபடி சட்டையைச் சற்று மேற்புறமாக உயர்த்தி, இடுப்புக் கயிற்றில் கட்டப்பட்டிருந்த ஒரு தாயத்தைக் காட்டினான். "இதற்குள் மந்திரம் செய்து வைத்த மலை வேடனின் எலும்பு இருக்கு. நீங்கள் சொல்லும் மந்திரங்களைவிட ரொம்பவும் சக்தி வாய்ந்தது. யாராவது எதிர்த்தா, சில சமயம் அவங்க தலையே காணாமப் போயிடுற அபாயம் இருக்கு!"

"ஓகோ, அப்படியா!" - பர்னாண்டஸ் நெற்றியைச் சுளித்தான்.

"உங்களுக்கு ஒரு விஷயம் சொல்லட்டுங்களா?" - ஏதோ ரகசியத்தைச் சொல்லப் போகிறவன் மாதிரி பர்னாண்டஸை நெருங்கினான் ஔசேப். "புதுசா வந்திருக்கிற ஃபாதர் வின்சென்ட் இருக்காரே, அவருக்கு உங்கமேலே ஏதோ சந்தேகம் ஏற்பட்டிருக்கு!"

"என்ன!" - என்று திடுக்கிட்ட பர்னாண்டஸ், அறைக்குள் நுழைந்து அரைபாட்டில் சாராயத்துடன் திரும்பி வந்தான். ஔசேப் அதையும் வாங்கித் தொண்டையில் இறக்கிவிட்டுக் கூறினான்: "நீங்கள் ராத்திரி சமயத்துல கல்லறைக்குள்ள நுழையறீங்களான்னு கவனிக்கச் சொல்லியிருக்கார்!"

"நீ சொன்னது உண்மையா?" - பர்னாண்டஸின் முகத்தில் கொடூரம் குடியேறியது: "அப்புறம் என்ன செஞ்சே?"

"கவனிக்கிறேன்னு சொன்னேன்! இதுவரைக்கும் நான் உங்களைக் கல்லறை மைதானத்தில் பார்க்கலை. இனிமேல் பார்த்தாலும் சொல்லப் போறதில்லை!"

பர்னாண்டஸ், வின்சென்ட் பாதிரியாரை மனத்தில் நினைத்தபடி பற்களை நறநறவென்று நெரித்தான்.

மறுநாள் பொழுது விடிந்ததும், விடியற்காலைப் பிரார்த்தனைக்காக மணி அடிக்கப் போனார் ஃபாதர் வின்சென்ட். வேலைக்காரன் ஊரில் இல்லாததால் அப்படிப் பட்ட சந்தர்ப்பங்களில் அதையும் அவரே செய்வது வழக்கம்.

கனமான அந்தப் பெரிய மணியின் கயிறு மேற்புறத்தில் அறுந்து தொங்குவதைப் பாதிரியார் கவனித்தார். நடைபெற விருக்கும் சில விபரீதங்ளுக்கு அது ஒரு முன்னறிவிப்பாக இருந்தது.

# 8

**எ**ன்ன செய்வது என்று புரியாமல் ஃபாதர் வின்சென்ட் எவ்வளவு நேரம் அப்படி நின்றிருந்தாரோ, அது அவருக்கே தெரியாது! அறுந்துபோன மணியின் கயிறையே பார்த்தபடி நின்றிருந்தார் அவர்,

அறுந்த கயிறின் மீதிப்பாகம் தரையில் விழுந்து கிடந்தது. மணி அடிக்காமல் இருக்க முடியாது. விடியற்காலை பிரார்த்தனைக்கு பங்கு கொள்ள வரும் பெரிய வீட்டினர் மணியோசை கேட்கவில்லையென்றால், வியப்படைவார்கள். ஃபாதரைக் குற்றம் சாட்டுவார்கள். நான் வந்த பிறகு தான் ஒரு வேளை இப்படியொரு தவறு நடந்ததாக நினைக்கலாம்.

அப்படி நடக்கக் கூடாது!

வின்செனட் கீழே கிடந்த கயிறை எடுத்தார். மணிக்கூண்டின் மேற்பகுதியை அடைவதற்கு வசதியாக நான்கு மூங்கில்களை இணைத்து ஓர் ஏணியைச் செய்து வைத்திருந்தனர்.

வின்செனட் அந்த ஏணியைப் பிடித்து மேலேறத் தொடங்கினார். மணியின் நாக்கிலிருந்து தொங்கிய அறுந்த கயிற்றின் முனையைப் பிடிப்பதற்காகக் கையை நீட்டினார். அப்படியும் அவரால் கயிறைப் பிடிக்க முடியவில்லை. ஆனால். கால் எதிர்பாராமல் வழுக்கியது. சட்டென்று எதையும் பற்றிக் கொள்ள முடியாமல் கீழ்ப்புறமாக நழுவினார் அவர். கைதடவியபடியே விழுந்ததில் குறுக்காக இருந்த கம்பி கையில் அகப்பட்டது. அதையும் சரியாகப் பற்றுவதற்கு முன்னால் வழுக்கியது. மோதியபடி கீழே விழுந்தார். சிறிய சுளுக்குடன் அவர் தப்பித்துக் கொண்டார்.

லூக்காஸ்தான் இந்த விஷயத்தை பர்னாண்டஸிடம் தெரியப்படுத்தினான்.

“ஓகோ அப்படியா?” வஞ்சனையான சிரிப்புடன் கேட்டான் பர்னாண்டஸ்.

“நீங்கள் போய்ப் பார்க்கவில்லையா?”

“எங்கே இருக்கிறார், ஆஸ்பத்திரியிலா?”

“ஆஸ்பத்திரியிலிருந்து வந்துவிட்டார், காலில் பெரிய கட்டுப் போட்டிருக்கிறார்”.

“அப்படியானால் போய்ப் பார்த்துவிடலாம்”.

பர்னாண்டஸ் அறையிலிருந்து வெளியேறினான். லூக்கோஸ் அவனைப் பின்தொடர்ந்தான்.

சர்ச்சின் பின்புறத்தில் ஃபாதர்கள் வசிப்பதற்கான அறைகள் இருந்தன. அங்குதான் வின்செனட் ஃபாதர் படுத்திருந்தார்.

பர்னான்டஸைப் பார்த்ததும் அவர் கட்டிலிருந்து எழுந்திருக்க முயன்றார்.

"எழுந்திருக்காதீர்கள். அப்படியே படுத்திருங்கள்!" - பர்னாண்டஸ் கூறினான்.

கட்டிலுக்கு அருகிலிருந்த நாற்காலியில் அமர்ந்தான்.

"லூக்கோஸ்தான் தகவல் சொல்லியிருப்பான் இல்லையா?" ஃபாதர் கேட்டார்.

"ஆமாம் ... என்ன நடந்தது ஃபாதர்?"

ஃபாதர் விவரித்தார்.

பர்னாண்டஸ் அதை உன்னிப்பாக கவனித்தான். கேட்கும்போதே அவன் கண்களில் ஒருவித சுருக்கம் விழுந்தது.

"நடக்க கஷ்டமாக இருக்கும் இல்லையா?"

"வலி உயிர் போகிறது. போகட்டும் ... உங்களிடம் ஒரு விஷயம் சொல்ல வேண்டும்!" கால் வலியை மறக்க இதமாக வருடியபடியே அவர் பேசத் தொடங்கினார்.

"என்ன வேணும், சொல்லுங்க! ஆஸ்பத்திரிக்குப் போயிட்டு வரணுமா?" பர்னாண்டஸ் விசாரித்தான்.

"அதெல்லாம் வேண்டாம். என் கால் கொஞ்சம் சரியாவது வரை, நாளையிலிருந்து நீங்கள் பிரார்த்தனையை கவனித்துக் கொண்டால் நல்லது! "

பர்னாண்டஸ் திடுக்கிட்டான்.

என்ன செய்வது? இதற்கு என்ன பதில் சொல்வது? பிரார்த்தனையை கவனிக்க முடியாது என்றால், அதற்கு என்ன காரணம் சொல்வது? ஒரு வேளை ஃபாதர் தன்னை வற்புறுத்தினால் நிலைமை மேலும் சிக்கலாகும். அவன் சட்டென்று தனது வழிகாட்டியான சாத்தானை நினைத்தான்.

ஓர் உபாயம் தோன்றியது.

“ஃபாதர்! அது சிரமமானது!”

“என்ன கொஞ்ச நாளைக்குத் தானே? இது கஷ்டமான ஒரு காரியமா என்ன?”

“விஷயம் அதுவல்ல. நான் கொஞ்ச நாட்களாக ஓய்வில் இருக்கிறேன் . இனிமேல் துறவு மேற்கொள்வது என்று தீர்மானித்திருக்கிறேன். அதற்காக மேலிடத்திலிருந்து அனுமதியும் வாங்கியிருக்கிறேன். அதனால் ...” பர்னாண்டஸ் ஒரு விதமாகச் சொல்லி முடித்தான்.

அதன் பிறகு ஃபாதர் அதிகமாக வற்புறுத்தவில்லை.

“சரி, உங்கள் இஷ்டம்!”

“அப்படியானால் நான் வரட்டுமா!” பர்னாண்டஸ் ஒருவாறு அங்கிருந்து தப்பித்து வெளியேறினான்.

தனது இருப்பிடத்தை நோக்கி ஓடினான் பர்னாண்டஸ். அறைக்குள் வந்த பிறகே அவனது மூச்சு சீராக இயங்கத் தொடங்கியது.

வந்தவுடன் ஒரு புதுபாட்டில் சீமைச்சரக்கை எடுத்து வைத்தான். கொஞ்சம் கொஞ்சமாக அதைத் தொண்டைக்குள் இறக்கத் தொடங்கினான்.

பிறகு எழுந்து தனது மாந்திரீகப் புத்தகத்தைக் கையில் எடுத்தான். அதில் மற்ற மனிதர்களின் மனத்தை அறிவது எப்படி என்கிற பகுதியைத் தேடிப் படித்தான்.

எவ்வளவு தொலைவில் இருந்தாலும் மற்றொரு மனிதனின் மனத்தை, தனது விருப்பப்படி எப்படி இயக்குவது, அதை எப்படி அறிவது என்பதற்கான வழிகள் அதில் கூறப்பட்டிருந்தன.

மனத்தை ஒருமுகப்படுத்திக் கொண்டு லிஸியைப் பற்றி

நினைத்தான். லிஸி அப்போது பாடம் படித்துக் கொண்டிருந்தாள். அவள் படிக்கும் புத்தகத்தில் இரண்டு கண்கள் தட்டுப்பட்டன. அந்தக் கண்கள் திறந்து விழித்தபடி இருந்தன. சந்தேகத்துடன் புத்தகத்தைத் தடவிப் பார்த்தாள். கைக்கு எதுவும் தட்டுப்படவில்லை. ஒரு வேளை தன் கண்ணுக்கு அப்படித் தோன்றியிருக்கும் என்று தனக்குத் தானே ஆறுதல் சொல்லிக் கொண்டாள்.

மறுபடியும் அவள் படிக்கத் தொடங்கினாள். மீண்டும் அந்தக் கண்கள் தென்பட்டன. அதன் பார்வை அவள் மனத்துள் ஆழ்ந்து இறங்கியது. நிம்மதி இழந்தவளாக அந்த விஷயத்தையே ஒதுக்க முயன்றாள். கை வைத்துத் துடைத்த போது மறைந்த கண்கள் மீண்டும் தெரிந்தன.

பிறகு அந்தக் கண்ணையே உற்று கவனிக்கத் தொடங்கினாள். அவள் மனதில் ஓர் உருவம் தெளிவடைந்தது. அது பர்னாண்டஸின் முகம். 'என்ன இது!' - அவள் வியந்தாள்.

படிப்படியாக அந்த முகம் மறைந்து பர்னாண்டஸின் முழு வடிவமும் தெரிந்தது. ஆனால், ஒரு ஃபாதரின் தோற்றம் அந்த உருவத்துக்கு இல்லை. பாண்ட், சட்டை அணிந்த உருவமாக இருந்தது. அழகாகத் தென்பட்டான்.

அந்தக் கண்களில் ஏதும் திவ்வியத் தன்மை இருப்பதாகத் தெரியவில்லை. மாறாகக் காம உணர்வு தெரிந்தது. 'அவரும் ஒரு மனிதர்தானே!' என்று அவள் மனம் முணுமுணுத்தது.

அன்று அவள் டியூஷனுக்குப் போகவில்லை. ராஜம்மாவும் வரவில்லை. மாலை நேரமாகியிருந்தது. புத்தகத்தை மூடி வைத்துவிட்டு அவள் வீட்டை விட்டு வெளியேறினாள்.

"லிஸி, எங்கே போகிறே?" - அந்த நேரம் அங்கு வந்த ரவீந்திரன் பின்புறத்திலிருந்து கேட்டான்.

அதைக் காதிலேயே வாங்கிக் கொள்ளாதவளைப் போல் அவள் நடந்து கொண்டிருந்தாள். கேட்டை கடந்தாள்.

வெளியே இருட்டு முதிர்ந்திருந்தது; ஓடி வந்த ரவீந்திரன் அவளை நெருங்கினான்.

"லிஸி... உனக்கு என்ன ஆச்சு?" என்றவாறு முன்புறமாக வந்து மறித்தான்.

அவள் மௌனமாக இருந்தாள்.

"எங்கே போறே? பொழுது எப்பிடியிருக்கு பாத்தியா? வா வீட்டுக்கு போகலாம்."

இறுதியாக எது வந்தாலும் சரி என்று அவள் கையைப் பிடித்து வீட்டுக்கு அழைத்து வர முயன்றான்.

சட்டென்று அவள் திரும்பினாள். "என்ன... நான்... எங்கே... போக?" லிஸி தன்னையும் மீறி பிதற்றினாள்.

"நானும் அதைத்தான் கேட்கிறேன். என்ன கனவு ஏதாவது காண்றியா என்ன?" என்றபடி அவளை அழைத்துக் கொண்டு அவளது வீட்டுக்கு வந்தபோது ஏலியக்கா வராந்தாவில் நின்றிருந்தாள்.

"என்ன இது? நீங்க எங்க போயிட்டு வர்றீங்க?"

"ஒண்ணுமில்லக்கா! சரி... லிஸி நீ போய் உட்கார்ந்து படி!" ரவீந்திரன் அவளை வீட்டுக்குள் அனுப்பியபடி பேசினான்.

"ரவீந்திரா, என்ன நடந்தது?" ஏலியக்கா கேட்டாள்.

"நான் வந்திட்டிருந்தபோது லிஸி பாட்டுக்கு கனாக்கண்ட மாதிரி நடந்துட்டே இருந்தா. நான் கூப்பிடக்கூப்பிட அவள் கேட்காத மாதிரியே போனா. அப்புறம் நான் வலுக்கட்டாயமா அவளை இழுத்துக் கொண்டு வந்தேன்!"

“ஐயோ... கடவுளே! அவளுக்கு என்ன ஆச்சு?” ஏலி தொண்டையில் கை வைத்தபடி அரற்றத் தொடங்கினாள்.

சற்று நேரத்தில் கரியாச்சன் வந்தார். ரவீந்திரன் நடந்ததை அவரிடம் விவரித்தான்.

“ஓ... அவ்வளவுதானே? படிச்சிட்டேயிருந்ததால் அவளுக்கு பேராடிச்சிருக்கும்.”

“அதெல்லாம் ஒண்ணுமில்லை. அவளுக்கு என்னமோ ஆகியிருக்கு. நீங்க ஒரு தடவை, அவளை ஃபாதர்கிட்டக் கூட்டிட்டுப் போயிட்டு வாங்க. குழந்தை ஒரு வேளை பயந்திருக்கலாம்.”

“லிஸி இங்கே வாம்மா!”ஏலி அழைத்தாள்.

வெளியே வந்தாள்.

“என்னம்மா ஆச்சு உனக்கு? இவங்க என்னென்னமோ சொல்றாங்களே... நிஜமா அதெல்லாம்?” - கரியாச்சன் அவளை விசரித்தார்.

“எனக்கு ஒண்ணும் தெரியலைப்பா!”

“அப்புறம் எதுக்காக வீட்டைவிட்டு வெளியே போன?”

“நானா? நான் எங்கப்பா போனேன்?” ஒன்றும் தெரியாதவளாக லிஸி திருப்பிக் கேட்டாள்.

அவளது வார்த்தையைக் கேட்டதும் பரஸ்பரம் ஒருவருக்கு ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

‘இதற்கு என்ன பொருள்? அவள் ஏன் இப்படிப் பேசுகிறாள்?’

“அப்ப நான் வரட்டுமா?” - ரவீந்திரன் விடை பெற்றுப் புறப்பட்டான்.

வீட்டை அடைந்த ரவீந்திரன் உடனே ராகவன் நாயரிடம்

விவரத்தைத் தெரியப்படுத்தினான்.

"அப்படியா?" - என்றபடி நெற்றியைச் சுளித்தார் ஜோஸியரான ராகவன்.

மந்திரவாதமும் தெரிந்தவர் அவர். அவர் மந்திர வித்தைகளைக் கற்று வைத்திருந்தாலும் இன்று வரை அவற்றைச் செயல்படுத்திப் பார்த்ததில்லை.

"நீ சொன்னது உண்மையா இருந்தா, அந்தப் பொண்ணுக்கு என்னமோ ஆகியிருக்குன்னு அர்த்தம். ஒண்ணு பண்ணு. தற்சமயத்துக்கு நான் ஒரு சரடை மந்திரிச்சுத்தர்றேன். ஆனா அவங்க கிறிஸ்தவர்களாச்சே. அதனால இதையெல்லாம் நம்புவாங்களோ, மாட்டாங்களோ... அது ஒரு சிக்கல்!" - ராகவன் பேசினார்.

"அதெல்லாம் வேணாம்பா. நாளைக்கு சர்ச்சுக்குக் கொண்டு போய் ஃபாதர்கிட்டக் காட்டணும்னு பேசிக்கிட்டாங்க."

"அப்படின்னா முதல்ல அது நடக்கட்டும்! நாமளா எதையும் அவங்ககிட்டச் சொல்ல வேண்டாம். இந்த மாதிரி மாந்திரீக வேலைகளை அவங்க ஆளான கடமற்றத்தச்சனே செய்திருக்கிறார். (கடமற்றத்தச்சன் புகழ்பெற்ற, மந்திர வேலைகள் புரிந்த பழங்காலக் கிறிஸ்தவப் பாதிரியாரும் கூட!)

மறுநாள் காலையிலேயே கரியாச்சன் மகளுடன் சர்ச்சுக்குப் போனார். ஃபாதரிடம் விவரமாகப் பேசினார்.

ஃபாதர் வின்சென்ட் அதையெல்லாம் காது கொடுத்துக் கேட்டார்.

"அவ்வளவுதானே... பயப்படாதீங்க! சட்டுன்னு அவளுக்கு ஏதோ அப்படித்தோணியிருக்கும். போகட்டும், லிஸி இங்க வாம்மா!" வின்சென்ட், லிஸியை அருகே அழைத்தார்.

வந்தாள். ஃபாதர் அவள் தலைமீது கை வைத்தபடி பிரார்த்தித்தார்.

"அவள் படிச்சு மண்டை மூளையே காஞ்சு போயிருக்கலாம். பயப்பட எதுவுமில்லை. இந்தாம்மா; இந்த மாலையை உன் கழுத்தில் போட்டுக்க!" என்றபடி அவள் கையில் ஒரு ஜபமாலையைக் கொடுத்தார்.

அவள் அதை வாங்கிக் கழுத்தில் போட்டுக் கொண்டாள். அதன் பிறகு அப்பாவும் பொண்ணுமாக வீடு திரும்பினார்கள்.

**ப**ர்னாண்டஸ் வழக்கம் போல் நள்ளிரவில் விழித்தான். தான் கற்ற மந்திரப்படி லிஸியின் மனத்தை மீண்டும் வசீகரிக்க முயன்றான். ஆனால், தனது முயற்சி தோல்வியடைவதாக அவனுக்குத் தோன்றிது.

உள்ளே சென்று தனது மாந்திரீகப் புத்தகத்தை எடுத்து வந்து லூஸிஃபரை தியானித்தான்.

அந்தப்பிசாசு அவனுக்குப் பின்புறம் ஒரு நிழல் மாதிரி வெளிப்பட்டது.

"என்ன?" - அந்த உருவம் கேட்டது.

"நான் தோல்வியடைகிறேன்!" பர்னாண்டஸ் புலம்பினான்.

"அதன் காரணம் உனக்குத் தெரியவில்லையா?"

"அவள் கழுத்தில் சிலுவையுள்ள மாலை ஒன்று கிடக்கிறது."

"அதை எப்படி அகற்றுவது?"

"நான் அதற்கு ஓர் உபாயம் செய்கிறேன்."

"அது தான் எப்படி?"

"இங்கே பார்!" பிசாசு அதன் கையை உயர்த்தியது. அதன் கையில் கடுகு மணி போன்ற பிராணிகள் பறந்து வந்தன. அவை ஒரு கைப்பிடியளவு அந்தக் கையில் கிடந்து நெளிந்தன.

அவை வெளியே பறந்து சென்றன.

லிஸியின் வீட்டை அடைந்த அவை, அவள் படுத்திருந்த ஜன்னலருகே சென்று வட்டமடித்தபடி பறந்தன.

லிஸி சட்டென்று கண் விழித்தாள். ஜன்னலைப் பார்த்தாள். வெளியே நிலவு காய்ந்து கொண்டிருந்தது.

நிலவொளியில் தங்கத்துகள்கள் போல் எதுவோ ஒன்று அந்தரத்தில் தத்தளிப்பதைப் பார்த்தாள். படுக்கையிலிருந்து எழுந்தாள்.

"ஆகா என்னவொரு அழகான காட்சி!" அவள் தனக்குத்தானே பேசிக்கொண்டாள்.

நெருப்புத் துகள்கள் போல் பறந்து அவை வடிவம் மாறின.

அவள் ஜன்னலை நெருங்கினாள்.

ஜன்னலின் கண்ணாடிக் கதவைத் திறப்பதா.... வேண்டாமா என்று ஒரு கணம் தயங்கினாள். கடைசியில் ஒரு தீர்மானத்துக்கு வந்தவளாகக் கதவைத் திறந்தாள். அவசரமாக ஜன்னலின் கீழ்ப்புறக் கொக்கியை எடுத்தபோது ஜபமாலை அதில் சிக்கி அறுந்தது.

அவள் அதைக் கவனிக்கவில்லை.

ஜன்னலை முழுவதுமாகத் திறந்தாள்.

அதற்காகவே காத்திருந்தவை போல் அந்த தங்கத் துகள்கள் பறந்து பறந்து அகன்றன.

ஜன்னலை மூடிய லிஸி படுக்கையில் படுத்தாள்.

நிமிடங்கள் நகர்ந்தன.

லிஸி சட்டென்று துள்ளியெழுந்தாள்.

அவள் உடம்பில் நைட்டி எனப்படும் இரவு உடை மட்டுமே இருந்தது. சுற்று முற்றும் கவனித்தாள்.

எங்கும் எந்த விதமான அசைவும் தெரியவில்லை.

கதவை திறந்த லிஸி, வெளியே காலை எடுத்து வைத்தாள். முற்றப்பகுதியைக் கடந்து கேட்டை அடைந்தாள்.

அப்போது நிலவை ஒரு மேகத்துண்டு மறைத்ததால் தற்காலிகமான இருட்டு அந்தப் பகுதியைச் சூழ்ந்து கொண்டது.

கேட்டை திறந்தவள், சற்றும் பயமில்லாமல் முன் புறமாக நடக்கத் தொடங்கினாள்.

அவள் தன்னையே மறந்திருந்தாள்.

தான் எங்கே போகிறோம், எதற்காகப் போகிறோம் என்பதே அவளுக்குத் தெரியவில்லை!

## 9

ஒளி பொழிந்த நிலவு மேகத் துண்டுகளுக்கிடையே முகம் புதைத்தது. இருளின் சன்னமான மேலாடையைப் போர்த்திக் கொண்ட பூமி, சுகமான தூக்கத்தில் அமிழத் தொடங்கியது. அவ்வப்போது எங்கிருந்தோ ராக்கோழிகள் கூவின.

நீண்ட நாளைக்குப் பிறகு இரண்டாவது ஆட்டம் சினிமா பார்த்து விட்டுத் திரும்பிக் கொண்டிருந்தான் ரவீந்திரன். டார்ச் லைட்டை எரிய விட்டு ஏதோ ஒரு

சினிமாப் பாடலை முணுமுணுத்தபடி நடந்து வந்த போது தான், பீதியேற்படுத்தும் அந்தக் காட்சியை கவனித்தான். இளம் பெண்ணொருத்தி எந்த வித பயமும் இல்லாமல் இருட்டில் நடந்து வருகிறாள். கனவில் நடப்பது போல் அவள் எதையும் கவனிக்காதவளாக தன்னைக் கடந்த போதுதான் ரவீந்திரன் நடுங்கியபடி அந்த உண்மையை உணர்ந்தான்.

அவள் லிஸி!

இதற்கு முன்பு நடைபெற்றுள்ள சம்பவத்துடன் இதை ஒரு விநாடி ஒப்பிட்டுப் பார்த்த ரவீந்திரன், அவளைத் தடுக்க முற்படாமல், அதன் பின்னணியிலுள்ள ரகசியத்தைத் தெரிந்து கொள்ள விரும்பினான். எனவே, அவள் லிஸியைத் தொடர்ந்தான்.

நடந்து கொண்டிருந்த லிஸி, சர்ச்சை ஒட்டிய கல்லறை வாசலின் முன்புறத்தை அடைந்தாள். அங்கு எங்குமே மனித நடமாட்டம் தென்படவில்லை!

அதை ஒட்டியபடி இருப்பது சுடுகாடு!

இவ்வளவு தூரம் வருவதற்குள்ளேயே ரவீந்திரனின் பொறுமை எல்லை கடந்திருந்தது. சட்டென்று முன்புறமாகப் பாய்ந்து சென்றவன் லிஸியைத் தடுத்துப் பிடித்தான்.

"லிஸி என்ன இது? நீ எங்கே போறே?" - அவளின் தோளைப் பிடித்துக் குலுக்கியபடி கேட்டான்.

லிஸி மின்சாரத் தாக்குதல் ஏற்றவள் போல் சட்டென்று நின்றாள். அந்த விநாடியில் அவள் அகப்பட்டிருந்த மாயவளையத்திலிருந்து விடுபட்டாள்.

"ஐயோ... நான் எப்படி இங்கே வந்தேன்?" - பயத்துடன் அழத் தொடங்கிய லிஸியை ஆறுதல் சொல்லி அழைத்துக் கொண்டு ரவீந்திரன் வீட்டை நோக்கி வேகமாக நடந்தான்.

கரியாச்சனது வீட்டை அடைந்த போது அங்கே ஒரே களபரமாகியிருந்தது. பக்கத்து வீட்டுக்காரர்களும் அங்கு வந்து குழுமியிருந்தனர். 'லிஸி எங்கே போனாள்!' என்று புரியாமல் எல்லோரும் குழம்பிப் போயிருந்தனர்.

அந்த நேரத்தில்தான் ரவீந்திரனும், லிஸியும் அங்கு வந்து சேர்ந்தனர். இருவரையும் ஒன்றாகப் பார்த்த சிலர் ஒருவருக்கொருவர் பொருள் பொதிந்த பார்வையைப் பரிமாறிக் கொண்டனர். சிலர் பூடகமாகச் சிரித்தனர்.

“என்ன இது? நீங்கள் எங்கே போய்விட்டு வருகிறீர்கள்?” - ஏலியக்கா சற்றுக் கோபத்துடன் கேட்டாள். லிஸி அந்தக் கேள்விக்கு பதிலளிக்காமல் தலைகுனிந்த படியே இருந்தாள். ரவீந்திரன் நடந்ததை விவரித்தான்.

“உண்மையாகவா.... கர்த்தரே!என்னால் இதை நம்ப முடியவில்லையே. லிஸி, நீ யாரைத் தேடிப் போனே... உண்மையைச் சொல்!”

“எனக்கு ஒண்ணுமே புரியலைம்மா?” மேற்கொண்டு என்ன பதில் சொல்வது என்று புரியாமல் தவித்த லிஸி களைப்புடன் திண்ணையில் அமர்ந்தாள்.

“உன் கழுத்தில் கிடந்த ஜப மாலை எங்கே?” கரியாச்சன் கேட்டவுடன் லிஸி தன் கழுத்தைத் தடவிப் பார்த்தாள். அதைக் காணவில்லை!

“இவளுக்கு என்னமோ ஆகிவிட்டிருக்கிறது!” தனக்குத் தானே பேசிக் கொள்வது போல் கரியாச்சன் பேசிக் கொண்டார்.

அண்டை அயல் வீட்டுக்காரர்கள் ஒவ்வொருவராகப் பிரிந்து சென்றனர். ஆனால், அவர்கள் மனத்தில் தோன்றிய கற்பனைகளும் யூகங்களும் வேறு விதமாக இருந்தன. லிஸியும் ரவீந்திரனும் காதலர்கள் என்பது அவர்களில் சிலருக்கு ஏற்கெனவே தெரியும். ஒரு வேளை காதல் முதிர்ந்து அவன்தான் அவளை எங்காவது அழைத்துக் கொண்டு

போயிருக்க வேண்டுமென்றும் தீர்மானித்தனர்.

மறுநாள் ராகவன் நாயர், கரியாச்சனது வீட்டுக்கு வந்தார்.

"என்ன? நேற்று உங்கள் வீட்டில் ஏதேதோ நடந்ததாகப் பேசிக் கொள்கிறார்களே...." அவர் உண்மையான மனவருத்தத்துடன் கேட்டார்.

கரியாச்சன் நடந்ததை அவரிடம் ஒப்பித்தார்.

"எங்களது பழக்கம் என்னவென்றால், இதற்காக நாங்கள் கயிறு மந்திரித்துக் கட்டுவோம் அல்லது மந்திரப் பிரயோகங்கள் செய்வோம். ஆனால், உங்கள் ஃபாதர்கள் இதையெல்லாம் பார்த்தால் கோபப்படலாம். போதாக்குறைக்கு நீங்கள் சர்ச் நிர்வாகம் செய்பவர் வேறு!"

"நீங்கள் சொன்னதெல்லாம் சரிதான். இந்த விஷயத்தைப் பொறுத்தவரை நானே உங்களிடம் கேட்க வேண்டும் என்று இருந்தேன். ஃபாதரிடம் நான் இதைப் பற்றியெல்லாம் பேசப் போவதில்லை. நாம இதுக்கு ஏதாவது ஒரு மாற்று ஏற்பாட்டைச் செய்தே தீரணும் ராகவன்!"

ராகவன் வாயிலிருந்த வெற்றிலை பாக்கு எச்சிலை முற்றத்தின் ஒரு மூலையில் நீட்டித் துப்பினார்.

"அப்படீன்னா ஒண்ணு பண்ணுங்க. லிஸியையும் கூட்டிட்டு நேரா என் வீட்டுக்கு வாங்க. நான் இந்த இடத்தில் இப்போது எதுவும் செய்ய முடியாது."

அந்த யோசனை கரியாச்சனுக்கும் பிடித்திருந்தது. மறுநாளே மகளை அழைத்துக் கொண்டு கரியாச்சன், ராகவன் நாயரது வீட்டை அடைந்தார். லிஸியின் பிறந்த நேரத்தைக் கேட்டுத் தெரிந்து கொண்ட ராகவன், தனது துணிப் பையிலிருந்து சோழிகளை எடுத்தார். ராசிப்பலகை மீது சிலவற்றை வைத்து, ராசி பார்த்தார்.

ராகவன் நாயரின் கண்கள் மேற்புறமாக உயர்வதும்

நெற்றியில் சுளிவுகள் ஏற்படுவதுமாக இருந்தது. திரும்பத் திரும்ப ராசி பார்த்தார்.

முடிவில் அந்த முகத்தில் ஏமாற்றம் தெரிந்தது.

“பிரஸ்னம் பார்த்ததில் எதுவும் தெளிவடையவில்லையே?”

“அப்படியானால், இவள் ஏதாவது கனவு கினவு கண்டிருப்பாளோ? அதனால் இருட்டென்றும் பார்க்காமல் நடந்தாளோ என்னவோ?” கரியாச்சன் தொடர்ந்தார்: “தூக்கத்தில் நடக்கும் வியாதியும் ஒன்று உள்து. அவர்கள் பாட்டுக்கு நடக்க ஆரம்பித்து விடுவார்கள். ஆனால், அப்போது அவர்களுக்குப் பழக்கமான, பாதைகளில்தான் நடப்பார்கள்.”

“இனி என்ன செய்யலாம்?”

கரியாச்சனது குரலில் ஏமாற்றம் தெரிந்தது.

“கவலைப்படாதீங்க. நாம இதுக்கு ஒரு மாற்று வழி கண்டுபிடிக்கலாம்.”

ராகவன் நாயர் தனது வெற்றிலைப் பெட்டியிலிருந்து ஒரு செப்புத்தகட்டை வெளியே எடுத்தார். அதில ‘ஸம்மோகன கோபால யந்திரம்’ எழுதி நடுவில் சந்த்யா நாமத்தையும் ‘கிளிம்’ என்கிற காமபீஜத்தையும் மூலைகளில் க்ஷடாக்ஷரி கோபால மந்திரத்தையும் எழுதினார். பிறகு ‘ஓம் க்ளிம் நம: கிருஷ்ணாய வாசுதேவாய... ஸ்வாஹ’ என்கிற ஸம்மோகன கோபால யந்திரத்தின் நம: என்று தொடங்கும் ஆறு எழுத்துகளை அதன் பக்கவாட்டுகளில் எழுதினார். இறுதியாக மாராமாலா மந்திரத்தையும் எழுதித் தகட்டைப் பூர்த்தி செய்தார்.

பின்பு அந்தத் தகட்டைச் சுருட்டி வெள்ளித் தாயத்துக்குள் வைத்து மூடினார். அதை ஒரு புதிய கறுப்புக் கயிற்றில் கட்டினார்.

“இதை உங்களின் மகளின் இடுப்பில் கட்டி விடுங்கள்.

ஞாபகமிருக்கட்டும்.... தாயத்து அசுத்தமாகக் கூடாது. யாரிடமும் இதைப் பற்றிச் சொல்லவும் கூடாது. எவருக்கும் இந்த விஷயம் தெரியவும் வேண்டாம்" - ராகவன் நாயர் எச்சரித்தார்.

லிஸி தாயத்தை எடுத்துக் கொண்டு ராஜம்மாவின் அறைக்குள் சென்றாள். ராஜம்மா அதை அவள் இடுப்பில் கட்டி விட்டாள்.

அப்பாவும் பெண்ணும் அங்கிருந்து விடைபெற்றுப் புறப்பட்டனர்.

வீட்டுக்கு வந்த கரியாச்சன் தன் மனைவியிடம் தாயத்தைப் பற்றிக் கூறினார்.

"இந்தா பாருங்க... நான் ஒண்ணு சொல்லிடுறேன். இதெல்லாம் நம்ம ஃபாதருக்குத் தெரியக் கூடாது. அபராதம் போட்டிருவார். மந்திரவாதம் எல்லாம் நம்ம இதில கிடையாது!"

**அ**ன்று இரவு வழக்கமான நேரத்தில் பர்னாண்டஸ் கண் விழித்தான். அவன் தனது வசீகரணைப் பயிற்சியைத் தொடர்ந்தான். ஆனால், அது எங்கேயோ தடைப்பட்டு நிற்பது புரிந்தது.

இருப்பினும், சரியாய் அந்த நேரத்தில் லிஸியும் கண் விழித்தாள். கண்ணைக் கசக்கியவள், எழுந்து ஜன்னலருகே வந்து நின்று வெளியே பார்த்தாள்.

வானத்து நிலவிலிருந்து தங்க நிறமான புகைப்படலம் போல் ஒளி பூமியை அடைந்து கொண்டிருந்தது.

"தங்க மழை!" - அவள் முணுமுணுத்தாள்.

சட்டென்று ஓர் இளம் பெண் கேட்டை தாண்டி முற்றத்தின் வழியாக லிஸி நின்றிருந்த ஜன்னலருகே வந்தாள்.

லிஸி ஜன்னலைத் திறந்தாள்.

தங்க நிற நிலவொளியில் அந்தப் பெண் மிகுந்த அழகுடன் விளங்கினாள்.

"நான் உன்னைத்தான் தேடிவந்தேன்!" வந்தவள் லிஸியைப் பார்த்துப் பேசினாள்.

"நீங்க யாருன்னே தெரியலையே?" - லிஸி கேட்டாள்.

"என் பேர் பெற்றி..."

கழுத்தின்பின்புறம் 'பாப்' செய்யப்பட்ட செம்பட்டையான தலைமுடி. அழகியாக இருந்தாள். அவள் உடலிலிருந்து ஏதோ ஒரு நல்ல வாசனை கிளம்பியது. வெளிநாட்டு சென்ட் மாதிரி ஏதோ ஒன்று...

"பெற்றியா? இந்தப் பெயரை நான் எங்கேயோ கேள்விப்பட்டிருக்கிறேன். பழகியிருக்கிறதாக் கூடத் தோணுது. ஆனா, சட்டுன்னு ஞாபகம் வரலை!" - லிஸி மறந்து போன பழைய நினைவுகளை மனத்தின் உள்ளறைகளிலிருந்து கிளறியெடுக்க முயன்றாள்.

"நல்லா யோசிச்சுப் பாரு. முந்தின ஃபெஸ்டிவல் டயத்தில ஊர்வலம் போகும்போது நாம சந்திச்சிருக்கோமே...." பெற்றி கேட்டாள்.

லிஸி நினைவுபடுத்திப் பார்த்தாள்.

'சரிதான். போனவருடம் மாதா திருவிழாவின் போது அவள் பெற்றியுடன் அறிமுகமாகியிருந்தாள். யாரையும் கவரும் பேச்சு அவளுடையது. ஏறத்தாழ அன்று முழுவதும் லிஸி அவளுடன் பேசிப் பொழுது போக்கினாள். அவள் எத்தனையோ சுவாரஸ்யமான கதைகளைக் கூறியிருந்தாள். பெற்றி பம்பாய்க்குப் போய்விட்டதாக யாரோ சொல்லியிருந்தனர்.'

திருமணமாகாத ஒரு பெண்ணை மெய்சிலிர்க்க வைக்கும் விஷயங்களை அவள் பேசியிருந்தாள்.

"வெளியில் வா. நாம் அப்படி உட்கார்ந்து பேசலாம்!" - பெற்றி கேட்டை தாண்டி வெளியே வளர்ந்து நின்ற மாமரத்தின் அடிப்பகுதியைச் சுட்டிக்காட்டிப் பேசினாள்.

அமானுஷ்யமான ஏதோ சக்தி ஒன்று, தன்னை வெளிப்புறமாக இழுப்பதை லிஸி உணர்ந்தாள். அவள் கதவைத் திறந்து வெளியே வந்தாள். இருவரும் மாமரத்தடியை நோக்கி நடந்தனர்.

"இப்போ எங்கே இருக்கிறே பெற்றி?" லிஸி இயல்பாகத் பேசத் தொடங்கினாள்.

"நான் கொஞ்சநாளா இங்கதான் இருக்கிறேன். இனிமேல் இந்த ஊரைவிட்டுப் போறதா இல்லை. போகவும் முடியறதில்லை..."

என்ன காரணத்தாலோ பெற்றியை, லிஸிக்கு மிகவும் பிடித்துவிட்டது.

"நான் எதுக்காக உன்னைப் பார்க்க வந்தேன் தெரியுமா?" - பெற்றி கேட்டாள்.

"நாம பக்கத்துல ஓர் இடம் வரைக்கும் போயிட்டு வரலாமா?"

"எங்கே போகணும்?"

"பக்கத்திலதான். நான் தான் உன்கூட வர்றேனே.... தானாகவே தெரிஞ்சிடும்."

"வீட்டில இருக்கிறவங்களுக்குத் தெரிஞ்சா, பெரிய பிரச்சினையே கிளம்பும்."

"அப்படியெல்லாம் எதுவும் நடக்காது. நானே உன்னைத் திரும்பவும் கொண்டு வந்து உங்க வீட்டில விட்டுடுறேன். நான் உனக்கு சில நல்ல வெளிநாட்டுப் பொருள்களைத் தர்றேன். சென்ட், பவுடர் எல்லாம் உனக்குன்னே எடுத்து

வெச்சிருக்கேன்."

லிஸிக்கு பெற்றி மீது நம்பிக்கையும் நெருக்கமும் அதிகரித்தன. விரைவிலேயே அவர்கள் நெருங்கிய சிநேகிதிகளாகி விட்டார்கள். குறுகிய காலத்திற்குள் பெற்றி, லிஸியின் மனத்தில் ஆதிக்கம் செலுத்தத் தொடங்கினாள்.

நேரம் நள்ளிரவுக்கு மேலாகிவிட்டது என்ற நினைவே லிஸியை விட்டு விலகியிருந்தது.

"புறப்படலாமா?" பெற்றி கேட்டாள்.

லிஸி அவளைப் பின்தொடர்ந்தாள்.

"நான் உன் தோளில் கை போட்டுக் கொள்ளலாமா?" பெற்றி சற்றுப் பின்னால் நின்றபடி லிஸியிடம் கேட்டாள்.

"அதுக்கென்ன தாராளமா... வெளியில நல்ல குளிர் இல்லையா?" -லிஸி, பெற்றியுடன் இணைந்து நடக்கத் தொடங்கினாள்.

லிஸியின் தோளில் கை போட்டு நடக்கத் தொடங்கிய பெற்றி சட்டென்று கையைப் பின்னுக்கு இழுத்தாள்.

"உன் உடம்பு நெருப்பு மாதிரி இருக்கே?" பெற்றி கேட்டாள்.

"நிஜமாவா? உனக்குத்தான் அப்படித் தோணுது, எனக்கென்னமோ வெளியில குளிர்ற மாதிரி இருக்கு."

மீண்டும் லிஸியின் தோள் மீது கை வைத்த பெற்றி பழையபடி சட்டென்று கையைப் பின்னுக்கு இழுக்க நேர்ந்தது. இதற்கு என்ன காரணம் என்று புரியாதது போல் அவள் லிஸியை உற்றுப் பார்த்தாள்.

இருவரும் நடந்து கொண்டிருந்தனர்.

லிஸி திடீரென்று சுற்றுமுற்றும் பார்த்தபடி கேட்டாள்:

“பெற்றி, நாம் எங்கே போகிறோம்?”

ஏறத்தாழ அவர்கள் பர்னாண்ட்ஸ் தங்கியிருக்கும் பழைய சர்ச் பகுதியை நெருங்கியிருந்தனர்.

“நாம இப்படித்தான் போகணும்.”

“இந்த வழியிலயா, நாம வழி தவறிப் போயிட்டமோன்னு எனக்குச் சந்தேகமா இருக்கு!” லிஸி சட்டென்று நின்றாள்.

பெற்றி சட்டென்று லிஸியைப் பிடித்து நிறுத்த முயன்றாள். ஆனால், அவளால் லிஸியைத் தொடக்கூட முடியவில்லை!

“இப்படி நடுவழியிலேயே நின்னுட்டா எப்படி? பேசிக்கிட்டிருக்கிற நேரம் நடக்கலாமே?” பெற்றி வற்புறுத்தினாள்.

“வேண்டாம். இந்த வழியில் நடக்க எனக்கு பயமா இருக்கு. நான் திரும்பிப் போறேன்!”

“நல்ல வேடிக்கை போ. இவ்வளவு தூரம் வந்த பிறகு திரும்பிப் போறதா? நான் உனக்காக எடுத்து வைத்திருக்கிற பொருளெல்லாம் உனக்கு வேணாமா?”

“வேணும்தான்....ஆனா...?”

“நான் உண்மையைச் சொல்லிடுறேனே. அதையெல்லாம் ஃபாதர் இருக்கிற இடத்திலதான் பத்திரமா வெச்சிருக்கேன்.”

“அங்கேயா? அப்படீன்னா அதை முதலிலேயே சொல்லியிருக்கக்கூடாதா?” என்றபடி லிஸி முன்புறமாக நடக்கத்தொடங்கினாள்.

**ச**ட்டென்று ரவீந்திரன் அவர்களுக்கு முன்னால் எப்படி

வந்து சேர்ந்தான் என்று தெரியவில்லை.

அன்று இரவு உறங்காமலே அவன் காத்திருந்தான். லிஸி பழையபடி ஏதாவது செய்யக்கூடும் என்று அவன் எதிர்பார்த்தான்.

சற்றுத் தூரம் அவர்களைப் பின்தொடர்ந்த ரவீந்திரனுக்கு, அவர்களது போக்கு நல்லதுக்கு என்று தோன்றவில்லை.

அவர்கள் சுடுகாட்டுப் பக்கமாகத் திரும்பியதும் சட்டென்று அவர்களுக்கு முன்பாகப் பாய்ந்து நின்றான்.

"ரெண்டு பேரும் எங்கே போறீங்க?" ரவீந்திரன் கேட்டான்.

"ஃபாதர்கிட்டப் போறோம்!" பெற்றி பதிலளித்தாள்.

"நான் உன்னை எங்கேயோ பார்த்திருக்கிறேனே?" - பெற்றியை உற்றுப் பார்த்தபடி கேட்டான்.

"எங்க பார்த்தீங்க?" - பெற்றி கேட்டாள்.

"சொல்லட்டுமா?" - ரவீந்திரன் அவளை நெருங்கினான்.

பெற்றி அவனை நோக்கிப் பாய்ந்தாள்.

## 10

ஒரு விநாடி ரவீந்திரன் பதறினான்.

அவனுக்குள் சந்தேகங்கள் முளைவிட்டன.

பிசாசுகளைப் பற்றி நிறையச் சொல்லியிருந்தார். ஆரம்பத்தில் ரவீந்திரனுக்கு அதிலெல்லாம் பெரிய நம்பிக்கை இருந்ததில்லை!

'இறந்து போன ஒருவர் எழுந்து நடப்பதாவது!'

பெற்றியை, ரவீந்திரன் முன்பே பார்த்திருக்கிறான்.

ஓட்டலில் பார்த்திருந்தான். அதுவும் அவள் நடனமாடும் போது பார்த்திருந்தான். அதற்குப் பிறகே கார் விபத்தில் அவள் மரணமடைந்தாள். அவளைக் கல்லறையில் புதைக்கும் பொழுதும் அவன் பார்த்திருக்கிறான்.

இதோ... இப்பொழுது முன்னால் நின்று கொண்டிருக்கிறாள்!

"நீ பெற்றி ஸ்டூவர்ட்தானே- டான்ஸ் ஆடுபவள்..." - ரவீந்திரன் உரத்த குரலில் கேட்டான்.

"ஆமாம்... அது நானேதான்!" சட்டென்று ரவீந்திரனைப் பாய்ந்து பிடித்து உயரத் தூக்கினாள் அவள்.

அவளின் வலக்கையில் ரவீந்திரன் ஒரு குழந்தை மாதிரி உயர்ந்து நின்றாள். அவளது சக்தி அபாரமானதாக இருந்தது!

சட்டென்று அவனைத் தரை மீது நிற்க வைத்தாள்.

"உயிர் மீது ஆசையிருந்தால், மரியாதையாக ஒதுங்கி விடு. இல்லாவிட்டால், நான் எனது சுயரூபத்தைக் காட்டவேண்டியிருக்கும்!" பெற்றியின் குரலில் கோபம் கடுமையாக இருந்தது.

"லிஸி நீ சீக்கிரமாகப் புறப்படு... இல்லாவிட்டால் இந்தப்பிசாசு உன்னைக் கொன்று ரத்தம் குடிக்கும். இப்போது இவளால் உன்னைத் தொடமுடியாது என்பது வேறு விஷயம்".

அப்போதுதான் லிஸி முதன் முதலாக சந்தேகப்பட்டாள். ரவீந்திரன் சொல்வதில் ஏதோ விபரீதமான பொருள் இருப்பதை

உணர்ந்தாள். லிஸி வந்த வழியே திரும்பி நடக்க முயன்றாள். பெற்றி பாய்ந்து சென்று அவளைத் தடுத்தாள்.

ரவீந்திரனுக்கு ஒரு யோசனை தோன்றியது. சட்டென்று திரும்பினான். கல்லறை மதிலைத் தாண்டிக் குதித்து அங்கு விழுந்து கிடந்த ஒரு சிலுவையைக் கையில் எடுத்தான். திரும்பவும் மதிலைத் தாண்டியவன், அதைக் கையில் பிடித்தபடி பெற்றியை நெருங்கினான்.

அவன் நெருங்க நெருங்க பெற்றியின் முகத்தில் பழி வாங்கும் உணர்வு வலுத்து வளர்ந்தது. அவன் கழுத்தை நெரித்துக் கொல்லும் ஆவேசத்துடன் கையை விரித்தபடி அவனை நெருங்கி வந்தாள்.

ரவீந்திரன் சிலுவையை அவளுக்கு நேராக நீட்டினாள்.

தீக்கொள்ளி உடல்மீது பட்டது போல் அவள் திடுக்கிட்டுப் பின்வாங்கினாள்.

“ஓடிவிடு... இல்லையென்றால் இதனால் உன் உடம்பைக் குத்தித் துளைத்து விடுவேன்...” சிலுவையை அவளுக்கு நேராக வீசினான்.

பயந்து நடுங்கியபடி அவள் பின்புறமாக நகர்ந்தாள். பின்பு, புகை காற்றில் மறைவது மாதிரி அவள் கொஞ்சம் கொஞ்சமாக அங்கிருந்து மறைந்தாள். ரவீந்திரன் சிலுவையைத் திரும்பவும் பழைய இடத்திலேயே கொண்டு போய் வைத்தான்.

“வா லிஸி போகலாம்!” ரவீந்திரன் அழைத்தான்.

இருவரும் நடக்கத் தொடங்கினர்.

“நீ எதற்காக அவளுடன் இந்த இரவில் வீட்டை விட்டுப் புறப்பட்டாய்?” ரவீந்திரன் விசாரிக்கத் தொடங்கினான்.

“அவள் வெளிநாட்டு சென்ட், பவுடர் எல்லாம் எனக்காக

எடுத்து வைத்திருப்பதாகச் சொன்னாள்".

"அதுக்கெல்லாம் நேரம் காலம் கிடையாதா? நடுராத்திரியிலயா போவாங்க?"

"இங்கதான் வெச்சிருக்கிறதாச் சொல்லிக் கூட்டிட்டு வந்தாள்".

பெற்றியைப் பற்றி மேலும் எதையாவது சொன்னால் லிஸி ஒரு வேளை பயப்படலாம் என்று நினைத்து அந்த விஷயத்தையே தவிர்த்து விட்டான் அவன்.

வீட்டுக்குத் திரும்பி வந்தபோது நல்லவேளையாக லிஸியின் வீட்டில் யாரும் அன்று போல் விழித்திருக்கவில்லை. லிஸி தனது படுக்கை அறைக்குச் சென்று படுத்துக் கொண்டாள்.

**தா**ன் எதிர்பார்த்தது போல் லிஸி வராமற் போகவே, பர்னாண்டஸ் ஆத்திரப்பட்டான். அந்த நள்ளிரவு வேளையில் எழுந்து கல்லறையை நோக்கி நடந்தான்.

'பெற்றி ஸ்டூவர்ட்டை அந்த ஊர்க்காரர்களுக்கு அதிகமாகத் தெரிந்திருக்காது!' என்று நினைத்துதான் பர்னாண்டஸ் அவளைக் கல்லறையிலிருந்து எழுப்பி அனுப்பி வைத்தான்.

அவளது கல்லறையில், சவப்பெட்டிக்கு மேல்புறம் வைக்கப் பட்டிருந்த சிலுவையை தந்திரமாக பர்னாண்டஸ், லூக்காஸ் மூலமாக அகற்றி விட்டிருந்தான். மேலும் கல்லறையைச் சுற்றி நடப்பட்டிருந்த காட்டுப்பூண்டுச் செடிகளையும் லூக்காஸைக் கொண்டே பிடுங்கிப் போட்டிருந்தான். காட்டுப்பூக்களை நட்டு வைத்தால், மோசமான வாழ்க்கை வாழ்ந்தவர்கள் அசுத்த ஆத்மாவாக மாற மாட்டார்கள் என்று ஒரு நம்பிக்கை நிலவி வந்ததே இதற்குக்காரணம்.

பெற்றி ஸ்டூவர்ட் கல்லறையிலிருந்து எழுந்தாலும் இந்தக் காட்டுப் பூண்டுச் செடிகளைத் தாண்டி வர முடியாது

என்பதால், அவற்றையும் அகற்றச் சொல்லியிருந்தான். அதையும் லூக்காஸ் சந்தேகப்படாத மாதிரி மிகுந்த எச்சரிக்கையுடன் சொன்னான். அதே போல் அவனும் சுத்தமாக எல்லாவற்றையும் பிடுங்கி வேலியோரமாகப் போடவும் செய்திருந்தான்.

ஃபாதர் காபிரியேல் வைத்திருந்த சிலுவையும், தடையாக இருந்த காட்டுப்பூண்டுச் செடிகளும் அகற்றப்பட்ட பிறகு பர்னாண்டஸ், அவளது கல்லறையை நெருங்கி நின்று அழைத்தான்: "பெற்றி.... பெற்றி..."

"என்ன?" அவள் பதில் குரல் கொடுத்தாள்.

"எழுந்து வெளியில் வா!"

கல்லறையை மூடியிருந்த ஸ்லாப்பின் விரிசல் வழியாக புகை மாதிரி அவள் வெளியே வந்தாள். படிப்படியாக அந்தப் புகை ஒரு பெண்ணின் வடிவம் பெற்றது.

"நேற்று நான் சொன்னதை நீ ஏன் நிறைவேற்றவில்லை?" - கோபத்துடன் கேட்டான்.

அவள் விவரித்தாள்.

"ஒஹோ... அப்படியா விஷயம்?"

"ஓர் இளைஞன் அவளைக் காப்பாற்றியதுடன் என்னையும் அடையாளம் தெரிந்து கொண்டான். இனி நான் என்ன செய்வது?"

"பயப்படாதே... அதையெல்லாம் நான் பார்த்துக் கொள்கிறேன்".

"நான் இங்குதானே இருக்கிறேன். நீங்கள் எப்பொழுது கூப்பிட்டாலும் நான் ஓடிவந்து உங்களுக்கு உதவுவேன்".

"சரி, அப்படியானால் நான் வருகிறேன்".

அன்று இரவு அவனால் உறங்க முடியவில்லை. மனம் நிம்மதியற்றுத் தவித்தது. 'எப்படியாவது லிஸியைத் தனது வழிக்குக் கொண்டு வந்தே தீர வேண்டும்!' அவன் தீர்மானித்தான்.

ரவீந்திரன் தனது நோக்கத்துக்குத் தடையாக இருக்கிறான். ராஜம்மாவின் சகோதரன். எனவே, முதல் வேலையாக அவனை எப்படியாவது தொலைத்துக் கட்ட வேண்டும்!

**ம**றுநாள் ஒரு சவ அடக்கத்தை முடித்து விட்டு அப்பொழுதுதான் சர்ச்சுக்கு வந்தார் பாதிரியார் வின்செண்ட். மாலை நேரம், இருட்டை நோக்கி விரைந்தது.

லாரன்ஸ் என்ற இளைஞன் இறந்து போயிருந்தான். பம்பாயில் ஒரு நல்ல வேலையிலிருந்தவன். விடுமுறைக்காக ஊருக்கு வந்திருந்தான். வந்த இடத்தில் வந்த பதின்மூன்றாம் நாள் இறந்து போனான்.

அவன் இறந்து கிடந்த அறையில் வெளிநாட்டு சென்ட்டின் மணம் பரவியிருந்தது. அந்த வாசனை அவ்வளவு சீக்கிரம் அந்த அறையிலிருந்து மறையவே இல்லை. மேலும் சிவப்புக்கல் பதித்த மோதிரம் ஒன்றும் அவனது படுக்கையில் கிடந்தது.

அந்த மோதிரம் லாரன்ஸுனுடையது அல்ல என்பது உறுதியாகத் தெரிந்தது. 'அப்படியானால் அது யாருடையது?' ஃபாதர் அதைத் தனது அறைக்கு எடுத்துச் சென்றார்.

அன்றைய வேலைகள் முடியும்போது நேரம் வழக்கத்தை விட அதிகமாகி விட்டிருந்தது,மோதிரத்தை மேஜை மீது வைத்து விட்டு குளித்து, சாப்பிட்டுச் சீக்கிரமாகவே படுத்தார் அவர்.

கடிகாரம் மணி பன்னிரண்டடித்தது.

வெளியே ராக்கோழிகள் மற்றும் சுவர்க்கோழிகள்

ரீங்காரம் செய்தபடி பறந்தன.

ஜன்னல் வழியாக வெளியே இருந்து வந்த நிலா வெளிச்சத்தில், மேஜை மீது இருந்த சிவப்புக்கல் பளபளத்தது.

சற்று நேரம் அதையே பார்த்துக் கொண்டிருந்த ஃபாதர், எழுந்த கதவைத் திறந்து வேளியே வந்தார். கதவை மூடித் தாழிட்டு விட்டு, சர்ச்சின் வடபுறமாகப் பார்த்தார்.

அங்கிருந்து பார்த்தால் கல்லறைப் பகுதி நன்றாகத் தெரியும். சுற்றுச் சுவர்களுக்கு மத்தியில் ஆங்காங்கே சிலுவை சுமந்த கல்லறைகள்.

பார்த்துக் கொண்டே இருந்த அவரது பார்வை சட்டென்று ஓரிடத்தில் நிலைகுத்தி நின்றது. வெள்ளை உடை அணிந்த ஓர் உருவம் அசைவது அவர் கண்ணுக்குப் புலப்பட்டது. அது கல்லறையின் கேட்டைக் கடந்து வெளியே போவதை கவனித்தார்.

உண்மையில் அது என்ன ... யார் ... என்று தெரிந்து கொள்ளும் ஆர்வம் அவருள் எழுந்தது. சற்று நேரம் யோசித்தார்.

என்ன நினைத்தாரோ ... பிறகு தமது அறையைத் திறந்து பைனாகுலர் ஒன்றையும், சாய்வு நாற்காலி ஒன்றையும் எடுத்து வந்து வசதியான ஓரிடத்தில் போட்டுக் கொண்டு, கல்லறைப் பகுதியை கவனித்தார்.

கல்லறைகள் பிரம்மாண்டமாக மிக நெருக்கத்தில் தெரிந்தன. பயங்கரமான அந்தக் காட்சியை வேடிக்கை பார்ப்பது அவருக்கு சுவாரஸ்யமானதாகவும் தோன்றியது.

பார்த்துக் கொண்டே இருந்தபோது வெளியே புறப்பட்டுப் போன அந்த வெள்ளை உடை உருவம், கேட்டைத் தாண்டித் திரும்ப வந்து கொண்டிருந்தது. கல்லறைப் பகுதியை அடைந்த உருவம் சிறிது சிறிதாகக் காற்றில் கரைந்து... சற்று நேரத்தில் கண்ணுக்குத் தெரியாமல் மறையவும் செய்தது.

வியப்பான இந்தக் காட்சியை பார்த்த ஃபாதர், அதன் பிறகு தனது பழைய இடத்திற்கு வந்து படுத்துக் கொண்டார்.

**ம**றுநாள் காலையில் விடிகாலைப் பிரார்த்தனை, காலைச் சிற்றுண்டி ஆகியன முடிந்த பிறகு காலாற நடக்கக் கிளம்பினார். அவருடன் எவரும் துணையாக வரவில்லை. அவர் கல்லறையை நோக்கி நடந்தார் . கேட் பூட்டியிருந்தது. கதவைத் திறந்து உள்ளே நுழைந்தார். ஒவ்வொரு கல்லறையாகப் பார்த்துக் கொண்டே வந்தார். கூடவே அவற்றில் பொறித்திருந்த பெயர்களையும் வாசித்தார்.

முதல் நாள் அந்த உருவம் மறைந்த கல்லறையை நெருங்கியதும் நின்றார். அடுத்தடுத்து இரண்டு கல்லறைகள். முதலில் இருந்தது அன்னம்மா ஜேக்கப். மற்றது பெற்றி ஸ்டூவர்ட்.

கல்லறைகளில் எந்த விதமான மாற்றமும் தெரியவில்லை. ஒரு வேளை நேற்று நமக்குத் தோன்றியது பிரமையாக இருக்குமோ என்றுகூட எண்ணினார் அவர்.

அங்கிருந்து சர்ச்சுக்குத் திரும்பியபோது ஃபாதர் காபிரியேல் காத்திருந்தார். இந்த இடத்தில் ஒரு காலத்தில் பணி புரிந்த ஃபாதரும் கூட.

"என்ன ஃபாதர் திடீரென்று? ஏதாவது விசேஷமா ?" வின்சென்ட் கேட்டார்.

"அப்படியெல்லாம் ஒன்றுமில்லை. ஏதோ பார்க்க வேண்டும் போல் தோன்றவே கிளம்பி விட்டேன்!"

அவரைச் சந்தித்தது வின்சென்ட் ஃபாதருக்குச் சற்று ஆறுதலாக இருந்தது. தனக்கு முன்பாக நிகழ்ந்து கொண்டிருக்கும் விசித்திரமான சம்பவங்களுக்கு அவரது ஆலோசனையின் பேரில் தகுந்த பரிகாரம் செய்யலாம். அற்புதமான ஸித்திகள் நிறைந்த ஃபாதர் காபிரியேலால் அதற்கு உதவ முடியும் என்பது வின்சென்ட்டுக்குத்

தெரியும்.

அவரை வரவேற்று உபசரித்து சிற்றுண்டி கொடுத்த பிறகு ஃபாதர் வின்சென்ட் தமது சந்தேகங்கள் உட்பட, லாரன்ஸின் மரணம் வரையிலான விஷயங்களை அவரிடம் விவரித்தார்.

"இதுதான் அந்த மோதிரம்!" - என்றபடி காபிரியேலிடம் அதைக் கொடுக்கவும் செய்தார். அபூர்வமான வேலைப் பாடமைந்த அந்த மோதிரத்தைக் கையில் எடுத்தபோதே ஃபாதர் காபிரியேலின் நெற்றி சுளிவடையத் தொடங்கியது.

"இந்த மோதிரம் அவள் கையில் கிடந்ததாச்சே ?"

"யார் கையில் ஃபாதர்?"

" அதுதான் ... பெற்றி ஸ்டூவர்ட்"

"என்ன... பெற்றி ஸ்டூவர்ட்டா? " வின்சென்டின் மனத்தில் சற்று நேரத்திற்கு முன்பு கல்லறை ஒன்றில் வாசித்த பெயர் நினைவுக்கு வந்தது. உடனே அவர் கேட்டார் :"நீங்கள் சொல்வது அந்த டான்ஸ்காரப் பெண் பெற்றிதானே?"

"ஆமாம் அவளேதான்! அவள் கல்லறையை விட்டு ஒரு போதும் வெளியேறக்கூடாதவளாயிற்றே! அதற்காக ஏகப்பட்ட ஏற்பாடுகளை நான் சரியாகச் செய்தும் வைத்திருந்தேனே! " - தனது நரை விழுந்த தாடி ரோமங்களை உருவியபடி காபிரியேல் பேசினார்.

"நேற்று நள்ளிரவுக்குப் பிறகு கல்லறையிலிருந்து ஓர் உருவம் வெளியேறித் திரும்பி வந்ததை நான் என் கண்ணால் பார்த்தேன்! "

"அப்படியானால். இன்றிரவு நாம் நமது சந்தேகத்தைத் தீர்த்துக் கொள்ள வேண்டியதுதான்!"

பிறகு இருவரும் ஃபாதர் பிரான்சிஸைக் குறித்து

விவாதித்தனர். அவரது சந்நியாச வாழ்க்கை பற்றி காபிரியேல் மிகவும் நல்ல கருத்துக் கொண்டிருந்தார். ஆனால், வின்சென்ட் தனக்கு அதில் உடன்பாடு இல்லை என்பதை வெளிப் படையாகத் தெரிவித்தார். எனினும் அதற்கான காரணங்களை அவர் கூறவில்லை. அவை அவருக்கே சரியாகத் தெரியாமல் இருக்கலாம். தெரியாத ஒன்றைப் பற்றி தப்பாகப் பேசுவது மிகப் பெரிய தவறாயிற்றே!

மதிய உணவை முடித்துக் கொண்ட காபிரியேல், பர்னாண்டஸைப் பார்க்கப் போனார். அவன், அவரை மிகவும் மரியாதையுடன் வரவேற்று உபசரிக்கவும் செய்தான். லூக்காஸ் அவருக்கு வேண்டிய உணவு வகைகளைச் சூடாகப் பரிமாறினான்.

“உங்கள் உடம்புக்கு ஒன்றும் இல்லையே?” காபிரியேல் கேட்டார்.

“இல்லை ... நன்றாக இருக்கிறேன்”.

“எவ்வளவு நாள்தான் இப்படியே இருக்கப் போறிங்க?”

“எதைப் பத்தியும் நான் இன்னும் ஒரு முடிவுக்கு வரலை. இருந்தாலும் இன்னும் கொஞ்ச நாளைக்காவது அப்படியே தொடரணும்னு நினைக்கிறேன்! ”

“உங்ககிட்டே மறைக்க வேண்டியது இல்லை. ஃபாதர் வின்சென்ட் சில விஷயங்களை என்னிடம் சொன்னார்”,

“என்ன சொன்னார் அவர்?”

“அவர் சொன்னதை மற்றவர்கள் நம்பக்கூட முடியாது! ஆனால், அதற்கு அடையாளமாகச் சிலவற்றைப் பார்த்த போது, எனக்கும் அந்தச் சந்தேகம் தோன்றி வலுவடையத்தான் செய்திருக்கிறது! ”

“ஓஹோ... சீரியஸானதாக இருக்கும் போல் தோன்றுகிறதே!”

“உண்மைதான். முன்பு நான் இங்கு பணி புரிந்தபோது பெற்றி ஸ்டூவர்ட் என்கிற பெண் விபத்தில் இறந்து போனாள். அவள் முறைகேடான நடத்தை மற்றும் விரோதமான காரியங்களில் ஈடுபட்டிருந்தவள் என்று நான் கேள்விப் பட்டிருந்ததால், அந்த கல்லறைக்குள்ளிருந்து அவள் ஒரு போதும் வெளியே வராமலிருக்க நான் சில ஏற்பாடுகளைச் செய்திருந்தேன். ஆனால், அதையெல்லாம் மீறி அவள் வெளியே வருகிறாள். அதற்கும் மற்றவர்களிடம் நம்பத் தகுந்த ஆதாரங்கள் உண்டு”.

பர்னாண்டஸ் அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்தான். அவன் கண்களில் வஞ்சமும் தந்திரமும் நிறைந்தன. கூடவே ஒரு விதமான குரூரமும் மின்னிமறைந்தது, தனக்கு முன்னால் அமர்ந்திருக்கும் காபிரியேலின் கழுத்தை நெரித்துக் கொல்லும் அளவுக்கு பர்னாண்டஸ் உணர்ச்சி வசப்பட்டான். ஆனால், அவரது அங்கிக்குள் இருந்த சிலுவையின் கண்களைக் கூசச் செய்யும் ஜொலிப்பு, அவனை அந்தப் பக்கமே பார்க்க விடாமல் தடுத்தது.

“அதற்கு இப்போது என்ன செய்யலாம் ஃபாதர்?” பர்னாண்டஸ் அப்பாவி மாதிரி கேட்டான்.

“இன்றைக்கு ராத்திரி நாங்கள் முதலில் அதைக் கண்டுபிடிப்பது என்று தீர்மானித்திருக்கிறோம். முடிந்தால் நீங்கள் எங்களுடன் வரலாம்!”

“ எங்கே போக வேண்டும்?”

“இதோ நமது இந்தக் கல்லறைப் பகுதிக்குத்தான். பெற்றி ஸ்டூவர்டின் கல்லறையை மூடியுள்ள ஸ்லாப்பை அகற்ற வேண்டும். அவளது உடம்பு சவப்பெட்டியில் எப்படி இருக்கிறது என்று பார்த்துவிட்டு, அதன் மீது நான் வைத்திருந்த சிலுவை மாற்றப்பட்டுள்ளதா என்பதைக் கவனிக்க வேண்டும்!”

பர்னாண்டஸ் எந்த விதமான பதிலும் கூறவில்லை. மேற்கொண்டு தான் எப்படி, இதற்கு எதிராக

நடவடிக்கைகளை மேற்கொள்வது என்பது குறித்து யோசிக்கத் தொடங்கினான்.

"அப்படியானால், நீங்கள் எப்போது வருகிறீர்கள்?" - காபிரியேல் கேட்டார்.

"எப்படி இருந்தாலும் நீங்கள் நள்ளிரவுக்குப் பிறகு தானே அங்கே போகப் போகிறீர்கள் ... அதற்குள் நான் அங்கே வந்து விடுகிறேன்!"

"அப்படியானால் நாம் அங்கு சந்திக்கலாம் இல்லையா?"

காபிரியேல் அங்கிருந்து விடை பெற்றார்.

காபிரியேல், பர்னாண்டஸிடம் பேசியதையெல்லாம் ஃபாதர் வின்சென்டிடமும் தெரிவித்தார். தங்களுடன் ஃபாதர் பிரான்சிஸும் (பர்னாண்டஸ்) வரப் போகிறார் என்பதை அறிந்ததும் அவர் மிகவும் மகிழ்ச்சியடைந்தார். இரவுச் சாப்பாட்டை முடித்துக் கொண்டு, மணி பன்னிரண்டு முறை அடித்து ஓய்ந்தது. அப்போது -

## 11

**ம**ணி பன்னிரண்டு அடித்தபோது ஃபாதர் காபிரியேல் கண் விழித்தார்.

அது வரையிலும் அவர் ஆழ்ந்த தூக்கத்திலிருந்தார். நினைத்தபோது படுத்து உறங்கவும் அதே போல் நினைத்த போது விழித்தெழவும் அவர் தன் மனத்துக்குப் பயிற்சி அளித்திருந்தார்.

அவர் உடனே வின்சென்ட் ஃபாதரை எழுப்பினார். அவர்

உறங்காமல் விழித்திருப்பதாகத் தோன்றியது.

வின்சென்ட் கட்டிலிலிருந்து எழுந்தபடி பேசினார் :"நான் தூங்கவே இல்லை!"

"அப்படியா? ஆனால், நான் இரண்டு மணி நேரம் நல்ல தூக்கத்திலிருந்தேன். நடுவே ஒரு கனவும் கண்டேன்!" - காபிரியேல் கூறினார்.

"உண்மையாகவா? சுவாரஸ்யமான கனவா?"

"நாம் தேடிக் கொண்டிருக்கும் விஷயம் தொடர்பான கனவு!"

"சொல்லுங்களேன்!"

"சொல்கிறேன். அதுக்கு முன்னால் அது உண்மையான்னு நான் தெரிஞ்சுக்கணும். அப்புறம்தான் கனவைச் சொல்ல முடியும்!"

"சரி உங்க இஷ்டம்!"

சுவரில் தொங்கிக் கொண்டிருந்த சால்வையை எடுத்துத் தோளில் போட்டபடி பாத்ரூமுக்குப் போனார் ஃபாதர் காபிரியேல். அந்த அறையிலிருந்து வெளிப்புறம் வந்துதான் அதுவும் சமையற்கட்டைக் கடந்துதான் பாத்ரூமுக்குப் போக வேண்டும். குளியலறையும் பாத்ரூமும் அடுத்தடுத்த கட்டடத்தில் இருந்தன.

முற்றப் பகுதியை தாண்டியதும் வின்சென்ட் கழுத்தைத் தடவிப் பார்த்தார். ஜபமாலை கழுத்தில் இல்லை. உறங்குவதற்கு முன் கழற்றி மேஜை மீது வைத்தது ஞாபகத்துக்கு வந்தது.

வெளியே இருள் கடுமையாக இருந்தது.

ஆகாயத்தில் கார்மேகங்கள் அலைந்து கொண்டிருந்தன, நட்சத்திர வெளிச்சம் கூட சொல்லிக் கொள்கிறார் போல் இல்லை. இருப்பினும் சற்றுப் பழக்கப்பட்ட கண்களுக்குப்

பொருள்களை அடையாளம் தெரிந்து கொள்ள முடிந்தது. அமைதியான சுற்றுப்புறத்தில் தெரிந்த அந்த தெளிவற்ற தன்மை, பயப்படுத்தக் கூடியதாக இருந்தது.

வின்செண்ட் குளியலறை உள்ள பகுதியை நெருங்கிய போது, உள்ளே யாரோ இருப்பது போலத் தோன்றியது

'சமையல்காரர் இந்த நேரத்தில் எழுந்து வந்திருக்க முடியாதே! வேறு யாராக இருக்கும்?' அவர் யோசனையில் ஆழ்ந்தார்.

"யாரு சாக்கோவா உள்ளே?"

அவரது குரலுக்கு யாரும் பதில் குரல் கொடுக்கவில்லை.

வின்சென்டுக்குச் சந்தேகம் ஏற்பட்டது.

அதற்குள் யாரோ இருக்கிறார்கள்! சமையற்காரர் சாக்கோ. சமையலறையை ஒட்டியுள்ள ஸ்டோர் ரூமில் படுத்திருக்கிறான்.

மீண்டும் ஒரு தடவை அழைத்தார்.

" ...!"

'சரி ஒரு வேளை பிரமையாக இருக்கும்!' என்று நினைத்தவராக உள்ளே நுழையக் காலை எடுத்தார். அப்போது தான் கையில் டார்ச்லைட் இல்லை என்பதும் நினைவுக்கு வந்தது. காபிரியேலின் தலையணைக்கு அருகில் தான் டார்ச்லைட் இருந்தது. அவர் தம்மைவிட வயது முதிர்ந்தவர் என்பதால், அவருக்குத் தேவையானால் பயன்படுத்த வசதியாக வைத்திருந்தார் வின்சென்ட்.

என்ன இருந்தாலும் தான் எதற்காக பயப்பட வேண்டும்! மனத்தில் தைரியத்தை வரவழைத்தவராக கதவைத் தள்ளித் தறிந்து கொண்டு பாத்ரூமுக்குள் நுழைந்தார் அவர்.

முற்றிலும் எதிர்பாராமல் ஏதோ ஒன்று மேலிருந்து அவர் தலையில் விழுந்தது. சட்டென்று அவர் முன்புறமாக நகரவே,

அது குறி தவறி சுவரில் ஒட்டிக் கொண்டது. அது என்ன என்றுகூட அவர் திரும்பிப் பார்க்கவில்லை.

பாத்ரூமிலிருந்து ஒரு விதமாக வெளியேறி, சற்றும் தாமதிக்காமல் அவர் தனது படுக்கையறையை அடைந்தார்.

"ஏன் என்னமோ போல் இருக்கிறீர்கள்?" காபிரியேல் கேட்டார்.

விழுந்த பொருள் எதுவாக இருப்பினும், கருங்கல் மாதிரி அது கனமான ஒரு பொருள். விழுந்த இடம் இன்னும் கடுமையாக வலித்தது. வின்சென்ட் குளியலறையில் நடந்ததைக் கூறினார்.

காபிரியேல் அவர் குறிப்பிட்ட முதுகுப்பகுதியில் டார்ச் லைட்டை அடித்துப் பார்த்தார். அங்கு எந்த விதமான அடையாளமும் தெரியவில்லை. ஆனாலும் அவருக்கு வலி கடுமையாக இருந்தது.

"அப்படியானால், நீங்கள் படுத்துக் கொள்ளுங்களேன்..."

வின்சென்ட் தன் முதுகுப்பக்கமாகத் தலையணையை அண்டக் கொடுத்தபடி படுத்துக் கொண்டார்.

"நீங்கள் ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள். நான் போய் விட்டு வந்து விடுகிறேன்!" - காபிரியேல் கூறினார்.

"நீங்கள் தனியாகவா போகிறீர்கள்?"

"அதற்கென்ன? எனக்கென்ன பயம்? நாமே இதற்கெல்லாம் பயப்பட ஆரம்பித்தால், இதையெல்லாம் யாரிடம் சொல்ல முடியும்? பரவாயில்லை நான் போய் விட்டு வருகிறேன்".

அறையிலிருந்து வெளியேறப் போனவர், சட்டென்று திரும்பி நின்றார்.

"என்ன ஃபாதர்?"

"அந்தக் கல்லறையின் ஸ்லாப்பை அகற்ற நேர்ந்தால், அதை நான் ஒரு தனிமனிதனாகச் செய்யமுடியுமா என்று யோசிக்கிறேன். ஸ்லாப்பின் மேலே உள்ள சிமெண்டுப் பகுதிகளை உடைக்க ஒரு சுத்தியலும் உளியும் தேவை".

"லூக்கோவை எழுப்பினீர்களானால், அவன் உங்களுக்கு இதையெல்லாம் தந்து உதவுவானே!"

காபிரியேல், லூக்கோவை எழுப்பினார். அவன், அவர் கேட்டபடியே எல்லாவற்றையும் எடுத்துத் தந்தான்.

"லூக்கோ, நீ எனக்குக் கொஞ்சம் உதவவேண்டுமே... முடியுமா? ஆனால், நீ என்ன செய்தாலும் அதை வெளியே யாரிடமும் சொல்லக்கூடாது. பயப்படாதே! இது ஒரு நல்ல காரியத்துக்காகத்தான்!"

"என்ன ஃபாதர் இப்படியெல்லாம் பேசறீங்க! நீங்க என்ன சொன்னாலும் நான் செய்ய மாட்டேனா?" - கண்ணைக் கசக்கியபடி கேட்டான்.

"சரி அப்படின்னா... முகம் கழுவிட்டுப் புறப்படு. நாம ஓர் இடம் வரைக்கும் போகணும்! "

இருவரும் அங்கிருந்து புறப்பட்டனர்.

நிலவு வெளிச்சம் இல்லாததால் தங்களை யாராவது கவனிக்கிறார்களா என்பதைப் பொருட்படுத்தாமலே அவர்களால் நடக்க முடிந்தது.

கல்லறையின் கேட்டை நெருங்கியதுமே தனது அங்கியின் பையிலிருந்து சாவியை எடுத்துக் கொடுத்து, திறக்கச் சொன்னார் அவர்.

ஆனால், கேட் ஏற்கெனவே திறந்து கிடந்தது.

"என்ன இது திறந்து கிடக்கிறதே! யாரோ திறந்த பிறகு பூட்ட மறந்து விட்டார்களா? அல்லது நேற்றுப் பூட்டவே இல்லையா?"

- கேட்டபடியே அவர் லூக்கோவின் முகத்தைப் பார்த்தார்.

லூக்கோ ஒன்றும் தெரியாதவனைப் போல் நின்று கொண்டிருந்தான்.

"சரி... வா போகலாம்!" என்ற காபிரியேல், உள்ளே நுழைந்தார். லூக்கோவும் அவரைப் பின்தொடர்ந்தான். கல்லறைகளை ஒவ்வொன்றாகப் பார்த்தபடி அவர்கள் நகர்ந்தனர்.

பெற்றி ஸ்டுவர்ட்டின் கல்லறைக்கு முன்னால் ஃபாதர் வந்து நின்றார்.

"லூக்கோ இந்தக் கல்லறையைத் திறந்து பார்க்கத்தான் நாம் வந்திருக்கிறோம். முதலில் அந்த ஸ்லாப்பை அகற்ற வேண்டும். உளியையும், சுத்தியலையும் வெளியே எடுத்து வேலையைத் தொடங்கு!"

"ஃபாதர் எனக்கு பயமாக உள்ளது! " லூக்கோ தீனமான குரலில் கூறினான்.

"பயப்படாதே. நான் உன் பக்கத்திலேயே நிற்கிறேனே!" தைரியமூட்டினார் காபிரியேல்.

"பிசாசுகள் ஏதாவது.... ?"

"லூக்கோ! நீ என்ன இவ்வளவு பாமரனா இருக்குறே. நான் உன் பக்கத்தில் இருக்கிற போது எந்தப் பிசாசு உன்னைப் பிடிக்கும்?"

"சரி ஃபாதர், திறக்கிறேன்!"

உளி மற்றும் சுத்தியலுடன் ஸ்லாப்பை நெருங்கியவன் வியப்புடன் கூறினான்: "பாதர்! ஸ்லாப்பை யாரோ ஏற்கெனவே திறந்திருக்கிறார்கள்! "

"உண்மையாகவா?" ஃபாதர் வியப்புடன் கேட்டார்.

"பாருங்கள்; ஸ்லாபில் இடைவெளி உள்ளதே!"

ஃபாதர் ஒரு தடவை கை வைத்துத் தடவிப் பார்த்தார்.

"அப்படியானால், நமது நோக்கத்துக்கு இதுவும் ஓர் உதவிதான்".

இருவரும் இரண்டு முனைகளைப் பிடித்துக் கொள்ள... ஸ்லாப் விரைவிலேயே மேற்புறமாக உயர்ந்தது. பிறகு ஒரு புறமாக அதை ஓரத்தில் வைத்தனர்.

"போதும். ஓர் ஆள் உள்ளே போவதற்கு வழி கிடைத்தால் போதும்" ஃபாதர் டார்ச்சைக் கையில் எடுத்துக் கொண்டார்.

கல்லறைக்குள் லைட் அடித்துப் பார்த்தார்.

சவப்பெட்டி, எந்த விதமான சேதாரமும் இல்லாமல் அப்படியே இருந்தது. ஆனால், காபிரியேலின் கண்கள் சந்தேகத்தால் சுளிவடைந்தது. 'சவ அடக்கத்தின்போது சவப்பெட்டி மீது, தான் வைத்த சிலுவையைக் காணோமே!'

லூக்கோவிடம் ஸ்லாப்பை இன்னும் சற்றுத் தள்ளி வைக்கச் சொன்னார். அவன் அதன்படியே நகர்த்தினான்.

"நான் கல்லறைக்குள் இறங்கப் போகிறேன். யாராவது வருகிறார்களா என்று கவனி லூக்கோ!"

எச்சரிக்கை செய்து விட்டு ஃபாதர் கல்லறைக்குள் காலை எடுத்து வைத்தார்.

சவப்பெட்டிக்கு சற்று மேலாக நீட்டிக் கொண்டிருந்த மண்திட்டின் மீது கால் வைத்தபடி பெட்டியின் மூடியைச் சற்று உயர்த்திப் பார்த்தார். எவ்விதச் சிரமமுமின்றி மூடி மேற்புறமாக உயர்ந்தது.

அதற்குள் தெரிந்த காட்சியைக் கண்ட தீரனான ஃபாதர் சட்டென்று நிமிர்ந்தார்.

மிஸ் பெற்றி ஸ்டூவர்டின் உடல், எந்த விதமான

சேதாரமும் இன்றி அன்று வைத்த நிலையில் அப்படியே புத்தம் புதிது போல் இருந்தது! சவப் பெட்டிக்குள்ளிருந்து மேல்நாட்டு வாசனைத் திரவியங்களின் வாசனை குப்பென்று மேலெழும்பியது.

அந்த முகத்தில் அப்போதுதான் பூசியது போல் பவுடரும், உதட்டில் லிப்ஸ்டிக்கும் கலையாமல் தெரிந்தன.

உதட்டின் பளபளப்புக்கூட மறையவில்லை!

லூக்கோ சவப்பெட்டிக்குள் கிடந்த அந்த உருவத்தின் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தான். சட்டென்று லூக்கோவின் உடல் நடுங்கத் தொடங்கியது!

“ஃபாதர்! சீக்கிரம் மேலேறி வாங்க!” லூக்கோ அலறினான்.

“என்ன விஷயம் லூக்கோ?/”

“ஃபாதர் அதன் கண்கள் திறந்து மூடுது! ”

“சே...சே... உனக்கு அப்பிடித் தோன்றியிருக்கலாம்!” ஃபாதர் சவப்பெட்டியின் மூடியைப் பழையபடியே வைத்து விட்டு நிமிர்ந்தார்.

தனது அங்கியின் பையிலிருந்து பூசனை செய்யப்பட்ட சிலுவை ஒன்றை எடுத்து மூடியின் மேல் வைத்தார்.

சட்டென்று பெட்டியின் மேல் மூடி, மேற்புறமாகத் தெறித்தது!

# 12

**ச**வப்பெட்டியின் மேல்மூடி மிகவும் விசையாகப் பாய்ந்து வந்து ஃபாதர் காபிரியேலின் முகத்தில் மோதியது!

சட்டென்று அவர் மூக்கிலிருந்து ரத்தம் வடியத் தொடங்கியது. ஒரு விநாடிக்குள் சுயநினைவு பெற்ற ஃபாதர் விறுவிறுவென்று கல்லறையின் மேற்புறம் வந்தார்.

அடுத்த ஒரு சில விநாடிகளுக்குள் யாரோ கையால் பிடித்து வைத்தது போல் சவப் பெட்டியின் மூடி மீண்டும் அதன் சரியான இடத்தில் போய்ப் பொருந்தியது.

காபிரியேலின் முகத்தில் சவப்பெட்டியின் மூடி வந்து மோதியபோது கல்லறையின் மேற்குப் பகுதியிலிருந்து கீழ்ப்புறமாகப் பார்த்துக் கொண்டிருந்த லூக்கோவுக்குத் தென்பட்ட காட்சி எப்படிப்பட்ட திடமனதுள்ளவரையும் குலை நடுங்க வைக்கக் கூடிய ஒன்றாக இருந்தது!

சவப்பெட்டிக்குள் படுத்திருந்த பெற்றி ஸ்டூவர்டின் இரண்டு கைகளும் மேல் மூடியை உயர்த்தியபடி விசையாக மேற்புறம் பாய்ந்தது. பயந்து நடுங்கிய லூக்கோ அங்கிருந்து ஓடத் தொடங்கினான். கண்மண் தெரியாத வேகத்தில் ஓடிய லூக்கோ ஏறத்தாழ கேட்டை நெருங்கியபோது எதன் மீதோ மோதி நின்றான். சிவப்பு அங்கி அணிந்த பர்னாண்டஸ் அங்கு நின்றிருந்தான். அவன் தன் வலக்கையை உயர்த்திச் சற்றுச் சரிந்தவாறு லூக்கோவின் தலையில் வெட்டினான். தரையில் அந்த விநாடியில் லூக்கோ சுருண்டு விழுந்தான்.

சட்டென்று அவனை உயர்த்தி எடுத்த பர்னாண்டஸ், சற்றும் தாமதிக்காமல் சுடுகாட்டுப் பக்கமாக வீசியெறிந்தான்!

ஆகாய மார்க்கமாகப் பறந்து சென்ற லூக்கோ, சுடுகாட்டில் எரிந்து கொண்டிருந்த ஒரு சிதையில் வெகு கச்சிதமாகப் போய் விழுந்தான்.

பர்னாண்டஸ், பெற்றி ஸ்டூவர்ட்டின் கல்லறையை நோக்கி நடந்தான். காபிரியேல் அதன் அருகில் மயங்கி விழுந்து கிடந்தார். அவரை பெற்றியின் கல்லறைக்குள் தள்ளிவிட்டு ஸ்லாப்பை மூடினான் பர்னாண்டஸ். பிறகு எதுவும் நடக்காதது போல் வந்த வழியே திரும்பி நடக்கத்

தொடங்கினான் அவன்.

**ச**ர்ச்சை ஒட்டியிருந்த படுக்கையறையில் படுத்திருந்த வின்சென்ட் கடுமையான வலியால் தளர்ந்து போய் உறங்கி விட்டிருந்தார். பொழுது விடிந்த போது ஃபாதர் காபிரியேலை அந்தப் பகுதியிலேயே காணவில்லை.

வழக்கம் போல் காலையில் காபி எடுத்து வரும் லூக்கோவையும் காணவில்லையென்றதும் வின்சென்ட் சமையலறையை அடைந்தார்.

முந்தைய இரவு காபிரியேல் ஃபாதரும் லூக்கோவும் சேர்ந்து கல்லறைக்குப் போன விவரத்தை வெளியில் சொல்ல முடியாது என்பதால், அவர் மிகவும் வேதனையடைந்தார்.

இருப்பினும் அவர்களைப் பற்றிய செய்தி ஏதாவது கிடைக்குமா என்று தெரிந்து கொள்வதற்காகத் தனது அங்கியை அணிந்து கொண்டு வெளியேறினார்.

கல்லறைப் பக்கம் போக அவர் முயன்றபோது கரியாச்சன் வந்தார்.

"உங்களைப் பார்த்ததும் நல்லதுக்குத்தான். லூக்கோவைக் காணவில்லை. தேடிப்பார்க்கலாம் என்று தான் புறப்பட்டேன்!" ஃபாதர் ஒரே மூச்சில் பேசினார்.

"அதற்கென்ன... நானும் உங்களுடன் வருகிறேனே!" -பேசிய படியே ஃபாதர் வின்சென்ட்டுடன் நடக்கத் தொடங்கினார் அவர்.

அவர்கள் கல்லறையை நோக்கி நடந்தனர்.

"என்ன ஃபாதர் கல்லறைப் பக்கமாகப் போகிறீர்கள்? ஆட்கள் குடியிருக்கும் பக்கமாகப் போய்த்தானே பார்க்க வேண்டும்?" - கரியாச்சன் கேட்டார்.

"ஒருவேளை பிரான்சிஸின் அறையில் (பர்னாண்டஸின்)

அறையில் இருக்கலாம். முதலில் அங்கே போகலாம். அங்கு இருக்கிற சமையற்காரர் லூக்காஸுக்கு உடம்பு சரியில்லையென்று லூக்கோ ஒரு வேளை அங்கு போயிருக்கலாமே!"

பர்னாண்டஸ் வசிக்கும் பழைய சர்ச் பகுதியை நெருங்கும் போது கல்லறைக்குக் குழி தோண்டும் ஔசேப் அவர்களுக்கு முன்னால் எதிர்ப்பட்டான்.

"நான் உங்களைப் பார்க்கத்தான் வந்து கொண்டிருக்கிறேன். புதிதாக வந்த உங்கள் சமையல்காரர் சுடுகாட்டுத் தீயில் கிடக்கிறாரே!" - ஔசேப் சாதாரணமாகக் கூறினான்.

"என்ன சுடுகாட்டிலா?" ஃபாதர் வியப்புடன் கேட்டார்.

"ஆமாம் ஃபாதர்! வந்துதான் பாருங்களேன்..."

ஔசேப் அவர்களை அழைத்துக் கொண்டு போனான்.

திடுக்கிட வைக்கும் ஒரு காட்சியை அவர்கள் அங்கு கண்டனர். ஏறத்தாழ எரிந்து போன நிலையில் லூக்கோவின் உடம்பு அங்கு கிடந்தது. வலக்காலிலிருந்த ஒரு பெரிய மச்சத்தை வைத்துத்தான் அவர்கள் லூக்கோவை அடையாளம் தெரிந்து கொண்டனர்.

திரும்பி வரும் வழியில் பர்னாண்டஸின் வீட்டுக்குள் நுழைந்தனர்.

"வாங்க... வாங்க... ரெண்டு பேருமா காலையில் எங்கே போயிட்டு வர்றீங்க ஃபாதர்?" பர்னாண்டஸ் கேட்டான்.

"புதிய சமையற்காரர் லூக்கோ சுடுகாட்டில் எரிஞ்சு கிடக்கிறார்!"

"உண்மையாகவா? என்ன ஆச்சு?" - பர்னாண்டஸ் திடுக்கிட்டவனாகக் கேட்டான்.

ஔசேப் எதுவும் தெரியாதவனாகக் கையை விரித்துக் காட்டினார்.

“எப்படி இருந்தாலும் போலீஸில் சொல்ல வேண்டாமா?” வின்செண்ட் ஃபாதர் கேட்டார்.

“கண்டிப்பாகத் தெரியப்படுத்தணும். போஸ்ட் மார்ட்டம் செய்ய வேண்டுமே. கரியாச்சானை அனுப்பி வைத்தால் போலீஸ்காரர்களைக் கூப்பிட்டு வருவார்”.

போலீஸ் துறையினருடன் அவர்களின் டாக்டரும் வந்தார். போஸ்ட்மாட்டம் செய்த பிறகு கல்லறையில் லூக்கோவின் உடம்பை அடக்கம் செய்தனர்.

ஃபாதர் காபிரியேலைப் பற்றி, வின்செண்ட்டுக்கு எந்த விதமான செய்தியும் கிடைக்கவில்லை. கல்லறைக்கு வந்து பார்த்தபோது, பெற்றி ஸ்டூவர்ட்டின் கல்லறையில் எந்த விதமான மாற்றமும் தெரியவில்லை. எனவே, வின்செண்ட் பாதிரியார் திரும்பி வந்து விட்டார்.

அன்று இரவு பன்னிரண்டு மணி ஆனபோது பர்னாண்டஸ் கண் விழித்தான். அவனுக்குப் பின்புறத்தில் சாத்தானின் சத்தம் கேட்டது.

“என்ன நீ தோல்வியடைகிறாயா? உனக்கு அழகு அதிகரித்தும், இளமை திரும்பக் கிடைத்தும் உன்னால் ஒரு பெண்ணைக் கூட வசீகரிக்க முடியவில்லையே? நிலைமை இப்படியே தொடர்ந்தால் கூடிய சீக்கிரம் நான் உன்னை ஒதுக்க வேண்டியிருக்கும்! உனக்கு கொடுத்துள்ள சிறப்புத் திறமைகளையும் நான் திரும்பப் பெற்றுக் கொள்ள வேண்டியிருக்கும். என்னிடம் வெறுப்பை வளர்த்து விட்டால், அதன் பிறகு உனக்கு வேறு போக்கிடமே கிடையாது என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்! ”

“சரி. அந்தப் பெண்ணையே நான் உங்களுக்காகக் கொண்டு வருகிறேன்!”

"அவள்தான் வேண்டும் என்பதில்லை. அவளில்லா விட்டால் வேறு ஒருத்தி! உனக்குத்தான் இப்போது யாரை வேண்டுமானாலும் அழைத்துக் கொண்டு வரும் திறமை உள்ளதே?"

"எனக்கு இன்னும் கொஞ்சம் கால அவகாசம் தேவைப் படுகிறது!"

"உனது விருப்பப்படியே ஆகட்டும்!"

நேராகக் கல்லறைப் பகுதியை நோக்கி நடந்தான். பெற்றி ஸ்டூவர்ட்டின் கல்லறைக்கு முன்பாக வந்து நின்றான்.

"பெற்றி ... பெற்றி ..." அழைத்தான்.

உள்ளிருந்து பதில் குரல் எதுவும் கேட்கவில்லை.

'என்ன காரணம்?' பர்னாண்டஸ் யோசித்தான். 'ஒரு வேளை வெளியே போயிருப்பாளோ?' கல்லறைக்குள் அவள் இருந்தால், கூப்பிட்டால் கண்டிப்பாக பதில் குரல் கொடுப்பாள் அவள் என்று நம்பினான். அப்படியும் அவள் வராததால் அவன் திரும்பக் கூப்பிடவே இல்லை.

ஆனால், நடந்தது வேறொரு விதமான நிகழ்ச்சி!

ஃபாதர் காபிரியேல், பெற்றி ஸ்டூவர்ட்டின் சவப்பெட்டி மீது விழுந்தபோது, அவர் கையிலிருந்த சிலுவை பெட்டி மீது படிந்திருந்தது. மேலும் காபிரியேலின் மூக்கிலிருந்த வழிந்த ரத்தம் அந்தச் சிலுவை மீது வழிந்து பெட்டிக்குள் ஊடுருவி, பெற்றி ஸ்டூவர்ட்டின் உடல் மீது பட்டதால் அதுவரை அவள் உடலிலிருந்த பைசாசிகத் தன்மை அத்துடன் அழிந்த போனது. அதன் பிறகு அந்த உடம்பு, ஒரு சாதாரண உடம்பாகி விட்டது. இனிஒரு போதும் விழிக்க முடியாதபடி அவள் நிரந்தரமாக அசைவற்றுப் போனாள்!

அங்கிருந்து ஏமாற்றத்துடன் திரும்பிய பர்னாண்டஸ் நிம்மதியற்று அங்குமிங்குமாக அறைக்குள் உலவினான்.

மறுநாள் காலைச் சிற்றுண்டியை முடித்துவிட்டு பர்னாண்ட்ஸ் அமர்ந்திருந்தபோது, இரண்டு பெண்கள் அவனைக் காண வந்தனர். ஒருத்தி சில்வியா, மற்றவள் ரீட்டா.

"ரீட்டா ரொம்பவும் மகிழ்ச்சியாக இருப்பதாகத் தெரிகிறதே!" - பர்னாண்டஸ் பேச்சைத் துவக்கினான்.

"இவளுக்குக் கல்யாணம் ஃபாதர். அதுக்கு உங்களைக் கூப்பிடத்தான் வந்திருக்கா!" சில்வியா கூறினாள்.

"அப்படியா? சந்தோஷம்! கல்யாணம் எப்போ?"

"நாளை மறுநாள்!"

"மாப்பிள்ளை என்ன பண்றார்?"

"கப்பல்ல கேப்டன்!"

"அப்ப நான் கல்யாணத்துக்கு கண்டிப்பா வரணும் இல்லையா?"

"நல்ல கேள்வி கேட்டீங்க. கண்டிப்பா வரணும்! கல்யாணத்தன்னிக்கு ஒரு ஜாலியான இசைக்கச்சேரி வெச்சிருக்கிறோம். கொச்சியிலிருந்து ஒரு பார்ட்டிதான் வருது. நீங்க அவங்களைப் பாட்டுப்பாடி தோற்கடிக்கணும். நாங்க அதுக்காகப் பந்தயம் கட்டியிருக்கிறோம்!"

"கச்சேரி ராத்திரியில்தானே?" கண்களைச் சுளித்தபடி கேட்டான் பர்னாண்டஸ்.

"ஒருவேளை கல்யாணத்துக்கு வர முடியலேன்னாலும் பாட்டுக் கச்சேரிக்கு நீங்க கண்டிப்பா வரணும்.பெரிய பார்ட்டி கூட உண்டு. உங்களுக்காக பிரெஞ்சு ஒயின்கூட ஏற்பாடு பண்ணியிருக்கிறோம்!"

ரீட்டா ஆங்கிலோ இந்தியக்குடும்பத்தைச் சேர்ந்தவள். நீல நிற விழிகள் கொண்ட ரீட்டா மிகவும் அழகாக இருந்தாள்.

அவள் உடலின் எந்தப்பகுதியும் அழகு குறைந்ததாகத் தெரியவில்லை!

எவரும் கண்டாலே ஆசைப்படும் ரீட்டாவை பர்னாண்டஸ் கண்களால் அங்குலம் அங்குலமாகப் பருகினான்.

“சரி! அப்படியானால், உங்களது பாட்டுக்கச்சேரியில் நான் கண்டிப்பாக இருப்பேன்! ” - வார்த்தைகளைப் பேசும் போது அவன் கண்களில் குள்ளநரியின் தந்திரம் தென்பட்டது.

“நீங்கள் வந்த பிறகுதான் நாங்கள் கச்சேரியைத் தொடங்குவோம்!” ரீட்டா மீண்டும் உறுதியான குரலில் கூறினாள்.

“கண்டிப்பா வர்றேன். நீங்கள் புறப்படலாம்!” உறுதியளித்தான்.

அன்று நள்ளிரவில் பிசாசு அவனுக்குப் பின்புறமாக வந்து நின்றது.

“அந்தப் பெண் இதுவரை யாரும் தொடாத கன்னிப் பெண். நீ புத்திசாலியாக நடந்து கொண்டால், அவளது முதலிரவு உன்னுடன்தான்! ” பிசாச கூறியது.

“அதெப்படி முடியும்?”

“அந்தநேரம் வரும்போது நான் உனக்கு உதவுவேன்!” - கூறிவிட்டு அந்தப் பிசாசு மறைந்தது.

ரீட்டாவின் அழகான உடம்பைக் கனவு கண்டபடியே பர்னாண்டஸ் அன்றிரவு படுத்தான். இருப்பினும் அவனால் உறங்க முடியவில்லை!

‘தனது இன்றைய நிலைக்கு தான் ஏன் அன்னம்மாவைப் பயன்படுத்திக் கொள்ளக்கூடாது?’ நேரம் பன்னிரண்டாகியிருந்தது. பர்னாண்டஸ் எழுந்து அங்கிருது புறப்பட்டான்.

கடுமையான கூரிருட்டில் கல்லறையின் கேட்டை

நெருங்கிய போது கேட்டில் ஏதோ ஒன்று மின்னியது.

நட்சத்திர வெளிச்சத்தில் இருட்டை மீறி அங்கு ஒரு சிலுவை மின்னியது. அதைப் பார்த்தவுடன் ஒரு கணம் பயந்த பர்னாண்டஸ் சட்டென்று முகத்தைத் திருப்பிக் கொண்டான். அந்தச் சிலுவையிலிருந்த புறப்பட்ட ஒளி அவனை வாள் கொண்டு அறுப்பது போல வேதனை கொள்ள வைத்தது. அவன் திரும்பிப் பார்க்காமல் ஓடத் தொடங்கினான். அதன் பிறகு அவனால் அன்று இரவு நிம்மதியாக உறங்கவே முடியாமல் போனது.

பகல் நேரத்தில் லிஸியும் ராஜம்மாவும் வந்தனர். அவன் கண்கொட்டாமல் லிஸியையே பார்த்துக் கொண்டிருந்தான். தான் சுலபத்தில் இழந்து போன இரையை மீண்டும் எப்படிக் கவர்ந்தெடுப்பது என்கிற யோசனையுடன் அவன், அவள் கண்களையே கவனித்தான்.

பர்னாண்டஸின் கண்களிலிருந்த பைசாசிக சக்தி, லிஸியின் மனத்துள் ஆழ்ந்து இறங்கியது.டியூஷன் முடிந்து வீட்டை அடைந்த பிறகும் அவள் மனத்தில் அந்தக் கண்கள் பளபளத்துக் கொண்டிருந்தன.

ரீட்டாவின் கல்யாண நாளன்று சரியாக எட்டு மணிக்கு பர்னாண்டஸ் கச்சேரி நடைபெறும் இடத்துக்கு வந்து சேர்ந்தான். அவனுக்காக அவர்கள் காத்திருந்தனர். ரீட்டா அவனுக்குத் தன் கணவனை அறிமுகப்படுத்தி வைத்தாள்.

"ஃபாதர், இவர்தான் என் ஹஸ்பெண்ட். பெயர் கோமஸ். கேப்டன். இவர் எங்க சர்ச் ஃபாதர் பிரான்சிஸ்".

இருவரும் பரஸ்பரம் கை குலுக்கினர்.

கேப்டன் கோமஸ் கொஞ்சம் போல் குடித்திருந்தார். 'சரிதான் மனுஷன் போதையிலிருக்கிறான்!' என்று தெரிந்த போது பர்னாண்டஸின் கண்கள் சற்றுக் குறுகின.

பர்னாண்டஸை மற்றவர்களும் அறிமுகப்படுத்தி வைத்தனர். விரைவிலேயே நிகழ்ச்சி ஆரம்பமானது.

பர்னாண்டஸ் முதலில் பாடினான். அவனது பாட்டு எல்லோரையும் கவர்ந்தது. சற்று நேரம் பார்வையாளர்கள் சுற்றுப்புறத்தை மறந்து பாட்டுடன் ஒன்றிப் போய்விட்டனர். விசாலமான அந்தப் பந்தலில் சங்கீதக் கச்சேரியுடன் மதுபான விருந்தும் நடந்து கொண்டிருந்தது.

மங்கலான வெளிச்சத்தில் ஆங்காங்கே தேங்கிக் கிடந்த வட்ட வட்டமான மேஜைகளில் நான்கு நான்கு பேராக ஆணும் பெண்ணும் அமர்ந்து மதுவருந்திக் கொண்டு இருந்தனர். ஒவ்வொரு மேஜையிலும் மதுபாட்டில்கள், கிளாஸ்கள் மற்றும் கொறிக்கும் பொருள்களும் இருந்தன.

பர்னாண்டஸ் பாட்டைப்பாடி முடிந்ததும், இசைக் குழுவின் பாடகன் பாடத் தொடங்கினான். அதே நேரத்தில் மேடையை விட்டுக் கீழே வந்த பர்னாண்டஸ் யாரிடம் வந்து அமரப் போகிறான் என்று ஒவ்வொருவரும் எதிர்பார்த்தனர். பர்னாண்டஸும் தனக்கேற்றவாறு ஓர் இடத்தைத் தேடிக் கொண்டிருந்தான். யார் யாரோ அவனை அழைத்த போதிலும் ஏனோ அவன் தயங்கினான். கடைசியாகத் தள்ளாடியபடியே வந்த கேப்டன் கோமஸ் அவனை வரவேற்று இழுத்துக் கொண்டு போனான்.

அவர்கள் இருவரும் ஒரு மேஜையின் இரு புறமும் எதிரெதிராக அமர்ந்தனர். ரீட்டா, பர்னாண்டஸுக்காக ஒதுக்கி வைத்திருந்த ஒயின் பாட்டிலை எடுத்து வந்தாள். பர்னாண்டஸ் பாட்டிலைத் திறந்து அந்த சிவப்பு நிறத்திரவத்தை கிளாஸுகளில் ஊற்றினான்.

“கோமஸ்... கொஞ்சம் சாப்பிடலாமே!” பர்னாண்டஸ் கேட்டான்.

“ஃபாதர், அவர் ஏற்கெனவே ஏராளமா இறக்கியிருக்கிறார் உள்ளே...” ரீட்டா கூறினாள்.

“இருந்தாலும் எனக்குக் கம்பெனி தருவதற்காகச் சாப்பிடுங்களேன்! ”

ரீட்டா உடனே ஒரு விஸ்கி பாட்டிலையும் எடுத்து வந்தாள்.

கோமஸ் பாட்டிலைத் திறந்து அரை கிளாஸ் வரை நிரப்பினார். ஐஸ் துண்டுகளைப் போட்டார்.

“சாப்பிடலாம் கோமஸ்! ”

பாட்டு தொடர்ந்து கொண்டிருந்தது.

நேரம் போனதை யாருமே உணர்ந்ததாகத் தெரியவில்லை... அங்கிருந்தவர்களில் பெரும்பாலானவர்கள் வகை வகையான உயர்ந்த மது வகைகளில் போதையில் கொஞ்சம் கொஞ்சமாகச் சுயநினைவை இழந்து கொண்டிருந்தனர்.

ரீட்டா படுக்கையறைக்குள் போயிருந்தாள். தனது முதலிரவுக்காகப் படுக்கையைத் தயார் செய்தாள்.

“பர்னாண்டஸ், இன்னும் கொஞ்சம் விஸ்கியை அவனது கிளாஸில் ஊற்று, அதன் பிறகு இன்றைக்கு இவன் போதையிலிருந்து கரையேற மாட்டான். அதில் நீ உனது முடி ஒன்றையும் பிடுங்கிப்போடு!” - பிசாசின் குரல் அவன் காதுகளுக்குள் கேட்டது.

பர்னாண்டஸ், பிசாசு சொன்னபடியே எல்லாவற்றையும் எச்சரிக்கையுடன் செய்தான். அதைச் சாப்பிட்டவுடன் கோமஸ் சுத்தமாகச் சுயநினைவை இழந்து விட்டான்.

அதற்குள் ரீட்டா திரும்பி வந்தாள்.

யாரும் யாரையும் கவனிக்காத அந்தச் சூழ்நிலையில் பர்னாண்டஸும் ரீட்டாவும் சேர்ந்து கோமஸைத் தாங்கிப் பிடித்தபடி அவர்களது படுக்கையறைக்குக் கொண்டு சென்றனர்!

# 13

**சு**யநினைவிழந்த கேப்டன் கோமஸை, பர்னாண்டஸும், ரீட்டாவும் முதலிரவு அறைக்கட்டிலில் படுக்க வைத்தனர். ரீட்டா உடனே தன் கணவரின் காலிலிருந்த ஷூக்களைக் கழற்றினாள்.

'இவர் இப்போதைக்கு எழுந்திருக்கவே போவதில்லை!' பர்னாண்டஸ் மனத்துள் நினைத்தான்.

"ஃபாதர் வாருங்கள் வெளியே போகலாம்!" ரீட்டா, அவனை அழைத்தாள்.

"வெளியேவா?" - என்றபடி அவன், அவள் கண்களை உற்று நோக்கினான். ஒரு வகையான காந்த சக்தி நிறைந்த பர்னாண்டஸின் பார்வை, ரீட்டாவின் உடலையும் உள்ளத்தையும் துளைத்துக் கீழிறங்கியது.

பளபளவென்று ஒளிரும் அந்தக் கண்களை மட்டுமே அவள் கவனித்தாள். பர்னாண்டஸின் உடலும், அந்த அறையும் ஏனைய பொருள்களும் அவளது பார்வையிலிருந்து படிப்படியாக மறைந்தன.

உணர்வுகளைச் செழுமைப்படுத்தும் ரத்தக் குழாய்களின் ஊடாக, அந்தக் கண்கள் ஆழ்ந்து இறங்குவதையும், விநாடிக்கு விநாடி வலுப் பெறும் உணர்ச்சிகள் ஏதோ ஒரு புள்ளியில் குவிந்து தன்னை அலைக்கழிப்பதையும் நேர்மை தட்டுப்பட்ட ஒரு கணத்தில் திடுமென்று உணர்ந்தாள் ரீட்டா.

அப்படியும் தன்னை மறந்து ரீட்டா நின்றிருந்த ஏதோ சில நிமிடங்களில் அது நிகழ்ந்து விட்டது. அவள் உடம்பு கட்டிலில் படிந்த அதே நேரத்தில், கேப்டன் கோமஸ் கட்டிலிலிருந்து தரையில் விழுந்தார். தான் விழுந்ததையே உணர்ந்து கொள்ளும் நிலையில் அப்போதும் அவர் இல்லை.

சற்று நேரத்திற்கு பிறகு பர்னாண்டஸ் அந்த அறையிலிருந்து வெளியேறியபோது, வெளியே மங்கிய வெளிச்சத்தில் அப்போதும் மதுபாட்டில்கள் அசைந்து கொண்டிருந்தன.

பர்னாண்டஸ் தனது அறையை அடைந்தான். இரவு மணி பன்னிரண்டை நெருங்கியபோது, லூஸிஃபரை தியானித்தான்.

“இன்று உனக்குக் கிடைத்த இரை தொடர்ந்து பயன்படும் என்று சொல்ல முடியாது. விரைவிலேயே அவர்கள் இங்கிருந்து புறப்படப் போகிறார்கள் ! ” - பிசாசு கூறியது.

“உண்மையிலேயே அவள் நல்ல அழகிதான்!” - பர்னாண்டஸ் ஏமாற்றத்துடன் கூறினான்.

“புலம்பிப் பயனில்லை. எனவே, நீ லூஸியைக் கீழ்ப்படுத்த முயற்சி செய்! ” - சாத்தான், பர்னாண்டஸ் மறந்து போனதை அவனுக்கு நினைவூட்டி விட்டு, மிகவும் விரைவிலேயே மறைந்தது.

மறுநாள் இரவில் பர்னாண்டஸ் செமித்தேரியை அடைந்து அன்னம்மா ஜேக்கப்பின் கல்லறை முன்பு நின்றான். அவளை அழைத்தான். அவள் கல்லறையிலிருந்து எழுந்தாள். பர்னாண்டஸை நெருங்கினாள்.

“என்னை அழைப்பீர்களா என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன் ”.

“அப்படி நினைக்க என்ன காரணம்? ”

“நேற்று இரவு ஒரு சம்பவம் ! ”

" எங்கே ... என்ன நடந்தது ?"

" வின்சென்ட் ஃபாதரும் மற்றும் இரண்டு பேரும் வந்து பெற்றி ஸ்டூவர்டின் கல்லறையைத் திறந்து ஃபாதர் காபிரியேலின் பிணத்தை எடுத்தனர். பிறகு கல்லறைக்குள் எதையோ வீசியெறிந்த பிறகு ஸ்லாப்பை பழையபடி மூடி விட்டுப் போய்விட்டார்கள்! "

"ஓஹோ ... அந்த பிணத்தை எங்கே கொண்டு போனார்கள் என்று தெரியுமா?" - பர்னாண்டஸ் பதற்றத்துடன் கேட்டான்.

" எனக்குத் தெரியாது !"

"அப்படியானால், நீ என்னுடன் எனது அறை வரை வா ..."

அன்னம்மா, பர்னாண்டஸைப் பின் தொடர்ந்தாள்.

இது நடந்த ஒரு சில நிமிடங்களுக்குள்ளேயே ஃபாதர் வின்சென்டும், ரவீந்தரனும் கல்லறை மைதானத்துக்கு வந்தனர். அவர்கள் பெற்றி ஸ்டூவர்டின் கல்லறையைச் சுற்றி டார்ச் லைட் அடித்துப் பார்த்தனர்.

"எல்லாம் வைத்தபடியே உள்ளன. எந்த விதமான மாற்றமும் கிடையாது! " ஃபாதர் கூறினார்.

"இங்கிருந்து நீங்கள் எடுத்துப் போன ஃபாதர் காபிரியேலின் உடம்பு என்னவாயிற்று ?" ரவீந்திரன் கேட்டான்.

"முதலில் நாம் இங்கிருந்து ஒதுங்கி, சற்று மறைவில் நிற்கலாம்".

இருவரும் மௌனமாக, இருட்டடித்த பகுதியில் ஒதுங்கி நின்றனர்.

ஃபாதர் ஒரு பிரௌன் நிறச் சட்டை போட்டிருந்தார். அவர் கூறியபடி ரவீந்திரனும் கறுப்பு வேட்டி மற்றும் சட்டை அணிந்திருந்தான். யாரும் சட்டென்று கண்டுபிடித்து

விடக்கூடாது என்பதற்காகவே இந்த ஏற்பாடு.

"அவரது பிணத்தை மிகவும் இரகசியமாக எடுத்துப் போனோம். சட்டென்று இதயத்துடிப்பு நின்று போனதால் மரணம் நிகழ்ந்ததாக டாக்டர்கள் அறிக்கை தந்துள்ளனர். அவரது உடல் இன்னும் மார்ச்சுவரியில் தான் உள்ளது. அவரின் சொந்தக்காரர்கள் இன்னும் வந்து சேரவில்லையே!"

"ஃபாதரின் உடம்பு இதற்குள்தான் இருக்கிறது என்பது உங்களுக்கு எப்படித் தெரிந்தது?"

"அன்று மாலைநேரத்தில் நான் இங்கு வந்திருந்தேன். சுற்றிப்பார்த்தேன். ஃபாதர் போட்டிருந்த சட்டையின் ஒரு முனை ஸ்லாப்புக்கு வெளியே நீட்டிக் கொண்டிருந்தது".

"அவர் எப்படி இதற்குள் சிக்கிக் கொண்டார் என்று உங்களுக்குத் தெரியவில்லையா?"

"யாருக்குத் தெரியும்?"

ஒரு பெரிய மேகத்துண்டு நிலவை மூடியது. கல்லறைப் பகுதி பூரணமான இருளில் மூழ்கியது.

"நாம் தொடர்ந்து சில நாட்கள் கொஞ்சம் கஷ்டப் பட்டாலும் இப்படியே தொடர்ந்தால், உண்மையில் நடந்தது என்ன என்பதைக் கண்டுபிடித்து விடலாம் என்பது எனது நம்பிக்கை!"

"யாராவது இதற்குப் பின்னால் செயல்படுவதாகச் சந்தேகப்படுகிறீர்களா ஃபாதர்?"

"ஆமாம்! எனது சந்தேகம் ஃபாதர் பிரான்சிஸ் மீதுதான்!"

"அவருக்கு இந்த அளவுக்கு எங்கிருந்து பைசாசிகமான சக்தி கிடைத்திருக்கும்?"

"தெரியவில்லை! ஆனால், அதன் பின்னணியில் என்னென்னவோ இருப்பதாகத் தோன்றுகிறது".

ஃபாதர் டார்ச் லைட்டை எரியவிட்டு கடிகாரத்தைப் பார்த்தார். மணி ஒன்று பத்து.

குளிர்ந்த காற்று வீசியது. இருப்பினும், சுற்றுப்புறம் அமைதியாக இருந்தது.

அதே சமயம் அன்னம்மா ஜேக்கப். பர்னாண்டஸின் அறையிலிருந்தாள். அவர்கள் இருவரும் லிஸியை எப்படி வழிக்குக் கொண்டு வருவது என்று திட்டம் தீட்டினர்.

“இதையெல்லாம் செய்வதால் எனக்கு என்ன பிரயோஜனம்? உங்களுக்கு அழகான பெண்கள் கிடைப்பார்கள். அவர்களுடன் உங்கள் பொழுதுகள் உல்லாசமாகப் போகும். நான்...?”

சற்று நேர யோசனைக்குப் பிறகு பர்னாண்டஸ் அதற்கு பதிலளித்தான்.

“நான் இனி, உன்னுடன் தொடர்பு கொள்ள முடியாது. கழுத்தில் சிலுவையில்லாத எந்த ஓர் ஆடவனையும் நீ நெருங்கலாம். ஆனால், ஒன்றை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். உனது நோக்கம் நிறைவேறிவிட்டால் அதன் பிறகு அந்த மனிதன் உயிருடன் இருக்கக்கூடாது. அதற்கான வழிமுறைகளை நான் உனக்குப் படிப்படியாகச் சொல்லித் தருகிறேன்! ”

“சரி.... அப்படியானால் நான் புறப்படட்டுமா?”

“நானும் வருகிறேன்”.

பர்னாண்டஸ் தனது சிவப்பு அங்கியை அணிந்து கொண்டு அவளுடன் புறப்பட்டான். என்ன காரணத்தாலோ, கல்லறையின் கேட் வரை வந்தவன், சட்டென்று மனமாற்றமடைந்து வந்த வழியே திரும்பிப்போனான்.

இருளுக்குள் ஒளிந்திருந்த ரவீந்திரனும் ஃபாதரும் வெளியேறலாம் என்று நினைத்தபோதுதான், பாதையில் யாரோ நடந்து வருவதாகத் தோன்றியது.

"யாரோ வருவது போல் தெரிகிறது. லைட்டை எரிய விடாமல் கவனியுங்கள் ஃபாதர்! " ரவீந்திரன் கூறினான்.

வேறு எந்த மனித ஜீவியுமே இல்லாத அந்தக் கல்லறை மைதானத்துக்குள் அவர்கள் மட்டுமே இருந்தனர். கூர் இருட்டிலும் வெண்புகைப்படலம் போல் ஏதோ ஒன்று நடந்து வருவதை அவர்கள் கவனித்தனர். சாதாரணமாக ஒருவர் நடக்கும்போது ஏற்படும் துணியின் அசைவு கூட அப்போது அவர்களுக்குத் துல்லியமாகக் கேட்டது.

அவர்கள் இருவரும் நின்றிருந்த இடத்துக்குச் சற்றுத் தொலைவிலேயே அதுவரை நடந்து வந்த அந்த உருவம் காற்றில் கரைந்து மறைந்து போனது. அத்துடன் அதுவரை கேட்ட மெல்லிய சத்தமும் அடங்கி விட்டது.

உடனே ஃபாதர் டார்ச் லைட்டை எரியவிட்டார். ஆனால், எதுவும் கண்ணுக்குப் புலப்படவில்லை.

"எல்லாமே ஒரே குழப்பமாக உள்ளது!" முன்புறமாக நடந்தபடி ஃபாதர் கூறினார், அவர்கள் கேட்டை நெருங்கியதும், யாரோ அவசர அவசரமாக வடக்குத் திசையில் நகர்வது போலத் தெரிந்தது. அந்த நபரது ஷூக்கள் அவசர அவசரமாக மண்ணில் பதிந்து உயரும் சத்தமும் துல்லியமாக் கேட்டது.

பயந்த மனத்துடன்தான் அவர்கள் திரும்பி நடக்கத் தொடங்கினர். சர்ச்சின் அறைவரை ரவீந்திரன் ஃபாதருக்குத் துணையாக வந்தான். பிறகு அவன் தனது வீட்டை நோக்கி நடந்தான்.

அன்று வரையில் நடந்த விஷயங்களை -ஏறத்தாழ அவருக்குத் தெரிந்தவற்றை ஒரு டைரிக் குறிப்பு போல் தினந்தோறும் எழுதி வந்திருந்தார். அதன்படி அன்றைய சம்பவத்தையும் அதில் குறித்து வைத்தார்.

மறுநாள் வழக்கம் போல் லிஸியும் ராஜம்மாவும் பர்னாண்டஸிடம் டியூஷனுக்கு வந்தனர். அவர்கள் வீட்டுக்குப்

புறப்படும் சமயத்தில் பர்னாண்டஸ் கூறினான்: "ஒரு புதிய டீச்சரை நியமித்திருக்கிறார்களாமே.... உங்களுக்குத் தெரியுமா?"

"எந்தப் பள்ளிக்கூடத்தில் ஃபாதர்?" லிஸி கேட்டாள்.

"உங்கள் பள்ளிக்கூடத்தில்தான். நீங்களும் மனம் வைத்துப் படித்தால் உங்களது பள்ளிக்கூடத்திலேயே வேலை செய்ய முடியும்!"

இருவரும் சிரித்தபடியே விடைபெற்றனர்.

அன்று இரவு கரியாச்சன் வீட்டில் பிரார்த்தனை மற்றும் சாப்பாட்டை முடித்துக் கொண்டு வராந்தாவில் அமர்ந்திருந்த போது, யாரோ கேட்டருகில் நிற்பதாகத் தோன்றியது.

"யாரது?" - கரியாச்சன் கேட்டார்.

"உங்களைப் பார்க்கத்தான் வந்தேன்".

ஒரு பெண்ணின் குரல் கேட்டது. வீட்டுக்குள்ளிருந்து லிஸியும், அவள் தாயாரும் வெளியே வந்தனர்.

"எங்களைப் பார்க்கவா? அப்படியானால் வாருங்கள்... வந்து உட்காருங்கள்! "

நெருங்கி வந்தபோதுதான், எங்கேயோ பார்த்துப் பழகிய முகம் போல் தெரிந்தது.

நன்றாகத் தெரிந்த முகம்! ஆனால், எவ்வளவு முயன்ற போதும் அது யார் என்பது மட்டும் நினைவுக்கு வரவே இல்லை.

"எங்கேயிருந்து வர்றீங்க! "ஏலி - லிஸியின் அம்மா அந்த முகத்தைப் பார்த்தபடி கேட்டாள்.

"நான் இந்தப் பள்ளிக்கூடத்துக்குப் புதியதாக வந்த டீச்சர். ஊருக்குள் வரும்போது இருட்டி விட்டது! " - வந்த பெண் கூறினாள்.

"ஓஹோ... அப்படியா. இன்றுகூட ஃபாதர் உங்களைப் பற்றிச் சொன்னாரே!" லிஸி கூறினாள்.

"உங்களுக்கு எந்த ஊர்?"

"திருச்சூர் பக்கத்தில்..."

"எப்படியோ... இங்க வரைக்கும் வந்துட்டீங்களே, அந்த வரைக்கும் நல்லது. போகட்டும்; எங்க வீட்டுக்கு எப்பிடி வந்தீங்க?"

"வழியில் ஒருத்தர்கிட்ட கேட்டபோது, சர்ச்சில் வேலை செய்யறவரோட வீடு இதுன்னு சொன்னாங்க. வந்துட்டேன்".

"எதுவும் சாப்பிட்டிருக்க மாட்டீங்களே!"

"பஸ்ஸை விட்டு இறங்கியதும் அங்க ஓட்டல்லயே சாப்பிட்டேன்!"

"இருந்தாலும் பயணக் களைப்பு இருக்கும். லிஸி... இவங்களைக் கூட்டிட்டு போய் உன்னோட ரூமில படுக்க வெச்சுக்கோ!" ஏலி கூறினாள். தன் மகளைப் பார்த்து.

பர்னாண்டஸின் ஆலோசனைப்படி அன்னம்மா ஜேக்கப் கல்லறையிலிருந்து எழுந்து டீச்சர் வேடத்தில் கரியாச்சனது வீட்டுக்கு வந்திருந்தாள். அவர்களது திட்டத்திற்கு ஏற்றாற் போலவே லிஸியின் அறையிலேயே படுத்துக் கொள்ள அவளுக்கு வாய்ப்புக் கிடைத்தது.

லிஸியின் படுக்கையில் அன்னம்மா ஜேக்கப் படுத்தாள். வெள்ளைப்புடவையும், வெள்ளை ரவிக்கையும் அணிந்திருந்தாள் அவள்.

"டீச்சர்! நீங்க படுத்துக்கங்க. நான் படிக்க வேண்டியிருக்கு... பரீட்சை நெருங்கிக்கிட்டிருக்கு!" - லிஸி புத்தகத்தை எடுத்து வைத்துப் படிக்கத் தொடங்கினாள்.

அன்னம்மா ஜேக்கப் லிஸியையே பார்த்தபடி

படுத்திருந்தாள். படிப்பை முடித்துக் கொண்டு லிஸி படுத்து உறங்கினால் மட்டுமே அவளது நோக்கம் நிறைவேறும்.

கடிகாரத்தில் மணி பன்னிரண்டடித்தது.

லிஸியின் கண்ணிமைகளில் கனம் அதிகரிப்பதாகத் தோன்றியது. புத்தகத்தை மூடி வைத்து விட்டுப் படுக்கத் தயாரானாள் அவள்.

அலமாரியிலிருந்து ஒரு பெட்ஷீட்டை எடுத்துத் தரையில் விரித்துப் படுத்தாள்.

படுத்த உடனே அவள் தூங்கவும் செய்தாள். அன்னம்மா அவளது ஒவ்வொரு நடவடிக்கையையும் கவனித்துக் கொண்டிருந்தாள்.

கடிகாரம் ஒரு மணி காட்டிய போது, அன்னம்மா கட்டிலிலிருந்து எழுந்தாள்.

பர்னாண்டஸ் கொடுத்தனுப்பியிருந்த மயக்க மருந்தை லிஸியின் மூக்கருகே காட்டினாள். பிறகு அவளைத் தோளில் போட்டுக் கொண்டு கதவைத் திறந்து வெளியே வந்தாள்.

கேட்டை கடந்ததும் அமானுஷ்யமான வேகத்தில் நடக்கத் தொடங்கினாள்.

பர்னாண்டஸின் அறையை அடைந்த போது அதற்காகவே அவன் காத்திருப்பதாகத் தோன்றியது.

“அன்னம்மா இனி நீ போகலாம். உனக்கு ஒரு நல்ல சேதி சொல்லட்டுமா? சர்ச்சின் பின்புறமுள்ள சமையற்கட்டை ஒட்டி ஓர் அறை இருக்கிறதே... உனக்குத் தெரியுமா?”

“ஆமாம், விருந்தினர்கள் வந்தால் தங்கும் அறை”.

“அங்கு உனக்கு ஓர் இரை காத்திருக்கிறது. ஃபாதர் வின்சென்ட்டின் தம்பி. மெடிக்கல் காலேஜ் மாணவன். தண்ணியில் தன்னை மறந்து தூங்கிக் கொண்டிருக்கிறான்.

நேராக அங்கு போகலாம் நீ!"

அந்த வார்த்தையைக் கேட்டதும் பரவசம் கொண்ட அன்னம்மா, அந்த அறையை நோக்கி விரைவாக நடக்கத் தொடங்கினாள்.

வெகுநாளாக, தான் ஆசைப்பட்ட இரை இப்போது தனக்கு முன்னால்... பர்னாண்டஸ் அவளைக் குரூரமாகப் பார்த்தான்.

முதலில் தன் உடம்பில் கிடந்த சிவப்பு அங்கியைக் கழற்றி ஹேங்கரில் மாட்டினான். பிறகு அவசர அவசரமாக லிஸியை நெருங்கி அவளது ஆடை மீது கை வைத்தான்.

சட்டென்று சிவப்பான ஒரு நிழல் மாதிரி சாத்தானின் தெளிவற்ற உருவம் அவனுக்குப் பின்புறத்தில் வெளிப்பட்டது.

"பர்னாண்டஸ் நில்... இப்போது நீ அவளைத் தொடக் கூடாது!" - சாத்தான் கட்டளையிட்டது.

ஒன்றும் புரியாதவனாக பர்னாண்டஸ் சட்டென்று பின்வாங்கினான்.

"இப்போது நீ அவளைத் தொடக்கூடாத நிலை, பொறுத்திருக்கத்தான் வேண்டும்!"

சாத்தான் சொன்னதைப் புரிந்து கொண்ட பர்னாண்டஸ் மேற்கொண்டு என்ன செய்வது என்று புரியாமல் அப்படியே திகைத்துப் போய் நின்றான். சாத்தான் சட்டென்று மறையவும் செய்தது.

அன்னம்மா ஜேக்கப்பும் திரும்பிப் போய்விட்ட நிலையில் லிஸியைத் திரும்பவும் எப்படி அவளது வீட்டில் கொண்டு போய் விடுவது என்று யோசித்தான். மீண்டும் சிவப்பு அங்கியை எடுத்து அணிந்தவன் தனது சிந்தனையைத் தொடர்ந்தான்.

அதே நேரத்தில் மயக்க மருந்தின் வலு குறைந்து போயிருந்ததால், லிஸி கண் விழித்தாள். தனக்கு முன்பாக நிற்கும்

பர்னாண்டஸைக் கண்டதும் அவள் பயந்து அலறத் தொடங்கினாள்.

“லிஸி... பயப்படாதே! நான்தான் ஃபாதர் பிரான்சிஸ்! ” - அவளை ஆறுதல் படுத்த முயன்றான்.

“ஐயோ நீங்களா இந்த வேஷத்தில்? சட்டென்று பார்த்தால் பயம் தோன்றுகிறது! ”

“எதற்காக பயப்பட வேண்டும்? ”

“நான் எப்படி இங்கே வந்தேன்? என்னை யார் இங்கே கொண்டு வந்தது?” பயந்து நடுங்கியபடி அவள் கேட்டாள்.

“நீ மூச்சுப் பேச்சில்லாமல் கல்லறை வாசலில் கிடந்தாய். நான் தான் உன்னை இங்கே தூக்கிக் கொண்டு வந்தேன்”.

“எனக்கு ஒண்ணுமே புரியலையே. அந்த டீச்சரும் நானும் ஒரே ரூமில்தான் படுத்திருந்தோம்”.

“எந்த டீச்சர்?”

“பள்ளிக்கூடத்துக்குப் புதிதாக வந்த டீச்சர்! ”

“சரி வா... உனது வீட்டுக்குப் போகலாம்”.

பர்னாண்டஸ் அவளை அழைத்துக் கொண்டு வெளியேறினான்.

சற்றுத் தூரத்தில் யாரோ ஒருவர் கல்லறைக்குச் செல்லும் வழியில் டார்ச்லைட்டை எரிய விட்டபடி வந்து கொண்டிருந்தார்.

“லிஸி... நீ வாயைத் திறக்காதே! ” - என்று எச்சரிக்கை செய்து விட்டு, சட்டென்று அவளுடன் மற்றொரு குறுக்கு வழியில் புகுந்து ரோட்டை அடைந்தான்.

**அ**ந்த நேரத்திலும் ஃபாதர் வின்செண்ட் தனது அறையில் உறங்காமல் விழித்திருந்தார். காபிரியேலின் அசாதாரணமான

மரணமும், கடந்த சில இரவுகளில் கல்லறை மைதானத்தில் நடைபெற்ற சம்பவங்களும் அவரது உறக்கத்தை விழுங்கி விட்டிருந்தன.

நிம்மதியற்ற மனத்துடன் அவர் முற்றப் பகுதிக்கு வந்து சற்று நேரம் உலாவினார். பிறகு வந்து தனது கட்டிலில் படுத்துக் கொண்டார்.

நேரம் ஊர்ந்து நகர்ந்தது.

கடிகாரம் பன்னிரண்டடித்தது.

அப்போது -

பயங்கரமான ஓர் அலறலைக் கேட்டு ஃபாதர் திடுக்கிட்டு எழுந்தார்!

## 14

**டா**ர்ச் லைட்டுடன் ஃபாதர் வின்சென்ட் அவசர அவசரமாக அறையிலிருந்து வெளியே வந்தார்.

அவர் தம்பி ரெனி, சமையலறைக்கு அருகிலிருந்த விருந்தினர் அறையில் படுத்திருக்கிறான். சத்தம் அங்கிருந்து வந்ததாகத்தான் அவருக்குத் தோன்றியது. அந்த அறையை நோக்கி வேகமாக நடந்தார்.

"ரெனி... ரெனி.." அழைத்தபடியே அறையை நெருங்கினார். ஆனால், அதற்கு எந்த விதமான பதிலும் வரவில்லை.

மீண்டும் மீண்டும் உரத்த குரலில் அழைத்த ஃபாதரின் இதயம் அதி விரைவாகத் துடிக்கத் தொடங்கியது.

கதவை உட்புறமாகத் தள்ளினார்.

திறந்து கொண்டது.

டார்ச் லைட்டை அடித்துப் பார்த்தார்.

உடம்பில் ஒரு பொட்டுத் துணி இல்லாமல் ரெனி படுத்திருந்தான். ஃபாதர் சட்டென்று போர்வையை இழுத்து அவனை மூடினார்.

"ரெனி, எழுந்திரு! " - அவனை உலுக்கி எழுப்பப் பார்த்தார்.

அவனிடம் எந்த விதமான அசைவும் இல்லை.

ஃபாதர், அவன் நெஞ்சில் கை வைத்துப் பார்த்தார்.

"ரெனி... ஐயோ ரெனி...!" என்றபடி ஃபாதர் அலறினார். சமையற்கட்டிலிருந்து சமையற்காரர் எழுந்து ஓடி வந்தார்.

"ஃபாதர் என்னாச்சு? " - வந்தவர் கேட்டார்.

"ரெனி... ரெனி... அவனுக்கு உயிரில்லை! " திக்கித் திணறியபடி ஃபாதர் கூறினார்.

ரெனி அபரிமிதமாக மதுபானம் அருந்தியதால் இறந்து போயிருக்கலாம் என்ற முடிவுக்கே எல்லோரும் வந்தனர். ஆனால், ரெனியின் படுக்கையில் தான் கண்டெடுத்த நீளமான தலைமுடியையும், அங்கு வீசிய சென்டின் மணமும் சந்தேகத்தை ஏற்படுத்தின. அதை ஃபாதர் யாரிடமும் சொல்லாமல் ரகசியமாகப் பாதுகாத்தார்.

பைசாசிகமான ஏதோ ஒரு சக்தி சகோதரனது மரணத்துக்குப் பின்னால் செயல்பட்டிருப்பதாக அவருக்குத் தோன்றியது. அது என்ன, எதனால் என்பதைக் கண்டறியும் பிடிவாதம் அவருள் எழுந்தது.

**கா**லையில் ஏலி கண்விழித்து எழுந்து வந்தபோது லிஸி வராந்தாவில் படுத்துத் தூங்குவதைப் பார்த்தாள்.

லிஸி சாதாரணமாக வீட்டை விட்டு எங்குமே போகாதவள் - குறிப்பாக இரவு நேரத்தில்! அவளிடம் 'ஏன் இங்கே படுத்திருக்கிறாய்?' என்று கேட்டபோது மிரளமிரள விழித்தாளே தவிர, பதில் எதுவும் சொல்லவில்லை.

வழக்கம் போல் டியூசனுக்குப் போவதற்காக ராஜம்மா வந்து அழைத்தபோது, 'உடம்பு சரியில்லை' என்று கழன்று கொண்டாள், தனியாகப் போக விரும்பாததால் ராஜம்மா தனது வீட்டுக்குத் திரும்பினாள். வீட்டை அடைந்தபோது ரவீந்திரன் அங்கு உட்கார்ந்திருந்தான்.

"என்ன ராஜம்மா, டியூசனுக்குப் போகலையா?" ரவீந்திரன் கேட்டான்,

"லிஸி போகலை ... அதனால் நானும் போகலை!"

"ஏன் லிஸிக்கு என்னவாம்?"

"உடம்பு சரியில்லையாம்".

இந்த பதிலைக் கேட்டதும் லிஸியை உடனே போய்ப் பார்க்க வேண்டுமென்று ரவீந்திரன் விரும்பினான். இருவரும் இரண்டு வேறுபட்ட மதத்தைச் சேர்ந்தவர்களாக இருந்ததால், இப்படியோர் உறவு அவர்களுக்கிடையே இருக்காது என்று ஒரு சிலர் நினைத்திருக்கலாம். கரியாச்சனும் ராகவன் நாயரும் ஒரே வீட்டைச் சேர்ந்தவர்களைப் போலவே பழகி வந்தனர்.

ரவீந்திரன் கரியாச்சனது வீட்டுக்கு வந்தபோது, லிஸி வராந்தாவில் அமர்ந்து பாடம் படித்துக் கொண்டிருந்தாள்.

"டியூஷனுக்கு வரமாட்டேன்னு ராஜம்மாகிட்ட சொன்னியாமே, என்ன காரணம்?"

"சொன்னேனே, உடம்பு சரியில்லை!"

"என்ன உடம்புக்கு?"

"குறிப்பிட்டுச் சொல்ற மாதிரி ஒண்ணும் இல்லை!"

அந்த நேரம் வெளியே வந்த ஏலி கூறினாள்: "ரவீந்திரா, உனக்கு ஒரு விஷயம் தெரியுமா? இன்னிக்கு காலையில் இவள் வெளித் திண்ணையில் படுத்திருந்தாள். இவள் எப்படித் திண்ணைக்கு வந்தாள்னு யோசிக்கிறேன் நான்!"

"லிஸி, உண்மையைச் சொல். அன்னிக்கு மாதிரி ராத்திரியில் நீ பாட்டுக்கு எங்கேயாவது புறப்பட்டுப் போயிட்டியா?"

"இல்லை ... நான் எங்கேயும் போகலை!"

இரவில் நடந்ததை அவள் வேண்டுமென்றே அவர்களிடமிருந்து மறைத்தாள். இருப்பினும் அந்தச் சம்பவத்தை நினைத்துப் பார்த்தபோது அவள் உடம்பிலிருந்த மயிர்க் கால்கள் குத்திட்டு நின்றன. 'பகல் நேரத்திலேயே தனியாகப் போக பயப்படும் அந்த இடத்துக்கு நாம் எப்படி இரவில் போய்ச் சேர்ந்தோம்?' அவள் மனம் யோசித்தது.

'சிவப்பு அங்கியணிந்த ஃபாதரைப் பார்த்தவுடன் முதலில் ஏன் பயம் தோன்றியது?

தன் உடல்நிலை மாறாக இருந்திருந்தால் நேற்று என்ன நடந்திருக்குமோ?' அந்த ஃபாதரைப் பற்றி அவள் ஒரு மாதிரியான செய்திகளையெல்லாம் கேள்விப்பட்டிருந்தாள்.

'அப்படியானால் அவர் தான் தன்னை அங்கு கொண்டு போனவரா?'

"என்ன யோசனை?" ரவீந்திரன் கேட்டான்.

"ஒண்ணுமில்லை ... சும்மாதான்".

"இல்லீங்க, லிஸிக்கு என்னமோ ஆகியிருக்கு. முகத்தைப்

பார்த்தாலே அது தெரியுதே!"

"அதெல்லாம் ஒண்ணும் இல்லை. நீ பாட்டுக்கு எதையாவது சொல்லி வைக்காதே!"

எங்கோ வெளியே போயிருந்த கரியாச்சன் அப்போது அங்கு வந்து சேர்ந்தார்.

"ரவி நீ இங்கதான் இருக்கிறாயா? நான் உன்னைத் தேடி உங்க வீட்டுக்குப் போயிட்டு வர்றேன்".

"ஏதாவது அவசரமான விஷயமுங்களா?"

"ஃபாதர் உன்னை உடனே வரச் சொன்னார்".

"நான் மறந்தே போயிட்டேன். தினமும் ஒரு தடவை வந்துட்டுப் போன்னு எங்கிட்டச் சொல்லியிருந்தார். நீங்களும் வர்றீங்களா? நான் அவர்கிட்ட சில விஷயங்களைப் பத்தி பேச வேண்டியிருக்கு".

"அதுக்கென்ன வா. போகலாம். கொஞ்சம் இரு. தண்ணி குடிச்சிட்டு வர்றேன் ..." என்றவர் உட்புறம் திரும்பி மனைவியை அழைத்துத் தண்ணீர் கேட்டார்.

தண்ணீர் குடித்த பிறகு இருவருமாக அங்கிருந்து கிளம்பினார்.

கரியாச்சன் முந்தைய இரவு வீட்டுக்கு வந்த புது டீச்சரைப் பற்றி ஃபாதரிடம் கூறினார். அதிசயமாக மறுநாள் காலையிலேயே அவள் மறைந்ததையும் குறிப்பிட்டார்.

ஃபாதரின் தம்பி ரெனி மரணமடைந்ததற்குப் பின்னணியிலுள்ள சந்தேகங்களை, ஃபாதரும் அவரிடம் கூறினார்.

"ஃபாதர்! ஒரு விஷயத்தை உங்களிடம் சொல்ல வேண்டுமென்றிருந்தேன். நேற்று ராத்திரி நமது செமித்தேரிக்கு அருகில் இரண்டு பேரைப் பார்த்தேன். ஒருவர் சிவப்பு நிற

அங்கி அணிந்திருந்தார். அவருடன் ஒரு பெண்ணிருந்தாள். அப்படித்தான் எனக்குத் தோன்றியது. நான் டார்ச் லைட் அடித்துப் பார்ப்பதற்குள் சட்டென்று மறைந்து விட்டார்கள். இருந்தும் நான் தேடிப் பார்த்தேன். காண முடியவில்லை! "

ஃபாதர் வின்சென்ட் யோசனையிலாழ்ந்தார்.

"எனக்கு ஒன்றுமே புரியவில்லை. நான் எனது கருத்தையும் சொல்ல முடியவில்லை. அமானுஷிகமான என்னென்ன மோவெல்லாம் இங்கு நடக்கிறது. அது என்னவென்று புரியாமல் அதை நாம் எப்படி விவாதிக்க முடியும்?"

அங்கிருந்து அவர்கள் இருவரும் வெளியேறும்போது மணி பதினொான்றைத் தாண்டிவிட்டது. வரும் வழியில் ரவீந்திரன், கரியாச்சனிடம் கேட்டான்.

"உங்களுக்கு, பிசாசு - ஆவி மாதிரி விஷயங்கள்ல நம்பிக்கை இருக்கா?"

"என்ன திடீர்னு அப்படிக் கேக்குறே?"

"இப்ப உங்கவீட்டு விஷயத்தையே எடுத்துக்குவமே ... எல்லாம் ஓரே குழப்பமா. சிக்கலா இருக்கு இல்லையா? எங்க வழக்கத்துல இதுக்கெல்லாம் சரியான பரிகாரம் இருக்கு. முதல்ல இதைப் பத்தி சரியா தெரிஞ்சுக்கிறதுக்கு பிரஸ்னம் பார்ப்போம். பிறகு ஏதாவது ஒரு மந்திரவாதி கிட்டப் போவோம்".

"ரவீ ... அதெல்லாம் எங்களுக்குக் கூடாது! "

"அப்படின்னா அதை எங்கிட்டே விட்டிருங்க. நான் பார்த்துக்கிறேன். நீங்க தற்சமயம் இதைப் பத்தி யாருகிட்டேயும் பேசாம இருந்தா நல்லது, நாளைக்கு நான் ஒரு மந்திரவாதியைக் கூட்டிட்டு வர்றேன். அவரே பிரஸ்னமும் பார்த்துவிடுவார்".

அரைகுறை மனத்துடன் கரியாச்சன் இதற்கு ஒப்புக்

கொண்டார்.

மறுநாள் மாலை நேரத்தில், ரவீந்திரனுடன் அறிமுகமில்லாத மற்றொரு நபரும் கரியாச்சனது வீட்டுக்கு வந்தார்.

ஆஜானுபாகுவான அந்த மனிதர் புகழ்பெற்ற ஓர் மந்திரவாதியும்கூட. அவர் பிரஸ்னம் வைத்துப் பார்த்த பிறகு சொன்னார்:

"இந்த வீட்டில் பைசாசிகமான சில சம்பவங்கள் சமீப காலத்தில் நடந்திருக்கிறது. சுருக்கமாகவும் விளக்கமாகவும் சொன்னால், இந்த வீட்டிலுள்ள ஒருவர் மீது கொடிய பிசாசின் நிழல் விழுந்துள்ளது! "

"என்ன ... என்ன சொல்றீங்க?" - கரியாச்சன் திகைப்புடன் கேட்டார்.

"தற்சமயம் நான் இதுக்கு சில மாற்று வழிகளைச் சொல்றேன். நீங்க அப்படியே நடந்துகிட்டாப் போதும்". - அவர் தனது பையிலிருந்து ஒரு சிறிய சிமிழை எடுத்தார்.

அந்த வெள்ளிச்சிமிழிலிருந்து ஒரு வெள்ளித் தாயத்தை வெளியே எடுத்தார். அதே மாதிரி அதில் மற்றொரு தாயத்தும் இருந்தது.

"எப்படிப்பட்ட கொடிய பிசாசையும் தூரத்திலேயே நிற்க வைக்கிற ஒன்று இது. இந்த வீட்டின் கன்னி மூலையில் இதைப் புதைத்து வையுங்கள்! "அவர் அதை கரியாச்சனின் கையில் கொடுத்தார்.

மிகவும் சங்கடத்துடன் கிறிஸ்தவரான கரியாச்சன் அதை அவரிடமிருந்து வாங்கினார். உடனே ரவீந்திரன் கரியாச்சனையும் அழைத்துக் கொண்டு அந்த வீட்டின் தென்கிழக்குப் பகுதியை நோக்கி நடந்தான்.

"கடப்பாரை இருந்தா... தாங்களேன்". ரவீந்திரன்

கேட்டதும் கரியாச்சன் எடுத்து வந்து கொடுத்தார்.

ரவீந்திரன் ஓரடி ஆழமுள்ள குழி ஒன்றை வெட்டினான். அதில் மாந்திரீகர் கொடுத்த தாயத்தைப் புதைத்து வைத்தான்.

"இனி பயப்படத் தேவையில்லை!" - ரவீந்திரன் கூறினான்.

பிறகு மாந்திரீகரும் ரவீந்திரனும் அங்கிருந்து கிளம்பிப் போனார்கள்.

வீட்டுக்கு வந்த புதியவரைப்பார்த்ததும் ராகவன் ஆச்சரியப்பட்டார்.

பாலக்காட்டுக்காரரான, மித்ரவாரியம் வீட்டைச் சேர்ந்த சங்கர வாரியர்.

"நீங்கதானா? உங்களைப் பத்தி நான் நிறையக் கேள்விப்பட்டிருக்கேன்!" ராகவன் மகிழ்ச்சியுடன் வரவேற்றார்.

"உங்க பையன் தான் என்னைக் கூப்பிட்டு வந்தான்!" - வாரியர் பதிலளித்தார்.

அவர்கள் இருவரும் பழங்கதைகளைப் பரிமாறிக் கொள்வதில் ஈடுபட்டனர்.

**அ**ந்தச் சம்பவம் நடந்த பின் ஏழாவது நாளன்று, கடிகாரம் பன்னிரண்டு மணியடித்தபோது பர்னாண்டஸ் படுக்கையிலிருந்து எழுந்தான்.

தனது சிவப்பு அங்கியை எடுத்து அணிந்து கொண்டான். சில நிமிடங்களுக்குள் அவன் லிஸியின் வீட்டை அடைந்தான்.

நிலவு சன்னமாக ஒளி சிந்திக் கொண்டிருந்தது.

அந்த வீட்டின் தென்புறம் வளர்ந்திருந்த மாமரம் படர்ந்து பந்தலாக நிழல் பரப்பி இருந்தது. அந்தப் பகுதியில் மட்டும் நிலவொளி புக முடியாமல் இருட்டாக இருந்தது.

பர்னாண்டஸ், கேட்டைத் திறந்து உள்ளே நுழைந்தான்.

அதே லிஸி நிற்கிறாள்!

'இந்த நேரத்தில் நாம் எதற்காக இங்கு வந்திருக்கிறோம்?' என்று அவள் கேட்டால், என்ன பதில் சொல்லுவது என்று ஒரு கணம் தயங்கினான். இருப்பினும், ஆளை மயக்கும் தனது வழக்கமான சிரிப்புடன் அவளைப் பார்த்தான். அவனது பார்வை அவள் கண்களில் பதிந்தது.

வழக்கத்துக்கு மாறாக லிஸி அன்று ரவிக்கையும், இடுப்புப்பகுதியில் வேட்டியும் கட்டியிருந்தாள். அதுவும் அவளுக்கு அழகாகவே இருந்தது.

"உண்மையைச் சொல்லட்டுமா லிஸி... நீ இப்போது எவ்வளவு அழகாக இருக்கிறாய் தெரியுமா?" - பர்னாண்டஸ் வாய் திறந்தான்.

"என்ன ஃபாதர் இப்படிச் சொல்றீங்க?" அவள் ஆச்சரியத்துடன் கேட்டாள்.

பர்னாண்டஸ் தன் வலக்கையை அவளுக்கு நேராக நீட்டினான். அந்தக் கைகளுக்கு எப்படிப்பட்டவர்களையும் சுயநினைவிழக்கச் செய்யும் சக்தி இருந்தது. அவள் கண்கள் மெதுவாக மூடத் தொடங்கின. அவள் கீழே விழுந்து விடுவாள் என்று தோன்றியதும், அவன் அவளைத் தாங்கிப் பிடித்தான்.

நேரம் கடத்தாமல் அவளைத் தோளில் தூக்கிப் போட்டுக் கொண்டு நடக்கத் தொடங்கினான். விரைவிலேயே தனது இருப்பிடத்தை அடைந்தான்.

அவளைப் படுக்கையில் போட்டான்.

மயக்கத்திலாழ்ந்திருந்த அவளின் உடலழகைக் காண அவன் மனம் விரும்பியது.

அதற்கு முன்பு தன்னிடம் அகப்பட்ட மற்றவர்களைப்

போன்றவளல்லள் லிஸி.

லிஸி மிகவும் சிறு வயதுப் பெண்.

அழகானவள்.

அவளைப் பார்த்தபடி நின்றிருந்தபோது, அவனது மனப் பிசாசு உயர்ந்தெழத் தொடங்கியது.

தனது சிவப்பு அங்கியைக் கழற்றிச் சுவரிலுள்ள ஆணியில் மாட்டிய பிறகு, அவன் அவளுடன் கலந்தான். நீண்ட ஒரு முத்தத்தின் மூலம் அவளை மூச்சுத் திணறச் செய்ய வேண்டுமென்று அவன் முயன்றபோது, சட்டென்று லிஸி விழித்துக் கொண்டாள்.

அவளின் கைகள் அவனைக் கட்டித் தழுவுவது போல் உயர்ந்து வளைந்தன. இரு கைப் பகுதிகளும் அவன் கழுத்தில் பதிந்தபோது, அவளின் விரல்களில் நகங்கள் நீண்டன. கூர்மையான நகங்கள். அவை அவன் உடம்பின் தசைப் பகுதிகளைக் கிழித்துக் கொண்டு இறங்கின.

பர்னாண்டஸ் துள்ளியெழுந்தான். சட்டென்று பாய்ந்து தனது சிவப்பு அங்கியை எடுத்து அணிந்து கொண்டான்.

ஒரு விநாடி அவனுக்கு எதுவும் புரியவில்லை.

"லிஸி! என்ன இதெல்லாம்?" - அவன் கோபத்துடன் கேட்டான்.

அவள் உரத்த குரலில் வாய்விட்டுச் சிரித்தாள். கண்ணாடித் துண்டுகள் குலுங்குவது போன்ற சிரிப்பு. அந்தச் சிரிப்பு, அந்தப் பழங்காலக் கட்டடத்தின் சுவர்களில் மோதி எதிரொலித்தது.

அவள் எழுந்தாள்.

அவளது குரூரமான பார்வையைக் கண்ட பர்னாண்டஸ் சட்டென்று பயந்து விலகி, ஒதுங்கினான்.

அவள், அவனை நெருங்கினாள்.

அவன் மேலும் பின்வாங்கினான்.

லிஸி கதவைத் திறந்து வெளியேறினாள். ஒரு நிழல் மாதிரி அவள் நடந்து அகலுவதை அவன் பார்த்துக் கொண்டே நின்றான்.

கலவரத்துடன் ஒன்றும் புரியாமல் விழித்த பர்னாண்டஸ், கடைசியில் தெளிவற்ற லூஸிஃபரது படத்தைக் கையில் எடுத்தான்.

"வந்திருந்தது யார்? இங்கு என்ன நடந்தது?" அவன் மிரட்சியுடன் கேட்டான்.

"யாரோ உன்னை அடையாளம் தெரிந்து கொண்டிருக்கிறார்கள். நீ கொண்டு வந்தது உண்மையான லிஸி அல்ல..." - சாத்தான் கூறியது.

"அப்படியானால் அது யார்? "

"எனக்கும் தெரியவில்லை! "

"பிறகு ஏன் நீ உன்னை மிகவும் சக்தியுள்ளவன் என்று சொல்லிக் கொள்கிறாய்? என் கழுத்தில் அவள் நகங்களைப் பதித்து இறக்கினாள்...."

"அது உனது பிரமை. அப்படி எதுவும் உண்மையில் நடக்கவில்லை! "

"சரி போகட்டும், மேற்கொண்டு நான் எப்படி நடந்த கொள்ள வேண்டும்?"

"முதலில் உன் எதிராளி யார் என்று கண்டுபிடி... அப்புறம் ஆளை ஒழித்துக்கட்டு".

"அதை நான் எப்படித் தெரிந்து கொள்வது?"

“நீ உண்மையான லிஸியை இங்கே அழைத்து வா. அப்போது எதிராளிகளும் இங்கே வருவார்கள் அல்லது அவர்கள் யார் என்பதாவது உனக்குப் புரியும்....” - சாத்தான் மறைந்தது.

மறுநாள் காலையில் பர்னாண்டஸ் வழக்கத்தை விட சீக்கிரமாக எழுந்து கொண்டான். முதல் நாள் நடந்த நிகழ்ச்சிகளை ஒன்று விடாமல் மறுபடி யோசித்துப் பார்த்தான். கரியாச்சனது வீட்டுக்குப் போனபோதுதான் லிஸி மாதிரி இருந்த அவளைப் பார்த்தோம். அங்கிருந்து தான் அவளைக் கொண்டு வந்தோம்.

பகல் நேரத்தில் அங்கு போய் என்ன நடக்கிறது என்று பார்க்க விரும்பினான் அவன்.

தனது சாதாரண வெள்ளை அங்கியை அணிந்து கொண்டு புறப்பட்டான்.

கரியாச்சனது வீட்டை அடைந்தபோது லிஸி வராந்தாவில் உட்கார்ந்து படித்துக் கொண்டிருந்தாள்.

“ஃபாதர் வந்திருக்கிறார்!” - என்றபடி எழுந்து வணங்கினாள்.

“உங்களை வீட்டுக்கு வரவேண்டுமென்று நீண்ட நாளாக நினைக்கிறேன். முடியாமல் இருந்தது...” - பர்னாண்டஸ் பேச்சைத் துவக்கினான்.

“ஃபாதர், என்னை உங்களது வீட்டுக்குக் கொண்டு போனதை யாரிடமும் சொல்லாதீர்கள்!”

“இல்லை.... நான் சொல்ல மாட்டேன்”.

பர்னாண்டஸைப் பார்த்ததும் தோட்டப் பகுதியில் வேலை செய்து கொண்டிருந்த கரியாச்சன் வேகமாக அங்கு வந்து சேர்ந்தார்.

“ஃபாதர் எப்ப வந்தீங்க?... ஏலி... அவருக்கு காபி... இல்லேன்னா சாப்பாட்டு நேரமாச்சே... சாப்பாடு போடு. இருங்கள்... கோழி ஒன்றை அடிக்கலாம்”.

கரியாச்சன் கோழிக்கூண்டை நெருங்கினார்.

மறுபுறத்தில் கோழியின் சத்தம் கேட்டது.

சற்று நேரத்துக்குள் கரியாச்சன் வீட்டின் முன்பக்கம் வந்தார்.

“ஃபாதர்! உங்களைப் பார்க்க உங்களது வீட்டுக்கு வரலாம் என்று நினைத்திருந்தேன்! ” - கரியாச்சன் கூறினார்.

## 15

“என்ன கரியாச்சன், உங்களை அந்தப் பக்கமே பார்க்க முடியறதில்லையே?” - அவர் கண்களைப் பார்த்தபடி கேட்டான் பர்னாண்டஸ்.

தனது வீட்டில் அரங்கேறும் சம்பவங்களைப் பற்றி பர்னாண்டஸிடம் சொல்வதா, வேண்டாமா என்று யோசித்தார் கரியாச்சன். கடைசியில் சொல்லி விடுவது என்று தீர்மானித்தார். பிரான்சிஸ் பாதிரியாரிடம் சில அற்புதமான ஸித்திகள் இருப்பதாகக் கரியாச்சன் நினைத்தார். எனவே, அவர் நினைத்தால் இதையெல்லாம் சரி செய்ய முடியும் என்றும் நம்பினார்.

“ஃபாதர்! கொஞ்ச நாட்களாக லிஸி என்னவோ போல் இருக்கிறாள். என்னன்னே புரியலை. நடுராத்திரியில எழுந்திரிச்சு, அவபாட்டுக்கு நடக்கிறா. ஏதோ ஆவி சம்பந்தமான தொல்லையா இருக்கும்னு நெனைக்கிறேன்! ”

“ஆவித் தொல்லையா? ” - நம்பமுடியாதவனைப் போல் பர்னாண்டஸ் வியப்புடன் கேட்டான்.

கரியாச்சன் மனத்தில் மீண்டும் ஒரு போராட்டம் ஆரம்பமானது. எல்லாவற்றையும் அவரிடம் சொல்லலாமா... கூடாதா? ஆனால், வெள்ளை மனம் கொண்டவரான ஒரு ஃபாதரிடம் இதையெல்லாம் சொல்வதில் தப்பே இல்லையென்று அந்த வெகுளியான கரியாச்சன் தன் மனத்தையே ஆறுதல்படுத்திக் கொண்டு எல்லாவற்றையும் சொன்னார். சங்கு வாரியர் வந்ததும், மந்திரங்கள் செய்ததையும் மறைக்காமல் சொன்னார். பர்னாண்டஸ் எல்லாவற்றையும் கவனமாகக் கேட்டான்.

“ஆள் யாரென்று கண்டுபிடித்துவிட்டால் பிறகு பேயோட்டி விடலாம் என்றுதான் சொன்னார் அவர். நமது வேதத்தில் இதெல்லாம் உள்ளதா ஃபாதர்? ” - கடைசியில் ஒருகேள்வியுடன் கரியாச்சன் தனது பேச்சை நிறுத்தினார்.

“எல்லா மதங்களிலும் இதெல்லாம் உண்டு. இதை ஏன் என்னிடம் சொல்லவில்லை? எப்படிப்பட்ட கொடிய பிசாசாக இருந்தாலும் நான் ஓட்டிவிட மாட்டேனா? ஒரு முக்கியமான விஷயம்... நம் ஆட்களுக்கு மற்றவர்கள் செய்தால் சரியாகாது என்று தோன்றுகிறது!” - பர்னாண்டஸ் கடைசியில் ஒரு கொக்கி போட்டான்.

“அப்படீங்களா? அப்படீன்னா நீங்கதான் எங்களுக்கு உதவணும். அதுக்காக எவ்வளவு செலவானாலும் நான் ஏத்துக்கத் தயாரா இருக்கேன். ஃபாதர், எப்படியாவது அவ உடம்பில் இருந்து அந்தப் பீடை ஒழிஞ்சாப் போதும்! ” கரியாச்சன் ஆற்றாமையுடன் பேசினார்.

சற்று நேரத்தில் ஏலி வந்து சாப்பாடு தயார் என்றாள்.

“எனக்கு இப்போ சாப்பாடு வேணாம். மதியச் சாப்பாட்டை நான் கொஞ்ச நாளா தவிர்த்திடுறேன்!” - பர்னாண்டஸ் கூறினான்.

"அப்படின்னா ரொட்டியும் கோழிக்கறியும் சாப்பிடுங்களேன். என்ன சொல்றீங்க?" கரியாச்சன் கேட்டார்.

"நான் எதையாவது சாப்பிட்டே தீரணும்னு நீங்க நினைச்சா குடுங்க!"

கரியாச்சன் உள்ளே போனார்.

"லிஸி, நீ என்ன உள்ளேயே இருக்கே? ஃபாதர் வந்திருக்கிறாரே, பார்க்கலையா?" அறைக்குள் உட்கார்ந்து ஏதோ ஒரு புத்தகத்தைப் படித்துக் கொண்டிருந்த லிஸியிடம் கரியாச்சன் கேட்டார்.

"நான் படிச்சிட்டிருக்கேம்பா".

"நீ போய் ஃபாதருக்கு ரொட்டியை எடுத்துக்குடு".

அவள் எழுந்தாள்.

பர்னாண்டஸின் பார்வை அவளை மிகவும் சங்கடப்படுத்தியது. தவிர, ஏற்கெனவே ரவீந்திரன் அவளிடம் ஃபாதரைப் பற்றி சந்தேகப்படும்படியாகச் சிலவற்றைச் சொல்லியிருக்கிறான். சில பெண்களுடன் ஃபாதர் முறையற்ற உறவு வைத்திருப்பதாக அவன் எச்சரித்திருந்தான். அவன் சொன்னதன் நோக்கம், லிஸி இந்த விஷயத்தில் ஃபாதரிடம் ஏமாந்து போகக்கூடாது என்பதுதான்.

டைனிங் டேபிளில் ஏலி தூய வெள்ளைத் துணியை விரித்திருந்தாள். லிஸி, பர்னாண்டஸுக்குப் பரிமாறினாள். ஒரு கிளாஸில் பாலும் கொண்டு வந்து வைத்தாள்.

அந்த கிளாஸைப் பார்த்தவுடன் அவன் நெற்றி சுளிவடைந்தது. அதைத் தனது பார்வையிலிருந்து மறைப்பதற்காக சுவரில் மாட்டியிருந்த காலண்டரைப் பார்த்தபடி தண்ணீர் நிரம்பிய ஜெக்கை அதற்கு நேராக நகர்த்தி வைத்தான்.

அந்த கிளாஸ் சர்ச்சிலிருந்து லிஸி பரிசாகப் பெற்றது.

அழகியபூக்களுக்கு மத்தியில் சிலுவை அடையாளம் ஒன்று அதில் அலங்காரமாகச் செதுக்கப்பட்டிருந்தது.

"அந்தத் தாயத்தை எங்கே புதைத்து வைத்திருக்கிறீர்கள்?" கைகழுவிவிட்டு வந்து உட்கார்ந்த பர்னாண்டஸ் கேட்டான்.

"தென்கிழக்கு மூலையில்... அதோ அங்கேதான்!" - சுட்டிக் காட்டினார்.

"அதெல்லாம் நமக்குச் சரிப்படாது. இருந்தாலும் செஞ்சது வரைக்கும் அப்படியே இருக்கட்டும். இனிமேல் இதையெல்லாம் தொடராம இருந்தால் போதும்... இதெல்லாம் நம்மளாலேயே செய்ய முடியுமே!"

"நான் இப்போ என்ன செய்யணும் ஃபாதர்?"

"லிஸியை என்னிடம் அனுப்புங்கள். அவள் தலை மீது கை வைத்து நான் பிரார்த்திக்கிறேன்!"

"அதை இங்கேயே செய்யுங்களேன் ஃபாதர்!"

"முடியாது. நான் குடியிருக்கிற இடத்தில் அதுக்குன்னு சிலதெல்லாம் வெச்சிருக்கிறேன். வீட்டில வச்சு செய்யறதை விட, அங்க வெச்சு செஞ்சாத்தான் நல்லது. அதுக்குப் பிறகு நீங்க எதுக்காகவும் பயப்படத் தேவையில்லை!"

அதைக் கேட்ட கரியாச்சன் மகிழ்ச்சியடைந்தார்.

"நான் இதை முன்னமேயே செஞ்சிருக்கணும். சும்மா கன்னாபின்னான்னு கடவுளுக்கு அடுக்காததெல்லாம் செஞ்சிருக்கேன்!"

அதே நேரம் பர்னாண்டஸின் மனம் கரியாச்சனின் மனத்தை ஆக்கிரமித்து சுவாதீனம் செய்து கொண்டிருந்தது. அதாவது, தோட்டத்தில் புதைத்து வைத்துள்ள தாயத்தை எடுத்து வீசியெறியுமாறு கரியாச்சனது மனதுக்குக் கட்டளை இட்டுக் கொண்டிருந்தது.

"நீங்க சொன்னதும் சரிதான். நமக்கு இதெல்லாம் சரிப்படாது..." என்றபடி எழுந்து கடப்பாரையை எடுத்துக் கொண்டு தென்கிழக்கு மூலையை நோக்கிப் போனார் அவர். சீக்கிரத்திலேயே புதைக்கப்பட்டிருந்த தாயத்துடன் திரும்பி வந்தார். அதைக் கையில் வாங்கிப் பார்த்த பர்னாண்டஸ் தூரத்தில் வீசி எறிந்தான்.

"அப்ப லிஸியை நான் எப்போ உங்ககிட்ட அனுப்பி வைக்கலாம்?" கரியாச்சன் கேட்டார்.

"சாயந்தரமா அனுப்பி வையுங்க. நான் என்னோட வேலையெல்லாம் முடிச்சிட்டுக் காத்திருக்கிறேன்".

அப்போது-

"யாரு ஃபாதரா... இவர் இவ்வளவு நேரமா இங்கேயா இருக்கார்?" - என்றபடி ரவீந்திரன் கேட்டை திறந்து கொண்டு வந்தான்.

"ஃபாதர் என்னை உங்களுக்குத் தெரியாதுன்னு நெனைக்கிறேன். நான் ராஜம்மாவின் அண்ணன்."

"ஓகோ... என்கிட்ட டியூஷனுக்கு வர்ற ராஜம்மாவின் அண்ணன், இல்லையா?"

"ஆமாம் ஃபாதர்! இதுவரைக்கும் என்னால் அங்கே வரமுடியல. உங்களைப் பார்க்கணும்னு ரொம்ப நாளா நெனைச்சிட்டிருக்கேன்..."

"சரி, அப்ப நான் கிளம்பட்டுமா?" பர்னாண்டஸ் அவர்களிடம் விடைபெற்றுப் புறப்பட்டான். புறப்படும் போது "ஆமாம் லிஸி எங்கே?" என்று கேட்டு வைத்தான்.

"அம்மா லிஸி! ஃபாதர் கூப்பிடுகிறார்."

லிஸி வெளியே வராமல் கதவு மறைவிலேயே வந்து நின்றாள். அவள் கழுத்தில் சிலுவையுள்ள செயின் ஒன்று கிடந்தது. பர்னாண்டஸ் கவனித்தபோது அந்தச் சிலுவை

அவன் கண்ணைச் கூச வைத்தது. இடி விழுந்தது போல் ஒரு கணம் தடுமாறிய பர்னாண்டஸ், வேகமாகத் திரும்பி நடக்கத் தொடங்கினான்.

"ரவீ என்னை மன்னிச்சிடுப்பா. நீ சொன்னது எல்லாத்தையும் அவர்கிட்டச் சொல்லலை. இருந்தாலும் சிலதெல்லாம் சொல்லிட்டேன். என் மனசில எதையும் வெச்சுக்க முடியாததுதான் காரணம்!"

"நீங்க செஞ்சது நல்லதாத் தோணலை. யாருக்கும் தெரியக்கூடாதுன்னுதான் நாம அப்படிச் செஞ்சோம்."

"நானும் என்னை எவ்வளவோ கட்டுப்படுத்திப் பார்த்தேன். முடியலைப்பா.. கடைசியில போட்டு உடைக்கிறதா ஆயிடுச்சு."

"சரி அதுக்கு அவர் என்ன சொன்னார்?"

"ரவி அவர் ஆள் ரொம்பவும் தைரியசாலி. எதுக்காக வீணா காசைச் செலவழிச்சு இதெல்லாம் செஞ்சோம்னு இருக்கு. அவர் கிட்டச் சொன்ன பிறகு ஏதோ, எனக்கும் கொஞ்சம் ஆறுதலா இருக்கிற மாதிதி தெரியுது!"

"அப்புறம் என்னதான் ஆச்சு?"

"நீங்க செஞ்சு வெச்சதையெல்லாம் எடுத்து வீசியெறிஞ்சிட்டார்,"

"உண்மையாவா? ஆமாம் அவர் எதுக்கு இதையெல்லாம் வீசியெறியணும்?"

"எங்களுக்கு அதெல்லாம் கூடாதுன்னு சொன்னார். அப்படி ஏதாவது சந்தேகம் வந்தால், பிரார்த்தனை பண்ணியே சரி பண்ணிடலாம்கிறார்."

"சரி, பிரார்த்தனையாவது செஞ்சாரா?"

"அதுக்குத்தான் சாயந்தரம் அவளை அனுப்பச் சொல்லியிருக்கார்."

“லிஸியைத் தனியாவா அனுப்பப் போறீங்க?”

“அதுக்கென்ன? அவ ஃபாதர்கிட்டத்தானே போறா?”

“சரி, அதுக்குப் பிறகு உங்க இஷ்டம்... நான் வர்றேன்!” - ரவீந்திரன் புறப்பட்டான்.

ரவீந்திரன் நேராக வின்சென்ட் ஃபாதரிடம் வந்தான்.

“வாப்பா ரவீந்திரன்... என்ன எது வரைக்கும் தெரிஞ்சிருக்குது?” - சர்ச் வாசலுக்கு வந்தவனை வரவேற்ற ஃபாதர் அவனிடம் கேட்டார்.

“அதைச் சொல்றதுக்குத்தான் ஃபாதர் வந்திருக்கிறேன். அப்புறம் என்னை நீங்க மன்னிக்கணும்?”

“எதுக்காக மன்னிப்பு?”

கரியாச்சனது வீட்டுக்கு மந்திரவாதி ஒருவரைக் கூட்டி வந்ததையும் அங்கு நடந்ததையும் விவரித்த ரவீந்திரன் தொடர்ந்தான்: “நான் இப்போ கரியாச்சனோட வீட்டில இருந்துதான் வர்றேன். அங்கே பிரான்சிஸ் பாதிரியார் இருந்தார். அங்க மந்திரவாதி செஞ்சு வெச்சிருந்ததை எல்லாம் எடுத்து எறிஞ்சுட்டார். அதனால அவருக்கு என்னமோ இடைஞ்சல் ஏற்பட்டிருக்குன்னு தோணுது!”

அதற்கு ஃபாதர் பதில் சொல்லவில்லை.

“நீ ஒண்ணு செய் ரவி. நான் அவரை சந்தேகப்படறேன்னு அவருக்குத் தெரிஞ்சிட்டா, உடனே பாதையை மாத்திப்பார். அதனால இந்த விஷயத்துல நீதான் எனக்கு உதவணும். பொதுவா இந்த மாதிரி விஷயங்களை ஊர் ஜனங்க தெரிஞ்சுக்காம இருக்கிறது நல்லது!”

“நீங்க இந்த விஷயத்தை பிஷப்புக்குத் தெரியப்படுத்தினா என்ன ஃபாதர்?”

“செய்யலாம்தான். ஆனா, அதுக்கு ஆதாரம்

ஒண்ணுமில்லாம அவங்ககிட்ட நிரூபிக்கிறது கஷ்டமாச்சே!"

"சரி ஃபாதர். இதை உங்க காதில போடணும்தான் வந்தேன். நான் கிளம்பட்டுமா?"

ரவீந்திரன் விடை பெற்றான்.

வீட்டுக்கு வந்தவன், அப்பா ராகவனிடம் விஷயத்தை விளக்கினான்.

"அப்படின்னா நிச்சயம் அதுக்குக் காரணம் அந்த ஃபாதரேதான்!" - ராகவன் நாயர் கூறினார்.

"எனக்கு ஆரம்பத்தில் இருந்தே அவர் மேலதாம்பா சந்தேகம்!"

"சரி. நீ கரியாச்சனுக்குத் தெரியாம ஒரு வேலை செய். அவர் தெரிஞ்சிக்கிட்டாத்தான் சிக்கல். தெரியலேன்னா மத ரீதியான பிரச்சினைகளும் வராது. அதுக்கப்புறம் அவர் அதை அந்த ஃபாதர்கிட்ட சொல்லவும் மாட்டாரு."

அன்று இரவு ராகவனது வீட்டில் லிஸியைக் காப்பாற்றும் பொருட்டு ஒரு ஹோமம் செய்யத் தீர்மானித்தார்கள்.

**மா**லை நேரமானதும் லிஸி, பர்னாண்டஸின் வீட்டை நோக்கிப் புறப்பட்டாள். லிஸிக்குத் தெரியாமல் ரவீந்திரனும் அவளைப் பின்தொடர்ந்தான். அவனுடன் சங்குவாரியரும் இருந்தார். வாரியார் மிகவும் தொலைவில் அவர்களைப் பின்தொடர்ந்தார்.

கல்லறையை நெருங்கியதும் லிஸி சட்டென்று நின்றாள்.

அந்தப் பிரதேசம் ஜன நடமாட்டம் இன்றி இருந்தது. கல்லறையை ஒட்டிப் புதர்கள் கண்டபடி வளர்ந்து சாய்ந்திருந்தன. பர்னாண்டஸின் வீட்டுக்குப் போகும் வழியிலும் அவை தாறுமாறாகப் பரவிக் கிடந்தன.

வடக்குத் திசையிலிருந்த சுடுகாட்டை அவள் பார்த்தாள்.

அங்கு உயரத்தில் புகை எழும்பிக் கொண்டிருந்தது. பிணத்தைச் சிதையில் வைத்து எரிக்கிறார்கள் என்று தோன்றியது.

அங்கு வருவது அவளுக்கு மனசுக்குப் பிடித்த காரியமே அல்ல. அவள் அப்பா வற்புறுத்தியதால்தான் புறப்பட்டாள்.

வழியில் சவக்குழி தோண்டும் ஔசேப்பு நின்றிருந்தான். அவன் தன் சிவப்புக் கண்களை உருட்டி அவளைப் பார்த்தான்.

"குழந்தை தனியாவா போறே. அந்தப்பக்கமெல்லாம் போகாதே!" ஔசேப் தடுத்தான்.

"போனா என்ன?" - லிஸி கேட்டாள்.

"நான் சொன்னதா சொல்லாதே! உன்னோட நன்மைக்குத்தாம்மா சொல்றேன்."

"உங்கப்பாவுக்கு அவரைப் பத்தித் தெரியாததால் சொல்லி விட்டிருக்காரும்மா!"

லிஸி, என்ன செய்வது என்று தெரியாமல் தவித்தபடி நின்றாள்.

ஔசேப், லிஸியுடன் பேசிக் கொண்டிருப்பதை பர்னாண்டஸ் கவனித்தான். அவன் மதியத்திலிருந்தே அவளது வரவை ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருந்தான்.

ஔசேப்புடன் பேசிய லிஸி தனது இருப்பிடத்தை நோக்கி வருவதை பர்னாண்டஸ் கவனித்தான். மேற்குப் புறமாகத் திரும்பிப் பார்த்தான். சூரியன் சிவந்த ஒரு தட்டு மாதிரி தென்னை மரங்களின் மேற்பகுதியில் தெரிந்தான்.

தன்னைநோக்கி நெருங்கும் இரையை அவன் ஆவலுடனும், உணர்ச்சி மிகுந்தும் கவனித்தான். அவள் அவனது அறைக்குள் நுழைந்த பிறகு தான் மனோ சக்தியைப் பயன்படுத்தி அவளைக் கீழ்ப்படியச் செய்யவும், தனது நோக்கத்திற்கு இணங்கும்படி கட்டளையிடவும் வேண்டு

மென்று நிதானமாகத் திட்டமிட்டான்.

ஒரு தடவை அவளுடன் தொடர்பு கொண்டு விட்டால், அதன் பிறகு அவள் அந்த விஷயத்தை வெளியே சொல்ல மாட்டாள் என்று பர்னாண்டஸ் எண்ணினான்.

டைனிங் டேபிளிலிருந்த சிலுவையிட்ட கிளாஸை, பர்னாண்டஸ் சட்டென்று மறைத்ததை அவள் நினைவு கூர்ந்தாள். ஆனால், அதை ஒருவிதச் சந்தேகத்துடன் கவனித்தாள்.

யதேச்சையாக அவள் கண்கள் பர்னாண்டஸின் அறையைச் சுற்றிப் பார்த்தன. அந்த அறையில் எங்குமே ஒரு சிலுவை அடையாளம் கூட இல்லை. இதுவரை அவள் இதைக் கவனிக்கவே இல்லை!

முன்பு சர்ச்சாக இருந்த அந்த இடத்தில் பிரார்த்தனை மேடையில் பொருத்தப்பட்டிருந்த சிலுவை அடையாளம் கூட அங்கிருந்து அகற்றப்பட்டிருந்தது. சுவரை ஒட்டியபடி இருந்த பெரிய சிலுவை வடிவம் அது.

அவள் மனம் ஒரு கணம் பதறியது.

‘இந்த ஃபாதர் சிலுவையுடன் தொடர்பு இல்லாமல் இருப்பது ஏன்?’

அந்த அறைக்குள் லிஸி நுழைந்தது முதல் அவளையே கவனித்துக் கொண்டிருந்தான் பர்னாண்டஸ். அவள் மனத்தை வசப்படுத்த அவன் முயன்று கொண்டிருந்தான்.

“லிஸி!” - அவன் அழைத்தான்

“என்னங்க ஃபாதர்?”

“என்ன ஒரு மாதிரி இருக்கிறே?”

“பயமா இருக்கு ஃபாதர்!”

“பிரார்த்தனை செய்து உனது பயத்தைப் போக்குறதுக்குத்

தானே இங்க வரவழைச்சிருக்கிறேன். ஒரு விஷயத்தை ஞாபகம் வெச்சுக்கோ. நான் பிரார்த்தனை செய்யும்போது உன் உடம்பில் உலோகத்தாலான பொருள் எதுவுமே இருக்கக் கூடாது. மோதிரம். செயின் கம்மல்... இப்படி எதுவும் இருக்கக் கூடாது!"

அவள் மோதிரத்தை விரலிலிருந்து கழற்றி வைத்தாள்.

"இன்னும் உன் உடம்பில் இது போல் வேறு என்ன இருக்கிறது?"

"சிலுவை மாலை மட்டும்தான் ஃபாதர்!"

"அதையும் கழற்றிடணும்."

"பாதர்! கர்த்தர் கிட்டத்தானே பிரார்த்திக்கப் போறோம். சிலுவையும் வேண்டாம்னு சொல்றீங்களே?"

"உன் உடம்பில் குடியிருக்கும் பிசாசை விரட்ட வேண்டுமென்றால், அதை விடப் பெரிய பிசாசைக் கொண்டுதான் அதைச் செய்ய வேண்டும். சூரியன் முழுவதுமாக மறைந்து விட்டால். இந்த உலகத்திலேயே மிகப்பெரிய பிசாசை நான் உனக்குக் காட்டுகிறேன். பிரேதஆத்மாக்கள் பற்றி சமீப காலத்தில் நீ பேப்பர்ல படிச்சிருக்கிறயில்லையா? அப்படிப்பட்டவர்களை நான் உனக்கு நேரிலேயே காட்டுகிறேன். நான் சொல்கிறபடி செய்!"

லிஸியின் மனம் துணுக்குற்றது.

கழுத்தில் கிடந்த சிலுவையிலுள்ள செயினை அவள் மெதுவாகக் கழற்றினாள். ஆனால், அது அவளது பிளவுஸின் பட்டனில் சிக்கி அறுந்து, 'பட்டென்று' தரையில் விழுந்தது!

# 16

“அதைத் தொடாதே! விழுந்தது முதலில் என்னவென்று கவனி. அதைத் தொட்டு விட்டால், அத்துடன் உனது வாழ்க்கையே தொலைந்துவிடும்!” - கையிலிருந்து விழுந்த சிலுவை கோத்த செயினை எடுப்பதற்காக அவள் குனிந்த போது பர்னாண்டஸ் கட்டளையிடும் குரலில் கூறினான்.

அந்த செயின் அவள் கழுத்திலிருந்து நழுவிய அந்த விநாடி நேரத்துக்குள், அவன் மனம் அவள் மனத்தைக் கட்டுப்படுத்தத் தொடங்கியது. மிகக்குறுகிய நேரத்துக்குள்ளேயே லிஸியின் மனத்தை அவன் வசப்படுத்தி விட்டிருந்தான். அந்த நிலையில் அவள் கீழ்ப்புறம் பார்த்த போது, சிலுவை கோத்த செயினுக்குப் பதிலாக ஒரு கருநாகம் படமெடுத்தபடி நின்று கொண்டிருந்தது.

அவள் மனம், அவனது மனோவசியத்தில் கட்டுண்டு கிடந்ததால், அவளால் கடவுளை உதவிக்கு அழைக்கவும் முடியவில்லை. அந்தப் பெயரை உச்சரிக்கக் கூட அவள் மறந்து போனாள்!

கீழே விழுந்து கிடந்த அந்த செயினைப் பார்க்காமல், அவள் கண்களைப் பார்த்தபடியே அவன் பேச்சைத் தொடர்ந்தான்:

“அதோ... அங்கே இருக்கிற பிரம்பால் அதை எடுத்து வெளியே எறிந்து விடு!”

“அது என்னைக் கொத்திவிட்டால்...?” - அவள் பயத்துடன் கேட்டாள்.

“அது ஒரு மந்திரப்பிரம்பு. அதனால் தொட்டால் விபரீதமாக எதுவும் நடக்காது.”

அவன் சொன்னபடியே செய்தாள். செயின் அந்த இடத்திலிருந்து மறைந்ததும், பர்னாண்டஸின் சக்தி முன்னைவிட வலுவடைந்தது.

சூரியன் மறைந்தது.

பைசாசிகமான சக்தி உள்ளவர்களுக்கு சூரியன் மறைந்து விட்டால், அவர்களது சக்தி பல மடங்காகப் பெருகிவிடுமாம். இதற்கு முன்பெல்லாம் பர்னாண்டஸ், லூஸிஃபரை இரவு பன்னிரண்டு மணி வாக்கில்தான் பார்க்க முடிந்தது. ஆனால், சமீப காலமாக அவனிடம் பகல் நேரத்திலேயே கூட லூஸிபரின் சக்தி செயல்பட்டது. மாலை நேரம் தாண்டிவிட்டால், அவன் முழுமையான ஒரு பிசாசாகவே மாறிவிடுவான்.

விளக்கு ஸ்டாண்டின் மீது மிருகக் கொழுப்பால் செய்த திரியை ஏற்றினான். ஒளியுடன் புகையும் அதிலிருந்து எழுந்தன. அது எரிந்தபோது, ஒரு விதமான நெடி அந்த இடத்தில் பரவவும் செய்தது.

பர்னாண்டஸ் மேலும் அதிக சக்தி பெறுவதற்காகச் சிவப்பு அங்கியை எடுத்து அணிந்து கொண்டான். அந்த வேடத்தில் அவனைப் பார்த்த லிஸி பயந்து நடங்கினாள்.

ஒரு விதமான பளபளப்பு கொண்ட சிவப்பு உடை அது. பர்னாண்டஸ் மெதுவாக அவளை நெருங்கினான். அவள் தோளில் கைவைத்தபடி, அவளைத் தன் பக்கமாகத் திருப்பி இழுத்தான்.

“தொடாதே அவளை!”

திடுமென்று வலுவான ஒரு குரல் எங்கிருந்தோ கேட்டது.

பர்னாண்டஸ் திரும்பிப் பார்த்தபோது, ரவீந்திரன் அந்த அறைக்குள் குதித்தான்.

வந்தவன் லிஸியை, பர்னாண்டஸிடமிருந்து விலக்கி

நிறுத்தினான்.

"துரோகி... நீ என்ன செய்யப் பார்த்தாய்? இவ்வளவு நாளும் நான் இதுக்காகத்தான் காத்திருந்தேன். ஓகோ... நீதான் இதுக்கெல்லாம் மூலகாரணமா?" - மிகுந்த கேலித்தொனியில் ரவீந்திரன் பேசியும் கூட, பர்னாண்டஸிடம் எந்த விதமான மாற்றமோ, அசைவோ தென்படவில்லை.

ரவீந்திரனை நோக்கி நடந்தான் அவன்.

பர்னாண்டஸுடன் மோதுவதற்குத் தயாராக இருந்தான் ரவீந்திரன். சட்டென்று பர்னாண்டஸ் தன் வலக்கை முஷ்டியால் ரவீந்திரனின் நெற்றியைத் தாக்கினான்.

ஒரு பெரிய வெடிகுண்டு உடம்பின் மீது வந்து விழுந்தது போல் ரவீந்திரன் அந்தஅறையிலிருந்து வீசியெறியப்பட்டான். இருப்பினும், சண்டை முறை மற்றும் உடற்பயிற்சிகளில் தேறியிருந்த ரவீந்திரன், துள்ளிக்குதித்து பர்னாண்டஸை நோக்கிப் பாய்ந்தான்.

இம்முறை ஒரு சிறுகுழந்தையை எடுத்து எறியும் லாகவத்துடன் பர்னாண்டஸ் அவனைத் தூக்கி எறிந்தான்.

ரவீந்திரன் வியப்படைந்தான். 'ஃபாதர் பிரான்சிஸுக்கு இந்த அளவுக்கு வலுவுள்ளதா?'

"லிஸி... உன்னை இப்படி வா என்று சொன்னேன் இல்லையா? இந்த ஆள் ஃபாதரல்ல, பிசாசு. உன்னைக் காப்பற்றத்தான் நான் வந்திருக்கிறேன்."

ரவீந்திரனின் குரலைக் கேட்ட பிறகும் கூட அவள் அசையாமல் ஒரு பொம்மை மாதிரி அங்கேயே நின்று கொண்டிருந்தாள்.

ரவீந்திரன் ஒரு விநாடி யோசித்தான்: 'இவளை எப்படிக் காப்பாற்றுவது?'

ஐந்து பேர் ஒன்றாகச் சேர்ந்து மோதினாலும்

தனியாளாக நின்று சண்டை போட்டு வெற்றி பெறக் கூடியவன் ரவீந்திரன். ஆனால், இங்கு ஒரு மனிதனுக்கு முன்னால் அவனால் நிற்க முடியவில்லை. 'நாம் நினைத்த படி இல்லை. இந்த ஆளிடம் அமானுஷ்யமான ஏதோவொரு சக்தி உள்ளது. எனவே, இந்த நிலையில் லிஸியை எப்படிக் காப்பாற்றுவது?'

ஒரு விநாடி குழம்பினான்.

திடுமென்று ஒரு முடிவுக்கு வந்தவனாக ஒரு பெரிய கல்லை எடுத்து, பர்னாண்டஸை நோக்கி எறிந்தான்.

பர்னாண்டஸ் அதை வெகு சுலபமாகக் கையால் தடுத்துக் கீழே தள்ளியவாறு ரவீந்திரனை நெருங்கினான்.

"மரியாதையாக இங்கிருந்து போய்விடு. இல்லாவிட்டால், உன்னைச்சுடுகாட்டிற்குள் வீசியெறிந்து எரித்து விடுவேன். இதை நீ யாரிடமும் வாய் திறக்காமல் இருந்தால் நான் உன்னைக் கொல்ல மாட்டேன்!"

லிஸி பயந்து நடுங்கிய படி நின்று கொண்டிருந்தாள். ஆனால், அங்கிருந்த ஓடித் தப்பிக்க வேண்டும் என்று நினைத்த போதிலும் அவளால் அது முடியவில்லை. அவளை யாரோ கட்டிப் போட்டாற் போலிருந்தது.

தன்னுடன் மாந்திரீகனான சங்கு வாரியரும் வந்திருப்பதால் ரவீந்திரன் பர்னாண்டஸின் மிரட்டலுக்குப் பணியத் தயாராக இல்லை.

ஆஜானுபாகுவான வாரியர் வெற்றிலை பாக்கைப் போட்டுக் குதப்பியபடி கழுத்தில் கிடந்த ருத்ராக்ஷ மாலையை வருடிக் கொண்டிருந்தார்.

பர்னாண்டஸின் ஒவ்வோர் அசைவையும் அவர் கவனித்துக் கொண்டுதான் இருந்தார்.

இருப்பினும், எடுத்த எடுப்பிலேயே பர்னாண்டஸுடன்

மோத வாரியர் விரும்பவில்லை. காரணம் என்ன வென்றால், இருவரும் இரண்டு விதமான மந்திரப் பிரயோகம் செய்பவர்கள். அதில் எந்த ஒன்று ஜெயிக்கும் என்பது உறுதியாகக் கூற முடியாத விஷயம்.

ரவீந்திரனைத் தாக்கிய பர்னாண்டஸின் உடல் வலுவும் சாதாரணமானதல்ல. இருப்பினும் மூன்று முறை பர்னாண்டஸ், ரவீந்திரனைத் தாக்கியதையும் கவனித்தார். இனிமேலும் சும்மா இருந்தால், ரவீந்திரனின் நிலை ஆபத்தாகி விடலாம்.

அதே நேரம் பர்னாண்டஸ், ரவீந்திரனைத் தாக்குவதற்காக மீண்டும் நெருங்கினான்.

முதலில் ரவீந்திரனை அங்கிருந்து பயப்படுத்தி அனுப்பி விட்டு, அவன் சுடுகாட்டைத்தாண்டிய பிறகு தனது பைசாசிக சக்தியைப் பயன்படுத்தி அவனைக் கொல்ல வேண்டுமென்பது பர்னாண்டஸின் நோக்கம்.

"இங்கிருந்து வெளியேறத்தானே உன்னிடம் சொன்னேன். உன்னைத் தூக்கி வீசியெறிந்தால் நீ சுடுகாட்டின் நடுவில் போய் விழுவாய், தெரியுமா உனக்கு?" - சட்டென்று பாய்ந்த பர்னாண்டஸ், ரவீந்திரனைப் பிடிக்க முயன்றான். ஆனால், பர்னாண்டஸ் சட்டென்று பின் வாங்கினான்.

ரவீந்திரன் வந்தபோது இருந்ததைவிட, இப்போது சற்று உயரமாகி விட்டிருந்தான். அதாவது பர்னாண்டஸை விட இரண்டு மடங்கு உயரமாகியிருந்தான். அதற்கேற்றபடி உடல் பருமனும் அதிகரித்திருந்தது.

பர்னாண்டஸ் வியப்படைந்தவனாக பின்புறமாக நகர்ந்தான். அவன் முகத்தில் தோல்வியடைந்து விட்டோம் என்கிற பயமும் தோன்றியது.

ஆனால், ரவீந்திரன் நின்ற வாக்கிலேயே நின்றிருந்தான் - ஒரு பாறை மாதிரி!

ஃபாதர், ரவீந்திரனைப் பார்த்தபடி பின்வாங்குவதை லிஸியும் கவனித்தாள். பர்னாண்டஸின் மனத்தில் பயம்கூடு கட்டத் தொடங்கிய உடனேயே லிஸியும், அவனது வசியத்திலிருந்து விடுபட்டாள். அவள் கண்களுக்கு சிவப்பு அங்கி அணிந்த ஃபாதர் தெரிந்தார். லிஸி ஒரு விநாடி தனது சுற்றுப்புறத்தை உணர்ந்து வெளிப்புறமாக ஓடத் தொடங்கினாள். அவள் ஓடுவதைப் பார்த்த ரவீந்திரனும் அவளைத் தொடர்ந்து ஓடினான்.

ஆனால், பர்னாண்டஸின் கண்களுக்கு அப்போதும் ரவீந்திரன் அங்கேயே நின்று கொண்டிருப்பதாகத் தோன்றியது. முகத்தைத் திருப்பிப் பார்த்தபோது, லிஸியைக் காணவில்லை. லிஸியைத் துரத்தவோ தேடிச்செல்லவோ அவனால் முடியவில்லை. பறந்து வந்த வண்ணத்துப் பூச்சியொன்று எரிந்து கொண்டிருந்த விளக்கை அணைத்தது. சட்டென்று அறை முழுவதும் இருள் நிறைந்தது.

பர்னாண்டஸ் உடனே விளக்கைக் கொளுத்தினான். ஆனால், அறைக்குள் அப்போது வேறு யாரும் இல்லை.

தனது முதல் தோல்வி! பர்னாண்டஸால் இதைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அத்துடன் ரவீந்திரனும் அவனைச் சார்ந்தவர்களும் தன்னை வேட்டையாடிக் கொண்டிருப்பதும் அவனுள் பீதியை ஏற்படுத்தியது.

நள்ளிரவு ஆவது வரை பர்னாண்டஸ் காத்திருந்தான். சன்னமான ஒரு சத்தம் கேட்டால் கூட அவன் பயப்பட்டான்.

அசாதாரணமான வடிவத்தில் ரவீந்திரனைப் பார்த்தவுடன், அவனுக்குப் பின்னால் ஏதோ ஒரு மாந்திரீக சக்தி வேலை செய்கிறது என்பது அவனுக்குப் புரிந்தது.

தன்னிடமுள்ளது பைசாசிக சக்தி. அத்துடன் தொடர்பு கொண்ட இதர பல வகையான சக்திகளும் தனக்கு உண்டு. இறந்துபோன துர் ஆத்மாக்களைத் தன்னால் எழுப்ப முடிகிறது.

தன் மனோநிலைக்கு ஏற்றபடி மற்ற மனிதர்களை வசியப் படுத்தி இயங்க வைக்க முடிகிறது. ஆனால், மாந்திரீகம் இந்த இரண்டையும் தாண்டிய ஒன்று.

பர்னாண்டஸ், தனது புத்தகத்தை எடுத்துப் புரட்டினான்.

அதில் சிலவற்றுக்கு விளக்கம் இருந்தது. அவன் லூஸிஃபரை அழைத்தான்.

தெளிவற்ற வடிவத்துடன் அது வெளிப்பட்டது.

“நீ தோல்வியடைந்து விட்டாய் இல்லையா?”

“ஆமாம்! முதல் தோல்வி!”

“வெற்றிகளுடன் தோல்விகளும் இருக்கத்தான் செய்யும். எப்படி இருந்தாலும் உன்னை நான் கை விடப்போவதில்லை. நீதான் உன்னை, எனக்காக அர்ப்பணித்திருக்கிறாயே!”

“பிறகு எப்படி இந்தத்தோல்வி?”

“யாரோ எனக்கு எதிராகச் செயல்பட ஆரம்பித்திருக்கிறார்கள்.”

“ரவீந்திரனுக்குப் பின்னணியில் உள்ள சக்தி எதுவென்று எனக்கு இன்னும் சரியாகத் தெரியவில்லை!” - சாத்தான் கூறியது.

“அவன் எப்படி அவ்வளவு விரைவில் பிரமாண்டமாக வளர்ந்து நின்றான்?”

“அதை நினைத்து நீ வீணாகக் கவலைப்பட வேண்டியதில்லை. அதற்குக் காரணம் யாரென்று கண்டுபிடித்து அவர்களை அழிப்பதுதான் தந்திரக்காரனது வேலை. இந்த விஷயத்தில் நீ ஒரு குள்ளநரியைப் போலச் செயல்பட வேண்டும். முதலில் யாரெல்லாம் உனக்கு எதிராகச் செயல் படுகிறார்கள் என்று கண்டுபிடி. அதை விட்டுவிட்டு நீ சுதந்திரமாக இருக்க முயல்வது தொல்லையானது. காரணமானவர்களைக் கண்டுபிடித்தால் அவர்களை அழிக்க

உனக்கு நான் துணையாக இருப்பேன்!"

"எனது ரகசியங்களைத் தெரிந்து கொண்ட நிலையில் அவர்கள், இனி என்னை விட்டு வைப்பார்களா என்ன?"

"இங்குதான் நீ தவறு செய்கிறாய். உன்னை உடனே தாக்குவதற்கு அவர்கள் முயல மாட்டார்கள். மிகவும் ரகசியமாக உன்னைக் கண்காணிப்பார்கள். நேரடியாக உன்னுடன் மோத எந்த விதமான தடையமும் கிடையாதே?"

பர்னாண்டஸ் கவனத்துடன் கேட்டுக் கொண்டிருந்தான். பிசாசு தொடர்ந்து கூறியது:

"உனக்காக அவர்கள் வலை விரிக்கும் போது அவர்கள் ஒவ்வொருவரையும் நீ அந்த வலைக்குள் விழ வைக்க வேண்டும்."

"நான் முதலில் எங்கிருந்து தொடங்குவது?"

"அந்த இளைஞனிலிருந்து ஆரம்பி..."

"அது எப்படி முடியும்? அவன் இனிமேல் இங்கு வருவானா?"

"அவர்கள் இனிமேல் இரவு நேரத்தில்தான் உனக்கு எதிராகச் செயல்படுவார்கள். இப்போது சர்ச்சிலிருக்கும் ஃபாதர் வின்சென்ட்டும், அந்த இளைஞனும் மிகவும் நெருக்கமாக உள்ளனர். அவர்கள் பெரும்பாலும் இரவு நேரத்தில் கல்லறைக்கு வருகிறார்கள். அந்த இடத்தில் யாராலும் உன்னை வெற்றி கொள்ள முடியாது!"

"அவனுடன் ஃபாதர் வின்சென்ட்டும் சேர்ந்து வந்தால்?"

"வருகிற வெள்ளிக்கிழமையன்று அவர்கள் இருவரும் கல்லறைக்கு வரத் தீர்மானித்திருக்கிறார்கள். அன்னம்மா ஜேக்கப்பைப் பிடிப்பது அவர்களது நோக்கம். ரவீந்திரன் முதலில் வருவான். தொடர்ந்து சற்றுத் தூரத்தில் ஃபாதர்

வருவார். ஃபாதர் மட்டும் அவனுடன் வராமலிருந்தால் நீ அந்த இளைஞனைக் கல்லறைக்குள் வீசியெறிந்து அழித்து விட முடியும்!"

அதைக் கேட்ட பர்னாண்டஸ் மகிழ்ந்தான்.

**சா**த்தான் சொன்னபடியே எல்லாமும் நடந்தன.

சங்குவாரியரின் அபிப்பிராயத்தை ஒட்டியே ரவீந்திரனும் லிஸியும் நடந்ததையெல்லாம் யாரிடமும் சொல்லாமல் ரகசியமாக வைத்துக் கொண்டனர். லிஸி என்ன சொன்னாலும் யாரும் அதை நம்பப் போவதில்லை என்றும், அவளிடமே ஏதோ சிக்கல் இருப்பதாகவுமே நினைப்பார்கள் என்றும் எடுத்துக் கூறியிருந்தனர்.

இரவு நேரத்தில் லிஸி எதற்காக பிரான்சிஸ் ஃபாதரைத் தேடிப் போனாள் என்று மற்றவர்கள் கேள்வி கேட்பார்கள் என்றும் அப்பாவும் மகளுமாகச் சேர்ந்து அவரை சிக்க வைக்க முயன்றனர் என்றும்தான் குற்றம் சாட்டுவார்கள். அது மட்டுமல்ல, ஃபாதர் ஏற்கனவே ஒரு லட்சாதிபதியும் கூட.

சங்கு வாரியரின் ஆலோசனைப்படி எல்லாமே ரகசியமாக வைக்கப்பட்டன. எப்படி இருந்தாலும் இப்போதைய நிலையில் பிரான்சிஸுக்கு எதிராகத் தடயம் எதுவும் இல்லாததால் எதைச் சொன்னாலும் யாரும் நம்பப் போவதில்லை.

வெள்ளிக்கிழமையன்று ஃபாதர் வின்சென்ட் சொன்னபடி ரவீந்திரன் வழக்கம் போல் கல்லறைப் பகுதியில் - இருட்டான ஓர் இடத்தில் காத்திருந்தான். மணி பன்னிரண்டு அடித்தது.

ஏதோ இழுபடும் சத்தம் கேட்டு ரவீந்திரன் திரும்பிய போது... ஒரு கல்லறையை மூடியிருந்த ஸ்லாப் தானாக நகர்ந்தது. அவன் மூச்சைப் பிடித்தபடி காத்திருந்தான்.

# 17

ஆள் அரவமற்ற இடத்தில் அப்படியொரு சத்தம் கேட்டபோது ரவீந்திரனின் மனத்தில் மின்னல் வெட்டியது போல் இருந்தது.

இருப்பினும், சங்கு வாரியர் தந்திருந்த தாயத்தை அணிந்திருந்ததால், எப்படிப்பட்ட பிசாசையும் எதிரிடுவதற்குள்ள தைரியம் அவனிடமிருந்தது.

பூத, பிரேதப் பிசாசுகளிடமிருந்து காப்பாற்றும் வல்லமை பொருந்தியது அந்த சூலினித் தாயத்து என்பதை சங்கு வாரியர், ரவீந்திரனிடம் விளக்கிச் சொல்லியிருந்தார்.

சத்தம் வந்த திசை நோக்கித் திரும்பினான் அவன். மங்கலான வெளிச்சத்தில் ஒரு கல்லறையின் மீதிருந்த ஸ்லாப் மெதுவாக நகர்வதை ரவீந்திரன் கவனித்தான்.

மூச்சை அடக்கியபடி அவன் அதைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

அமைதி அங்கு தளம் அமைத்திருந்தது. எங்கும் எந்த விதமான அசைவும் இல்லை. கேட் பக்கம் பார்த்தபோது , ஃபாதரையும் காணவில்லை.

‘அப்படியானால், வேறு யார் ஸ்லாப்பை நீக்கியிருக்கக் கூடும் ?’ ரவீந்திரன் கண்களை இமைக்காமல் பார்த்தான்.

அதற்குள் ஸ்லாப் முக்கால் பகுதி நகர்ந்துவிட்டிருந்தது. அதன் உட்புற இருட்டு அவன் கண்களுக்குத் தெளிவாகத் தெரியவும் செய்தது.

சட்டென்று அதற்குள்ளிருந்து ஒரு தலை வெளியே வந்தது.

ரவீந்திரன் வியப்பு நிறைந்த விழிகளுடன் பார்த்துக் கொண்டே இருக்க ... அன்னம்மா ஜேக்கப் அந்தக்

கல்லறையிலிருந்து மேலெழும்பினாள்.

அவன் கண்களை அவனாலேயே நம்ப முடியவில்லை. 'ஒரு வேளை கனவோ இது?' ஒரு கணம் ரவீந்திரன் தடுமாறினாலும் சே ... இது கனவல்ல உண்மைதான் என்பதை உணர்ந்தான்.

வெளியே வந்தவள், சற்று நேரம் கல்லறையின் மேற்புறம் அமர்ந்தாள். அவள் யாரையோ எதிர்பார்த்துக் காத்திருப்பது போலிருந்தது.

ஃபாதர் வின்சென்ட் வந்து விடுவார் என்ற எதிர் பார்ப்புடன் ரவீந்திரன் காத்திருந்தான். ஆனால், குறிப்பிட்ட நேரத்துக்குப் பிறகும் அவர் வராமல் போகவே அவனுள் சந்தேகம் கிளைக்கத் தொடங்கியது. ஒரு வேளை அவருக்கு ஏதாவது நேர்ந்திருக்குமோ?

ரவீந்திரன் இந்தச் சந்தர்ப்பத்தில் அங்கிருந்து நகரக் கூட முடியாத நிலையில் இருந்தான். எழுந்து சற்றுக் காலாற நடக்கலாம் என்று நினைத்தால், அவனை எதிரிலேயே இருக்கும் பிரேதம் பார்த்து விடக்கூடும்.

பார்த்தால் தன்னைப் பிடித்து விடுமோ?

அப்படியே பிடித்தால் கூட சங்கு வாரியரின் மந்திரத்தாயத்து இருப்பதால், சுலபமாகத் தப்பித்து விடலாம். இருப்பினும், அதன் சக்தியைப் பற்றித் தெரிந்து கொள்ள இதுவரை எந்த வாய்ப்பும் கிடைக்கவில்லை.

'அதோ ஃபாதர் வருகிறார்!' ரவீந்திரனின் உள்மனம் கூறியது.

கேட்டைக் கடந்து யாரோ நடந்து வருவதை அவன் பார்த்தான்.

'ஃபாதர் வின்சென்ட் இந்தக் காட்சியைக் காண நேர்ந்தால் என்ன நினைப்பார்?' என்று ஒரு விநாடி யோசித்தான். ஆனால், நடந்து வந்தது அவர் அல்ல.

அது சிவப்பு அங்கி அணிந்த பர்னாண்டஸ்!

'இங்கேயுமா இந்த ஃபாதர்!' - ரவீந்திரன் மீண்டும் வியப்படைந்தான். அதே நேரம் தன்னை அவர் கவனித்து விடுவாரோ என்ற பயமும் தோன்றியது.

பர்னாண்டஸ் அருகில் வந்தபோது, அன்னம்மா எழுந்து நின்றாள்.

"உங்களுக்காகத்தான் காத்திருக்கிறேன்".

"எதற்காக நீயாக மேலெழும்பி வந்தாய்? கூப்பிட்டால் மட்டுமே எழுந்திருக்க வேண்டுமென்று நான் உன்னை எச்சரிக்கவில்லையா?" - பர்னாண்டஸின் குரலில் கோபம் தெரிந்தது.

"உண்மைதான். ஆனால், எனக்குப் புதுப்புது அனுபவங்கள் ஏற்படும்போது நான் எப்படி இதற்குள் படுத்துக் கிடக்க முடியும்?" - அவள் பர்னாண்டஸின் முன் வெட்கம் வந்தவளாக நடித்ததை ரவீந்திரன் கவனிக்கத் தவறவில்லை.

'என்ன ஆச்சரியம்!' - ரவீந்திரனின் வியப்புக்கு எல்லையே இல்லாதது போல் தோன்றியது.

பிரேதாத்மாக்கள் பற்றியும் பிரேதங்கள் பற்றியும் அவனும் படித்திருந்தான். பலரது அனுபவங்களை, அவர்கள் உணர்ந்தபடியே பேப்பர்களில் படித்தபோது ஒரு வேளை அதெல்லாம் கற்பனையாக இருக்குமோ என்றுகூட நினைத்தது, அவனது முன்னேற்றமான சிந்தனைகள்.

ஆனால், இதோ ... இங்கே கண்ணுக்கு முன்னால் ... அதெல்லாம் உண்மைதான் என்று நிரூபணமாகிக் கொண்டிருக்கிறது.

"நீ சதாசர்வ காலமும் இப்படி எழுந்து உலாவ ஆரம்பித்தால், பிறகு ஒரு போதும் கல்லறையிலிருந்து எழுந்து கொள்ள முடியாத நிலை ஏற்படலாம் விரைவில்!"- பர்னாண்டஸ் கூறினான்.

"நீங்கள் சொல்வது எனக்குப் புரியவில்லை!"

"உனக்குப் புரியாத விஷயங்கள் இங்கே எவ்வளவோ நடந்து கொண்டிருக்கிறது. இப்போது ஏராளமானவர்கள் நம்மைச் சந்தேகப்படுகிறார்கள். அவர்களை இல்லாமல் செய்வது வரை நீ ஓய்வெடுக்க வேண்டும்".

"என்னால் முடியவில்லையே?"

"இப்படிச் சொன்னால் எப்படி? நம்மை எதிர்ப்பவர்களை நாம் தீர்த்துக் கட்டாவிட்டால், அவர்கள் நம்மை என்றென்றைக்குமாகத் தூங்க வைத்து விடுவார்கள். உனது உடம்பு இவ்வளவு நாளும் மண்ணோடு மண்ணாக மட்கிப் போகாதிருந்தது உனது பிரத்தியேகமான சக்தியால் தான், உனது அந்தச் சக்தியை யாராவது கண்டுபிடித்து இல்லாமல் செய்துவிட்டால், நீ ஜீரணமாகி விடுவாய்!"

"நான் உங்களை மிகவும் விரும்புகிறேன்!" பர்னாண்டஸின் வார்த்தைகளைக் கவனிக்காதவளாக, அவள் உணர்ச்சிப் பெருக்குடன் பேசினாள்.

"இப்படிப்பட்ட உணர்ச்சிகள் உனக்கு நல்லதல்ல. நம்மைப் பொறுத்தவரை அன்பு, விருப்பம் என்பதெல்லாம் வெகு தூரமானவை!"

"அப்படியானால், நீங்கள் எனது ஆசையை நிறைவேற்றுங்கள்!" - அவள் பர்னாண்டஸை நெருங்கி நின்றாள்.

"நான் இன்றைக்கு என் பகைவர்களைத் தேடி வந்திருக்கிறேன். இந்தச் சந்தர்ப்பத்தில் நாம் அப்படியோர் உறவு நிலையில் இருந்தால், நிலைமை மேலும் சிக்கலாகி விடும்!"

"அதையெல்லாம் பிறகு பார்த்துக் கொள்ளலாம். இப்போது இங்கு யாரும் இல்லை!" அவள் பர்னாண்டஸின் மார்பில் தன் கைகளைப் பதித்தபடி பேசினாள்.

பர்னாண்டஸ் அவள் தோளில் கை வைத்தான். நிலவொளியில் அன்னம்மா ஜேக்கப்பின் பைசாசிகமான அழகை ரவீந்திரன் கவனித்தான்.

இந்த நல்ல சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு எப்படியாவது அங்கிருந்து நழுவி, ஃபாதர் வின்செண்ட்டை அடைந்து விட வேண்டுமென்று ரவீந்திரன் முடிவு செய்தான்.

ஆனால், சர்ச் கட்டிடத்தில் நிழல் விழுந்துள்ள பகுதியைத் தவிர மற்ற இடங்களில் நிலவொளி பிரகாசமாக இருந்தது. அங்கிருந்து நகர்ந்தால் கூட மற்ற இருவரும் தன்னைக் கவனித்து விடும் அபாயம் உள்ளது. எனவே, அவர்கள் மேற்கொண்டு என்ன செய்கிறார்கள் என்று கவனிப்பதில் ஆர்வம் காட்டினான்.

பர்னாண்டஸ், அன்னம்மா ஜேக்கப்பின் இரவு உடையின் பட்டன்களை அவிழ்த்தான்.

அவள் கல்லறை ஸ்லாபின் மீது படுத்துக் கொண்டாள்.

பர்னாண்டஸ் தனது சிவப்பு அங்கியைக் கழற்றிக் கல்லறையின் அருகிலிருந்த தூண் ஒன்றில் செருகி வைத்த பிறகு கல்லறையின் மீது அமர்ந்தான்.

ரவீந்திரன் இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டான். வடக்குத் திசையில் கவனமாக நகர்ந்தான்.

சர்ச் கட்டிட நிழலை அடைந்து, மதிலைத் தாண்டி... கல்லறை காம்பௌண்டின் வெளியே வந்தான்.

மேற்குப்புறமாகத் திரும்பி சர்ச்சின் முன்புற வழியாக வேக வேகமாக நடந்தான்.

ஃபாதர் வின்சென்ட்டின் அறையில் நல்லவேளையாக விளக்கு எரிந்து கொண்டிருந்தது. வெளிச்சம் ஜன்னல் வழியாக வெளியே வீசியது.

ரவீந்திரன் வாசலை அடைந்தான்.

ஃபாதர், படுத்தபடியே எதையோ வாசித்துக் கொண்டிருந்தார்.

"ஃபாதர்!" - அவன் கூப்பிட்டான்.

"...ம்... யாரது?" - என்றவாறே அவர் தனது இருக்கையிலிருந்து எழுந்தார்.

"நான் தான் ஃபாதர் ரவீந்திரன்."

"கொஞ்ச நேரத்துக்கு முன்னாலே வர மாட்டேன்னு சொல்லிவிட்டு, இப்பத் திடுதிப்புன்னு வந்து நின்னா...?" - ஃபாதர் கேட்டார்.

"நானா? அப்படிச் சொன்னேனா?" - ரவீந்திரன் திகைப்புடன் கேட்டான். அவரைச் சந்தேகத்துடன் ஏறிட்டான்.

"ரவீந்திரா, நீ கொஞ்ச நேரத்துக்கு முன்னால இங்கே வரலையா?"

"இல்லையே ஃபாதர். நான் கல்லறைப் பகுதியில் உங்களுக்காக இவ்வளவு நேரமும் காத்திருந்தேன்."

"அப்படின்னா, யாரோ என்னை ஏமாத்தியிருக்காங்க. யாரோ உன்னை மாதிரியே இங்கே வந்திருந்தாங்க!"

"எனக்கும் என்னமோ சந்தேகமா இருந்ததால்தான் இப்ப வந்திருக்கேன்."

"பாவம் ரொம்பவும் ஏமாந்திருப்பே... கவலைப் பட்டிருக்கிறே!"

"ஃபாதர்! நாம இங்கே இருந்து பேசிக்கிட்டு இருக்கிறதுல எந்த விதமான பிரயோஜனமும் இல்லை. உடனே புறப்படுங்க!"

"இன்னிக்கு இதுக்கு மேல நாம வெளியே போகணுமா? உன்னை மாதிரியே ஒருத்தரை நான் கொஞ்சம் முன்னால பார்த்ததாச் சொல்லலையா? இந்த நிலைமையில் எதிராளி நம்மை விடக் கெட்டிக்காரனாத் தெரியுறான்?"

"இருக்கட்டும் ஃபாதர். நீங்க இப்ப என்கூட வந்தா நான் ஒரு காட்சியைக் காட்டுகிறேன்."

"ஏதாவது விசேஷமா?"

"ஆமாம் ஃபாதர். அங்க பிரான்சிஸ் ஃபாதரும் மற்றோர் அதிசயமான பிறவியும் இருக்காங்க!"

"அதிசயமான பிறவியா?"

"ஆமாம்?"

"யாரது?"

"கல்லறையிலிருந்து எழுந்து வந்த ஓர் உண்மையான பிரேதம்!"

"அது யார்?"

"அன்னம்மா ஜேக்கப்!"

"உண்மையாகவா?" - ஃபாதர் துள்ளியெழுந்தார். விறுவிறுவென்று பிராக்கெட்டிலிருந்து தொப்பியையும், மப்ளரையும் எடுத்தார்.

இருவரும் அங்கிருந்து கிளம்பும்போது இரவு மணி ஒன்று. கடிகாரம் ஒரு முறை ஒலித்தது.

அவர்கள் மேற்குப் புறமாக நடந்தனர்.

"நாம் கேட்டை தாண்டிப் போகக்கூடாது. ஒரு வேளை நம்மை அவர்கள் பார்த்துவிடலாம். கல்லறை மைதானத்தின் வடக்குப்புறமாகச் சென்று, மதிலைத் தாண்டினால், அந்த இடத்தைச் சுலபமாக அடையலாம்..." - ரவீந்திரன்

கூறினான்.

இருவரும் விரைவாக நடந்தனர்.

ரவீந்திரனது யோசனைப்படியே அவர்கள் வடக்குப்புறம் சென்று, யாரோ மதிலைப் பெயர்த்து வைத்திருந்ததால் சுலபமாகத் தாண்டி வந்தனர்.

அவர்கள், ரவீந்திரன் முதலில் மறைந்திருந்த பழைய இடத்தை அடைந்தனர்.

அங்கே ஃபாதர் வின்செண்ட் கண்ட காட்சி, கனவு என்றால்கூட நம்ப முடியாத ஒன்றாக இருந்தது!

ஃபாதர் பிரான்சிஸும் எப்போதோ மரணமடைந்த அன்னம்மா ஜேக்கப்பும் கல்லறை மீது அமர்ந்திருந்தனர். ஃபாதரின் மார்பில் சாய்ந்திருந்த அன்னம்மா, முக்கால் நிர்வாணமாக இருந்தாள். அவர்கள் உடம்பின் நிழல் மட்டுமே சில இடங்களில் அவர்களது உடையாக இருந்தது.

"இனிமேல் தினமும் வருவீர்கள் இல்லையா?" - அவள் கேட்டாள்.

"உறுதியாகச் சொல்ல முடியாது".

"ஏன்?"

"உனக்குத் தெரியாதா? ஆமாம்... நீ வின்செண்ட் ஃபாதரின் சகோதரனை எப்படிக் கொன்றாய்?"

"ஓ... அதுவா? எனக்கு தாகமாக இருந்தது. அதனால் அவன் குரல்வளையைக் கடித்து, ரத்தம் குடித்தேன்".

"உண்மையா? அப்படியென்றால்..." பர்னாண்டஸ் வார்த்தையை முடிக்காமல் நிறுத்தினான். பிறகு அவளது தலை முடியில் விரல்களை நுழைத்துக் கோதினான்.

அப்போதுதான் தன் தம்பி எப்படி இறந்தான் என்ற

ரகசியம் ஃபாதர் வின்செண்ட்டுக்குப் புரிந்தது.

'அவள் ரத்தம் குடித்துக் கொன்றிருக்கிறாள். அப்படியானால் அவள் ஒரு ரத்த ரக்ஷஸாக - ரத்தக் காட்டேரியாக மாறியிருக்கிறாள்!' என்பது இருவருக்கும் புரிந்தது.

இந்த நிலை தொடர்ந்தால், இன்னும் பலருக்கு இது ஆபத்துதான். ஃபாதர் ஒரு முடிவுக்கு வந்தார்.

"அதன் பிறகு நீ யாரிடமாவது உறவு சொண்டிருக்கிறாயா?" - பர்னாண்டஸ் கேட்டான்.

"ஒரு தடவை யாரோ ஒருவனது கட்டிலை நெருங்கினேன். அவன் ஏராளமாகக் குடித்திருந்தான்".

"பிறகு?"

"அவனது சட்டைப் பித்தான்களை ஒவ்வொன்றாகக் கழற்றினேன். சட்டென்று ஏதோ ஒன்று அந்த உடம்பில் மின்னியது. நான் ஒரு கணம் நடுங்கினேன். அது ஒரு தங்கச் சிலுவை. அவ்வளவு தான்! கண் மண் தெரியாமல் ஓடி வந்து விட்டேன்!"

பர்னாண்டஸ் மெதுவாக அன்னம்மாவின் கழுத்தின் மீது தன் வலக் கையை வைத்து அழுத்தினான்.

"என்ன?"- அவள் கேட்டாள்.

"ஒன்றுமில்லை!" - அவன் விரல்கள் அவள் கழுத்தை மீண்டும் அழுத்தி நெரித்தன.

சட்டென்று அன்னம்மா அவன் கைகளைத் தட்டி விலக்கினாள். பிறகு பயமேற்படுத்தும் படியாக வாய்விட்டுச் சிரித்தபடி அவள் கேட்டாள்: "எனக்கு இனி மேல் மரணமில்லை என்று தெரியாதா உங்களுக்கு?"

# 18

"என்ன! என்ன சொன்னாய் நீ?" - அன்னம்மாவிடம் கேட்ட பர்னாண்டஸின் குரலில் பீதி தெளிவாகத் தெரிந்தது.

"எனக்கு மரணமில்லை. நான் மரணமில்லாதவளாக மாறியிருக்கிறேன். இனிமேல் நான் நிலைத்திருக்க எனக்கு மனித ரத்தம் மட்டும் போதும்!" - ஒரு தலைவரைப் போன்ற மிடுக்குடன் அன்னம்மா கூறினாள்.

பர்னாண்டஸ் திடுக்கிட்டான்.

'தான் ஒரு மனிதன். பைசாசிக சக்தி பெற்றுள்ள ஒரு மனிதன். அது தன் உயிரில் கலந்துள்ள ஓர் அம்சம். அதை வைத்துக் கொண்டுதான் தனது செயல்கள் நடைபெறுகின்றன.

ஆனால். அன்னம்மா அப்படியல்ல. அவளது உயிர் என்றோ பிரிந்து விட்டது. அவளிடம் இப்போது இருப்பது பிரேதாத்மாதான். உண்மையைச் சொன்னால், தற்போது தன்னை விட அவளுக்குச் சக்தி அதிகம் என்பது புரிகிறது. ஒரு ரத்த ரக்ஷஸ் என்ற முறையில் பிசாசுகளின் நேரமான சூரிய உதயம் - அஸ்தமனத்துக்கு இடைப்பட்ட நேரத்தில் அவள் தண்ணீர், தீ போன்றவை தவிர வேறு எந்த இடத்திலும் உலாவலாம். அது மட்டுமின்றி, இப்போதைய உடம்பை நூல் போலாக்கி எவ்வளவு சிறிய துவாரத்திலும் அவளால் கடந்து செல்ல முடியும். டிரான்சில்வேனியாவின் டிராகுலா பிரிவு போல காற்றாகவும், பனிமூட்டமாகவும், வௌவாலாகவும், ஓநாயாகவும் அவளால் மாற முடியும். அப்படிப்பட்ட வல்லமைகள் அவளுக்கு உண்டாகியுள்ளன.

எனவே, இப்படிப்பட்ட அன்னம்மாவை அழிக்கா விட்டால் தனது நிலையே ஆபத்தாகிவிடும்!' என்பது பர்னாண்டஸுக்கு விளங்கியது.

ஆனால், அவளை அழிப்பதென்றால் அது சிலுவையால் மட்டுமே முடியும். சிலுவையின் அடிப்பகுதியைக் கூராக்கி அதை அவள் மார்பில் குத்தினால் மட்டுமே அவள் அழிவாள்!

அதைத் தன்னால் செய்யமுடியாது!

சிலுவையைக் காண நேர்ந்தால், தற்போது அவளை விட அதிகமாகப் பயப்படுவது தான்தான். எனவே, அந்த முறை தனக்குச் சரிப்படாது!' பர்னாண்டஸ் குழம்பித் தவித்தான்.

"நீ எல்லா இரவுகளிலும் இப்படி வெளியே வந்து நடமாடக் கூடாது. நம் இருவரையும் சிலர் கண்காணிக்கிறார்கள். ஆனால், இதுவரை உன்னை யாரும் சரியாக அடையாளம் கண்டு கொள்ள வில்லை. தெரிந்து விட்டால், பகல் நேரத்தில் உனது உடம்பை வெளியே எடுத்து அழித்து விடுவார்கள். ஞாபகமிருக்கட்டும்!"

"அது அவ்வளவு சுலபமில்லை. அப்படியே எனது உடம்பை எரித்துவிட்டால்கூட அந்தச்சாம்பலில் ஒரு துளி ரத்தம் விழுந்தால்கூட நான் மறுபடியும் உயிர் பெறுவேன்!"

"அது உனது நினைப்பு. இந்தக் கல்லறையிலிருந்து இனிமேல் நீ ஒரு போதும் எழுந்து வராமல் செய்யவும் உனது உடம்பு அப்படியே அழுகி மண்ணோடு மண்ணாக மட்கச் செய்யவும் கூட மந்திர வித்தைகள் இருக்கின்றன!"

"நான் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு கல்லறையில் மாறி மாறிப் படுத்தால், யாரால் என்னைக் கண்டுபிடிக்க முடியும்?"

"இந்த மாதிரி யோசனைகள் எல்லாம் உனக்கு எங்கிருந்து கிடைக்கின்றது?"

"என்னைக் காப்பாற்றிக் கொள்ளும் வழிகளைப் பற்றி நான் யோசிக்க ஆரம்பித்து விட்டேன்!"

அவளது வார்த்தைகள் பர்னாண்டஸை மேலும் மேலும் திகிலுக்கு ஆட்படுத்திக் கொண்டிருந்தன. அவளை முதன்

முறையாக எழுப்பியதே தான் செய்த மகத்தான மடத்தனம் என்று அவனுக்குப் புரிந்தது.

'மேற்கொண்டு என்ன செய்வது?' என்று யோசித்தான்.

ஃபாதர் வின்சென்ட்டும், ரவீந்திரனும் அவர்களது உரையாடலைக் கவனித்துக் கொண்டிருந்தனர். அவர்களது ஒவ்வொரு வார்த்தையும் இந்த இருவரையும் மேலும் மேலும் பீதிக்குள் ஆழ்த்திக் கொண்டிருந்தன.

அன்னம்மாவின் ஒரு சில வார்த்தைகள் மற்ற இருவரின் இதயத்துடிப்பையே சில நேரம் வேகப்படுத்தவும் செய்தது.

ரெனியின் மரணத்துக்கான காரணம் தெளிவாகத்தெரிந்து விட்டது. அன்னம்மாவின் நோக்கம் நிறைவேறியவுடன், ரெனியின் ரத்தம் குடிக்கப்பட்டுக் கொல்லப்பட்டிருக்கிறான். அவனது படுக்கையில் இருந்தது அன்னம்மாவின் முடியும், உடல் வாசனையும்தான். ரெனியின் ரத்தத்தையும் அவள் குடித்து விட்டாள் என்றால் ரெனியும் ஓர் ரத்தரக்ஷஸாக மாறி விடுவானோ?

ஃபாதர் வின்சென்ட்டால் அந்த நினைப்பையே தாங்கிக் கொள்ள முடியவில்லை. வலக்கையால் ரவீந்திரனிடம் மௌனமாக இருக்குமாறு சைகை செய்தபடி இடக்கையால் அவனை இழுத்தார்.

என்னவென்று புரியாவிட்டாலும் ரவீந்திரன் எழுந்து அவரைப் பின்தொடர்ந்தான். வந்த வழியிலேயே அவர்கள் திரும்பினர்.

"என் மனசுக்கு நிம்மதியே இல்லை. எல்லாவற்றையும் அறைக்குப் போன பிறகு சொல்கிறேன்... வா!" ஃபாதர், ரவீந்திரனிடம் பேசியபடி விரைவாக நடந்தார்.

ஃபாதரது அறைக்கு வந்தனர்.

"ஏன் ஃபாதர் திடுமென்று புறப்பட்டு விட்டீர்கள்?" -

ரவீந்திரன் கேட்டான்.

குளிர்ந்த அந்த இரவிலும் அவர் முகத்தில் வியர்வை முத்துக்கள் துளிர்த்தன. சட்டையைக் கழற்றுவதற்கு முன்னால் ஃபேனின் சுவிட்சைத் தட்டினார்.

"என்ன ஃபாதர்... இப்படியோரு வியர்வை உங்களுக்கு?"

"உனது கேள்விகளுக்கெல்லாம் இனிமேல் பதில் சொல்கிறேன். தம்பி ரெனி இறந்து போனது அன்னம்மாவால் தான். அதைத் தொடர்ந்து மேலும் சில ஆபத்துக்கள் ஏற்படவும் வாய்ப்பு உள்ளது".

"அதாவது ரெனியும் அன்னம்மா மாதிரி ஆகிவிடுவார் என்றா பயப்படுகிறீர்கள்?"

"ஆமாம்"

ரவீந்திரனையும் இப்போது ஃபாதரின் கவலை தொற்றிக் கொண்டது. ஒவ்வொன்றையும் முடிவுக்குக் கொண்டு வர நினைக்கும் போது. பிரச்சினைகள் புதிது புதிதாக முளைக்கிறதே!

"எல்லாமே ஏடாகூடமான ஆபத்தில் தான் சென்று முடிவடையும் என்று தோன்றுகிறது! " வின்சென்ட் ஃபாதர் மிகுந்த துயரத்துடன் பேசினார்: "நாம் நாளைக்கே புறப்பட வேண்டும். இதெல்லாம் நம் இருவருக்கும் மட்டும் தெரிந்திருந்தால் போதும். நீ சும்மா என்னுடன் துணையாக வந்திருப்பதாக மற்றவர்கள் நினைப்பார்கள். அங்கு போன பிறகு மற்றவற்றைத் தீர்மானிப்போம், காலைப் பிரார்த்தனை முடிந்தவுடன் நாம் புறப்பட வேண்டியதுதான். வேறு ஏதாவது அவசர விஷயமிருந்தால் சகரியாஸ் ஃபாதரைச் சமாளிக்கச் சொல்லலாம். நாளைக்குச் செவ்வாய்க்கிழமை இல்லையா? புதன்கிழமை காலை, பிரார்த்தனை இல்லையென்று விடுவோம்".

ரவீந்திரன் ஒப்புக் கொண்டான்.

சொல்லி வைத்தபடியே மறுநாள் காலையில் எட்டு மணிக்கு இருவரும் புறப்பட்டார்கள்.

ஃபாதரது வீடு கிராமப் பகுதியில் இருந்தது. அவரது குடும்பம் செழிப்புள்ளதாக இருந்தது. மதிய நேரத்தில் அவர்கள் வீட்டை அடைந்தனர்.

ரெனியின் மரணத்தால் ஏற்பட்ட சோகம் இன்னும் அந்த வீட்டிலிருந்து மறைந்திருக்கவில்லை. ஃபாதர் வின்செண்ட்டைப் பார்த்தபோது அவரின் அப்பா - அம்மாவின் முகம் மலர்ந்தன.

"சரி... முதலில் இருவரும் சாப்பிடுங்கள். பிறகு பேசிக் கொள்ளலாம்! " - ரவீந்திரனைப் பார்த்து பெரியவர் கூறினார்.

ரவீந்திரன் முதல் தடவையாக வந்திருக்கிறான். சாப்பாட்டுக்கு பிறகு பெரியவருடன் பேச்சுக் கொடுத்தான். ரவீந்திரன் மிகவும் எச்சரிக்கையாகத்தான் அவரிடம் பேசினான். சர்ச் சம்பந்தப்பட்ட விஷயம் எதையும் அவரிடம் கூறவில்லை.

வீட்டுக்குள் ஃபாதரின் அம்மாவும் மற்றவர்களும் அவருடன் பேசிக் கொண்டிருந்தனர். மற்றவர்கள் ஃபாதரை அழைப்பது போலவே அவரது வீட்டாரும் அவரை அழைத்தனர். வீட்டீல் அவரை முன்பெல்லாம் பேபி என்று அழைத்தால், இப்போது ஃபாதர் பேபி என்று அழைத்தனர்.

"நாங்க, உங்களைத் தேடி வரலாம்னு இருந்தோம்!" - பேசும் போது அவரின் அம்மாவின் முகத்தில் ஆர்வம் தெரிந்தது.

"அது எதுக்கும்மா? நான்தான் உங்களைத் தேடி வந்துட்டேனே?"

"ஒரு விஷயம் தெரியுமா? ரொம்பவும் சுவாரஸ்யமானது. மட்டுமில்லாம, ஆச்சரியமானதும் கூட. குழந்தைங்களா! நீங்கள்லாம் உள்ள போங்க ..." அம்மா மற்றவர்களை விரட்டினார்.

சிசிலிக்கும், ஸெனினுக்கும் முறையே பதினேழு வயது. அம்மா எதைப் பற்றி பேசப் போகிறார் என்பது அவர்களுக்கும்

தெரியும் என்று தோன்றியது, அவர்கள் அங்கிருந்து போகத் தயங்கினர்.

"இவங்க கேட்கக் கூடாத செய்தின்னா, இவங்க கிளம்பிடட்டும். இல்லேன்னா சொல்லுங்க, அவங்களும் இருக்கட்டும்!" - ஃபாதர் சொன்னார்.

"சரி இருக்கட்டும்..." என்றபடி அவர் அம்மா பேசத் தொடங்கினார்: "நம்ம முணவாது வீட்டு சாக்கோ இருக்காரில்லயா? அவர் பொண்ணை உனக்குத் தெரியுமில்லையா... அதான் கிளாரா!"

"தெரியும். அவளுக்கு என்ன ஆச்சு?"

"நம்ம ரெனிக்கு அவளைப் பொண்ணு கேட்டிருந்தோம் இல்லையா?"

"ஆமாம்!"

"முந்தா நாள் ராத்திரி..." - அம்மா குரலைத் தாழ்த்திக் கொண்டு பேசினார்: "ரெனி அவளோட அறை ஜன்னல் பக்கம் வந்து நின்னானாம்!"

"அப்படியெல்லாம் இருக்காதும்மா. ஒரு வேளை அது அந்தப் பொண்ணோட பிரமையா இருக்கலாம்".

"இல்லப்பா. நடந்ததைக் கேளு. அவனைப் பார்த்த உடனே அந்தப் பொண்ணு மிரண்டு அலறிக் கூச்சல் போட, மத்தவங்கள்லாம் அவ அறைக்கு ஓடி வந்தாங்க. அவங்க வரும் போது ஜன்னல் கிட்டயிருந்து யாரோ ஓடுறதையும் மத்தவங்க பாத்திருக்காங்க!"

அதைக் கேட்டதும் ஃபாதரின் முகம் மாறினாலும் மற்றவர்கள் கண்டு கொள்ளாதிருப்பதற்காகச் சட்டென்று அவர் தனது பழைய நிலைக்குத் திரும்பினார்.

"எனக்கு என்ன தோணுதுன்னா, அதெல்லாம் அந்தப்

பொண்ணோட கற்பனையா இருக்கலாம். அவளுக்கும் ரெனியைப் பிடிக்குமே! ”

“சரிப்பா, அவளைப் பொறுத்த வரைக்கும் நீ சொன்னது சரின்னே வெச்சுக்கிட்டாலும் மத்தவங்களுக்கும் அப்படியே தோணுமா? அவங்களும் அந்த உருவம் ஓடறதைப் பார்த்திருக்காங்களே? ”

‘அம்மாவிடம் இப்போது நடந்ததை எப்படிக் கூறுவது?’ - என்று தயங்கிய வின்சென்ட், மனத்திற்குள் கடவுளை நினைத்தவாறு நெஞ்சில் சிலுவை வரைந்து, “ஸ்தோத்திரம்” என்றார்.

“அண்ணா நீங்க நினைக்கிற மாதிரியில்லை இது. இங்கேயும் அது போல ஒரு சம்பவம் நடந்தது! ” - சிசிலி பேசத் தொடங்கினாள்.

“சொல்லும்மா! என்னை எதுக்குப் பார்க்கிற சொல்லு! ” - அம்மா ஊக்கினார்.

“முந்தா நாள்... நடுராத்திரியிருக்கும். நான் பாத்ரூம் போறதுக்காக எழுந்தபோது நம்ம வீட்டு ஜன்னல் கிட்ட ஒரு நிழலைப் பார்த்தேன். அசலா அப்படியே ஓர் ஆள் நிற்கிற மாதிரியே இருந்தது. நான் சத்தம் போடாம எழுந்து லைட் போட்டுப் பார்த்தபோது, ரெனியேதான். நான் அலறுறதுக்காக வாயைத் திறக்கறதுக்குள்ள ஓடிப் போயிட்டான். ஓடுற அவசரத்தில் ஒரு கம்பை ஒடைச்ச மாதிரி சத்தம் கேட்டது. நான் பயந்து போய், சிலுவை போட்டு அம்மாகிட்டப் போய் படுத்துக்கிட்டேன்! ”

“தூக்கக் கலக்கத்தில் எதையாவது பாத்து குழம்பிட்டயோன்னு தோணுது! ” ஃபாதர் கூறினார்.

“பொழுது விடிஞ்சு பார்த்தபோது, நிஜமாகவே கிழங்குச் செடி தண்டு உடைஞ்சு கிடந்தது!”

“இதுக்கு அப்பா என்ன சொல்றார்?”

"அவரா இதையெல்லாம் நம்புவார்?"

"நீங்களும் அப்படியே நம்பினால் போதும்!"

"எப்படியிருந்தாலும் அவனோட கல்லறையை மந்திரிச்சுப் பார்த்தா என்னண்ணு தோணுது. நம்ம சர்ச் ஃபாதரும் சிலதெல்லாம் தெரிஞ்சு வைச்சிருக்கார். நிறைவேறாத ஆசையோட யாராவது இறந்து போயிட்டா, இந்த மாதிரி ஆவியா அலைஞ்சு நடப்பாங்கன்னு கேள்விப்பட்டிருக்கேன்".

"அப்படிச் செய்யணும்னு நீங்க நினைச்சா செஞ்சுடலாம்!"

**மா**லை நேரமானபோது காபி சாப்பிட்டுவிட்டு ரவீந்திரனும் ஃபாதர் வின்சென்ட்டும் நடக்கத் தொடங்கினார்கள். அந்த ஊர் ஃபாதரைச் சென்று சந்தித்தார்கள்.

"வாங்க... வாங்க!" - ஃபாதர் இருவரையும் வரவேற்றார்.

"தம்பி இறந்ததுக்குப் பிறகு இப்பத்தான் வர நேரம் கிடைச்சது. ஓய்வு ஒழிச்சலில்லாத வேலை. சர்ச் வேலைக்குப் பிறகு பஞ்சாயத்தும் பண்ண வேண்டியிருக்கே!"

ரவீந்திரனை அவருக்கு அறிமுகப்படுத்தி வைத்தார்.

"இவ்வளவு தூரம் வந்த பிறகு தம்பி ரெனியோட கல்லறையை ஒரு தடவை பார்த்துட்டுப் போகலாம்னு தோணுச்சு".

"கல்லறை எதுன்னு தெரியுமில்லையா? இந்தாங்க சாவி. நான் அவசரமா வெளியே போக வேண்டியிருக்கு. நீங்க பார்த்துட்டுத் திரும்பி வரும்போது, சாவியைச் சமையல்காரர் கிட்டக்குடுத்திடுங்க!" - என்றவாறு ஆணியில் தொங்கிய சாவியை எடுத்துக் கொடுத்தார்.

இருவரும் சர்ச்சை ஒட்டிய கல்லறை மைதானத்துக்கு வந்தார்கள். கேட்டைத் திறந்து உள்ளே நுழைந்தார்கள்.

ரெனி மாத்யூ

பிறப்பு : *1963 மே. 13*

இறப்பு : *1988 மே. 13*

R.I.P.

ரவீந்திரன் வாசித்தான். ரெனியின் பிறந்த தேதி அவனை ஆச்சரியப்படுத்தியது. பொதுவாகப் பதின்மூன்று என்பது ராசியற்ற ஓர் எண்ணாகவே கருதப்படுவது வழக்கமாயிற்றே.

"ரவி, நாம இன்னிக்கு ராத்திரி இங்கே வந்து இந்தக் கல்லறையோட மூடியைத் திறக்கணும்!" ஃபாதர் கூறினார்.

"ராத்திரியிலயா? நேத்து நாம பார்த்ததை அதுக்குள்ள மறந்துட்டிங்களா ஃபாதர்?"

"நீ சொல்றது சரிதான். ஆனா, ரெனி என் தம்பி இல்லையா? அவனுக்கு எவ்வளவுதான் பைசாசிக சக்தி இருந்தாலும், அதை என் கிட்டக் காட்டணும்னு நினைப்பானா?"

"எனக்கு அதைப் பத்தி பயமே இல்லை. ஆனா, உங்களுக்கு எதுவும் சிக்கலாயிடக் கூடாதேன்னு யோசிக்கிறேன்!"

"சரி... என்னவா இருந்தாலும், நாம இன்னிக்கு ராத்திரி இங்கே வர்றோம். மேற்கொண்டு என்ன செய்யலாம்கிறதைப் பத்திப் பிற்பாடு யோசிக்கலாம் என்ன?"

"அப்படியே செய்யலாம்!"

அன்று இரவுச் சாப்பாட்டுக்குப் பிறகு சுமார் ஒன்பது மணியளவில் ஃபாதரும், ரவீந்திரனும் வீட்டிலிருந்து புறப்பட்டனர். கல்லறை மைதான கேட்டின் சாவி ஃபாதரிடம் தான் இருந்தது.

ரெனியின் கல்லறையை நெருங்கிய போது, இருவரும் திகைப்படைந்து அப்படியே நின்று போனர்கள்!

# 19

ரெனியின் கல்லறைக்கு முன்பாக நட்டு வைத்திருந்த சிலுவை நொறுங்கிக் கிடந்தது!

யாரோ வேண்டுமென்றே செய்யாவிட்டால், இப்படி நடப்பதற்கு வாய்ப்பே இல்லை என்பது இருவருக்குமே புரிந்தது. கல்லறையை நெருங்கிப் பார்த்தபோது, மேற்புற ஸ்லாபின் ஒரு பகுதி அடிப்பகுதியிலிருந்து நகர்த்தி எடுத்த அடையாளம் தெரிந்தது. அன்னம்மா ஜேக்கப்பின் கதை அவர்களுக்கு நன்றாகத் தெரியுமாதலால், சட்டென்று அவர்களுக்கு விஷயம் விளங்கியது.

"ஃபாதர்... என்ன செய்யலாம்?" - ரவீந்திரன் மெதுவான குரலில் கேட்டான்.

"மணி பன்னிரண்டுதான் ஆகிறது. கொஞ்ச நேரம் காத்திருக்கலாம்!" - ரவீந்திரனின் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு அதற்கு எதிர்ப்புறம் கூடாரம் போலிருந்த கல்லறையின் நிழலில் ஒதுங்கினார் வின்செண்ட் ஃபாதர்.

"இங்கேயே இருப்போம்!"

இருவரும் வசதியான ஓர் இடத்தில் அமர்ந்து கொண்டனர். இருவரும் ஒருவருக்கொருவர் எதுவும் பேசிக்கொள்ளவில்லை. ஃபாதர் ஏற்கெனவே ரவீந்திரனிடம் மறக்காமல் எச்சரித்திருந்தது தான் காரணம்.

ரக்ஷஸுகள் மிகவும் எச்சரிக்கை உடையவை. உண்மையைச் சொன்னால், அவை மற்றவர்களைப் பார்த்து மிகவும் பயப்படுகின்றன. மனிதர்களால் எப்போது

வேண்டுமானாலும், எப்படி வேண்டுமானாலும் ஆபத்து ஏற்படலாம் என்ற பயம் அவற்றுக்கு உண்டு. எனவே, அவை மிகவும் எச்சரிக்கையுடன் நடந்து கொள்கின்றன.

மணி பன்னிரண்டு. ஃபாதர் தனது கைக்கடிகாரத்தைப் பார்த்தார். மெதுவாக ரவீந்திரனது தோளில் கை வைத்தார். இருவரும் வெகு கவனமாக அந்தக் கல்லறையையே பார்த்துக் கொண்டிருந்தனர்.

சற்று நேரத்துக்குள் எதுவோ உராய்வது போன்ற சத்தம் கேட்டது. கல்லறையின் மேற்புற ஸ்லாப் நகர்வது நிலவொளியில் தெளிவாகத் தெரிந்தது. காத்திருந்த இருவரின் இதயமும் அதிவேகமாகத் துடிக்கத் தொடங்கின.

சில நொடிகளுக்குள் ஒரு தலை வெளியே வந்தது. அது இறந்து போன ரெனியின் தலைதான்!

அவன் முழுவதும் வெளியே வந்தபோது, ஃபாதரும் ரவீந்திரனும் எழுந்து அவனருகே சென்றனர்.

"ரெனி! ஃபாதர் பேபியா?"

ஃபாதர் வின்சென்ட் அவன் முகத்தில் டார்ச் லைட் வெளிச்சத்தைப் பாய்ச்சினார். பைசாசிகமான அந்த முகம் மிகவும் கொடூரமாகத் தெரிந்தது.

ரவீந்திரனைப் பாய்ந்து பிடிப்பதற்காக குரூர பாவத்துடன் ரெனி முயன்றான். ஃபாதர் சட்டென்று தனது பாக்கெட்டிலிருந்த வெள்ளிச் சிலுவையை எடுத்து அவனுக்கு நேராகப் பிடித்தார்.

அவர் காட்டிய கோணம் மிகவும் சரியானதாக இருந்தது. நிலவொளி சிலுவையில் பட்டு, ரெனியின் உடம்பில் அதே வடிவத்தில் பிரதிபலித்து.

அவன் பயங்கரமாக அலறினான்.

"ம்... உள்ளே போ!" ஃபாதர் கட்டளையிட்டார்.

சிலுவையிலிருந்து பிரதிபலித்த நிலவொளி, ரெனியின் உடம்பின் மீது பட்டபோதே ரெனி நடுங்கத் தொடங்கினான். அவன் கால் இடறி கல்லறைக்குள் விழுந்தான். வின்சென்ட் ஃபாதர் தன் கையிலிருந்த சிலுவையை கல்லறைச்சுவரில் கவிழ்த்தபடியே ரெனியின் உடம்பின் மீது வைத்தார்.

பிறகு டார்ச் லைட்டை எரிய வைத்துப் பார்த்த போது, அந்த வெள்ளிச் சிலுவை எரிந்து கருகிய படி அவனது உடலுக்குள் ஆழ்ந்து இறங்கியது தெரிந்தது. அத்துடன் ரெனியின் உடல் அசைவற்றுப் போனது!

ஃபாதரும் ரவீந்திரனும் அந்தக் கல்லறை ஸ்லாபை பழையபடி மூடினர்.

"நல்லவேளை, ரெனி தப்பித்தான்!" ஃபாதர் கூறினார்.

இருவரும் அங்கிருந்து புறப்பட்டு வீட்டை அடைந்தனர்.

"ஃபாதர்! அந்தச் சிலுவை எப்படி எரிந்தது?"- ரவீந்திரன் கேட்டான்.

"அது புனித நீரால் சுத்தம் செய்யப்பட்ட சிலுவை. தவிர, ஏற்கெனவே புனிதத் திருச்சபையின் தலைவரால் தொடப்பட்டு ஆசீர்வதிக்கப்பட்டதும் கூட. பைசாசிகமான அவனது உடலுக்குள் சிலுவை பாய்ந்த போது அவன் உடம்பிலிருந்த பைசாசிகத் தன்மையும் எரிந்து அழிந்து விட்டது!" ஃபாதர் விவரித்தார்.

**ம**றுநாள் காலை நேரத்தில் ஃபாதர் வின்சென்ட்டின் அப்பா கேட்டார்: "பேபி, ரெனியின் கல்லறையில் நாம் ஏதாவது சிறப்பு பூஜை நடத்த வேண்டுமா? யார் யாரெல்லாமோ என்னவெல்லாமோ சொல்கிறார்களே?"

"தேவையில்லப்பா. இனிமேல் அப்படி எதுவும் நடக்காது!"

"இல்லப்பா, உனக்கு அதைப் பத்தியெல்லாம் தெரியாதுன்னு தோணுது".

"அப்படி இல்லப்பா... முறைப்படி அதுக்கு என்ன செய்யணுமோ அதைச் செஞ்சுட்டேன்! "

"அப்படின்னா சரி..."

**அ**ன்று மதியத்தில் ஃபாதரும் ரவீந்திரனும், தங்களது இருப்பிடங்களுக்குத் திரும்பினர்.

சமையற்காரன் சாப்பாடு பரிமாறும்போது சொன்னான்: "நேத்து ராத்திரி இங்கே ஒரு சம்பவம் நடந்திச்சு! "

"என்ன?" ஃபாதர் கேட்டார்.

"நான் படுத்துத் தூங்கிட்டிருந்தேன். யாரோ நடக்கிற மாதிரித் தோணுச்சு. இந்த நடுராத்திரியிலயா, ஃபாதரைத் தேடி யாராவது வரப் போறாங்கன்னு நான் பாட்டுக்கு படுத்துட்டேன்..."

ஃபாதர் சாப்பிடாமல் அவன் சொல்வதையே கவனித்தார்.

"அப்படின்னா... மிச்சத்தை நீங்க சாப்பிட்ட பிறகுதான் சொல்வேன்".

"அப்போ அப்பிடியே செய். எனக்கு நல்ல பசி. நீ சொல்லிட்டே இருந்தா... நான் சாப்பிடாமக் கேட்டுக்கிட்டே இருப்பேன்".

ஃபாதர் சாப்பிட்டு முடித்த பிறகு அவரது அறைக்கு வந்த சமையற்காரன் தொடர்ந்தான்:

"காலிங் பெல் அடிக்கும் சத்தம் கேட்டு நான் எழுந்தேன். நீங்க இல்லேன்னு எனக்குத்தான் தெரியும். வர்றவங்களுக்குத் தெரியாதுங்கிறது ஞாபகம் வந்துச்சு. கதவைத் திறக்க தைரியம் இல்லாம ஜன்னல் வழியா பார்த்தேன். சிவப்புக்கோட்டு

போட்ட ஒருத்தர் நின்றிருந்தார். நிலா வெளிச்சத்துல அந்த கோட்டு பளபளன்னு மின்னுச்சு. உண்மையைச் சொன்னா நான் பயந்தே போயிட்டேன்!"

"அப்புறம்?"

"நீங்க இங்கே இல்லேன்னு நான் ஜன்னல் வழியாப் பாத்து சொன்னேன். அந்தச் சிவப்பு அங்கிக்காரர் என்கிட்ட வந்தார். அவர் வேற யாருமில்லை... நம்ம பிரான்சிஸ் ஃபாதர்தான்!"

"அவ்வளவுதானே. அப்புறம் அவர் எங்கே போனார்?"

"அவர்தான்னு தெரிஞ்சவுடனே நான் கதவைத் திறந்தேன். நீங்க எங்க போயிருக்கீங்கன்னு கேட்டார். சொந்த ஊருக்குப் போயிருக்கீங்க. நாளைக்கு வருவீங்கன்னு சொன்னேன்!"

"அப்படியா? அப்ப நான் உடனே போய் அவரைப் பார்த்துட்டு வர்றேன்!" ஃபாதர் வின்சென்ட் உடனே அங்கிருந்து புறப்படத் தொடங்கினார்.

"நான் சொல்றதை முழுசாக் கேளுங்க... அவர் கொஞ்சம் விலகி நின்னபோது... ஐயோ வெளியில சொல்லக்கூடாத விஷயம்.. ஃபாதர்! மரத்துக்குக் கீழ ஒரு பொம்பளை நின்னுட்டிருந்திச்சு".

"அந்தப் பொண்ணு யாருன்னு தெரிஞ்சதா?"

"சரியாத் தெரியலை. இருந்தாலும் அவரு செய்யிறது... ஆளுங்க சும்மாவா கன்னாபின்னான்னு பேசுறாங்க?"

"சரி சரி... இதை யார் கிட்டயும் உளறிட்டிருக்காதே. மனசோட வெச்சுக்க!"

சமையற்காரன் தலையாட்டியபடி தூங்கப் போனான். வின்சென்ட் அதைப் பற்றி யோசித்தார்.

அன்று இரவு நேரத்தில் தனது புத்தகத்திலிருந்த சில மந்திர வித்தைகள் குறித்து வாசித்துக் கொண்டிருந்தான் பர்னாண்டஸ்.

கடிகாரத்தில் மணி பன்னிரண்டடித்தது.

அப்போது அவனுக்குப் பின்னாலிருந்து ஒரு குரல் கேட்டது: "நீ என்னிடம் தந்துள்ள சத்தியத்திலிருந்து தவறிக் கொண்டிருக்கிறாய். அத்துடன் நான் உனக்குத் தந்துள்ள கால அவகாசமும் முடிவடையப் போகிறது. இப்படியே நிலைமை தொடர்ந்தால், உன்னிடமிருந்து எனது சக்தியை நான் திரும்பப் பெற வேண்டி இருக்கும். அதன் பிறகு நீ உயிருடன் வாழ முடியாது என்பதை நினைவில் வைத்துக் கொள்! "

குரல் அவன் காதுக்குள் இறங்க இறங்க... அவன் முகம் வெளிறிக் கொண்டே வந்தது. குரல் மேலும் தொடர்ந்தது:

"உன்னிடமிருந்து எனது சக்தியைப் பிரித்து எடுத்து விட்டால், பிறகு உன்னை அழிக்கத் தருணம் பார்த்துக் கொண்டிருப்பவனது வேலை மிகவும் சுலபமாகி விடும். பழிவாங்கப்படுவது மட்டுமல்ல, நீ இதுவரை செய்துள்ள எல்லாக் குற்றங்களும் வெளியாகும்! "

பர்னாண்டஸ் ஒரு கணம் திடுக்கிட்டான்.

"எனது சக்தி உன்னிடம் இல்லாமல் போனால், நீ மனிதனும் பிசாசும் இணைந்த ஒரு பிறவியாகி விடுவாய். மேற்கொண்டு சர்ச்சுக்குச் செல்லவோ, அது தொடர்பான சடங்குகளில் கலந்து கொள்ளவோ உன்னால் முடியாது. எல்லா இடத்திலும் எல்லா விதத்திலும் நீ தனிமைப்படுத்தப் படுவாய்!"

"நான் இப்போது என்ன செய்ய வேண்டும்?"

"எனது தேவைகள் என்னவென்று உனக்குத் தெரியாதா? அவற்றைப் படிப்படியாக நிறைவேற்றினால் போதும்! "

"இப்போது அவர்கள் எனது நிழலைப் போல் பின்தொடர்கிறார்கள். மேலும் எனக்கு எதிராக ஒரு பெரும் சக்தியே செயல்படுகிறது. அவர்களிடம் நான் சில நேரம் தோல்வியடையவும் செய்திருக்கிறேன்".

"மந்திர வித்தைகள் எல்லாம் ஒன்றுதான். அவை பல பெயர்களில் கூறப்படுகின்றன. அந்தப் புத்தகத்தில் சொல்லியிருப்பதை கவனமாகப் படித்து, அதன்படியே நடந்து கொண்டால், நீ அவர்களை வெற்றி கொள்ளலாம்!"

"ஃபாதர் வின்செண்ட்டையும், அந்தப் பெண்ணின் காதலனையும் கொல்வதற்கு என்ன வழி? அதை முதலில் சொல்லுங்கள்! "

"நீ கேட்பதெல்லாம் எனது எல்லைக்கு உட்பட்டதல்ல! அதையெல்லாம் உன் சொந்த மூளையைப் பயன்படுத்தி, நேரத்துக்கு ஏற்றாற்போல் நீ செய்து கொள்ள வேண்டியது தான். ஆனால், உனது விருப்பப்படி, செயல்பட உதவும் சில சக்திகளை நான் உனக்கு வழங்கி இருக்கிறேனே! "

"இப்போது நான் குறிப்பிட்ட இரண்டு பேருக்குத்தான் என்னைப் பற்றிய விஷயங்கள் ஓரளவு தெரியும். அவர்களை மட்டும் தொலைத்துக் கட்டி விட்டால், பிறகு எனக்கு எந்த விதமான அபாயமும் இல்லை".

"அதற்கு நானும் உனக்கு உதவ முயற்சி செய்கிறேன் - என்னால் முடிந்த அளவுக்கு. அந்தப் பெண்ணை வசப் படுத்தும் காரியம் எந்த அளவில் உள்ளது?"

"அதற்கு இன்னும் கொஞ்சம் தவணை தேவை".

"அநாவசியமாகத் தாமதப்படுத்தாதே! "

**ப**ர்னாண்டஸ் தனது அறையிலிருந்து வெளியேறினான். சிவப்பு அங்கியின் பட்டன்களைப் போட்டுக் கொண்டிருந்த போது வடக்குப் புறமுள்ள பிரமாண்டமான மாமரத்தின் பெரிய

கிளையொன்று முறிந்து தரையில் விழுந்தது. ஒரு வகையில் அது அவனது அன்றைய நடவடிக்கையைத் தொடராதிருக்க ஏற்பட்ட சகுனத் தடை. ஆனால், அதை எதிர்பாராத ஓர் இயற்கைச் சம்பவமாக எடுத்துக் கொண்ட பர்னாண்டஸ், இடப்புறமாக சற்று ஒதுங்கி நடந்தான். அப்போது தரையில் விழுந்து அந்த மரக்கிளை குலுங்குவதை கவனித்தான்.

பர்னாண்டஸ் இம்முறை அதை ஒதுக்காமல் மீண்டும் தனது அறைக்குத் திரும்பினான்.

தனது மாந்திரீகப் புத்தகத்தைக் கையில் எடுத்தான். கொழுப்பில் எரியும் திரியின் வெளிச்சத்தில் புத்தகத்தின் பக்கங்களைப் புரட்டினான். வலக் கையைப் புத்தகத்தில் பதித்துக் கொண்டு அதில் தென்பட்ட மந்திரத்தை உச்சரித்தான்.

அதில் குறிப்பிட்டிருப்பது போலவே, கொழுப்புத் திரியிலிருந்து தீக்கொழுந்தைப் பிடுங்கி வெளியே எறிந்தான். அது ஒரு பெரிய நெருப்புக் கோளம் போல வெளியே சென்றது.

வெளிப்புறம் என்னவெல்லமோ எரிந்து, நெருப்பு படரும் சத்தம் கேட்டது. பர்னாண்டஸ் வெளியே வந்து பார்த்தபோது உடைந்து விழுந்த மரக்கிளை சாம்பலாகிக் கிடந்தது. அதைப் பார்த்தபடி மேற்கொண்டு நடக்கத் தொடங்கினான்.

கல்லறையின் கேட்டருகே சென்று மரக்கிளை விழுந்த இடத்தைத் திரும்பிப் பார்த்த பொழுது, அங்கு யாரோ நிற்பதாகத் தெரிந்தது.

கல்லறைக்குள் நுழைந்தால், தனது சக்தி முன்னைக் காட்டிலும் அதிகரிக்கும் என்பதால் பர்னாண்டஸ் அதற்குள் நுழைந்தான்.

சர்ச்சை ஒட்டிய - நிழல் விழுந்த பகுதியில் பர்னாண்டஸ் ஒதுங்கி நின்றான்.

பர்னான்டஸ் கண் பார்வையிலிருந்து மறைந்ததால், மாமரத்தின் மறைவிலிருந்து முதலில் சங்கு வாரியர் வெளிப்பட்டார். அவரைத் தொடர்ந்து ரவீந்திரனும் வெளிவந்தான்.

“ரவி, அந்த ஆள் கல்லறைக்குள் நுழைந்திருக்கிறார். நாம் அங்கே சென்றால் ஒரு வேளை அந்த ஆளைச் சமாளிக்க முடியாமலும் போகலாம்!”

“அந்த ஆள் செய்வதெல்லாம் விபரீதமான காரியங்களாயிற்றே!”

“அந்த ஆளும் சில விஷயங்களைக் கற்றுத் தேர்ந்திருக்கிறார் என்று தோன்றுகிறது”.

**தொ**டர்ந்து வந்த இரண்டு நாட்களும் லிஸியை எப்படித் தனது இருப்பிடத்துக்கு வரவழைப்பது என்பது பற்றியே இடைவிடாமல் சிந்தித்தான். எனவே, யாரையாவது சொல்லியனுப்பி அவளைத் தனது இருப்பிடத்துக்கு வரவழைப்பது என்று அவன் ஒரு முடிவுக்கு வந்தான்.

ஒரு நாள் - ஒரே நாள் எப்படியாவது லிஸியை வீட்டிலிருந்து வெளியே வரவழைத்து ஒரு முறை அவளுடன் தொடர்பு கொண்டால், அதன் பிறகு அவள் என்றென்றைக்குமாகத் தனக்குக் கீழ்ப்படிவாள் என்று பர்னாண்டஸுக்குத் தெரியும்!

சரியாக அதே நேரத்தில் சர்ச்சைச் சேர்ந்த பள்ளிக்கூட டீச்சரான ஷேர்லியும் நினைவுக்கு வந்தாள். தன் அண்ணன் ஒரு தடவை தன்னிடம் அறிமுகப்படுத்தியதும் ஞாபகத்துக்கு வந்தது.

ஐந்து வருடங்களுக்கு முன்னால் அவள் வேலைக்குச் சேர்ந்ததே, பிரான்சிஸின் சிபாரிசினால் தான்.

குறை சொல்ல முடியாத அழகி, வயது முப்பதை நெருங்கியிருக்கலாம். பொருளாதாரத்தில் சற்றுப் பின் தங்கிய குடும்பத்தின் மூத்த பெண். அவளது வீட்டில் அவளுக்குக் கீழே

இன்னும் நான்கு பெண்களும் இருந்தனர்.

அந்தக் குடும்பத்தின் முழுப் பொறுப்பும் ஷேர்லி ஒருத்திக்குத் தான். அப்படியானால், முதலில் ஷேர்லியை நமது கட்டுக்குள் கொண்டு வந்து விட்டால், அவளை வைத்துக் கொண்டு லிஸியை வரவழைப்பது சுலபம் என்று பர்னாண்டஸிடம் மனம் கணக்கிட்டது.

மதியம் தாண்டியவுடன் ஷேர்லியை அழைத்து வருமாறு தன் சமையற்காரரை அனுப்பி வைத்தான்.

அவரைப் பார்த்தவுடன் ஷேர்லி மிகவும் மகிழ்ந்தாள். ஃபாதர் பிரான்சிஸ் அவளுக்கு எத்தனையோ தடவை உதவியிருக்கிறார். அவளின் மூத்த தங்கையின் கல்யாண ஏற்பாட்டில் - ஒரு சின்னப் பொருளாதார நெருக்கடி ஏற்பட்ட போது. இப்போது, சர்ச்சின் சமையற்காரர் வந்திருக்கிறார்.

பக்கத்து டவுனிலுள்ள ஓர் ஓட்டலுக்கு அவளை அழைத்து வருமாறு பர்னாண்டஸ், சமையற்காரரிடம் கூறியிருந்தான். இப்போதைய சூழ்நிலையில் அவளை, தனது இருப்பிடத்துக்கு அழைத்து வந்தால், வீணாக எதிராளிகளது கவனத்துக்கு அது வரும். எனவேதான், சந்திப்பை வெளியிடத்தில் வைத்துக் கொண்டான்.

மாலை ஐந்து மணிக்கு ஷேர்லியும் பர்னாண்டஸும் ஓட்டலில் சந்தித்துக் கொண்டனர். மற்றவர்கள் தவறாக நினைத்துக் கொள்ளக் கூடாதே என்பதற்காக, வழக்கமான உடையணியாமல் பான்ட், ஷர்ட் அணிந்திருந்தான் பர்னாண்டஸ்.

“நான் உங்க வீட்டுக்கே வந்திருப்பேனே ஃபாதர்! ” - ஷேர்லி பேசினாள்.

“வந்திருப்பாய்! ஆனால், அந்த வீட்டுக்குப் பெண்கள் வருவது அவ்வளவு நல்லதாக எனக்குத் தோன்றவில்லை. ஷேர்லி, நீ இப்போது பணத்துக்குக் கஷ்டப்படுகிறாய் என்று எனக்குத் தெரியும்!” - பர்னாண்டஸ் தனது வேலையை

ஆரம்பித்தான்.

"உண்மைதான் ஃபாதர்! தங்கைக்கு கல்யாணம் நிச்சயம் பண்ணியிருக்கோம். என்ன செய்றது? எப்படிப் புரட்டறதுன்னு ஒரே குழப்பத்தில் தவிக்கிறேன்".

சர்வர் இரண்டு கப்பில் டீ எடுத்து வந்து வைத்து விட்டுப் போனார்.

பர்னாண்டஸ் தனது பாக்கெட்டிலிருந்து வட்ட வடிவமான ஒரு டப்பியை எடுத்து ஷேர்லியின் கையில் கொடுத்தான்.

"திறந்து பார். உன் தங்கைக்கு நான் தரும் ஒரு சிறிய பரிசு. தற்சமயம் நீ இதைக் கழுத்தில் போட்டுக் கொள். ஐந்து சவரன்!"

அந்தத் தங்கச் சங்கிலியைப் பார்த்த ஷேர்லி வியப்படைந்தாள்.

"ஷேர்லி, உனக்கு உதவுவதற்காக பத்தாயிரம் ரூபாயும் கொண்டு வந்திருக்கிறேன்!" - என்றபடி ஒரு காகிதப் பொட்டலத்தையும் அவளிடம் நீட்டினான்.

ஷேர்லி காகிதத்தை கவனமாகப் பிரித்துப் பார்த்தாள். புத்தம் புது நூறு ரூபாய் நோட்டுக்கட்டு ஒன்று அதில் இருந்தது.

"உங்களுக்கு நான் எப்படி நன்றி சொல்றதுன்னு தெரியலை ஃபாதர் !" - அவள் திக்குமுக்காடியவளாகச் சொன்னாள்.

டீ சாப்பிட்டு முடிந்த பிறகு பர்னாண்டஸ் பேசினான்: "கொஞ்ச நேரம் ரெஸ்ட் எடுத்துட்டு போனாப் போறாதா? நான் இந்த ஓட்டல்ல ரூம் எடுத்திருக்கேன்!"

ஷேர்லியால் அவனது வார்த்தைகளை அவ்வளவு சுலபத்தில் ஒதுக்கித் தள்ள முடியவில்லை!

# 20

ஷேர்லி திருமணமாகாதவள். குடும்பப் பொறுப்பு அவள் தலையில் விழுந்ததால், திருமணம் என்பது அவளைப் பொறுத்தவரை கனவாகிப் போனது.

எந்த ஒரு ஆடவனைக் குறித்தும் நினைக்க அவளுக்குச் சந்தர்ப்பம் வாய்க்கவில்லை. எனவே, நாட்கள் நகர்ந்தன. ஆனால், பருவப் பெண்ணான அவளின் உணர்வுகள் முற்றிலுமாக அணைந்து விடவில்லை.

அந்த உணர்வுகளை அவள் வெளிக்காட்டிக் கொள்ளாமல் இருந்ததற்குக் காரணம் அவளது வேலை. புனிதமான ஒரு தொழிலில் ஈடுபட்டிருக்கும், தான் ஒழுக்கத்துடன் இருக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தாள்.

ஃபாதர் பிரான்சிஸ் அவளிடம் நன்கு பழகியிருந்த போதிலும் ஒரு போதும் தவறாக நடந்ததில்லை. எனவே, பர்னாண்டஸ் ஓய்வெடுத்து விட்டுப் போகலாம் என்ற போதும் அவள் மறுப்பேதும் சொல்லவில்லை, அதில் தவறு இருப்பதாகவும் அவளுக்குத் தோன்றவில்லை.

இருவரும் அறைக்கு வந்தனர்.

"ஷேர்லி, அந்த வீட்டில் நீ தனியாகத்தானே இருக்கிறாய்?" பர்னாண்டஸ் கேடட்டான்.

"ஆமாம். போன வாரம் வரை இன்னொரு டீச்சர் என் கூடத் தங்கியிருந்தாங்க. அவங்களுக்குக் கல்யாணமாயிட்டதால நான் தனியாயிட்டேன்!"

"தனியா இருக்க ஆரம்பிச்சு ரொம்ப நாளானது போல இருக்கே?" - பர்னாண்டஸ் சிரித்தபடியே கேட்டான்.

ஷேர்லி வெட்கப்பட்டாள்.

பர்னான்டஸ் பாத்ரூமுக்குப் போய்த் திரும்பி வந்தபோது லுங்கி அணிந்திருந்தான்.

கப்போர்டைத் திறந்து அங்கிருந்து ஒரு பிராந்தி பாட்டிலை வெளியே எடுத்தான். நீர் நிறைந்த ஜேக் மற்றும் கிளாஸுகள் மேஜை மீதே இருந்தன. பர்னாண்டஸ் இரண்டு கிளாஸுகளில் பிராந்தி ஊற்றி ஒன்றில் மட்டும் தண்ணீரை அதிகமாக ஊற்றினான்.

"இந்தா ... சாப்பிடு ஷேர்லி ..." கிளாஸை அவளிடம் நீட்டினான்.

அந்தச் சூழ்நிலையில் அவனிடம் மறுத்துப் பேச முடியாததால், அவள் அதைக் கையில் வாங்கிக் கொண்டாள்.

"குடி ... "

அவள் ஒரு வாய் குடித்தாள்.

அதற்குள் பர்னாண்டஸ் பிஸ்கெட் பாக்கெட்டைப் பிரித்து முன்னால் வைத்தான்.

"சாப்பிடு ஷேர்லி, இதெல்லாம் நமக்குத்தான். இந்தக் காலத்துல இதையெல்லாம் சாப்பிடாதவங்க யார் இருக்காங்க?"

பர்னாண்டஸும் குடித்தான்.

பாட்டில் காலியானது. பர்னாண்டஸ் பக்குவமாக அவளைக் குடிக்க வைத்தான்.

மது உள்ளே சென்றபோது ஷேர்லியின் கண்களில் ஒரு வித மயக்கம் படியத் தொடங்கியது, அவள் முகத்தில் வியர்வை முத்துக்கள் அரும்பத் தொடங்கின.

களைப்பும் சோம்பலும் கலந்து தோன்றியது.

"களைப்பா இருக்கா? கொஞ்ச நேரம் படுத்தா எல்லாம் சரியாயிடும்!" என்றபடி அவளைத் தாங்கிப் பிடித்துக் கட்டிலுக்குக் கொண்டு வந்தான்.

அவளது உடைகளைத் தளர்த்தும் சாக்கில், தவிர்த்தான்.

வாழ்க்கையில் முதன் முதலாக ஷேர்லி ஷர் ஆணின் நெருக்கத்தை உணர்ந்தாள். அன்றைய அவளது இரவு, அந்த அறையிலேயே கழிந்தது.

"இனி என்னிக்கு ஷேர்லி வருவே?"

"உங்களுக்கு எப்பத் தேவையோ, அப்ப வருவேன்!" - வெட்கத்துடன் பதிலளித்தாள்.

"தங்கச்சி கல்யாணம் நல்லபடியா நடக்கட்டும். மத்ததெல்லாம் அப்புறம் பார்த்துக்கலாம்".

"நான் உங்க ரூமுக்கே வரட்டுமா?"

"வேண்டாம் ... நான் உனது வீட்டுக்கு வர்றேன்".

இரண்டு நாட்கள் கழித்து ஒரு நாள் நள்ளிரவில் பர்னாண்டஸ், ஷேர்லியின் வீட்டுக்குச் சென்றான்.

சற்று நேரம் அவளிடம் குசலம் விசாரித்தான்.

அவனது உதவியை வீட்டார் மிகவும் பாராட்டியதாக அவள் தெரிவித்தாள்.

ஷேர்லி வசிப்பது ஒரு சிறிய வாடகை வீட்டில். இரண்டு அறைகள். ஒரு சமையலறை. இப்போது தனிமை வாசம். ஊரிலிருக்கும் குடும்பத்துக்காகத் தனது செலவுகளை மிகவும் சுருக்கிக் கொண்டிருந்தாள்.

"ஷேர்லி எனக்கு ஒரு உதவி செய்யனும்!" பர்னாண்டஸ் அவன் தலைமுடியை வருடியபடி கூறினானன்.

“சொல்லுங்கள்!” அவனை மிகவும் நெருங்கி அமர்ந்தபடி கேட்டாள்.

“உனக்காக நான் எது வேணும்னாலும் செய்யத் தயாராக இருக்கேன். ஆனா, நீ எனக்காக ஒரு காரியம் செய்யனும்!”

“சொல்லுங்க! என்னால முடியக் கூடிய காரியம்னா நான் கண்டிப்பா செய்றேன்!”

“சரி, நான் சொல்றது ரொம்பவும் ரகசியமா இருக்கனும்...”- அவள் கண்களைப் பார்த்தபடி கூறினான்.

“நிச்சயமா!” நீங்கதான் என் கண்கண்ட தெய்வம். உங்களுக்காக நான் என் உயிரைக் கூடத் தரத் தயாராயிருக்கிறேன்!” - அவள் உறுதியளித்தாள்.

“நீ சொன்னது சத்தியமா?”

“இதோ... சத்தியமாக”. - அவள், அவன் மார்பில் கை வைத்தாள்.

“சரி. ஒப்புக் கொள்கிறேன். உனக்கு லிஸியைத் தெரியுமில்லையா?” - ஆரம்பித்தான்.

“தெரியுமே... கரியாச்சனின் மகள்! ”

“ஆமாம்! அவளை என் பிரெண்டு ஒருத்தன் விரும்புறான். ஆனால், அவளுக்கு அவனைப் பிடிக்கலை. அவளைக் கல்யாணம் செய்ய முடியலேன்னா தற்கொலை பண்ணிக்கக் போறதாச் சொல்றான் அவன்!”

“அதுக்கு நான் என்ன பண்ணணும்?”

“அவளை எப்படியாவது இங்கே வரவழைக்கனும். ஒரு டீச்சர் என்ற முறையில் நீ அவங்க வீட்டுக்குப் போகலாம். அவள் குடும்பத்தாருக்கு உன்னைை நல்லாத் தெரியுமில்லையா?”

“எனக்கு அவங்க நல்ல பழக்கம் தான்!”

“அப்படின்னா ... அதை முதல்ல செய்!”

பொழுது விடிவதற்கு முன்பாக பர்னாண்டஸ் தனது இருப்பிடத்துக்குத் திரும்பினான்.

கடிகாரம் அப்போது மூன்று முறை ஒலித்தது.

வெளியே மழை தூறலாகப் பெய்து கொண்டிருந்தது.

இடியும் மின்னலும் சுற்றுபுறத்தைக் கிடுகிடுக்க வைத்தன.

“இப்போது நீ மிகவும் புத்திசாலித்தனமாக நடந்து கொண்டிருக்கிறாய்!” - அவனுக்குப் பின்புறத்திலிருந்து வழக்கமான குரல் கேட்டது.

“வேறு யாரை லிஸியிடம் அனுப்பி வைத்தாலும் அவர்கள் மாந்திரீக சக்தியைப் பயன்படுத்துவார்கள். ஆனால், ஷேர்லி அப்படிச் செய்யவும் மாட்டாள். அது அவளுக்குத் தெரியாததும் கூட”.

“முக்கியமான ஒரு விஷயம் ...” பிசாசு நினைவூட்டியது. “அன்னம்மா ஜேக்கப்புடனான உனது உறவு ஆபத்தை வரவைக்கலாம். அதை உன் எதிரிகள் மோப்பம் பிடித்து விட்டிருக்கின்றனர்!”- பிசாசு எச்சரித்தது.

“அதை நானும் உணர்ந்து கொண்டேன்”.

“அவள் உன்னைத் தாக்க தொடங்குவதற்கு முன்பாக நீ அவளைத் தொலைத்துக் கட்ட வேண்டும்”.

“செய்யத்தான் வேண்டும்!” - பர்னாண்டஸ் யோசனையில் ஆழ்ந்தான். ‘இப்போது அவள் தன்னிச்சைப்படி நடக்க ஆரம்பித்திருக்கிறாள். இது தொடர்ந்தால் அதனால் அதிகமாக பாதிக்கப்படுவது நான்தான். எனவே, எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் அவளை இல்லாமல் செய்து

விடவேண்டும்!' ஒரு தீர்மானத்துக்கு வந்தான்.

'ஆனால், எப்படி அவளது சக்தியை அழிப்பது? இப்போது அவளுக்கு ஆணின் துணை அவசியமாகியிருக்கிறது. அதை வைத்துக் கொண்டு அவளுடன் தன்னையும் கையும் களவுமாகப் பிடிக்க ரகசிய ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கின்றன'.

"நான் எப்படி அவளைப் பழையபடி கல்லறைக்குள் அடைப்பது?"

"நீ தான் உறங்கிக் கிடந்தவளை எழுப்பினாய். எனவே, அவளை உறங்க வைக்க வேண்டியதும் நீதான்!"

"அது என்னால் முடியுமா?"

"முயற்சி செய். உனக்குத்தான் சக்தி உள்ளதே!"

"முயற்சி செய்கிறேன்".

"அத்துடன் மற்ற காரியங்களையும் மறக்காமல் செய்".

"மறக்க மாட்டேன்!"

**ப**ர்னாண்டஸின் உபதேசத்தை ஏற்று ஷேர்லி, கரியாச்சனது வீட்டுக்குப் போனாள், அவள் அந்த வீட்டுக்கு ஏற்கனவே பல தடவை சென்றிருந்தாலும், சமீப காலமாக அவள், அவர்களைச் சந்தித்ததில்லை.

"யாரு டீச்சரா? ரொம்ப நாளா உங்களை இந்தப் பக்கம் காணோமே?" - லிஸியின் அம்மா ஷேர்லியை வரவேற்றாள்.

"ஓரே அலைச்சலுங்க. பத்தாததுக்கு தங்கச்சி கல்யாணம் வேற ..."- டீச்சர் பதிலளித்தாள்.

"எங்க கிட்டயெல்லாம் சொன்னாத்தான், நாங்களும்

கல்யாணத்துக்கு வருவோம்!”

“அதுக்காகத்தான் ஞாபகமா ஓடி வந்திருக்கிறேன். அப்புறம் என் கூட அறையில இருந்த இன்னோரு டீச்சர் கல்யாணமாகிப் போயிட்டாங்க”.

“அவங்களுக்கு பதிலா புதுசா யாரோ வந்தாப்புல இருந்துச்சே?”

“ஆமா வந்திருக்காங்க!”

“ஒரு வேடிக்கை தெரியுமா உங்களுக்கு? அந்த டீச்சர் முதல் நாள் இங்கே எங்க வீட்டிலதான் தங்கினாங்க. ஆனா பொழுது விடியறதுக்கு முந்தியே, யாரு கிட்டயும் சொல்லாமக் கொள்ளாமக் கிளம்பிட்டாங்க”.

“அப்படியா? அவங்ககிட்ட நான் கேக்கிறேன். அதற்குப் பிறகு அவங்க இங்கே வரவே இல்லையா?”

“ இல்லை. சரி உட்காருங்க. காபி போட்டுத் தர்றேன். இருங்க லிஸியைப் கூப்பிடுகிறேன். அவ தோட்டத்துல எங்கே யாவது இருப்பாள்!” என்றபடி, வீட்டுக்குள் நுழைந்தாள் லிஸியின் அம்மா.

லிஸியை எப்படி பர்னாண்டஸின் திட்டப்படி தனது வீட்டுக்கு வரவழைப்பது என்பது பற்றி யோசிக்கத் தொடங்கினாள் ஷேர்லி.

ஃபாதர் சொன்னபடி நடந்து கொண்டால், மேற்கொண்டும் அவரிடமிருந்து பணம் கிடைக்கும் என்று தோன்றியது. எதிர்பாராமலே பெரிய உதவி கிடைத்தபோது, உதவினால் ... நிச்சயமாக மேலும் கிடைக்கும் என்று அவளது உள்ளுணர்வு கூறியது.

பிரான்சிஸ் ஃபாதர் பணக்காரக் குடும்பத்தைச் சேர்ந்தவர் என்று அவளுக்குத் தெரியும். ‘தற்போது அவர் தனியாக இருப்பதால், தன்னுடனான உறவு மேலும் தொடரக் கூடும் என்றும் தோன்றியது, தனது வீட்டின் வறுமையும் அவரது

உறவால் சற்று விலகும். மற்ற தங்கைகளையும் நல்லபடியாகத் திருமணம் செய்து அனுப்பவும் செய்யலாம்!' என்றெல்லாம் அவள் மனம் கணக்கிட்டது.

ஷேர்லி ஏற்கெனவே பர்னாண்டஸுக்கு அடிமையாகி விட்டிருந்தாள்.

சற்று நேரத்தில் லிஸி வந்தாள்.

"எங்கே போயிருந்தே லிஸி?"- ஷேர்லி கேட்டாள்.

"பசுமாட்டைப் பார்த்துக்கிட்டிருந்தேன், டீச்சர்".

"உட்கார். உன்னைப் பார்க்கிறதுக்குத்தான் வந்தேன். பாடமெல்லாம் ஒழுங்காகப் படிக்கிறே இல்லையா?"

"படிக்கிறேன் டீச்சர்".

"இப்ப டியூஷனுக்குப் போறாயா?"

"இல்லை டீச்சர்".

"ஏன்?"

"காரணம் ஒண்ணுமில்லை".

"நான் வந்தது உன்னோட படிப்பைப் பத்தித் தெரிஞ்சுக்கத்தான். அதுவுமில்லாம நான் இப்பத் தனியாத் தான் இருக்கிறேன்".

"ஏன் டீச்சர்?"

லிஸியின் தாயார் அதற்குள் காபியுடன் வந்தாள்.

"இப்பத் தனியா இருக்கிறது ரொம்பவும் கஷ்டமா இருக்கு. கூட யாராவது இருந்தா பேச்சுத் துணையாகவாவது இருக்கும்".

லிஸியின் அம்மா யோசித்தாள்.

'லிஸிக்கு இது ஒரு நல்ல சந்தர்ப்பம். டீச்சருக்குத் துணையாக இருந்ததாகவும் இருக்கும். பாடத்தில் சந்தேகம் ஏதாவது இருந்தால் கேட்கவும் செய்யலாம். எல்லாவற்றுக்கும் மேலாக ஆள் நடமாட்டமில்லாத வழியில் ஃபாதரைத் தேடி டியூஷனுக்கும் போக வேண்டாம்!'

"டீச்சர்! நீங்க தனியாத்தான் இருக்கீங்கன்னா, லிஸியை உங்ககிட்ட அனுப்பி வைக்கிறேன். அவளுக்கும் அது ஒரு வகையில் நல்லது. துணைக்குத் துணை; படிக்கிறதுக்கும் அது உதவும் இல்லையா?"

"லிஸியின் அப்பா வந்த பிறகு அவர்கிட்டயும் ஒரு வார்த்தை கேட்டுட்டு அனுப்பி வையுங்கம்மா!" - ஷேர்லி தந்திரமாகப் பேசினாள்.

"அதுக்கெல்லாம் அவங்க அப்பா எதுவும் சொல்ல மாட்டார். இதெல்லாம் மனுஷருக்கு மனுஷர் பண்ற ஒத்தாசை தானே? நல்ல விஷயம்கூட. இதுக்கெல்லாம் நல்லநாள் பார்க்கணுமா என்ன?"

அதே நேரம் கரியாச்சனும் அங்கு வந்து சேர்ந்தார். தன் மனைவியின் யோசனை நல்லதென்று அவருக்கும் தோன்றியது. அவரும் சம்மதித்தார்.

அன்று மாலை நேரத்தில் ஷேர்லி அங்கிருந்து புறப்பட்டாள். அவளுடன் லிஸியும் முதல் முறையாகத் துணைக்குப் புறப்பட்டாள்.

## 21

**ந**ள்ளிரவான போது பர்னாண்டஸ் சிவப்பு அங்கியை அணிந்து கொண்டு வெளியேறினான்.

மிகவும் கவனத்துடன் சுற்றுமுற்றும் பார்த்தபடி நடந்தான். தன் எதிரிகள் எங்காவது பதுங்கியிருக்கக்கூடும் என்ற உணர்வு அவனுள் இருந்தது. இனிமேல், தான் மேற்கொள்ளும் நடவடிக்கைகளில் எங்காவது சற்று கவனக்குறைவாக நடந்து கொண்டால்கூட, சிக்கிக் கொள்ளும் அபாயம் உள்ளது.

கல்லறையின் வெளிப்புறச் சுவரை ஒட்டியபடி நடந்தான். அன்னம்மா ஜேக்கப்பை எப்படியாவது அழிந்து விடவேண்டும் என்கிற வெறி அவனுள் ஏற்பட்டிருந்தது. தற்போது, அவள் மிகப்பெரிய ஆபத்தாக மாறியிருக்கிறாள்.

எந்த முறையில் அவளை இல்லாமல் செய்வது என்று தெளிவாகத் தெரியவில்லை. அவளை அழிக்க ஒரு வழி உள்ளது. ஆனால், தான் அதை மேற்கொள்ள முடியுமா? சிலுவை ஒன்றுதான் அதற்கு வழி. தான் எப்படி அதைத் தொட்டுக் கையாள முடியும்?

ஷேர்லியின் வீட்டுக்குப் போவதென்று தீர்மானித்துத் தான் புறப்பட்டான். ஒன்றிரண்டு நாட்களில் அவளுடன் ஏற்பட்ட உறவு, அவனுக்கு அவள்மீது ஒருவித அன்பையே ஏற்படுத்தியிருந்தது.

கல்லறை மைதானத்தின் வெளி வாசலருகே வந்த போது அன்னம்மா ஜேக்கப் நின்று கொண்டிருந்தாள்.

“நான் உங்கள் இருப்பிடத்துக்குத்தான் வந்து கொண்டிருக்கிறேன்!” - அவள் கூறினாள்.

“நான் அவசரமாக ஓரிடத்துக்குப் போக வேண்டி உள்ளது. என்னைத் தொல்லை செய்யாதே...” - அவன் தடுத்தான்.

“என்னை இப்படியே விட்டுட்டு நீங்கள் எங்கே போகிறீர்கள்? சும்மா கிடந்தவளை எழுப்பியது நீங்கள் தான்

என்பது ஞாபகமிருக்கிறது இல்லையா?"

"அதற்கு நான் என்ன செய்ய?"

"அப்படியானால் நீங்கள் என்னுடன் வந்தே தீர வேண்டும்!" - அவள், அவன் இரண்டு கைகளையும் பிடித்துக் கொண்டாள். அந்த கைகளுக்கு என்ன ஒரு சில்லிப்பு ... ஐஸ் கட்டி மாதிரி!

"விடு என்னை!" - அவன் கைகளை உதறினான்.

ஆனால், இரும்புக் கம்பியால் சுற்றிப் பிடித்திருப்பது போல் அவளது பிடி வலுவாக இருந்தது. அவன் அதிலிருந்து விடுபட முடியாமல் தவித்தான்.

அவன், அவளைப் பின் தொடர்ந்தான் - வேறு வழியில்லாமல்!

அவளது கல்லறையை நெருங்கிய போது அவள் அதன் மீது அமர்ந்தாள்.

அப்போது ஃபாதர் வின்சென்ட்டும் ரவீந்திரனும் சர்ச்சை ஒட்டிய நிழல் பகுதியில் மறைந்திருந்தனர்.

"எங்கே போகிறீர்கள்?" - அவள் பர்னாண்டஸிடம் கேட்டாள்.

"நான் செய்ய வேண்டிய பல வேலைகள் உள்ளன. ஒரு விஷயத்தை நீ ஞாபகம் வைத்துக் கொள்வது நல்லது. உன்னை எழுப்ப என்னால் முடிந்திருக்கிறது என்றால், மறுபடி உன்னைத் தூங்க வைக்கவும் என்னால் முடியும்!"

"அது உங்களது நினைப்பு. இனிமேல் யாராலும் என்னைத் தூங்க வைக்க முடியாது. அதன் காரணம் உங்களுக்குத் தெரியாததால் இப்படிப் பேசுகிறீர்கள்!"

"சரி, இப்போது உனக்கு என்னைத் தவிர வேறு யாராவது

கிடைத்தாலும் போதுமில்லையா?"

"போதும் ... மிகவும் தாகமாக உள்ளது!"

எப்படியாவது அவளைத் தவிர்க்க வேண்டுமென்று தோன்றியதால், அவன் ஒரு திட்டம் போட்டான். நெருக்கடியான ஒரு காலகட்டத்தில் லிஸியை சாத்தானுக்கு அர்ப்பணிக்காவிட்டால், தனது எதிர்காலமே ஆபத்தாகி விடும். பிசாசின் அடிமையாகி விட்ட தான், பிசாசை மகிழ்ச்சி படுத்தா விட்டால் தனக்கு என்ன நடக்குமென்றே புரியாமல் தடுமாறினான், ஏற்கெனவே, ஃபாதர் வின்செண்ட்டும், ரவீந்திரனும் தன்னைக் குறிவைத்துச் செயல்படுகின்றனர்.

பொதுமக்கள் முன்னிலையில் தன்னை சர்ச்சுக்குள் போகச் சொல்லி அழைத்தாலே கூட தனது குட்டு உடைந்து விடும் என்று அவனுக்குத் தெரியும். பிசாசுக்குச் சொந்தமான தென்று அர்ப்பணித்துள்ள தான் எப்படிச் சர்ச்சுக்குள் நுழைய முடியும்? மற்றொரு கசப்பான உண்மை, தான் ஒரு புரோகிதனே அல்ல; அந்தப் பெயரில் நடமாடும் ஆள்மாறாட்டக்காரன்!

எல்லாவற்றுக்கும் மேலாக, இப்போது தனக்குக் கிடைக்கும் எல்லா வகையான சுகங்களும் நஷ்டமடைந்து விடக்கூடாது என்றும் எண்ணினான். கொஞ்சம் எச்சரிக்கையாக நடந்து, சாத்தானின் நோக்கங்களை நிறைவேற்றினால், அதன் பரிசாக ஒரு வேளை மரணத்தைகூட வெற்றிகொள்ள முடியுமோ என்னவோ?

"நீங்கள் சொன்னது யாரை?" - அன்னம்மா ஜேக்கப் கேட்டாள்.

"எனது இருப்பிடத்தில் என் சமையற்காரன் இருக்கிறான். இளைஞனும் கூட. நேரடியாக அங்கே செல்!"

அந்த வார்த்தைகளைக் கேட்டதும் அவள், அவனைப்

பிடித்திருந்த பிடியை விட்டு விட்டு, கல்லறைக்கு வெளியே வந்தாள்.

அவள் கேட்டை தாண்டியவுடன் அவனும் விரைவாக அங்கிருந்து வெளியேறினான்.

"நாம் சீக்கிரமாக அவளைப் பின் தொடர வேண்டும் ... " ஃபாதர் வின்சென்ட், ரவீந்திரனிடம் கூறினார்.

"ஆமாம் ஃபாதர்! இல்லாவிட்டால், பாவம் அந்த அப்பாவி சமையற்காரனை அவள் கொன்று விடுவாள்! " - ரவீந்திரன் பதிலளித்தான்.

ரவீந்திரனும், ஃபாதரும் அவசர அவசரமாக கல்லறைச் சுவறைத் தாண்டி பர்னாண்டஸின் இருப்பிடத்துக்கு வந்தனர்.

லூக்கோ சுருண்டு படுத்திருந்தான்.

லேசான தூறல் போட்டதால், போர்வையைத் தலை முதல் கால் வரை இழுத்துப் போர்த்தியிருந்தான். ஏதோ சத்தம் கேட்கவே திடுக்கிட்டு விழித்தான். சமையற்கட்டும், படுக்கை அறையும் அவனுக்கு ஒன்றுதான்.

முன்னொரு காலத்தில் சர்ச் ஆகப் பயன்பட்ட கட்டடத்தின் பின்புறமிருந்த இரண்டு அறைகளில் ஒன்று, அந்தச் சமையலறை! இன்னொரு அறையை பர்னாண்டஸ் பயன்படுத்தினான்.

பர்னாண்டஸ் பெரும்பாலும் லூக்கோவுக்கு மது வகைகளைக் கொடுப்பது வழக்கம். அது உள்ளே இறங்கிவிட்டால், அதன் பிறகு பொழுது விடிவது வரை அவன் பிணம் போல் கிடப்பான். நல்ல வேளையாக இன்று அப்படி எதுவுமில்லை. எனவே, சட்டென்று விழித்துக் கொண்டான்.

ஆனால், போர்வையிலிருந்து தலையை வெளியே எடுக்காமல், அப்படியே படுத்துக் கிடந்தான். மறுபடியும் சத்தம்

கேட்டது.

தூறல் நின்று விட்டது. போர்வையின் அடிப்புற வழியாகப் பார்த்தபோது நிலவு வெளிச்சம் தெரிந்தது. மூன்றாவது தடவை சத்தம் கேட்டபோது லூக்கோ கேட்டான்:

"யாரது?"

பதில் வரவில்லை. அதற்கு பதிலாக ஜன்னலருகில் ஓர் உருவம் தெரிந்தது.

"யாரது?" உரத்த குரலில் மீண்டும் கேட்டான்.

"நான்தான். கதவைத் திற!" - ஒரு பெண் குரல் கேட்டது.

பிரான்சிஸ் ஃபாதரைப் பற்றி லூக்கோவுக்குத் தெரியும். அவரின் வீட்டு வேலைக்காரனாகவும் இருந்ததால் சிறு வயதிலிருந்தே அவரது குணம் அவனுக்குப் பழக்கமாகியிருந்தது. ஆனால், அதே நேரம் சர்ச்சிலிருந்து விலகியிருந்து சந்நியாச வாழ்க்கை வாழும் போது அவருக்குப் பெண்களுடனான நெருக்கம் அதிகமாயிருப்பதும் அவனுக்குத் தெரியும்.

ஆனால் அது, தான் கவலைப்பட வேண்டிய விஷயமில்லை. அவனிடம் சொல்லும் வேலையைத் தவிர வேறு எதிலும் அவன் தலையிடுவதில்லை. சொன்ன வேலையைச் செய்து, இருப்பதைச் சாப்பிட்டு, கிடைப்பதைக் குடித்துவிட்டுப் படுத்துத் தூங்குவதால் அவனது வாழ்க்கை ஓர் எல்லையுடன் ஓடிக் கொண்டிருக்கிறது.

'ஜன்னல் அருகில் நிற்பவள் ஃபாதரைத் தேடி வந்திருப்பவள். அவரைக் காணாததால் தன்னை எழுப்புகிறாள்!' என்று நினைத்தான். எனவே, எழுந்திருக்காமலே பதிலளித்தான்.

"ஃபாதர் இல்லையே!"

"நான் லூக்கோவைத்தான் தேடி வந்திருக்கிறேன்!"-

வந்த பெண் கூறினாள்.

அந்த பதில் அவனை புல்லரிக்கச் செய்தது. உடலெல்லாம் எதுவோ சட்டென்று பரவியது போல் தெரிந்தது. இன்று - இந்த நிமிடம் வரையில் அவன் எந்த ஒரு பெண்ணையும் நெருங்கியதில்லை. எனவே, அவளது வார்த்தைகள் அவனை ஒருவிதத்தில் மயக்கம் கொள்ள வைத்தன.

அவன் உடல் முழுவதும் ஒரு வித நடுக்கம் பரவியது.

“கதவைத் திறங்க லூக்கோ! ”

வெளியே நிற்கும் பெண்ணின் முகம் அவனுக்குத் தெளிவாகத் தெரியவில்லை. இருப்பினும் விரிந்து கிடந்த அவள் கூந்தலிலிருந்த முடியிழைகள், நிலவொளியில் தங்க இழைகள் போல் பளபளப்பதை கவனித்தான். காற்றில் நெருப்பு ஜுவாலைகள் அசைவது போல் அவனுக்குத் தெரிந்தது. சட்டென்று அந்த இடத்தில் ஏதோவொரு மணம் பரவியது.

லூக்கோ அந்த வாசனையைத் திரும்பவும் முகர்ந்து பார்த்தான். அது ஏதோ ஒரு வித மோசமான மணமாகத் தோன்றியது.

“என்ன ... இன்னுமா கதவைத் திறக்கலை?”

‘திறப்பதா, வேண்டாமா?’ என்ற தடுமாற்றத்தில் சற்று நேரம் அப்படியே கிடந்தான்.

அவள் திரும்பத் திரும்பக் கேட்கவே, பாவம் அவனுக்கே பரிவு தோன்றியது. எழுந்து சென்று கதவைத் திறந்தான்.

அவள் அவசர அவசரமாக அறைக்குள் நுழைந்தாள்.

லூக்கோ தீக்குச்சியை உரசி அதற்குள் விளக்கை ஏற்றினான்,

“விளக்கு எதற்கு ?”

“வந்திருக்கிறது யாருன்னு தெரிஞ்சுக்கத்தான்! ”

“இதுக்கு முன்னால் என்னைப் பார்த்திருக்க மாட்டீங்கன்னு நெனைக்கிறேன்”.

லூக்கோ அவளை உற்றுப் பார்த்தான்.

அவளை இதற்கு முன்பு எங்கோ பார்த்த நினைவு எழுந்தது.

அவளது இரவு உடையின் பட்டன்கள் ஒவ்வொன்றாகக் கழன்று விலகின. லூக்கோ முதன் முறையாக அப்போதுதான் ஒரு பெண்ணைப் பார்க்கிறான். அவளிடமிருந்து எழுந்த மணம் அவன் வயிற்றைக் குமட்டியது. மட்டமான ஏதோ ஒரு சென்ட்டின் வாசனை போலிருந்தது. ஆனால், அதை எப்படி அவளிடம் சொல்வது?

லூக்கோவுக்கு அது ஒரு புது அனுபவமாக இருந்தது. முதன் முதலாக ஒரு பெண்ணின் நெருக்கம். அவன் அதிலிருந்து சுயநிலைக்கு மீள்வதற்குள் அவள், அவன் கழுத்தை இறுக்குவதாகத் தோன்றியது. கூர்மையான அவன் கைவிரல் நகங்கள் அவன் மார்பை ஊடுருவ நெருங்கின.

அவன் வாய்விட்டு அலறினான்.

“அசையாதே!” - வெளிப்புறமிருந்து ஒரு குரல் கேட்டது.

லூக்கோவை ஆக்கிரமிக்க முயன்ற அன்னம்மா ஜேக்கப் சட்டென்று திரும்பிப் பார்த்தாள். வெளிப்புறம் ரவீந்திரன் நின்று கொண்டிருந்தான். லூக்கோவை விட்டு விட்டு அவள் ரவீந்திரனைப் பிடிக்கப் பாய்ந்தாள். ஆனால், அவனை நெருங்கியவுடன் சட்டென்று யாரோ பிடித்து நிறுத்தியது போல் சற்றுத் தூரத்திலேயே நின்றாள். அவன் உடம்பிலிருந்த மாந்திரீகத் தாயத்து அவளை எட்டி நிற்கச் செய்தது. சற்றுப் பின்வாங்க அவள் நகர்ந்த போதுதான் அவன் பக்கத்திலேயே ஃபாதர் வின்சென்ட் நிற்பதைக் கவனித்தாள். உடனே ஃபாதருக்கு நேராகப் பாய்ந்தாள்.

சட்டென்று பின்புறம் மறைத்து வைத்திருந்த வெள்ளிச் சிலுவையை எடுத்து அவளுக்கு நேராகக் காட்டினார் ஃபாதர்.

அவள் அதைப் பார்க்க விரும்பாதவளாக பட்டென்று முகத்தைத் திருப்பினாள். சற்று நேரம் என்ன செய்வது என்று புரியாமல் திகைத்துத் தடுமாறினாள். அவளது எந்த விதமான நடவடிக்கையையும் எதிர்த்துச் சமாளிக்க ஃபாதர் தயாராக நின்றிருந்தார்.

அன்னம்மா மீண்டும் ஃபாதரின் பக்கம் திரும்பினாள். சிலுவைதான் அவளுக்கு நேராகத் தெரிந்தது. உடனே திரும்பி, லூக்கோவை நெருங்கினாள். பைசாசிக சக்தியுடன் வந்தவள், லூக்கோவை ஒரு சருகுபோல் தூக்கி ஃபாதரின் மீது வீசியெறிந்தாள். ஃபாதர் சட்டென்று நிகழ்ந்த அந்தத் தாக்குதலில் ஒரு கணம் பின்புறமாகச் சரிந்தார். அவர் கையிலிருந்த சிலுவை எங்கேயோ தெறித்து விழுந்தது!

அதன் பிறகு அன்னம்மா ஜேக்கப் அந்த இடத்தில் நிற்காமல் ஓடத் தொடங்கினாள்.

கீழே விழுந்த ஃபாதர் உடனே எழுந்து சிலுவையை எடுத்துக் கொண்டார்.

ரவீந்திரனும், ஃபாதரும் அவளைப் பின் தொடர்ந்தனர்.

கல்லறைக் கேட்டை தாண்டி அவள், அவளது கல்லறையை நோக்கிப் பாய்வதை அவர்கள் கவனித்தனர். அவர்களும் விடாமல் பின்தொடர்ந்தனர்.

கல்லறையை நெருங்கியதும் அவள் மீண்டும் நின்று திரும்பிப் பார்த்தாள்.

"ஃபாதர்! அவள் நின்று கொண்டிருக்கிறாள். இது அவளது சாம்ராஜ்யமாயிற்றே?"

"எது வந்தாலும் சரி. இனிமேல் அவள் கல்லறையை விட்டு மேலெழும்ப முடியாதபடி அடக்கம் செய்து

விடவேண்டியதுதான்! "

இருவரும் அவளை நெருங்கினர்.

நிலவொளியில் பைசாசிகமான அந்த முகத்தை ஃபாதர் கவனித்தார். அவளது பார்வை பயமேற்படுத்துவதாக இருந்தது. அவளின் கைவிரல் நகங்கள் கூர்மையாக நீண்டிருந்தன. நகங்களால் ஃபாதரைத் தாக்க, கைகளை நீட்டினாள்.

சமயம் பார்த்துக் கொண்டிருந்த ஃபாதர், தன் கையிலிருந்த வெள்ளிச் சிலுவையை அவள் கழுத்தை நோக்கி எறிந்தார். அவள் அசைந்ததால், அந்தச் சிலுவை அவள் மார்பில் ஒரு கடப்பாரை மாதிரிப் பாய்ந்தது. அவள் வேதனையில் அலறினாள்.

எவரையும் பயப்படுத்தக்கூடிய விதத்தில் அந்த உடல் நெளிந்து துடித்தது. அந்தச் சிலுவை மேலும் மேலும் அவளது உடம்புக்குள் ஆழ்ந்து இறங்கிக் கொண்டிருந்தது. கடைசியில் ஒரு வகையாகத் தளர்ந்து அந்த உடல் கல்லறைக்குள் விழுந்தது. அதன் பிறகு எந்த விதமான சத்தமும் எழும்பவில்லை!

"அவளது ஆட்டம் முடிந்து விட்டது. இனிமேல் எப்படிப்பட்டவனாலும் அவளை எழுப்ப முடியாது!" என்றார் ஃபாதர்.

அதன் பிறகு இருவரும் சேர்ந்து அந்தக் கல்லறையின் ஸ்லாப்பைப் பழையபடி மூடி, சரிப்படுத்தினர். பின்னர் வெளியே வந்தனர்.

சர்ச்சின் பக்கமாக நடந்தனர்.

"இத்துடன் எல்லாம் தீர்ந்து விடவில்லை!" ஃபாதர் கூறினார்.

"உண்மைதான் ஃபாதர்! பிரான்சிஸ் ஃபாதர் மனித

வடிவில் ஒரு பிசாசாக உலவும் காலம் வரையில், இது போன்ற எத்தனையோ பிரேதாத்மாக்களை அவர் எழுப்பத் தான் செய்வார்! ”

வின்செண்ட் ஃபாதர் ஏதே ஒரு யோசனையில் ஆழ்ந்தார். பிறகு பேசினார்: “ரவி, இப்படிப்பட்ட சக்திகள் அவருக்கு எங்கிருந்து கிடைக்கின்றன என்பதைக் கண்டு பிடித்தால் தான், நாம் இதை முழுவதுமாகத் தடுத்து நிறுத்துவது பற்றி யோசிக்க முடியும்! ”

“அதை எப்படி ஃபாதர் கண்டுபிடிப்பது? ”

“நானும் அதைப் பற்றித்தான் வெகுநாளாக யோசிக்கிறேன். இந்தச் சக்தியின் ஊற்றை நாம் கண்டு பிடிக்க வேண்டும். இல்லாவிட்டால் நமக்கும் அது ஆபத்து தான்! ”

“உண்மைதான் ஃபாதர். நாம் நினைப்பதை விடபிரான்சிஸ் ஃபாதரின் சக்தி மிகவும் அதிகம். அதுவும் பைசாசிகமான சக்திகள்! ”

“ஒப்புக் கொள்கிறேன். இந்த சக்தி நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டே இருக்கும். கடைசியில் நாம் மனத்தில் என்ன நினைக்கிறோமோ, அதையும் தெரிந்து கொள்ளும் ஆற்றல் அவருக்குக் கைவரலாம். அதற்குத் துணையாக மோசமான பிறவிகளான ஆந்தை, வெளவால் போன்றவற்றையும் அவர் பயன்படுத்திக் கொள்ளலாம். ஒரு கால கட்டத்தில் அவற்றின் வேடத்திலேயே அவர் உருமாறி நம்மிடையே வரவும் சாத்தியம் உள்ளது”.

“நீங்கள் சொல்வதைப் பார்த்தால் மிகவும் ஆபத்து என்று தான் தோன்றுகிறது. பிரான்சிஸ் ஃபாதரின் இருப்பிடத்தை நாம் ஆராய வேண்டும். இரவு நேரத்தில் நமது வேலையை அந்த இடத்திலேயே வைத்துக் கொள்ள வேண்டும். அதற்குத் துணையாக லூக்கோவைக் கைக்குள் போட்டுக் கொள்ள முடியுமா என்று பார்க்கிறேன் ஃபாதர்! ”

ரவீந்திரன் தனது வீட்டுக்குப் புறப்பட்டான்.

"இந்த நேரத்துல வீட்டுக்குப் போகணுமா என்ன?" ஃபாதர் கேட்டார்.

"இதுக்கெல்லாம் பயந்துட்டே இருந்தா அப்புறம் பொழைக்கவே முடியாது ஃபாதர்! " - ரவீந்திரன் நடக்கத் தொடங்கினான்.

அவன் இருளில் மறைவது வரை ஃபாதர் அவனையே பார்த்துக் கொண்டிருந்தார். ரவீந்தினுக்குப் பின்னால் யாரோ நடந்து போவது போல் சட்டென்று பாதருக்குத் தோன்றியது!

## 22

**அ**து யார் என்று தெரிந்து கொள்ளும் ஆவல் ஃபாதர் வின்சென்ட்டுக்கு எழுந்தது. இருப்பினும், நாலு தப்படிகள் நடந்தவர், தனது எண்ணத்தை மாற்றிக் கொண்டார்.

'ரவீந்திரன் அப்படியெல்லாம் சுலபத்தில் ஏமாந்து விடக்கூடியவன் அல்லன். இருந்தாலும் இந்த அகாலத்தில் அவனைத் தொடர்வது யாராக இருக்கும்?' என்று ஒரு சிறிய சந்தேகம் அவரைக் குடையாமலும் இல்லை.

தன்னை யாரோ பின்தொடர்கிறார்கள் என்ற உணர்வு ஏற்பட்டதும் ரவீந்திரன் சட்டென்று நின்றான். அது வரை அவனைத் தொடர்ந்து வந்த மெல்லிய காலடி ஓசையும் உடனே நின்றது.

திரும்பிப் பார்க்காமல் சற்று நேரத்துக்குப் பிறகு மீண்டும் நடக்கத் தொடங்கினான். திடுமென்று திரும்பிப் பார்த்தான்.

மங்கலான வெளிச்சத்தில் நீண்ட கோட் அணிந்த ஓர் உருவம் தட்டுப்பட்டது.

"ஃபாதர் பிரான்சிஸ்!" - ரவீந்திரன் தன்னையும் மீறிக் கூவினான். அடுத்த விநாடி வலுவான ஒரு காற்று முன்புறத்திலிருந்து வீசியது... பயங்கரமான காற்று!

ஓர் இரும்புத் தகடால் தள்ளுவதைப் போல் இருந்தது காற்றின் விசை.

ரவீந்திரனால் தரையில் காலூன்றி நிற்க முடியவில்லை. எந்த விநாடியிலும் தான் பின்புறமாக வீசியெறியப் படலாம். அங்கேயே அந்தப் பிசாசு நின்று கொண்டிருக்கிறதே!

சற்று நேரத்துக்குள் அங்கு அரண்ட வெளிச்சம் பரவியது.

பிரேதாத்மாகாரமான அந்த வெளிச்சத்தில் தனக்கு முன்பாக, காற்றுடன் சேர்ந்து சிவப்பு நிற அங்கியின் இரண்டு புறமும் ஒரு பெரிய வௌவாலின் இறகுகளைப் போல் விரித்துக் கொண்டு பறந்து வந்தது அந்தப் பைசாசிகமான உருவம்!

அடித்துக் கொண்டிருந்த காற்று ஒரு கோட்டைச்சுவர் மாதிரி ரவீந்திரனைத் தடுத்தது.

ரவீந்திரன் சற்றும் தயங்காமல் தன் இடுப்பிலிருந்த தாயத்தை அவிழ்த்து எடுத்தான்.

தீப்பொறி பறக்கும் ஓர் அஸ்திரம் மாதிரி அது பர்னாண்டஸை நோக்கிப் பாய்ந்து சென்றது.

நெருப்பாலான ஒரு மதில்!

**ப**ர்னாண்டஸ் ஒரு விதமாகத் தனது இருப்பிடத்தை அடைந்தான். அவன் மனம் ஒரே பரபரப்பிலிருந்தது. நிம்மதியற்றுத் தவித்தான். இந்த நிலை நீடிக்குமானால், தான்

விரைவிலேயே அழிந்து விடுவோம் என்று அவனுக்குத் தோன்றியது.

அவன் தனது மாந்திரீகப் புத்தகத்தைப் புரட்டினான். லூஸிஃபரின் தெளிவற்ற படத்தைப் பிரித்து, பருமனான ஒரு மெழுகுவத்திக்கு முன்னால் வைத்த பிறகு, பேனாக் கத்தியை எடுத்தான்.

“இந்தா! நான் உனக்கு ரத்தம் சொரிகிறேன். எனக்கு மேலும் சக்தியைத் தா. இல்லாவிட்டால் அவர்களிடம் நான் தோல்வியடைந்து விடுவேன். என்னால் அதை நினைத்துப் பார்க்கவே முடியவில்லை!” - பர்னாண்டஸ் தன் இடக்கையின் சுண்டு விரலை ஒரே வெட்டில் துண்டாக்கிக் கீழே போட்டான்.

ரத்தம் சொட்டிக் கொண்டிருந்தது

ஆனால், பீய்ச்சி அடித்த ரத்தத்தின் ஒரு சொட்டு கூடத் தரையில் விழவில்லை. அது காற்றுடன் கலந்து விட்டது போல் மறைந்தது.

“பர்னாண்டஸ்... முட்டாள் தனமாகச் செயல்படாதே. நான் சொல்வதைக் கேள். முதலில் அந்த விரலை எடுத்து உன் கையில் ஒட்ட வை. ரத்தம் எனக்குப் போதும்”.

சாத்தானின் குரலைக் கேட்ட பர்னாண்டஸ், விரலை எடுத்து அதன் இடத்தில் பொருத்தினான். அது பழையது போலவே பொருந்திக் கொண்டது.

“நீ இதுவரை தோல்வியடையவில்லை. தைரியத்தை இழக்காதே. நீ கேட்டுக் கொண்டபடி உனக்குக்கூடுதல் சக்தி வழங்கியுள்ளேன். இந்த விநாடி முதல் நீ எந்த இடத்துக்குள்ளும் நுழைய உன் உடம்பு ஒரு தடையாக இருக்காது. ஒரு சாவித்துவாரம் வழியாகக் கூட நீ நுழையலாம். நூலிழை போன்ற கதவின் இடைவெளி கூட நீ நுழையப் போதுமானது!”

பர்னாண்டஸ் மகிழ்ந்தான்.

"அது மட்டுமில்லை பர்னாண்டஸ்! இனிமேல் நீ எந்த வடிவமும் எடுக்கலாம். நீ விரும்பினால், ஓநாய், வௌவால் போன்ற உயிர்களாக மாறலாம். எல்லாவற்றுக்கும் மேலாக பயங்கரமான சக்தியையும், வேகத்தையும் வழங்குகிறேன். ஆனால், ஒரு விஷயத்தை நினைவில் வைத்துக் கொள். நீ வடிவம் மாறியுள்ளபோது ஏதாவது சிக்கலில் மாட்டிக் கொண்டால், தப்பிப்பது கடினமாக இருக்கும்! "

"அப்படியா!"

"ஆமாம். அதே போல் சர்ச், சிலுவை போன்றவற்றை ஒரு போதும் நீ நெருங்கக்கூடாது. இதில் மிகவும் எச்சரிக்கை தேவை!"

சாத்தான் மறைந்தது.

சாத்தானின் வார்த்தைகளால் பர்னாண்டஸ் மிகவும் மனம் மகிழ்ந்தான்.

**ம**றுநாள் விடியற்காலையில் சங்குவாரியரைச் சந்தித்த ரவீந்திரன், முந்தைய நாள் நடந்ததை அவரிடம் விவரித்தான். அவர், அதையெல்லாம் கவனமாகக் கேட்டுக் கொண்டார்.

"ஓகோ... அப்படியா விஷயம்? அப்படியானால் நாம் ஒரு வித்தை செய்யவேண்டியதுதான். இன்று இரவு எட்டு மணியளவில் என்னை வந்து பார் ரவீந்திரன். நான் ஒரு மாற்று ஏற்பாடு செய்கிறேன்! " - சங்கு வாரியார் கூறினார்.

அங்கிருந்து புறப்பட்ட ரவீந்திரன், நேராக சர்ச்சுக்கு வந்தான். ஃபாதரிடமும் நடந்ததையெல்லாம் விவரித்தான்.

"நீ சொல்வதைப் பார்த்தால் பிரான்சிஸுக்கு பயங்கரமான சக்திகள் கைவரப் பெற்றுள்ளது என்பது தெளிவாகிறது. மேற்கொண்டு நாம் மிகவும் எச்சரிக்கையுடன் செயல்பட

வேண்டும்!" ஃபாதர் கூறினார்.

"அது மட்டும் பத்தாது ஃபாதர். சரியான தருணத்தில் நாம் அவரை மடக்கவும் வேண்டும். நாம் மேற்கொண்டு என்ன செய்வோம் என்பதைக் கூட யூகித்து அறியும் வல்லமை அவருக்கு வந்திருக்கலாம். ஆனால், அன்னம்மா ஜேக்கப்பின் முடிவு இன்னும் அவருக்குத் தெரியவில்லை என்று தோன்றுகிறது!" - ரவீந்திரன் நினைவூட்டினான்.

"உண்மைதான். அதையும் தெரிந்து கொண்டால், ஃபாதர் பிரான்சிஸின் கோபம் அதிகரிக்கும்".

**அ**ன்று மாலை நேரத்தில் விளக்கு ஏற்றிய பிறகு ஷேர்லி கட்டுரை நோட்டுகளைத் திருத்திக் கொண்டிருந்தாள்.

கேட் அருகே யாரோ வந்து நிற்பது போல் தோன்றவே, வெளியே வந்தாள்.

யாரோ ஓர் இளம் பெண் நின்று கொண்டிருந்தாள். குத்து மதிப்பாகப் பதினைந்து வயது மதிப்பிடலாம்.

"யாரம்மா நீ?" ஷேர்லி கேட்டாள்.

"கொஞ்சம் தூரத்தில் இருந்து வர்றேன். ஏழாவது படிக்கிறேன். கூடப்படிக்கிற ஜானிங்கிறவனோட வீட்டைத் தேடி வந்தேன். அவங்கல்லாம் ஊருக்குப் போயிருக்காங்கன்னு அங்கே இருக்கிற பாட்டியம்மா சொன்னாங்க!" - அவள் தயங்கித் தயங்கிப் பேசினாள்.

"நீ இங்கே வந்தது எதுக்காக?" - டீச்சர் கேட்டாள்.

"அந்தப் பாட்டி சொன்னாங்க. பக்கத்திலேயே ஒரு டீச்சர் வீடு இருக்குது. அவங்களும் பாவம் துணைக்கு யாரும் இல்லாமக் கஷ்டப்படுறாங்கன்னு. அந்த இடத்தில் யாரோ ஒருத்தன் பீடி பிடிச்சபடி என்னையே பார்த்துட்டிருந்தான் அது தான்..."

"அவ்வளவுதானா?" -டீச்சர் ஒரு தீர்மானத்துக்கு வந்தாள். வயது வந்த பெண் ஒருத்தி, இளைஞனுக்கு பயந்து

போய் அடைக்கலம் தேடி வந்திருக்கிறாள். எனவே பாட்டியம்மா, தனது பெயரைச் சொல்லி அனுப்பி வைத்திருக்கிறாள்.

"சரி... சரி உள்ளே வாம்மா! நீ ஏதாவது சாப்பிட்டாயா?" என்று விசாரித்தபடி வரவேற்றாள்.

"பாட்டியம்மா சாப்பாடு போட்டாங்க! "

"உனக்குப் பசிச்சா ஏதாவது சாப்பிடு". டீச்சர் அந்தப் பெண்ணைத் தலை முதல் கால் வரை உற்றுப் பார்த்தபடி கூறினாள். மண்ணெண்ணெய் விளக்கு வெளிச்சத்தில் அவள் உடம்பின் செழுமை தெரிந்தது.

உயர்ந்த மார்பிடங்கள். உடைகளுக்கு நடுவே தெரிந்த இடுப்புப் பிரதேசம். அழகான தொப்புள் கொடி.

கவர்ச்சியான கண்கள். சிவந்த கன்னங்கள். ஏனோ சட்டென்று அவளுக்கு ஃபாதர் பிரான்சிஸ் ஞாபகத்துக்கு வந்தார்.

லிஸிக்குப் பதிலாக அதே போன்ற மற்றொரு பெண்.

'இவளை... ஃபாதரிடம் ஒப்படைத்தால் அவர் மீண்டும் எனக்கு உதவுவார். அது மட்டுமல்ல, அவரை மகிழ்ச்சிப் படுத்தா விட்டால் அது ஆபத்தும் கூட! ' என்று எச்சரித்தது அவள் மனம்.

"நீ வந்தது கூட ஒரு வகையில் நல்லதுக்குத்தான். சரி நான் ஓர் இடம் வரைக்கும் போக வேண்டி இருக்கு. உடனேயே வந்திடுறேன். இங்கேயே இருக்கிறியா? என்ன?" - ஷேர்லி, புதிய பெண்ணிடம் கேட்டாள்.

"நானும் உங்க கூடவே வர்றேனே!"

"சரி... புறப்படு".

மண்ணெண்ணெய் விளக்கை அணைத்த பிறகு

வீட்டைப் பூட்டிக் கொண்டு இருவரும் ஒன்றையடிப் பாதையில் நடக்கத் தொடங்கினர்.

தன்னுடன் வரும் பெண் அந்த இருட்டு வேளையிலும் பயமில்லாமல் தனக்கு முன்பாக நடப்பதை கவனித்த ஷேர்லி கேட்டாள்: "உனக்கு இந்த இடமெல்லாம் ஏற்கெனவே பழக்கமா?"

"இங்கேயெல்லாம் முன்னாடியே வந்திருக்கேன் டீச்சர்!"

இருவரும் கல்லறை மதிலை ஒட்டியுள்ள பாதையில் நடந்து, பர்னாண்டஸின் இருப்பிடத்தை அடைந்தனர்.

லூக்கோதான் கதவைத் திறந்தான்.

"ஃபாதர் இல்லையா?" - ஷேர்லி கேட்டாள்.

லூக்கோ, டீச்சருடன் வந்த பெண்ணைத் தலை முதல் கால் வரை ஒரு தடவை பார்த்து விட்டு மௌனமாக உள்ளே போனான். சற்று நேரத்தில் ஃபாதர் பிரான்சிஸ் வெளியே வந்தார்.

அந்தப் புதிய பெண்ணைப் பார்த்ததும் அவன் முகம் மகிழ்ச்சியால் மலர்ந்தது.

"வாம்மா உள்ளே வந்து உட்கார். யார் இந்தப் பொண்ணு? கெட்டிக்காரியா இருக்கிறாளே!" பர்னாண்டஸ் கேட்டான்.

"என்னோட வீட்டுக்கு வந்த ஒரு விருந்தாளி. இந்தப் பொண்ணு என் வீட்டிலயிருந்து எதுவும் சாப்பிடவே இல்லை. உங்ககிட்ட நல்ல ஒயின் இருக்கே. இவளுக்குக் கொஞ்சம் கொடுங்களேன்!" - ஷேர்லி கூறிய வார்த்தைகளின் உட்பொருள் பர்னாண்டஸுக்குத் தெளிவாகப் புரிந்தது.

ஷேர்லியுடன் வந்திருப்பவள், அவளது உறவுக்காரப் பெண் அல்லவென்பதையும் தனக்காகவே அவளை இங்கு

அழைத்து வந்திருப்பதையும் பர்னாண்டஸ் உணர்ந்து கொண்டான்.

உடனே உள்ளே போன பர்னாண்டஸ், ஒயினுடன் மற்றும் ஏதோ ஒரு மதுவையும் கலந்து எடுத்து வந்தான்.

“இந்தாம்மா, சாப்பிடு....” அன்புடன் கொடுப்பது போல் அவளிடம் நீட்டினான்.

அவள் அதை வாங்கி மெதுவாகக் குடித்தாள். அப்போதும் அவள் முகத்தில் எந்த விதமான பாவபேதமும் ஏற்படவில்லை.

“இதுக்கு முன்னால் இதைக் குடிச்சிருக்கியாம்மா?” - அவன் கேட்டான்.

“கள்ளு குடிச்சிருக்கேன். கள்ளும் இளநீரும் கலந்து!” - அவள் பதிலளித்தாள்.

சற்று நேரத்துக்குள் அவள் பின்புறமாகச் சரிந்தாள், பர்னாண்டஸ், அவளைத் தாங்கிப் பிடித்தபடி படுக்கையறைக்கு விரைந்தான்.

“ஷேர்லி, நீ புறப்படும்மா. டேய் லூக்கோ, டீச்சரைக் கொண்டு போய் அவங்க வீட்ல விட்டுட்டு வந்துடு!” - பர்னாண்டஸ் கட்டளையிட்டான்.

லூக்கோ, எஜமான் சொல்லுக்குக் கட்டுப்பட்டவனாக டீச்சருடன் புறப்பட்டான்.

“டீச்சர் நானும்...” - வழியில் லூக்கோ, டீச்சரிடம் பேச்சுக் கொடுத்தான்.

“என்ன லூக்கோ?”

“நானும்... ஒரு...”

“லூக்கோ என் வீட்டிலயே படுத்துக்கங்க. என்ன?” -

டீச்சரின் வலக் கை லூக்கோவின் தோளில் அமர்ந்தது. அவன் உடல் சிலிர்த்தது.

வீட்டை அடைந்த பிறகு, நைட் கவுன் அணிந்து லூக்கோவின் முன்பாக வந்தாள் அவள்.

லூக்கோவுக்கு முந்தின நாள் இரவு சம்பவம் ஞாபகம் வந்தது.

"நீங்க உண்மையான டீச்சர்தானா?" லூக்கோ கேட்டான்.

"நான் யாருன்னு உனக்குத் தெரியணுமா?" என்றபடி அவனைப் பலவந்தமாக இழுத்துக் கட்டிலில் படுக்க வைத்தாள். அவள் கை அவன் மார்பில் அளைந்தது.

லூக்கோ மகிழ்ச்சியால் மதிமறந்தான். ஷேர்லி மெதுவாக அவனைக் கட்டியணைத்தாள். வெண்ணெயில் தலைமுடி இழுபடுவது போல லூக்கோ, அவளில் ஒன்றினான்.

அதே நேரம் புதிதாகத் தன்னிடம் வந்த இரையை எப்படிக் கையாள்வது என்று யோசித்துக் கொண்டிருந்தான் பர்னாண்டஸ். மயங்கிப் படுத்திருப்பவளிடம் எப்படி நடந்து கொள்வது?

"ஏம்மா..." - அவன் மெதுவாக அழைத்தான்.

அவளின் கண்கள் திறந்தன. தூக்கக் கலக்கத்துடன் பார்ப்பது போல் அவனைப் பார்த்தாள்.

அவளின் அரைக்கண் பார்வை அவனுக்கு மிகவும் பிடித்துப் போனது.

"உனக்குப் புழுக்கமாக இல்லையா?"

"ஆமாம்...." - கட்டிலில் படுத்தபடியே முனகியவள் வசீகரமாகச் சிரித்தாள்.

பர்னாண்டஸின் கைகள், அவளது ஆடைகளை

நெகிழ்த்திக் களைந்தன.

கண்ணுக்குத் தெரியாத ஏதோ ஒரு கலைஞன் வடித்தெடுத்த ஒரு பளிங்குச்சிலை மாதிரி அவள், அவன் முன்பாகப் படுத்திருந்தாள்.

பர்னாண்டஸின் கைகள் அவளைத் தழுவின.

சட்டென்று அவன் கண்களின் நிறம் மாறியது. உடம்புக்கு ஒரு பிரத்தியேக சக்தி கைவந்தது. உடம்பிலிருந்த சிவப்பு அங்கியை அவிழ்த்து மேற்புறம் வீசினான்.

"உன் பெயர்?"

"நீலி! " - அவள் சொன்னாள்.

"நல்ல பெயர்!" - பர்னாண்டஸ், அவளைக் கழுத்தைச் சரித்துப் பார்த்தான்.

அந்தக் கழுத்தில் கறுத்த கயிறில் கோத்த ஒரு தாயத்து மட்டுமே இருந்தது.

தனது எதிராளியான சிலுவை, அவள் உடலில் எங்காவது கிடக்கிறதா என்று பர்னாண்டஸ் பார்த்தான். அப்படி எதுவும் இல்லையென்று தெரிந்ததும் அவனுக்கு மகிழ்ச்சியாக இருந்தது.

"இதுக்கு முன்னால..."

'இல்லை' என்பது போல் அவள் தலையாட்டினாள்.

'பரவாயில்லை. இனி வெளியே கிடைக்காவிட்டால் கூட இவளை வைத்தே நமது காரியங்களைச் சாதித்துக் கொள்ளலாம். இவளைச் சாத்தானுக்குக் கொடுத்து விட்டால், தனது நோக்கம் நிறைவேறி விடும். தனக்கு மரணமேயில்லாத ஒரு நிலை ஸித்திக்கும். இந்த இடம் அலுத்துப் போனால் வேறொரு புதிய இடத்துக்கும் போகலாம்!'

"நீ எத்தனாவது படிக்கிறே?" - அவளைத் தழுவிய படி கேட்டான்.

"படிக்கலை!"

"என்ன வயசாச்சு?"

"பதினாறு..."

'கெட்டிக்காரப் பெண்தான்!' பர்னாண்டஸிஸ் மனதுக்குள் சிலகித்தான். தனது வாழ்க்கையின் இன்றைய நாளை மறப்பதற்கில்லையென்றுநினைத்தவனாக அவளை முத்தமிட்டான்.

அவள் உடம்பில் பாலைப் பூவின் மணம் வீசியது.

பர்னாண்டஸின் மூச்சுக் காற்று அடிக்கடி அவள் கன்னத்தில் பதிந்தது.

சட்டென்று அவளிடம் ஏதோவொரு மாற்றம் தெரியவே, தலையை உயர்த்தி பார்த்தான்.

அவள் கண்கள் பளபளத்தன.

அவள் வாயிலிருந்து -

புலி நகம் போன்று நீண்டு வளைந்த பற்கள் வெளி வந்தன. தான் வஞ்சனையில் அகப்பட்டிருக்கிறோம் என்பதை உணர்ந்து, அவளிடமிருந்து விலகி எழ முயன்றான் பர்னாண்டஸ்.

கீழ்ப்புறம் - அவள் மார்பகங்களுக்கு நடுவில் - எலும்புகளுக்கு நடுவே துடிக்கும் இதயம் தெரிந்தது.

சட்டென்று அவள் அசைந்தாள்.

இப்போது பர்னாண்டஸ் கீழே அகப்பட்டுக் கொண்டான்.

மேற்புறம் விழியுயர்த்திப் பார்த்தான்.

ரத்தம் சொட்டும் அவள் இதயம் கீழ்ப்புறமாகத் தொங்கியது.

அவளின் கூர்மையான - வளைந்த பற்கள் அவனை நோக்கி நெருங்கின. பர்னாண்டஸ் பயந்து நடுங்கினான்.

அப்போதுதான் சாத்தான் தனக்கு நல்கியிருந்த புதிய வரம் நினைவுக்கு வந்தது. தான் நினைத்த நேரத்தில் எந்த வேடமும் ஏற்க முடியும். ஓநாயாகவும், வௌவாலாகவும் மாறலாம்!

பர்னாண்டஸின் படுக்கையறையில் இதெல்லாம் நடந்து கொண்டிருந்தபோது சங்கு வாரியரும், ரவீந்திரனும் வெளிப்புறமாக ஜன்னலுக்கு அருகே அங்கு நின்று கொண்டிருந்தனர்!

## 23

“இந்தத் தடவை அவனால் தப்பிக்க முடியாது. கண்டிப்பாக அது நடக்காது!” சங்கு வாரியர் தாழ்ந்த குரலில் கூறினார்.

அப்படித்தான் நடக்கப் போகிறதென்று ரவீந்திரனும் நினைத்தான்.

அன்று பகல் முழுவதும் மாந்திரீகனான சங்கு வாரியர், ஏராளமான ஓலைச்சுவடிகளை எடுத்துப் புரட்டினார். கடைசியாக ஓர் ஓலையிலிருந்து ஒரு பெயரைத் தேர்ந்தெடுத்து, பன்னிரண்டு சேவல்களை பலியிட்டு ‘கரும்பனங்காட்டு நீலி’யை ஆவாஹம் செய்து வரவழைத்தார்.

பயங்கரமான வடிவம் வாய்ந்த அவள், வாரியருக்கு

உதவுவதாக வாக்களித்தாள்.

வாரியரின் கட்டளைப்படியே நீலி, ஷேர்லியின் இருப்பிடத்துக்குப் போனாள். கண்டிப்பாக ஷேர்லி, அவளை பர்னாண்டஸிடம் அழைத்துப் போவாள் என்று இருவருமே நினைத்தனர்.

எதிர்பாராத அந்தச் சந்தர்ப்பத்தில்தான், தான் திட்டமிட்டுச் சிக்க வைக்கப்பட்டிருக்கிறோம் என்பதை பர்னாண்டஸ் உணர்ந்தான், சட்டென்று வடிவம் மாறலாமா என்று கூட ஒரு கணம் நினைத்தான். ஒரு வேளை அது வேறு வகையான ஆபத்தை வரவழைக்கலாம் என்று கருதி, அந்தத் திட்டத்தை உடனே கைவிட்டான்.

ஆனால், பர்னாண்டஸ் அந்தக் கணத்தில் கண்டிப்பாக ஏதாவது செய்தாக வேண்டும். அவளின் பைசாசிகமுகம் அவனை நெருங்கிக் கொண்டிருக்கிறது!

பர்னாண்டஸ் தன் வலக் கையால் அழுத்தமாகப் படுக்கையில் கீறினான். உடனே கட்டிலுடன் சேர்ந்து படுக்கையே இரண்டாக பிளந்தது, சட்டென்று கட்டிலுக்கு அடிப்பக்கம் பாய்ந்து உருண்டான் பர்னாண்டஸ். அப்படியே தனது அற்புத சக்தி வாய்ந்த மந்திரப் புத்தகத்தைக் கையில் எடுத்துக் கொண்டான்.

அதை அவளுக்கு நேராக நீட்டினான்.

அந்தப் புத்தகத்திலிருந்து சிவந்த தீ ஜுவாலைகள் உயர்ந்தன. அவை அவளைச் சூழ்ந்து கொண்டன.

அந்த அறைக்குள் தலைமுடியும் எலும்பும் எரியும் கடுமையான துர்நாற்றம் எழும்பியது. 'தான் வெற்றி பெற்று விட்டோம்' என்பதை உணர்ந்த பர்னாண்டஸ் அந்த அறையிலிருந்து வெளியே வந்தான்.

ஜன்னலுக்கு அருகே இரண்டு நிழல்கள் தட்டுப் பட்டன. பர்னாண்டஸ் அந்த நிழல்களை நோக்கிப் பாய்ந்தான். தான்

தரையில் இல்லாமல் சற்று உயரத்தில் மிதந்து கொண்டிருப்பதாக அப்போது பர்னாண்டஸுக்குத் தோன்றியது.

சங்கு வாரியார் அவசர அவசரமாக ரவீந்திரனின் கையைப் பிடித்து கீழ்ப்புறமாகத் தாழ்த்தினார்.

பர்னாண்டஸ் அவர்களுக்கு நேராக ஓங்கிய கை பட்டு, அங்கிருந்த ஜன்னலின் மரச்சட்டங்கள் நொறுங்கி விழுந்தன.

ரவீந்திரன் அந்த விசையைப் பார்த்துத் திடுக்கிட்டுப் போனான். ஆனால், சங்கு வாரியார் கொஞ்சமும் அசரவில்லை. சற்றுப்பின்வாங்கிச் சாய்ந்த அவர், தன் தலையிலிருந்து நாலைந்து முடிகளைப் பிடுங்கி நாக மந்திரம் ஜபித்து அதை பர்னாண்டஸின் மீது எறிந்தார்.

ஆகாயத்தில் - அந்தரத்தில் வளர்ந்து வரும் வெள்ளி மின்னல்கள் போல் அந்த முடிப் பாம்புகள் அவனை நோக்கி ஊர்ந்தன.

பர்னாண்டஸ் உடனே அங்கிருந்து பின்வாங்கினான்.

படுக்கையறையின் பின்புறமிருந்த கதவைத் திறந்து சமையல் கட்டைத் தாண்டி இருட்டுக்குள் இறங்கினான் அவன்.

இருட்டில் தன்னை எவராலும் ஒன்றும் செய்ய முடியாது என்று பர்னாண்டஸ் திடமாக நம்பினான்.

"வாங்க நாம கிளம்பிடலாம்!" - ரவீந்திரன், சங்கு வாரியரை அழைத்தான்.

அவர்கள் வீட்டுக்கு வந்தனர்.

"என்னங்க, சட்டுன்னு பின்வாங்கிட்டீங்க?" ரவீந்திரன் கேட்டான்.

"அதற்குக் காரணம் உண்டு. அதை நான் அப்புறமாகச் சொல்கிறேன்!" - வாரியர் வீட்டுக்குள் நுழைந்து தனது மேல்

துண்டைக் கொடியில் போட்டு விட்டுத் திரும்பி வந்தார்.

அவர் தலையிலிருந்து ரத்தம் வடிந்து கொண்டிருந்தது.

"என்னங்க ரத்தம்?" - ரவீந்திரன் சுட்டிக் காட்டியபடி கேட்டான்.

"பரவாயில்லை. அது தானாகவே ஆறி விடும். நான் மட்டும் அப்போது, அப்படிச் செய்யாவிட்டால், நிச்சயம் அவன் நம்மை ஏதாவது செய்திருப்பான்! "

வாரியர் தலையிலிருந்து ஒழுகி வந்த ரத்தம், ஒரு குறிப்பிட்ட தூரத்தை தாண்டிக் கீழிறங்கவில்லை. வாரியர் தன் தலையைத் தொடவும் இல்லை. சற்று நேரத்துக்குள் அந்த ரத்தமும் நின்று போனது!

ரவீந்திரன் அதை வியப்புடன் பார்த்துக் கொண்டே இருந்தான். அவனைப் பார்த்தபடியே சங்கு வாரியர் கூறினார்: "மிகவும் உக்கிரமான ஒரு மந்திரத்தை நான் அப்போது ஜபித்தேன், அதற்கு அர்ப்பணிக்க வேண்டியது ரத்தம் தான். அதற்காகவே சில வேளைகளில் விரலை அறுத்துக் கூட நான் ரத்தம் சொரிந்ததுண்டு ".

ரவீந்திரனின் சிந்தனை பர்னாண்டஸை சுற்றியே சுழன்றது. நாளுக்கு நாள் அவனது பைசாசிக சக்தி வளர்ந்து வருகிறது. அது மட்டுமின்றி, அவனுக்கு எதிராக நாம் என்ன மந்திர வித்தையைப் பிரயோகித்தாலும் அதிலிருந்து எல்லாம் அவன் தப்பித்து விடுகிறான். இந்த நிலைமை தொடர்ந்தால், இனிமேல் யாரையெல்லாம் அவன் சந்தேகப்படுகிறானோ அவர்களையெல்லாம் தொலைத்துக் கட்டவும் செய்வான்.

இப்போதைய சூழ்நிலையில் அவனைப் பற்றிய உண்மை தெரிந்தவர்கள் மிகவும் குறைவானவர்கள்தான். ஃபாதர் வின்சென்ட், நான், சங்கு வாரியர்.

சுருக்கமாகச் சொன்னால், இந்த மூன்று பேரையும்

தீர்த்துக் கட்டிவிட்டால் அதன் பிறகு அவனுக்கு இங்கு எந்த விதமான எதிர்ப்பும் இருக்காது. விரைவிலேயே அவனுடையதான ஒரு சாம்ராஜ்யம் இங்கு உருவாகிவிடும். அதில் அகப்படுபவர்கள், அவனைப் போலவே ஆவார்கள். அப்படிப்பட்டவர்களும் இந்த சமூகத்தில் மற்ற மனிதர்களுடன் கலந்து வாழ்வார்கள்!

யாருக்கும் எந்தவிதமான சந்தேகமும் இல்லாமல் அவர்கள் மனிதர்களுடன் பழகுவார்கள். மனிதர்களை முடிந்த வரை அவர்களது ஆளாக மாற்றுவார்கள், அவர்களுக்கெல்லாம் தலைவனாக இந்த பிரான்சிஸ் ஃபாதர் கர்வத்துடன் உலவுவார். எனவே, ஆரம்பத்திலேயே இந்தப் பைசாசிக சக்தியை வேருடன் அழித்தே தீர வேண்டும்!

சங்கு வாரியர் தீவிரச் சிந்தனையில் ஆழ்ந்திருந்தார்.

“ரவீந்திரன், நாம் ஃபாதருடன் மோதும் போது நிறைய விஷயங்களைக் கவனிக்க வேண்டி உள்ளது. இப்போதும் பிறர் கண்களுக்கு அவன் ஒரு ஃபாதர்தான். அவன் உயிருக்கு நாம் ஏதாவது ஊறு விளைவித்து விட்டால், அவனது விஷயங்கள் வெளியே தெரியாததால் நிலைமை அப்படியே தலைகீழாக மாறும். அவன் இறந்த பிறகு பைசாசிகமான சக்தியுள்ள மனிதன் இவன் என்று நாம் சொன்னால்கூட எவரும் நம்ப மாட்டார்கள்”.

“உண்மைதான் சங்கு சார்!”- அப்போதுதான் ரவீந்திரன் அந்த விஷயத்தின் சீரியஸை உணர்ந்தான்.

“பொதுவாக நம் ஜனங்களின் மத்தியில் பிரான்சிஸ் ஃபாதர் நல்லவர், ஏழைபாழைகள் உதவி என்று போனால் தட்டாமல் செய்பவர், நல்ல பாடகர் ... அழகானவரும் கூட. லிஸி மீது உனக்குக் காதல் உள்ளதும் மற்றவர்களுக்குத் தெரியும். வீணாக அவரைச் சந்தேகப்பட்டு கொன்று விட்டாய் என்று பேர் வரும். அதனால் நீ ஜெயிலுக்குப் போக வேண்டி வரும். தண்டனை முடிந்து வெளியில் வந்தாலும் நிம்மதியாக

வாழ முடியாது!" - சங்கு வாரியர் பேசினார்.

"நீங்கள் சொல்வதெல்லாம் உண்மைதான். இப்போதைய நிலைமையில் நாம் மேற்கொண்டு என்ன செய்வது?" - ரவீந்திரன் கேட்டான்.

"அதற்கு நான் ஒரு மாற்று வழி வைத்திருக்கிறேன். இந்தத் தடவை நமது திட்டத்தில் நாம் முக்கால் பாகம் வெற்றியடைந்தோம். கடைசியில் ஒரு சின்னச் சறுக்கல்! அது போகட்டும் ..." - என்ற வாரியர் ஒரு பழைய இரும்புப் பெட்டியை இழுத்துத் திறந்தார்.

**த**னது அறையிலிருந்து இருட்டுக்கு வந்த பர்னாண்டஸ் யோசித்தபடியே நடந்தான். இருட்டே இப்போது அவனுக்கு வெளிச்சம் போல் தெளிவாகத் தெரிந்தது.

'பொழுது விடிவதற்கு இன்னும் ஏராளமான நேரம் இருக்கிறது. என்ன செய்யலாம்? ஷேர்லியின் வீட்டுக்குப் போகலாமா? அங்கே லூக்கோ இருக்கிறான். அதுவும் இல்லாமல் இந்த நள்ளிரவில் அங்கு போவதை யாராவது பார்த்து விட்டால், அதன் பிறகு அவளையும் அவளது நடவடிக்கைகளையும் கூர்ந்து கவனிக்கத் தொடங்குவார்கள். தற்சமயம் தமக்கு எல்லாவற்றுக்குத் உதவியாக இருப்பது அவள் மட்டும்தான். யாருக்கும் சந்தேகமில்லாமல் அவளை அணுகி, தட்டிக்கொண்டு போக வேண்டும்!'

பர்னாண்டஸின் உடம்பில் ரத்தம் மிகவும் சூடேறியிருந்தது. அதைக் குளிர்விக்க வேண்டுமானால், இந்த நேரத்துக்கு நிச்சயம் எவராவது தேவை!

அதற்கு யாராக இருந்தாலும் பாதகமில்லை. சட்டென்று தனக்குப் பல நேரங்களில் உதவியுள்ள அன்னம்மா ஜேக்கப் நினைவில் எழுந்தாள். வேறு வழி எதுவும் இல்லாத நிலையில் அவளை நெருங்க வேண்டியது தான்.

அவள் எங்கேயாவது போயிருப்பாளோ என்னவோ?

பர்னாண்டஸ் செமித்தேரிப் பக்கமாக நடந்தான். இப்பொழுது கேட்டை தவிர்த்தான். ஒரு வேளை தனக்காக அங்கு ஏதாவது ஆபத்து காத்திருக்கலாம்!

எனவே, கல்லறையின் வடமேற்குச் சுற்றுசுவரின் பக்கம் வந்தான். அங்குதான் மதில் உயரம் குறைவாக - இடிந்து போயிருந்தது. அங்கிருந்து உட்புறம் சுலபமாகக் குதிக்கலாம். யாரும் கவனிக்கவும் முடியாது.

சிறு செடிகள் புதராக அங்கு மண்டி வளர்ந்திருந்தன.

மதிலில் கைவைத்து எம்பியபோது எந்த விதமான சிரமமும் இல்லாமல் உடம்பு பறவையின் ஓர் இறக்கை மாதிரி லேசானது போல் இருந்தது. சுவர் மேல் அமர்ந்தபடி உட்புறம் பார்த்தான்.

மனித எலும்புகள் அங்குக் குவிந்து கிடந்தன. பாசம் படிந்த மண்டை ஒடுகள், கறுத்து குழிவான கண் பகுதிகள், பற்களின் இடைவெளிகள் ... பகலில் தெரிவது போலவே அதெல்லாம் அவன் கண்களுக்குத் தெளிவாகத் தெரிந்தன.

அதோ ஒரு மண்டையோட்டின் கண் குழி வழியாக ஒரு பாம்பு ஊர்ந்து வருகிறது. அது மெதுவாகத் தலை உயர்த்தி, படம் விரித்து மேற்புறமாகப் பார்க்கிறது.

பர்னாண்டஸ் பாம்பை உற்று கவனித்தான்.

அந்தத் தலையும் ... முகமும் ... அது லூஸிஃபர்தான் ... சாத்தான்தான்!

“பரவாயில்லை நீ கெட்டிக்காரன்தான். உன் மூளை இப்போது சரியான திசையில் வேலை செய்கிறது!” - சாத்தான் கூறியது.

பர்னாண்டஸ் வியப்புடன் அதையே பார்த்து

கொண்டிருந்தான்.

"நல்லவேளை, இந்தப் பக்கமாக வந்தாய். நீ வழக்கம் போல் கேட் பக்கம் வந்திருந்தால், இந்நேரம் எதிரிகளின் வலையில் அகப்பட்டிருப்பாய்!"

"என்ன செய்திருக்கிறார்கள்?"

"அந்தப் பூட்டுப் பகுதியில் நம் இருவரையும் அழிப்பதற்காகச் சக்தி வாய்ந்த சிலுவையை மறைத்து வைத்திருக்கிறார்கள்!"

பர்னாண்டஸ் இப்போதுதான் உண்மையிலேயே நடுங்கினான்.

"நீ அந்த கேட்டைத் தொட்டிருந்தால் உன் கைப் பகுதி உருகிப் போயிருக்கும்!"

பாம்பு, மண்டை ஓட்டின் இருள் பகுதிக்குள் நுழைந்து மறைந்தது!

பர்னாண்டஸ் அந்த எலும்புக் குழியைத் தாண்டி சமாதிகள் பக்கமாக வந்தான், மெதுவாக நடந்தான்.

சாத்தான் சொன்னபடி கேட்டில் சிலுவையை வைத்திருந்ததால், இதற்குள் யாரும் மறைந்திருப்பார்கள் என்ற பயம் வேண்டியதில்லை.

அன்னம்மா ஜேக்கப்பின் கல்லறைக்கு வந்து நின்றான்.

"அன்னம்மா!"- அழைத்தான்.

பதில் இல்லை.

மீண்டும் அழைத்தான்.

பதில் இல்லை!

ஒரு வேளை எங்காவது உலாவப் போயிருப்பாளோ? அவனுக்குள் கோபம் உயர்ந்தது.

ஒரு கையால் கல்லறையின் ஸ்லாப்பைப் பிடித்து இழுத்து ஒரு புறமாகத் தள்ளினான்.

'சே ... என்ன இது!' - பர்னாண்டஸ் மூக்கைப் பிடித்துக் கொண்டான். மிகவும் கடுமையான துர்நாற்றம் அதற்குள்ளிருந்து வீசியது. பிணம் அழுகிய நாற்றம்! அவனால், அந்த நாற்றத்தைத் தாங்க முடியவில்லை. மூக்கைப் பொத்தியவனாக, கல்லறையின் மற்ற இருண்ட பகுதிகளை நோக்கினான்.

அங்கு அவன் கண்டது பயங்கரமான ஒரு காட்சி. அன்னம்மா ஜேக்கப்பின் உடல் வீங்கி, அழுகி... தசைகள் எலும்பை விட்டு விலகிக் கிடந்தன.

ஒரு வருடத்திற்குப் பிறகு நடந்திருக்க வேண்டியது... இப்போதே நடந்திருக்கிறது! பர்னாண்டஸால் அதை நம்பவே முடியவில்லை. சற்று நெருங்கி நின்று பார்க்கப் போனவன் சட்டென்று திரும்பி, ஸ்லாப்பை பழையபடி மூடினான்.

அன்னம்மா ஜேக்கப்பின் மார்பில் இருந்த செயினில் சிலுவை ஒன்று பளபளத்தது. அந்தப் பளபளப்பு ஒரு கடப்பாரை மாதிரி அவனை நோக்கிப் பாய்ந்து வருவதாகத் தோன்றியதால் அவன் சட்டென்று கல்லறையை பழையபடி மூடினான்.

"இது எப்படி நடந்தது?" - பர்னாண்டஸ் கலவரமானான்.

அதன் பிறகு அவன் அங்கே அதிக நேரம் நிற்கவில்லை. வந்த வழியே திரும்பினான். இவ்வளவுக்குப் பிறகும் உடனே தனது இருப்பிடத்துக்குச் செல்லவும் அவனுக்கு மனம் வரவில்லை.

'இது போன்ற சந்தர்ப்பங்களில் தன்னை மறைத்துக் கொள்ளப் பனிப்படலம் போல் ஒன்று இருந்தால் எப்படி

இருக்கும்?' - அவன் நினைத்த நேரத்தில் வலுவான ஒரு காற்றடித்தது. எங்கிருந்தோ பனிப்படலம் மேகம் போல் வந்து அவனைச் சூழ்ந்து கொண்டது.

சாத்தான் சொன்னதெல்லாம் உண்மையே என்பதை அவன் அப்போது உணர்ந்தான்.

பின்பு ஷேர்லியின் வீட்டை நோக்கி நடந்தான்.

கதவை நெருங்கியதும், "ஷேர்லி " என்று அழைத்தான்.

"ஃபாதர் வந்திருக்கிறார்!" - அவள் லூக்கோவிடம் கூறினாள் பயத்துடன்.

உடனே லூக்கோ திடுக்கிட்டு எழுந்தான். பின்புறக் கதவைத் திறந்து கொண்டு ஓடினான்.

ஷேர்லி கதவைத் திறந்தாள்.

"லூக்கோ எங்கே?"

"அப்பவே போயிட்டார்..."

பர்னாண்டஸ் அவளை அப்படியே வாரி எடுத்தான்.

"என்னங்க ஃபாதர்... இவ்வளவு முரட்டுத்தனமா இருக்குறீங்க?" - ஷேர்லி கேட்டாள்.

அவளை, பர்னாண்டஸ் கட்டிலுக்கு எடுத்துச் சென்றான். அவளது நைட் கவுனின் மேற்புறம் கையை வைத்து ஓர் இழுப்பு இழுத்தான்.

ஷேர்லி மிரண்டு போயிருந்தாள். பர்னாண்டஸ் மிகுந்த வெறியுடன் இருப்பதைப் புரிந்து கொண்டாள் அவள்.

"எனக்கு இன்னொரு சந்தர்ப்பம் தாருங்கள். முயற்சி செய்கிறேன்!" - ஷேர்லி பேசியபடியயே அவனது அங்கியின் இரு புறமும் கைகளை வளைத்துத் தழுவினாள்.

பர்னாண்டஸுக்கு அது ஒரு புதிய அனுபவமாக இருந்தது.

"நாளைக்கு நீ எனது வீட்டுக்கு வா!" தளர்ந்து போய்ப் படுத்தவனாக அவளிடம் கூறினான்.

"எதற்கு?"- அவன் காதில் அவள் மந்திரித்தாள்.

"அதை அங்கு வந்த பிறகு சொல்கிறேன்".

"நான் அங்க வர்றது கெட்ட பேரை உண்டாக்காதா?"

"ஒண்ணும் வராது. வரும்போது கூடவே ரெண்டு பொண்ணுங்களைக் கூட்டிட்டு வந்தால் போதும்! "

"அங்க படிக்கிற பொண்ணுகளுக்கு பதிமூணு, பதிநாலு வயசுதான் இருக்கும்".

"நான் சொன்னதைச் செய்! நான் முக்கியமான சில விஷயங்களைச் செய்ய வேண்டி இருக்கு!" - அன்னம்மா ஜேக்கப்பின் கல்லறையை நினைத்துக் கொண்டவனாகப் பேசினான் பர்னாண்டஸ்.

"நீங்க ஏதோ யோசனையில் இருக்கிறீங்க... இல்லையா?" - ஷேர்லி கேட்டாள்.

"ஏன் கேட்கிறே?"

"என்னமோ எனக்கு அப்படித் தோணுச்சு! " - அவள் குலுங்கிச் சிரித்தபடி அவன் காதுகளில் மந்திரித்தாள்.

## 24

**அ**ந்தச் சந்தர்ப்பத்திலும் பர்னாண்டஸின் யோசனைகள் தனது சொந்த நிலைநிறுத்தலைப் பற்றியே இருந்தது.

அன்னம்மா ஜேக்கப்பைத் தகர்த்துத் தொலைத்து விட்டிருக்கிறார்கள்! மற்றொரு வகையில் சொல்வதானால், தான் அழிக்க வேண்டும் என்று நினைத்தவளைத்தான் அழித்திருக்கிறார்கள் என்றாலும், இது தனது முடிவை அறிவிக்கும் ஓர் அடையாளமும் கூட!

சட்டென்று அவன் ஷேர்லியை இறுக்கி அணைத்தான். காரணம் புரியாமல் அவள் ஒரு கணம் திடுக்கிட்டாள்.

அன்னம்மா ஜேக்கப்பின் அழுகிய உடம்பு தனக்கு முன்னால் நின்று கொண்டிருப்பது போல் தோன்றியது பர்னாண்டஸுக்கு.

"என்ன... என்னங்க?" - ஷேர்லி விசாரித்தாள் மிரட்சியுடன்.

கடிகாரம் அதற்குள் மூன்று முறை அடிக்கவே, ஷேர்லியைத் தட்டி ஒதுக்கிவிட்டு பர்னாண்டஸ் அவசரமாக அங்கிருந்து எழுந்தான்.

சிவப்பு அங்கியை அணிந்தவன், விறுவிறுவென்று வெளியே வந்தான். வேறொரு முறையில் சொல்வதானால், அவன் பறந்து கொண்டிருந்தான். ஒரு சில விநாடிகளுக்குள் தனது இருப்பிடத்தை அடைந்தான் அவன்.

**வ**ழக்கம் போல் விடியற்காலையில் சற்றுத் தாமதமாகக் கண் விழித்தான். லூக்கோ டீ போட்டுக் கொண்டிருந்தான்.

தனக்கு ஏற்பட்ட அனுபவத்தை லூக்கோ இதுவரை பர்னாண்டஸிடம் கூறவில்லை. ஒன்று இரண்டு தடவை அதைச் சொல்ல முயன்றான். சொன்னால் ஒரு வேளை அவர் தன்னைப் பற்றித் தப்பாக நினைப்பாரோ என்பதுடன் அதைத் தவறாக எடுத்துக் கொள்வாரோ என்ற பயமும் அவன் சொல்லாமல் இருந்ததற்கு மற்றோரு காரணம். தான் இதைத் தெரிந்து கொண்டோம் என்பதால், அவர் தன்னையும் தொல்லைக்கு உள்ளாக்கலாம். எல்லாவற்றுக்கும் மேலாக அவன்

பர்னாண்டஸைப் பார்த்து பயப்பட ஆரம்பித்திருந்தான். எத்தனையோ தடவை பர்னாண்டஸ் நள்ளிரவு தாண்டி வீட்டுக்கு வருவதையும் அவன் கவனித்திருக்கிறான்.

“இன்னிக்கு கொஞ்சம் பிஸ்கெட், சாக்லேட் எல்லாம் வாங்கணும் லூக்கோ! ” பர்னாண்டஸ் கூறினான்.

“எதுக்கு ஃபாதர்? நாமதான் அதையெல்லாம் சாப்பிடறதில்லையே ? ”- லூக்கோ கேட்டான்.

“நமக்கு இல்லை. இன்னிக்கு இரண்டோ மூணோ பேர் வருவாங்க ... அவங்களுக்குத்தான் ”.

“யார் ஃபாதர்?”

“நம்ம ஷேர்லி டீச்சரும், அவங்க கிட்டப் படிக்கிற இரண்டு குழந்தைகளும்”.

ஷேர்லியின் பெயரைக் கேட்டவுடன் லூக்கோவின் முகம் பிரகாசமடைந்தது.

“வந்தா உடனே திரும்பிடுவாங்களா ஃபாதர்?”

“அப்புறம் போகாம? இங்கேயே தங்க வைக்க முடியுமா?”

“நீங்க சொல்றதும் சரிதான்! ”- என்றபடி, பர்னாண்டஸ் தந்த பணத்தைப் பெற்றுக் கொண்டு வெளியேறினான்.

பத்து மணிக்குப் பிறகு ஷேர்லி இரண்டு குழந்தைகளுடன் பர்னாண்டஸின் வீட்டுக்கு வந்தான்.

பர்னாண்டஸ் வந்தவர்களை அன்பாக வரவேற்றான். குறிப்பாக டீச்சருடன் வந்த பெண்களின் தலையை வருடி ஆசீர்வதிக்கவும் செய்தான். மேலும் அவர்களின் கன்னங்களையும் வருடினான். அப்போது பர்னாண்டஸின் கண்களில் பைசாகிகமான பளபளப்புத் தென்பட்டது.

லூர்க்கோ அவர்களுக்கு காபி மற்றும் பிஸ்கெட் கொண்டு வந்து கொடுத்து உபசரித்தான்.

"சாப்பிடுங்கள் குழந்தைகளா!" பர்னாண்டஸ் இயல்பாகக் கூறினான்.

வந்திருந்த பெண்கள் இருவரும் பதினான்கிலிருந்து பதினைந்து வயதுக்கு உட்பட்டவர்கள். மெலிந்தவர்கள் என்று கூற முடியாது. ஒரு பெண் சற்று மாநிறம்; மற்றவள் மாம்பழ நிறத்துடன் இருந்தாள். தசைப் பிடிப்பான அந்த இருவரையும் பார்த்தவுடன் பர்னாண்டஸின் ரத்தம் கொதிக்கத் தொடங்கியது.

"என்ன விசேஷம் ஃபாதர்?" - ஷேர்லி கேட்டாள்.

"சொல்றேன். நாளை மறுநாள் எனக்குப் பிறந்த நாள். அதற்காக ஒரு சிலரை நான் வரச் சொல்லியிருக்கிறேன். வருபவர்கள் எல்லோரும் கௌரவமானவர்கள்!" பர்னாண்டஸ் கூறினான்.

"அவர்களை வரவேற்கவும், விருந்து நடத்தவும் உதவ வேண்டுமா என்ன?"

"எல்லாம் இருக்கிறது. அதையெல்லாம் இங்கு வந்த பிறகு சொல்கிறேன். மேலும் சிலருக்கு அழைப்பிதழ் தயாரித்து வைத்திருக்கிறேன். நான் தருகிற விலாசங்களை அதில் எழுதி, உரியவர்களிடம் சேர்த்து விட வேண்டும்!" பேசியபடி அறைக்குள் சென்றவன், ஒரு பெயர்ப்பட்டியலுடன் திரும்பி வந்தான். அதை ஷேர்லியிடம் ஒப்படைத்தான்.

அவள் அந்த லிஸ்ட்டை மேலோட்டமாகப் பார்த்தாள்.

"இதில் வின்சென்ட் ஃபாதரின் பெயர் இல்லையே?" - ஷேர்லி கேட்டாள்.

"இருக்காது. அவரை நானே போய் நேரில் அழைக்க வேண்டுமே... அதற்காகத்தான்!"

"நீங்க சொல்றதும் சரிதான். நான் எப்படி பெரிய ஃபாதரைக் கூப்பிட முடியும்? மத்தவங்க கிட்ட உங்களுக்காக வந்திருக்கேன்னு சொல்லலாம்!"

"இவள் மார்கரெட், இவள் ராதா!"

"நீங்கள்லாம் அடிக்கடி இந்தப் பக்கம் வரணும்!"

"வர்றோம் ஃபாதர்!"

அவர்கள் விடைபெறும் சமயத்தில் ஆளுக்கு ஒரு தங்கச் சங்கிலி பரிசளித்தான். இரண்டு சங்கிலிகளிலும் இரண்டு விதமான லாக்கெட்டுகள் இருந்தன.

அவர்கள் அங்கிருந்து விடைபெற்றுப் புறப்பட்டுச் சிறிது தூரம் சென்ற பிறகு, பர்னாண்டஸ் ஷேர்லியை அழைத்தான்.

"லிஸியின் விஷயத்தை மறந்து விடாதே!" ஞாபகப் படுத்தினான்.

"அதிகமாகப் போனால் ... மூன்று நாட்கள்தான். அதற்குள் எப்படியும் கொண்டு வந்து விடுவேன்!"- ஷேர்லி உறுதியளித்தாள்.

மறுநாள் லூக்கோவை அனுப்பி நாற்பது கேக்குகள் வாங்கி வரச் செய்தான் பர்னாண்டஸ். எல்லாம் ஒரே மாதிரியான அலங்கார வேலைப்பாடமைந்த கேக்குகள். ஒவ்வொன்றின் மத்தியிலும் அழகான ஒரு ரோஜாப் பூ இருந்தது. ரோஜாப்பூ மட்டும் துணியால் செய்யப் பட்டிருந்தது.

பர்னாண்டஸ் தனது மந்திரப் புத்தகத்தில் உள்ள வட்ட வடிவமான ஒரு படத்தை செப்புத் தகட்டில் பிரதியெடுத்து அந்தப் பூவுக்குள் பதித்து வைத்தான்.

பார்ப்பதற்கு மிகவும் அழகாக இருந்த அதை யாரும் தூக்கி எறிய மாட்டார்கள் என்று பர்னாண்டஸ் நினைத்தான்.

சாத்தானின் சக்தி ஆவாஹம் செய்யப்பட்டுள்ள ஒரு படம் அது. பார்வைக்குச் சட்டென்று அது ஒரு தேள் மாதிரித் தெரிந்தது.

அது எந்தெந்த வீடுகளில் இருக்கிறதோ, அந்த வீடுகளில் தெய்வீகமான பிரார்த்தனைகள் நடைபெறவில்லை என்றால், அப்படிப்பட்ட வீடுகளில் பர்னாண்டஸ் சுலபமாகவே தனது சக்தியைப் பயன்படுத்த முடியும்!

பிறந்த நாள் விழாவுக்காக பர்னாண்டஸ் தேர்ந்தெடுத்த நாள், ஃபாதர் வின்சென்ட் வழக்கமாக ஊரில் இல்லாத நாள்.

**ம**றுநாள் மாலை நேரத்தில் கரியாச்சான் சர்ச்சுக்கு வந்தார்.

“என்ன காரியாச்சா பாத்து ரொம்ப நாளாயிடுச்சே? ஏதாவது விசேஷம் உண்டா?” ஃபாதர் வின்சென்ட் கேட்டார்.

“அப்படியெல்லாம் ஒண்ணும் இல்லை. விவசாய வேலைதான். அதுதான் அடிக்கடி வர முடியலை!”

“பிரான்சிஸ் ஃபாதரைப் பார்க்கிறது உண்டா?”

“அவரையும் பார்த்து ரொம்ப நாளாச்சு. அவர் ஏதோ தியானம் ... தவம்னு இருக்கிறார். நாம ஏன் அவரைத் தொந்தரவு செய்யணும்னுதான்! நாளைக்கு அவரோட பிறந்த நாளாச்சே உங்களையும் அதுக்குக் கூப்பிட்டிருக்கார் இல்லையா?” கரியாச்சன் கேட்டார்.

அதைக் கேட்ட ஃபாதர் வின்சென்டின் நெற்றி சுளிவடைந்தது. ஆனால், அவர் மனதில் ஏற்பட்ட உணர்வை வெளிக் காட்டிக் கொள்ளவில்லை.

“நாளைக்குத்தானே நீங்க போறீங்க... இல்லையா கரியாச்சன்?”

“போகாம இருக்க முடியுமா? பழைய ஃபாதருங்கூட!”

"எத்தனை மணிக்கு ஆரம்பம்? "

"சாயந்தரம் அஞ்சு மணிக்கு! "

"நாளைக்கு நான் அவசியமா ஓர் இடத்துக்குப் போகணும். அதனால என்னால வர முடியாது, பார்க்கலாம்! " ஃபாதர் சொன்னார்.

சற்று நேரம் பேசிக் கொண்டிருந்த பிறகு கரியாச்சன் விடை பெற்றார். அவர் புறப்பட்டுப் போன உடனே தன் சமையற்காரனை அனுப்பி, ரவிந்திரனை அழைத்து வரச் சொன்னார்.

"என்ன ஃபாதர்... ஏதாவது விசேஷமான செய்தியா?"- வந்தவுடன் ரவீந்திரன் கேட்டான்.

"நிறைய இருக்கு. முதல்ல உட்கார் ..." என்ற ஃபாதர் சமையற்காரனிடம் காபி போடச் சொன்னார்.

"என்ன ஃபாதர் ... ?" ரவீந்திரன் ஆவலுடன் கேட்டான்.

"பிரான்சிஸ் ஃபாதர் தனது அடுத்த கட்ட நடவடிக்கையைத் தொடங்கிவிட்டார். ஊரில் இருக்கிற முக்கியமானவர்களுக்கு அழைப்பு அனுப்பியிருக்கிறார். நாளைக்கு அவரோட பிறந்த நாளாம். நாளைக்கு நான் ஊர்ல இருக்கமாட்டேன்கிறதும் அவருக்குத் தெரியும். ஆனா, எனக்கு மட்டும் அழைப்பு கிடையாது! "

"இதோட நோக்கம்?"

"என்னன்னு தெரியல. அவருக்கு நம்மளோட நடவடிக்கைகளைத் தெரிஞ்சுக்க முடியாது. ஆனா அது மாதிரி அவரோட நடவடிக்கைகளை நம்மளாலயும் தெரிஞ்சுக்க முடியலை ".

"என்ன பண்ணலாம் ஃபாதர்? "

"உனக்கு என்ன தோணுதோ அப்படியே செய். ஆனா,

போன தடவை தோத்துப் போயிட்டார் இல்லையா?"

"ஆமாம் ஃபாதர்!"

"என்னால இப்பவும் அதே மாதிரி நடந்துக்க முடியும்னு சொல்ல முடியாது. பிறகு நம்ம கிட்ட இருக்கிறது சிலுவை தான். அதை வெச்சுத்தான் போராடணும்!"

"எதுக்கும் நான் சங்கு வாரியரையும் பார்த்துட்டு வர்றேன் ஃபாதர்".

காபி சாப்பிட்ட பிறகு ரவீந்திரன் புறப்பட்டான்.

**அ**ன்று இரவு மணி பன்னிரண்டு அடித்தது. பர்னாண்டஸ் எதையோ நினைத்தபடி படுத்திருந்தான்.

"அன்று வந்த பெண்கள்!" பர்னாண்டஸின் காதில் ஒரு குரல் ஒலித்தது.

பர்னாண்டஸ் கண் திறந்தான்.

இருட்டில் தெளிவற்ற அந்த உருவம் தெரிந்தது.

"நானும் அவர்களைப் பற்றித்தான் நினைத்துக் கொண்டிருந்தேன்!"

"வந்த பெண்களில் மாம்பழ நிறமுள்ளவள் நமக்குப் பயன்பட மாட்டாள். அவள் இடுப்பில் தாயத்து உள்ளது. ஆனால், மற்றவள் இப்போது விழிப்பாள். நீ உன் மூளையைப் பயன்படுத்து. உனக்குத்தான் இப்போது சக்திகள் அதிகமாயிற்றே!"

சட்டென்று தனக்கு கிடைத்த புதிய சக்திகளைப் பற்றி யோசித்தான் பர்னாண்டஸ்.

"**டா**ங் ... டாங் ...டாங் ..." கடிகாரத்தில் மணி பன்னிரண்டடித்தது. மார்கரெட் விழித்தபோது யாரோ ஜன்னல்

கண்ணாடியில் தட்டும் சத்தம் கேட்டது.

சத்தம் வந்த திசையில் திரும்பினாள்.

கண்ணாடியின் மறுபுறம் எதுவோ இருந்தது. தெளிவாகத் தெரியாமல் அது ஒரு நிழல் மாதிரி தெரிந்தது.

வெளியே சன்னமான நிலா வெளிச்சம் .

அவள் கண்ணைக் கசக்கிக் கொண்டு பார்த்தாள்.

ஒரு பறவை மாதிரி இருந்த அது, ஜன்னல் கண்ணாடியை ஓங்கிக் கொத்திக் கொண்டிருந்தது - தனது அலகால்.

படுத்தபடியே அதைப் பார்த்தாள்.

சட்டென்று அது வௌவால் போல் மாறியது. ஜன்னலை ஒட்டி வளர்ந்திருந்த போகன்வில்லாச் செடியில் தலைகீழாகத் தொங்கியபடி கண்ணாடியைக் கொத்தியது.

அதன் கண்கள் இரண்டும் சிவப்புக் கற்கள் போல் மின்னின. அதையே பார்த்துக் கொண்டிருக்க வேண்டும் போல், அதனிடம் அவளுக்கு ஓர் ஈர்ப்புத் தோன்றியது.

அவள் எழுந்து ஜன்னல் கதவைத் திறந்தாள்.

சட்டென்று உட்புறம் வந்த வௌவால், அவள் கையில் தாவி, தனது கால்களால் கௌவிக் கொண்டது. அவள் கைகளை உதற முயன்றாள். ஆனால், அது முன்பை விட இறுக்கமாக அவள் கையைப் பற்றிக் கொண்டது.

அவள் வாய் திறந்து அலற முற்பட்டபோது, முடியவில்லை. யாரோ அவள் வாயை இறுகப் பொத்தியிருப்பது போல் தோன்றியது. நீண்ட கோட்டு அணிந்த தெளிவற்ற உருவம் ஒன்று அந்த அறைக்குள் நிற்பது போல் அவள் கண்களுக்குத் தெரிந்தது.

அந்த உருவம் அவளைக் கைகளில் ஏந்திக் கட்டிலுக்கு எடுத்துச் சென்றது. அவளை மெதுவாகக் கட்டிலில் படுக்க வைத்தது.

ஜன்னல் மூலம் உள்ளே வந்த சன்னமான வெளிச்சத்தில் அவள் அந்த முகத்தை ஊன்றிக் கவனித்தாள்.

'பிரான்சிஸ் ஃபாதர்' - அவள் நாக்கு அசைந்தது.

அதற்குள் பர்னாண்டஸின் வசியம் வாய்ந்த கைகள் அவளை நிர்வாணப்படுத்தின.

வாழ்க்கையில் முதல் முறையாக அவள் ஓர் ஆடவனை அன்று உணர்ந்தாள். பர்னாண்டஸின் கைகள், அவள் உடலைப் புளகாங்கிதம் கொள்ள வைத்தன.

அவளின் கணுக்கால்கள்... முழங்கால்கள் ஆகிய பகுதிகளில் அவன் கை பதிந்து ஊர்ந்த போது, அவள் தவிப்புடன் நெளிந்தாள்.

ஆனால், இரவு மூன்று மணியான போது அவள் உயிர்வேதனையால் துடித்தாள். பர்னாண்டஸ் அதை கவனிக்கத் தவறவில்லை. அவள் இறந்து கொண்டிருக்கிறாள் என்பது உறுதியானவுடன் அவளிடமிருந்து எழுந்தான். அவனது கோட்டின் மீது அவள் படுத்திருந்தாள். அவன், அந்த கோட்டை உருவினான்.

உடனே அவள் தன் கையை நீட்டி அவன் கழுத்தைப் பிடித்தாள். அவள் கையில் சிக்கியது அவன் கழுத்தில் கிடந்த வெள்ளி மாலை. அது அறுபட்டு அவள் கைக்கு வந்தது. இதை உணராத பர்னாண்டஸ், சட்டென்று ஜன்னல் மூலமாக மறைந்தான்.

அந்த இரவிலேயே தான் பல வடிவங்களில் மாற முடியும் என்பது அவனுக்கு ஆதாரபூர்வமாக நீருபணமானது!

மறுநாள் காலை வேளையில் மார்கரெட்டின் அறையில்

நுழைந்த முதல் நபர் ஷேர்லிதான்.

அவளைப் பற்றிய விவரங்களைத் தெரிந்து கொள்ளுமாறு முந்தின நாள் பர்னாண்டஸ், ஷேர்லியிடம் கூறியிருந்தான்.

ஷேர்லி பார்த்தபோது மார்கரெட் இறந்து கிடந்தாள். தாமதமில்லாமல் அவள் வீட்டாரும் விவரம் அறிந்தனர்.

ரவீந்திரனது வீட்டிலிருந்துதான் மார்கரெட்டின் வீட்டுக்கு பால் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். பால் கொண்டு வந்த ரவீந்திரனின் சகோதரி விஷயத்தைச் சொல்ல, உடனே ரவீந்திரன் மார்கரெட்டின் வீட்டுக்குப் பாய்ந்தான்.

அந்த நேரத்தில் அங்கு அந்த வீட்டினரைத் தவிர வேறு யாரும் வந்திருக்கவில்லை.

ரவீந்திரன், மார்கரெட்டின் உடலைப் பார்த்தான். எதேச்சையாக அவள் கையில் எதுவோ ஒன்று மின்னுவது தெரிந்தது. உடனே கை விரல்களைப் பிரித்து அதற்குள் இருந்ததைக் கையில் எடுத்தான். அத்துடன் வெளியேறவும் செய்தான்.

ரோட்டுக்கு வந்த பிறகு கையை விரித்து அதை உற்றுப் பார்த்தான். பர்னாண்டஸின் கழுத்தில் கிடந்த செயின்தான் அது என்பது அவனுக்கு விளங்கியது. உடனே வின்சென்ட் ஃபாதரைச் சந்தித்து விவரம் தெரியப்படுத்தினான்.

"நல்லவேளை செஞ்சே ரவீந்திரன்! இதை இங்கே கொண்டு வரலேன்னா, மத்தவங்க கையில சிக்கி பிரான்சிஸ் ஃபாதரை அடையாளம் கண்டு பிடிச்சிருப்பாங்க. அப்படி ஆகியிருந்தா நிலைமை மோசமாயிருக்கும்! அவர் உயிரோட இருக்கிற வரைக்கும் அவர் பேரில எந்த விதமான அவமானமும் வரக்கூடாது!" ஃபாதர் வின்சென்ட் அபிப்பிராயப்பட்டார்.

மார்கரெட்டின் மரணம் இயற்கையானதுதான் என்று அவளது வீட்டார் கூறினார். காலைப் பிராத்தனைக்குப் பிறகு

எல்லோரும் அங்கு வந்த சேர்ந்தனர். மார்க்ரெட்டின் உடல் அப்போதும் உயிருள்ளது போலவே தோன்றியது.

ஃபாதர் வின்செண்ட் அவள் உடம்பின் மீது மந்திரித்த சிலுவையை அணிவித்தார்.

சற்று நேரத்துக்குள் அவளது உடம்பு நீல நிறமாக மாறியது.

ஃபாதர், ரவீந்திரனைப் பார்த்தார். சிலுவை மாலை அணிந்தவுடன் அவளது உடம்பிலிருந்து பைசாசிகத் தன்மை அழிந்து விட்டது என்பது ரவீந்திரனுக்கும் புரிந்தது.

அன்று மாலை நேரத்தில் மார்கரெட்டின் சவ அடக்கம் முடிந்த போது, பர்னாண்டஸின் பிறந்த நாள் நிகழ்ச்சியிருப்பதை ரவீந்திரன், ஃபாதருக்கு நினைவூட்டினான்.

பிறந்தநாள் விழா அழைப்பு பெற்றவர்கள் அனைவரையும் ஃபாதர் வின்செண்ட் தனது சர்ச்சுக்கு வரவழைத்தார்.

“இன்று மாலை நமது சர்ச்சின் முந்தைய ஃபாதரான பிரான்சிஸின் பிறந்தநாள். அவருக்கு நீங்கள் என்ன பரிசுகள் வழங்கப் போகிறீர்கள்?”

“பரிசு எதுவும் வேண்டாம்னு அவரே சொல்லியிருக்கிறாரே!” - வந்தவர்களில் ஒருவர் கூறினார்.

“சரி. அப்படியே இருக்கட்டும். அவரது விருப்பத்தையும் நாம் கவனத்தில் எடுத்துக் கொள்ளத்தான் வேண்டும். இருந்தாலும், நான் தருகிற இந்தச் சிலுவையை நீங்கள் அவர் கழுத்தில் போடவேண்டும். நான் அவசரமாக ஓர் இடத்துக்குப் போக வேண்டும். எனவே, நான் வருவதற்கில்லை. எனக்குப் பதிலாகக் கரியாச்சன் அதைச் செய்தால் கூடப் போதும்! இந்தாருங்கள்...” என்றபடி, ஃபாதர் வின்செண்ட் அழகான சங்கிலியில் கோத்த ஒரு சிலுவையை கரியாச்சனின் கையில்

கொடுத்தார்.

வைரக் கற்கள் பதித்த அந்தச் சிலுவை, விளக்கொளியில் கண் கூசும்படியாகப் பளபளத்தது.

அப்போது ரவீந்திரன் மற்றும் ஃபாதரின் கண்கள் ஒன்றையொன்று பொருள் செறிவுடன் பார்த்துக் கொண்டன.

## 25

கரியாச்சன் நேராகச் சென்றது பர்னாண்டஸிடம் தான். தன்னிடம் ஒப்படைத்துள்ள பொறுப்பை முன் கூட்டியே அவனிடம் தெரிவித்து, நல்ல பேர் வாங்க நினைத்தார் அவர்.

கரியாச்சனைப் பார்த்த பர்னாண்டஸ், அவரை கனகம்பீரமாக வரவேற்றான்.

"லூக்கோ இங்கே வா... சீக்கிரம்! "

லூக்கோ ஓடிவந்தான்.

"யார் வந்திருக்கிறாங்க பாரு. ரொம்ப நாளைக்கு அப்புறமா நம்மளைப் பார்க்க வந்திருக்கார். இன்னிக்கு அவரை உபசரிக்க வேண்டியது உனது பொறுப்பு. ஆளு திக்கு முக்காடிப் போயிடணும்!" - பர்னாண்டஸ் உத்தரவிட்டான்.

லூக்கோ உள்ளே போனான். ஒரு பெரிய 'ரம்' பாட்டிலை எடுத்து வந்து அவருக்கு முன்பாக வைத்தான். கூடவே, ஒரு பெரிய கண்ணாடி கிளாஸும், ஜெக்கில் தண்ணீரும் வைத்தான்.

"சாப்பிடறதுக்கு அவருக்கு ஒண்ணும் குடுக்கலையே?"

"கறி வறுத்தது இருக்கு... தரட்டுமா?"

"கேட்காதே. எடுத்துட்டு வா! "

"நீங்க இப்பக் கறியெல்லாம் கூடச் சாப்பிடுவீங்களா? தியானத்திலேதானே இருக்கீங்க?" - கரியாச்சன் உபசாரத்துக்குக் கேட்டார்.

"உண்மைதான். ஆனா இது நான் சாப்பிடுறதுக்கு இல்லை. லூக்கோ சாப்பிடதுக்காகச் சமைக்கிறது!" பர்னாண்டஸின் உடல் குப்பென்று வியர்க்கத் தொடங்கியது. அதன் காரணம் என்ன என்று யோசித்த பர்னாண்டஸ், இறுதியில் கரியாச்சனின் மடியில் பத்திரப்படுத்தி வைத்திருந்த திவ்வியமான பொருளை அடையாளம் கண்டு கொண்டான். உடனே தனது படுக்கை அறைக்கு விரைந்தவன், லூக்கோவை அழைத்தான்.

"லூக்கோ, நீ கரியாச்சனை எவ்வளவு குடிக்க வைக்க முடியுமோ அவ்வளவு குடிக்க வை. அவர் சுயநினைவே இல்லாமப் போகணும். அதுக்குப் பிறகு அவர் மடியில் ஒரு பொட்டலம் இருக்கு. அது ஒரு செயின். அதை எடுத்து கிழக்குப் பக்கம் இருக்கிற பாழுங்கிணத்துல போட்டுடு! "

"ஏன் ஃபாதர்?"

"முதல்ல நான் சொன்னதைச் செய்! அது செத்துப் போன ஏதோ ஒரு பொண்ணோட கழுத்தில் கிடந்தது! " லூக்கோவை சமாதானப்படுத்துவதற்காக பர்னாண்டஸ் ஒரு பொய் சொன்னான்.

"அப்படின்னா, அப்படியே செஞ்சுடுறேன்! "

அரை பாட்டில் ரம் உள்ளே போனபோது கரியாச்சன் நினைவிழந்து சரிந்தார். லூக்கோ, அவர் மடியிலிருந்த

பொட்டலத்தை எடுத்து, அதை அவிழ்த்துக் கூடப் பார்க்காமல் அப்படியே பாழுங்கிணற்றில் போட்டான். பிறகு பர்னாண்டஸ் சொன்னபடி கரியாச்சனைக் கொண்டு போய் அவரது வீட்டில் விடவும் செய்தான்.

மாலை நேரத்தில் கரியாச்சனின் மனைவி, அவரைத் தட்டி எழுப்பினாள்.

"நீங்க ஃபாதரோட பிறந்தநாள் விழாவுக்குப் போகலையா?" கேட்டாள்.

தட்டுத் தடுமாறி எழுந்த கரியாச்சன் முகம் கைகால் கழுவி, சட்டையை மாட்டிக்கொண்டு கிளம்பினார். அவருக்குப் போட வேண்டிய செயினைத் தேடினார். அது எங்கும் தட்டுப்படவில்லை. சரி அது எங்கோ பத்திரமாக உள்ளது. பிறகு கூட நிதானமாகத் தேடி எடுத்துக் கொடுக்கலாம் என்று நினைத்தவராகப் புறப்பட்டார்.

அவர் பர்னாண்டஸின் இருப்பிடத்தை அடைந்த போது, பெரும்பாலான ஆட்கள் வந்து குழுமியிருந்தனர்.

"என்ன - லிஸியைக் கூட்டிட்டு வரலையா?" பர்னாண்டஸ் கேட்டான்.

"இல்லை ஃபாதர். அவளுக்கு நிறையப் படிக்க வேண்டியது இருக்கலாம்... அதுதான் வரலை!" - அழகாகச் சமாளித்தார்.

பிறந்த நாள் விழாவில் எல்லோரும் பர்னாண்டஸை 'நீண்ட நாள் வாழ்க!' என்று வாழ்த்தினர்.

"கரியாச்சா, நம்ம புது ஃபாதர் தந்த பரிசை அவருக்கு குடுக்கலையா?" யாரோ ஒருவர் நினைவூட்டினார்.

"நான் அதை மட்டும் எடுத்திட்டு வந்து குடுத்திடுறேனே!"- என்று பின்வாங்கினார் கரியாச்சன்.

"கரியாச்சா, அதெல்லாம் வேண்டாம். நான் தியானத்தில்

இருக்கும் போது யார்கிட்டேயிருந்தும் எதுவும் பரிசு வாங்கக் கூடாது, நன்றி. நானே நம்ம ஃபாதரைப் பாத்து விஷயத்தைச் சொல்லிடுறேன்!" பர்னாண்டஸ் பதிலளித்தான்.

வந்தவர்கள் தங்களுக்குரிய கேக்குப் பொட்டலங்களுடன் விடை பெற்றனர். அன்றைய நிகழ்ச்சியினால் எல்லோருக்கும் பர்னாண்டஸிடம் அன்பும் மதிப்பும் அதிகரித்தது. பழைய ஃபாதர் நம்மையெல்லாம் மறக்கவில்லை என்ற மகிழ்ச்சியும் அவர்கள் முகத்தில் தெரிந்தது.

மறுநாள் வின்சென்ட் ஃபாதர் திரும்பி வந்தார். ரவீந்திரனை வரவழைத்தார்.

"என்ன ரவி, விஷயம் என்ன ஆச்சு?"

"நினைச்சது நடக்கலை ஃபாதர்! "

"அப்படீன்னா ரவி நீ ஒரு காரியம் செய். கரியாச்சனை இங்கே வரச்சொல்!"

ரவீந்திரன் உடனே கரியாச்சனது வீட்டுக்குப் போனான். ஃபாதர் கூப்பிடுவதாகச் சொன்னான்.

கரியாச்சன், ரவீந்திரனுடன் புறப்பட்டார்.

ஃபாதர், அவரிடம் விவரம் கேட்டார்.

"நான் அதை சுத்தமா மறந்தே போயிட்டேன் ஃபாதர்! "

"சரி. அதை ஏன் அன்னிக்கு நீங்க கொடுக்கலை?"

"உண்மையை சொல்லட்டுங்களா? அது எப்படியோ எங்கிட்டயிருந்து காணாமப் போயிடுச்சு ஃபாதர். நான் வேற ஒரு சிலுவையை வாங்கிக் கொடுத்துடுறேன்".

அந்த வார்த்தைகளைக் கேட்டதும் சாதாரணமாகக் கோபமே வராத வின்சென்ட் ஃபாதரின் முகம் கோபத்தால்

சிவந்தது. தான் வெகுநாள்களாக யோசித்து, திட்டமிட்டுச் செய்த ஒன்று நடைபெறாமல் போன ஏமாற்றம் அவரை வாட்டியது.

"நீங்க இங்கேயிருந்து நேரா எங்க போனீங்க?"

"நான், நீங்க பரிசு கொடுக்கச் சொன்ன விவரத்தை அவர்கிட்டச் சொல்லிட்டு வரலாம்னு நேரா பிரான்சிஸ் ஃபாதர்கிட்டத்தான் போனேன்".

"ஐயோ... அப்புறம்?"

"சொல்லிட்டு உடனே திரும்பிட்டேன்!"

"அங்கே இருந்து அந்த ஃபாதர் ஏதாவது தந்தாரா?" வின்சென்ட ஃபாதர், கரியாச்சனின் முகத்தைப் பார்த்தபடி கேட்டார்.

கரியாச்சன் பொய் பேச முடியாதபடி தடுத்தது ஃபாதரின் பார்வை. எனவே, உண்மையை உள்ளபடி ஒப்புக் கொண்டார்.

"அப்படீன்னா, அது எங்கேயே தொலைஞ்சிடுச்சு இல்லையா?"

"ஆமாம் ஃபாதர்" - குற்றத்தை ஒப்புக் கொண்டார் கரியாச்சன்.

"நீங்க செஞ்சது எவ்வளவு பெரிய தப்புன்னு உங்களுக்குத் தெரியலையே!" ஃபாதர் ஏமாற்றத்துடன் பதிலளித்தார்.

"நீங்க இதுக்காக இவ்வளவு வருத்தப்படுவீங்கன்னு நான் நினைக்கலை ஃபாதர். பிரான்சிஸ் ஃபாதருக்கு இதெல்லாம் ஒரு பொருட்டே இல்லை. அவர் ஏற்கெனவே பெரிய பணக்காரர்!" - கரியாச்சன் தனக்குத் தானே சொல்லிக்கொள்வது போல் சமாதானம் சொன்னார்.

"உங்களுக்கு நான் அதைப் புரிய வைக்க முடியாது

கரியாச்சன்! ” ஃபாதர் ஒரு பெருமூச்சுடன் பேசினார்.

ஏதோ ஒரு பெரிய ஆபத்திலிருந்து தப்பித்தவராக நிம்மதிப் பெருமூச்சுடன் கரியாச்சன் அங்கிருந்து கிளம்பினார்.

“அப்படீன்னா, பிரான்சிஸ் நம்மளோட அந்தத் திட்டத்தையும் ஊதித் தள்ளிட்டார். அப்புறம் என்னதான் செய்யிறது?” - என்றபடி மேஜைமீது தொங்கிக் கொண்டிருந்த சிலுவையைப் பார்த்தவாறு கேட்டார்.

“ஃபாதர்! உங்ககிட்ட இதுக்கு எதிரான மந்திரவித்தை எதுவும் கிடையாதா?” ரவீந்திரன் கேட்டான்.

“நாங்க அதையெல்லாம் செய்யக்கூடாது ரவி! ”

“அப்படீன்னா அதுக்கு நானே முயற்சி பண்ணட்டுங்களா? வாரியரை உடனே போய்ப் பார்க்கிறேன். அவரும் சாமான்யமாவனர் இல்லை ஃபாதர்...” - என்றபடி ரவீந்திரன் எழுந்தான்.

**லூ**க்கோ இது வரையிலான எந்த ஓர் அனுபவத்தையும் பர்னாண்டஸிடம் கூறவில்லை. மட்டுமில்லாமல், சமீபகாலமாக அவரது நடத்தையில் ஏற்பட்ட மாறுதல்களை அவனால் சுலபமாக உணரவும் முடிந்தது. இந்தச் சம்பவங்களின் விளைவால் டீச்சர், லூக்கோவிடம் நெருங்கவும் நேர்ந்தது. மேற்கொண்டு இங்கு ஏதாவது பிரச்சினை எழும்போல் தோன்றினால், நடந்தது மொத்தத்தையும் அவரிடம் சொல்லி விட்டு விடை பெற்றுக் கொள்ள வேண்டியதுதான் என்ற முடிவுக்கு வந்திருந்தான் லூக்கோ.

**ர**வீந்திரன், சங்கு வாரியரிடம் வந்தான்.

“மேற்கொண்டு என்ன செய்யலாம் வாரியரே?” - கேட்டான்.

அவர் அதற்கு பதில் சொல்லாமல் தன்னிடமிருந்த

ஓலைச் சுவடிகளை ஒவ்வொன்றாக எடுத்துப் பார்த்தார்.

நீண்ட நேரத்துக்குப் பிறகு அவர் பேசத் தொடங்கினார்: "ஃபாதர் வின்செண்டின் சக்தி அதிகமாக நிலை பெற்றிருப்பது அந்தச் சிவப்பு அங்கியில் தான். அதை நாம் கைப்பற்றிவிட்டால், அதன் பிறகு நேரடியாகவே மோதிப் பார்க்கலாம்! "

அவர் சொல்வது சரிதான் என்று ரவீந்திரனுக்கும் தோன்றியது.

பர்னாண்டஸை அன்றொரு நாள் இரவில் நேருக்கு நேர் சந்தித்தபோதும் அந்த அங்கி அவர் உடம்பில் தான் இருந்தது.

"நல்ல ஒரு விஷயம் வாரியரே! ஆமாம் ... இது எப்படி உங்களுக்குச் சட்டென்று தட்டுப்பட்டது?" ரவீந்திரன் தனது சந்தேகத்தைக் தீர்த்துக் கொள்வதற்காகக் கேட்டான்.

"நான் இதைப் பற்றிக் கடந்த சில நாட்களாகவே யோசித்தேன். நேற்று நான் பிரஸ்னம் கூட போட்டுப் பார்த்தேன்".

"சரி, அந்த அங்கியை நாம் எப்படி எடுப்பது?"

"அதுக்கு நான் ஒரு வழி வெச்சிருக்கேன்!"

"எப்படி வாரியரே?"

"ஃபாதர் இப்போதெல்லாம் பகல் நேரத்தில் வெளியே வருவது இல்லை. ராத்திரியில்தான் வெளியே வருகிறார். எனவே, ரவீந்திரன் நேரடியாக அதைப் போய் எடுக்கவும் முடியாது. காரணம் ஃபாதரின் சக்தி உள்ள வீட்டுக்குள் போய் மாட்டிக் கொண்டால், அந்த இடத்தின் சரியான சக்தி நமக்குத் தெரியாத பட்சத்தில் அங்கிருந்து தப்பிக்கவும் நம்மால் முடியாமல் போகலாம்".

"வேற என்னதான் செய்யுறது?"

"நான் மந்திரம் ஜபித்து பக்ஷிதுர்காவை வரவழைக்கிறேன். அதன் உதவியால் அந்த அங்கியை எடுத்து வரச் செய்யலாம். ஆனால், அதை ராத்திரியில் தான் செய்ய முடியும்".

"ராத்திரியிலா? அப்படீன்னா அது எப்பவும் அவரு உடம்புலதானே இருக்கும்?"

"அதற்கும் ஒரு வழி கண்டுபிடித்திருக்கிறேன். ஃபாதர் அந்த டீச்சரின் வீட்டுக்குள் போய் விட்டால், அவர் சட்டையை அவிழ்த்து வைக்கிறார்! "

"சரி உங்களது யோசனைப்படியே நடக்கட்டும் வாரியரே! "

இரவுச் சாப்பாட்டுக்குப் பிறகு ரவீந்திரனும் சங்கு வாரியரும் பர்னாண்டஸின் இருப்பிடத்துக்கு வந்து மறைந்திருந்தார்கள். அவர்கள் இருந்த இடத்திலிருந்து கடிகாரம் மணியடிக்கும் ஓசை தெளிவாகக் கேட்டது.

சங்கு வாரியர் மந்திரம் ஜபிக்கத் தொடங்கினார்:

"ஓம் ... ஹ்ரீம் ...பூம் துர்கா பக்ஷிரூபினி தூம் ... தூம் ...வும் ... தூம்... தூம்... தூம்... தேவரங்கனி ரோம் ஹ்ரீம் ... தூம்... தூம்... ஸ்வாஹா".

மந்திரம் உச்சரிப்பதுடன் செப்புத்தகட்டில் அதற்குரிய சக்கரத்தையும் வரைந்து கொண்டிருந்தார்.

"டாங் ...டாங் ...டாங்! "

மணி பன்னிரண்டு முறை அடித்தது.

அந்த சர்ச்சின் கதவு திறக்கப்பட்டது.

பர்னாண்டஸ் வெளியே வந்தான். நிலவு மேற்குப்

புறமாகச் சரிந்து மேலெழும்பி இருந்ததால் அவர்களால், பர்னாண்டஸை தெளிவாகப் பார்க்க முடிந்தது.

சிவப்பு நிற அங்கியை அணிந்தவாறு அவன் வெளியே வந்தான்.

சுற்றுமுற்றும் பார்த்தபிறகு கல்லறையின் தென்புற வழியில் வேகமாக நடக்கத் தொடங்கினான் அவன். அதன் காம்பௌண்டுச் சுவர் ஒரு கோட்டை மதில் போல் இருபுறமும் சற்றுப் பிளந்து நின்றிருந்தது.

வாரியரின் மந்திரம் முடிவடையப் போகும் தருணம்.

அதே சமயம் கிழக்குத் திசையிலிருந்து ஒரு பெரிய சுழல் காற்று வீசும் சத்தம் கேட்டது. பெரிய பெரிய மரங்கள் வேரோடு சாய்ந்து விழுந்து விடுவது போல் காற்று வலுவாக வீசியது.

பயங்கரமான காற்று!

ரவீந்திரன் அந்தத் திசையில் பார்த்தான்.

“இந்தா ... இதை இடுப்பில் அணிந்து கொள். அன்றைக்கு காணாமல் போனதற்கு பதில் இது!” - வாரியர் அதை ரவீந்திரனிடம் கொடுத்தார்.

அதே சமயம் ஆகாயத்திலிருந்து மேகத் துண்டு ஒன்று பெயர்ந்து விழுவதைப் போல, பக்ஷிதுர்கா அவர்களுக்கு முன்பாக வெளிப்பட்டது.

ரவீந்திரன் ஒரு கணம் திடுக்கிட்டான்.

பெரிய காளை மாடு ஒன்றைப் பாய்ந்து தூக்கிச் செல்லும் அளவுக்கு அந்தப் பறவை பெரியதாக இருத்தது. சிவப்பு நிறக் கண்கள். நீண்ட அலகு. பெரிய இறக்கைகள்.

“பக்ஷிதுர்காவே, அதோ போகிற மனிதரின் உடம்பிலுள்ள சிவப்பு அங்கியை எடுத்துக் கடலில் எறிய

வேண்டும்! " வாரியர் கூறினார்.

பக்ஷிராஜா, பர்னாண்டஸைப் பின்தொடர்ந்து பறந்தது. அவன் தலைக்கு மேல் ஒரு கார்மேகத் துண்டு போல் அது நகர்ந்தது.

கடைசியில் ஷேர்லியின் வீட்டுக்குள் நுழைந்தான் பர்னாண்டஸ்.

பிரமாண்டமான அந்தப் பறவையும் உடனே தனது வடிவத்தைச் சிறிதாக்கிக் கொண்டு, ஷேர்லியின் வீட்டு வாசலுக்கு அருகிலிருந்த மாமரக்கிளையில் அமர்ந்தது.

பர்னாண்டஸ் ஷேர்லியை அழைத்தான்.

அவன் கதவைத் திறந்தாள்.

"நான் சந்தேகப்பட்டேன் ... பிறகு ..."

"எனக்குத் தெரியும் நீ என்ன சொல்லப் போகிறாய் என்று. அதெல்லாம் பரவாயில்லை!"

பர்னாண்டஸ் தனது சிவப்பு அங்கியைக் கழற்றிக் கட்டிலின் மேற்புறச் சட்டத்தில் போட்டான்.

"வா ஷேர்லி! "

இருவரும் ஒருவரையொருவர் கட்டிப் பிடித்திருந்த தருணத்தில் ...

மரக் கொம்பில் மறைந்திருந்த பறவை மெதுவாகக் கீழே வந்து ... ஜன்னலில் அமர்ந்தது.

பறவை விநாடிக்கு விநாடி சிறிதாகிக் கொண்டிருந்தது. எதிர் பாராத ஒரு தருணத்தில் அது சட்டென்று ஜன்னலுக்குள் நுழைந்து தனது இலக்கான சிவப்பு அங்கியைக் கொத்திக் கொண்டு பறந்தது. ஜன்னலைத் தாண்டியதும் அதன் வடிவம்

மீண்டும் பெரிதாகியது.

பறவை மேற்புறமாக பறந்து உயர்ந்தது.

பர்னாண்டஸ் துள்ளியெழுந்து கதவைத் திறந்து கொண்டு வராந்தாவை அடைந்தான். தனது அங்கியுடன் பறக்கும் பறவை அவன் கண்ணுக்குத் தெரிந்தது.

திடீரென்று அவன் உரத்த குரலில் சிரிக்கத் தொடங்கினான், "ஹா ...ஹ்...ஹா..." அந்த சிரிப்பைக் கேட்டு அந்த வீடே நடுங்கி உறைந்தது. மரங்கள் கூட ஒரு கணம் சலனமற்றுப் போயின.

அவன் மீண்டும் பைசாசிகமாகச் சிரித்தான். பிறகு தன் வலக்கையால் இடக்கையை ஒரே இழுப்பில் பிய்த்தெடுத்து மேற்புறமாக எறிந்தான்.

அந்தக் கை ஆகாயத்தில் பாய்ந்து சென்று, சிவப்பு அங்கியைப் பிடித்துக் கொண்டு கீழ்ப்புறமாக இழுத்தது. பறவையும் தனது சர்வ வல்லமையையும் உபயோகித்து அங்கியை விட்டுக் கொடுக்காமல் விரைவாகப் பறந்தது.

இரண்டு சக்திகள் அங்கு பரஸ்பரம் மோதிக் கொண்டன.

கடைசியில் அந்தக் கை, அங்கி உட்பட பறவையையும் சேர்த்துக் கீழே இழுத்து வந்து மரக்கிளைகளுக்கு ஊடாகப் பாய்ந்தது. பறவை மரக் கிளைகளில் சிக்கிக் கொண்டது.

பர்னாண்டஸ் மீண்டும் சிரித்தான். அங்கி அவன் கைக்கு வந்தது. அந்தக் கை, திரும்பவும் வந்து பறவையைப் பிடித்து, வந்த வழியிலேயே திரும்பிப் போய்த் தொலையட்டும் என்பது போல் வீசி எறிந்தது. அதன் பின் கை மீண்டும் அவனிடம் வந்து சரியான இடத்தில் தானாகவே பொருந்திக் கொண்டது.

ரவீந்திரன் மற்றும் சங்கு வாரியருக்கு முன்னால் பொத்தென்று வந்து விழுந்தது பறவை.

வாரியர் அதிர்ந்தே போனார். "என்ன இது!"

"அவர் ஃபாதர் அல்ல; அது ஒரு பிசாசு. கொடிய பிசாசு". - வாரியரது குரலில் வன்மம் தெரிந்தது.

மறுநாள் ரவீந்திரன், வின்செண்ட் ஃபாதரிடம் விவரத்தைத் தெரியப்படுத்தினான்.

"நாம் வேறு என்ன செய்யலாம்?" வின்செண்ட் ஃபாதர் ஏமாற்றத்துடன் கேட்டார்.

"வழி பிறக்கும் ஃபாதர். நல்லது எப்போதாவது தோல்வியடைந்திருக்கிறதா?" ரவீந்திரன் அவருக்கு ஆறுதல் கூறினான்.

இரண்டு மூன்று நாட்கள் நகர்ந்தன.

ஒரு மாலை நேரத்தில் ரவீந்திரன், வின்செண்ட் ஃபாதரிடம் வந்தான். பர்னாண்டஸை பற்றிப் பேசினான். "ஃபாதர், அவருக்கு முன்னைக் காட்டிலும் இப்போது சக்தி அதிகரித்திருக்கிறது".

"அப்படியானால் நாம் புதிய வழிகளைத் தேட வேண்டும்"! ஃபாதர் கூறினார்.

"இதனால் எல்லாம் நாம் தோல்வியடைந்து விட்டதாக அர்த்தமில்லை ஃபாதர். நான் மீண்டும் நல்ல சேதியுடன் வருகிறேன்!"- ரவீந்திரன் எழுந்தான்.

அவன் இருளில் மறைவதையே பார்த்தபடி இருந்தார் அவர்.

அப்போது பனிப்படலம் போன்ற ஏதோ ஒன்று

ரவீந்திரனைப் பின்புறமாக நெருங்குவதாக, வின்செண்ட் ஃபாதருக்குத் தோன்றியது!

# 26

'ரவீந்திரனைப் பின்தொடர்வது யார்?' என்று அறிந்து கொள்ள ஃபாதர் வின்செண்ட்டுக்கு ஆர்வம் தோன்றியது.

அவர் உடனே அதை நோக்கிப் பாய்ந்தோடத் தொடங்கினார்.

அவர் ரவீந்திரனை நெருங்கியபோது, அவன் ஒரு கல்லில் உட்கார்ந்திருந்தான். அவனுக்கு அருகில் எவரும் இல்லை.

"ரவி ...ரவி!" ஃபாதர் அழைத்தார்.

ஆனால் அவன் காதில் வாங்கியதாகத் தெரியவில்லை. மறுபடியும் அவனை அழைத்தார். அப்போதும் அவன் அசையாமல் இருந்தான்.

ஃபாதர், ரவியை நெருங்கினார். அவனை உலுக்கி யெழுப்ப முனைந்தபோதும் எந்த விதமான பலனும் ஏற்படாதது மட்டுமின்றி, அப்படியே சரிந்து விழுந்தான். இதையெல்லாம் பார்க்கப் பார்க்க ஃபாதருக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை!

அவன் மூக்கில் கை வைத்துப் பார்த்தார். நல்ல வேளையாக மூச்சு சீராக வந்தது. அவர், அவனைத் தோளில் போட்டுக் கொண்டு மீண்டும் சர்ச்சுக்கு வந்தார்.

தனது படுக்கையில் அவனைப் படுக்க வைத்த பிறகு,

அவன் முகத்தில் தண்ணீர் தெளித்தார். பின்பு மயக்கம் தெளிவதற்காக ஏதோ ஒரு மருந்தை முகரச் செய்தார்.

ரவீந்திரன் கண்களைத் திறந்தான்.

"ரவி ... என்ன நடந்தது?" ஃபாதர் கேட்டார்.

"என்னன்னு தெரியலை ஃபாதர். நான் நடந்து போகும்போது என் மேல் ஏதோ ஒண்ணு வந்து விழுந்தது மாதிரி வலுவா ஒரு காத்து வந்து மோதின மாதிரித் தெரிஞ்சது. திரும்பிப் பார்த்த போது, சிவப்பு அங்கி அணிந்த பிரான்சிஸ் ஃபாதர் கண்ணுக்குத் தெரிந்தார். அவர் கையால் என்னென்னவோ ஜாடைகள் காட்டினார். நல்ல வேளையாக, என் இடுப்பில் உள்ள தாயத்தின் சக்தியினாலோ என்னவோ... மயக்கத்தில் ஆழ்ந்ததைத் தவிர வேறு எதுவும் நடக்கவில்லை!"

"ஃபாதர் எங்கேயோ போயிட்டு திரும்பி வந்தார். அவர் எங்கே போய் வருகிறார் என்பதை நாம் நாளைக்குக் கண்டுபிடிக்க வேண்டும். படுத்துத் தூங்கு ரவி. பொழுது விடிஞ்ச பிறகு வீட்டுக்குப் போகலாம்! " ஃபாதர் வின்செண்ட், அவனிடம் சொன்னார்.

மிகவும் நெருங்கிய உறவினர்களோ, விருந்தினர்களோ வந்தால் மட்டுமே அவர்களுக்குத் தரும் அறையை ரவீந்திரனுக்காகத் திறந்து கொடுத்தார். ரவீந்திரன் படுத்துக் கொண்டான்.

**ம**றுநாள் காலையில் காபி சாப்பிடும்போது ஃபாதர், லிஸியைப் பற்றிப் பேசினார்: "கரியாச்சனது வீட்டுக்குப் போய் லிஸி எப்படி இருக்கிறாள் என்று பார்க்க வேண்டும் ரவி! "

ரவீந்திரன் விடை பெற்றான்.

**அ**ன்று நள்ளிரவான போது ஷேர்லியின் வீட்டுக்குச் சென்றான் பர்னாண்டஸ். அவனை வரவேற்று உள்ளே

அழைத்துச் சென்ற ஷேர்லி கூறினாள்: "அந்தப் பெண்ணை நான் ஒரு வகையாக அழைந்து வந்திருக்கிறேன். நான் தனியா இருக்கிறதால துணையா என் கூடப் படுத்துக்கிறட்டுமேன்னு சொன்னவுடனே, அவங்க அப்பா - அம்மா ரெண்டு பேருமே சம்மதிச்சு அனுப்பினாங்க!"

அதைக் கேள்விப்பட்ட பர்னாண்டஸ் மகிழ்ந்தான்.

"எங்கே அந்தப் பெண்?" - அவன் ஆர்வத்துடன் கேட்டான்.

"ஏழு மணி வரையில் இங்குதான் இருந்தாள். அதுக்குப் பிறகு அவளோட குணமே மாற ஆரம்பிச்சது. உடனே வீட்டுக்குப் போகணும்னு சொன்னாள் ..."

"சே ... எதுக்காக அவளை அனுப்பி வைச்சே?"

"எதையோ மறந்து வைத்து விட்டதாகவும் உடனே எடுத்துக் கொண்டு வருவதாகவும் சொல்லிப் போனாள், நாளைக்கு கண்டிப்பாக வருவதாகச் சொல்லியிருக்கிறாள்!"

"ஷேர்லி மனசு வைச்சா எதுவும் நடக்கும்கிறது என்னோட நம்பிக்கை!"

"கவலைப்படாதீங்க. நாளைக்கு அவள் நிச்சயம் இங்கே இருப்பாள். ஆமாம், அவளை விரும்புற ஆள் எங்கே?"

"அவள் இங்கே இருக்கிறாள்னு தெரிஞ்ச பிறகு அவனை வரவழைச்சா போதாதா?"

"அது போதும். ஆமாம் ... நீங்க இங்கே வர்றதை யாராவது கவனிச்சாங்களா ஃபாதர்?"

"இல்லை, யாரும் கவனிக்கலை!"

"நான் தனியா இருக்கிறதால, நீங்க இங்கே வர்றதை யாராவது பார்த்தா தப்பாப் பேசுவாங்க இல்லையா ...

அதுதான்! ”

“நாளைக்கு ராத்திரி லிஸி இங்கே இருப்பாள் இல்லையா?”

“கண்டிப்பாக இருப்பாள்! நீங்க எனக்குச் செய்திருக்கிற உதவிகளை நான் மறக்க முடியுமா? முடிஞ்ச அளவுக்கு அதுக்கு நான் ஏதாவது பதிலுக்குச் செய்ய வேணாமா?”

**அ**ங்கிருந்து இரவு நேரத்தில் திரும்பி வரும் போது தான், வழியில் அவன் ரவீந்திரனைச் சந்தித்தான். ஆள் யார் என்று அடையாளம் தெரிந்தவுடன், தனது சிவப்பு அங்கியைக் கழற்றி அவன் மீது வீசி எறிந்தான். ரவீந்திரன் உடனே மயக்கமடைந்தாலும் பர்னாண்டஸால் அவனை நெருங்க முடியவில்லை. அவன் கழுத்தை நெரித்துக் கொல்ல பர்னான்டஸின் கைகள் பரபரத்தாலும் கண்ணுக்குத் தெரியாத ஏதோ ஒரு சக்தி அவனை ரவீந்திரனிடம் நெருங்க விடாமல் தடுத்தது. ஒரு வேளை தனது உண்மை உருவம் வெளிப்பட நேரிடலாம் என்ற பயத்தில், கடைசியில் தனது சிவப்பு அங்கியைத் திரும்ப எடுத்துக் கொண்டு நடந்தான் அவன்.

தனது இருப்பிடத்துக்கு வந்தபோது லூக்கோ பயந்து நடுங்குவதை கவனித்தான்.

“என்ன லூக்கோ, என்ன நடந்தது? ஏன் ஒரு மாதிரி இருக்கிறே?” - பர்னாண்டஸ் கேட்டான்.

“ஓ ... ஒண்ணுமில்லை. கொஞ்ச நேரத்துக்கு முன்னால இங்கே ஒரு பொண்ணு வந்திருந்தாள்!”

“வந்து ... ”- எதிர்பார்ப்புடன் கேட்டான்.

“உங்களை எங்கேன்னு கேட்டாள்! ”

“ஓகோ! ”

“நீங்க இங்கே இல்லைன்னு சொன்ன உடனே அவ என்னை ஒரு பார்வை பார்த்தாள் ... நான் அப்படியே நடுங்கிப் போயிட்டேன்! ”

பர்னாண்டஸுக்கு விஷயம் விளங்கியது. ரவீந்திரனும் அவன் கூட்டாளியான அந்த மாந்திரீகனும் சேர்ந்து அனுப்பி வைத்த ஒரு ரக்ஷஸாகத்தான் இருக்க வேண்டும் அது என்று தோன்றியது.

“போன வாரம் வேற ஒண்ணு வந்தது. ஆனா, நான் அதை உங்ககிட்ட இதுவரைக்கும் சொல்லலை ஃபாதர். என்னால இனிமேல் இங்கே இருக்க முடியாது. நாளைக்கே நான் எங்க வீட்டைப் பார்க்கக் கிளம்பிடுறேன்! ”

“அந்த அளவுக்கு இங்கே என்ன நடந்துச்சு? விவரமாகச் சொல்லு! ”

“இந்தக் கல்லறையை ஒட்டின இடத்தில நீங்க குடியேறினதே எனக்குச் சந்தேகம்தான்! ”

“என்ன சந்தேகப்பட்டே?”

“இங்க பிசாசுங்க வரும்னு! ”

“சரி. அப்புறம் அப்படி ஏதாவது வந்துச்சா என்ன?”

“வந்துச்சே! ஒரு வாரத்துக்கு முன்னால அப்படி ஒருத்தி இங்கே வந்திருந்தாள்”.

“அப்படியானால், வந்திருந்தது அன்னம்மா ஜேக்கப் தான் என்பது பர்னாண்டஸுக்குப் புரிந்தது. ஆனால், அவள் வந்ததும் லூக்கோவுக்கு எதுவும் ஆபத்து நேராமலிருந்தது அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது.

“சரி... நீ என்ன செஞ்சே?”

லூக்கோ அதற்கு பதில் சொல்லாமல் தலை தாழ்த்திய படி

மௌனமாக இருந்தான்.

"சொல்லு... அந்தப் பொண்ணு உன்னை எதுவும் செஞ்சாளா?"

"என்னை ஒண்ணும் பண்ணலை!" அவன் சங்கோஜத்துடன் பதிலளித்தான்.

"நீ சொல்றதை நான் ஒப்புக்க மாட்டேன். சமீபகாலமா உன்கிட்டயும் நிறைய வித்தியாசம் தெரியுது. நான் அதையெல்லாம் கவனிக்கலேன்னு நினைக்காதே!"

லூக்கோ, பர்னாண்டஸை நிமிர்ந்து பார்த்தான்.

"என்னோட வாழ்க்கையில் அப்படி நடந்தது அதுதான் முதல்தடவை. அன்னிக்கு மட்டும் அந்த ஃபாதர் இங்கே இல்லாம இருந்திருந்தா, அந்தப் பெண் என்னைக் குதறி எறிஞ்சிருப்பா!"

"என்ன... நீ என்ன சொல்றே?"

"ஃபாதர், அன்னிக்கு வந்தது ஒரு பிசாசு. அவள் என் நெஞ்சைக் கிழிக்க வந்தபோது, நம்ம சர்ச்சோட ஃபாதரும், அவர் சினேகிதரும் நல்ல வேளையா ஓடிவந்து என்னைக் காப்பாத்தினாங்க. நான் இதுவரைக்கும் உங்ககிட்டச் சொல்ல வேணாம்னு இருந்தேன். இனிமேலும் நான் இதையெல்லாம் உங்ககிட்டச் சொல்லாம இருக்கக் கூடாதுன்னுதான் இப்போ சொல்றேன். ஆளை விடுங்க. நாளைக்கே நான் பெட்டி படுக்கையோட ஊர் போய்ச் சேர்ந்திடுறேன்".

"நீயும் போயிட்டா அப்புறம் எனக்கு யாரு? நானும் தனியா இல்ல இருக்கணும்?"

"நீங்களும் எதுக்கு இங்கே கிடந்து இந்தப் பிசாசுகளோட மல்லாடணும்? நீங்களும் உங்க வீட்டுக்கே போயிடுங்க. எப்படி இருந்தாலும் இனிமேல் நான் இங்கே இருக்க முடியாது ஃபாதர்!"

"நீ உங்க உங்க வீட்டுக்குப் போயிட்டா இங்கே நடந்ததையெல்லாம் அவங்ககிட்டச் சொல்ல வேண்டி இருக்குமோ! "

"அப்புறம்? ஏண்டா திடுதிப்புன்னு வந்துட்டேன்னு கேட்டால், காரணம் சொல்லாம இருக்க முடியாது?"

அந்த பதிலைக் கேட்டதும் பர்னாண்டஸின் கண்களைச் சுற்றிச் சுருக்கங்கள் ஏற்பட்டன. சந்தேகத்துடன் அவன் லூக்கோவை ஏறிட்டான். 'இவனை இப்படியே விட்டு வைப்பது நல்லதில்லையே!' அவன் மனதுக்குள் ஒரு திட்டமிட்டான்.

"சரி! இனிமேல் அப்படி எதுவும் நடக்காம இருக்க, உன் தலையில் கை வைச்சு பிரார்த்தனை செய்யறேன்! "

"என் தலையில் கை வெச்சு என்ன பிரயோஜனம்? அதனால அவள் வராம இருந்துடுவாளா என்ன? நீங்க அவ தலையில இல்ல கை வெச்சுப் பிரார்த்திக்கணும்?"

"சரி. நீ சொன்னதெல்லாம் நியாயம்தான். இனிமே நீ சொல்ற மாதிரி ஏதாவது நடந்தா, அப்ப அதைப் பற்றி யோசிப்போம்! " பர்னாண்டஸ் அவனுக்கு ஆறுதல் கூறினான்.

"சரி இனிமேல் அப்படி ஏதாவது நடந்தா, உங்ககிட்ட சொல்லிட்டுப் போகக்கூட காத்திருக்காம நான் கிளம்பிடுவேன்!"

"செய்! இதுவரைக்கும் இங்கே நடந்ததையெல்லாம் நீ வேற யார்கிட்டயும் மூச்சுவிடக்கூடாது!" அவனை எச்சரிக்கை செய்துவிட்டு, நூறுரூபா நோட்டு ஒன்றை எடுத்துக் கொடுத்து, "எல்லாவற்றையும் மறந்து சந்தோஷமாக இரு! " என்றான்.

அப்போது பொழுது விடியத் தொடங்கியிருந்தது.

தூரத்தில் எங்கோ சேவல் கூவும் சத்தம் கேட்டது.

பர்னாண்டஸ் படுக்கையில் விழுந்தான். வெகு நாட்களாகவே பர்னாண்டஸ் பகலில்தான் உறங்குகிறான். சூரிய ஒளியைப் பார்ப்பதென்றாலே அவன் சங்கப் பட்டான். விழித்தால் உற்சாகக் குறைவு ஏற்பட்டதுடன், பகல் என்றாலே அவன் பயப்படத் தொடங்கினான்.

விடியும்போது படுப்பவன், எழுந்து கொள்ள வெகுநேரம் ஆகும் என்று லூக்கோவுக்குத் தெரியும்.

அவசரமான காலை வேளைகளை முடித்துக் கொண்டு சர்ச்சுக்கு வந்தான் லூக்கோ. சரியான நேரத்தில் வந்து தன்னைக் காப்பாற்றிய ஃபாதரைக் கண்டு நன்றி தெரிவிக்க விரும்பினான். எல்லாவற்றுக்கும் மேலாக முந்தைய நாள் இரவில் நடந்த சம்பவத்தைக் கூறி, அது எதனால் என்பதையும் அறிந்து கொள்ள விரும்பினான்.

லூக்கோ அங்கு சென்றபோது ஃபாதர் மட்டுமே இருந்தார். அவரும் பார்க்க விரும்பினார்.

"லூக்கோ, அப்புறம் உடம்புக்கு எதுவும் இல்லையே?" வின்சென்ட் ஃபாதர் கேட்டார்.

"உடம்புக்கு ஒண்ணுமில்லை ஃபாதர். ஆனா, மனசுல ஒரே பயமா இருக்கு..." என்றபடி அவரது அறை வாசற்படியில் அமர்ந்தான்.

"உன்னோட பயத்தை பிரான்சிஸ் ஃபாதர் கிட்டச் சொன்னியா?"

"எல்லாத்தையும் சொல்லிட்டேன்!"

"என்ன சொன்னார்?"

"அதெல்லாம் பரவாயில்லை. போகட்டும்னு சொன்னார்!"

"அவர் இப்போ என்ன செய்றார்?"

“ராத்திரி எங்கேயோ போயிருந்தார். விடியக்காலையில் தான் வந்தார். இப்பப் படுத்துத் தூங்குறார்!”

“அவர் எங்கே போயிருந்தாருன்னு உனக்கு ஏதாவது தெரியுமா?”

“என்கிட்ட அவர் எதையுமே சொல்றதில்லையே!”

“ஆமாம்... அவரைத் தேடி அந்த இடத்துக்கு யாராவது வர்றதுண்டா?”

“புதுசா யாரும் வர்றது இல்லை ஃபாதர்! ஆனா, கொஞ்சநாளைக்கு முன்னால ஷேர்லி டீச்சர்கிட்டக் குடுக்கச் சொல்லி என்கிட்ட ஒரு லெட்டர் குடுத்து அனுப்பினார்”.

“ம்... அப்புறம்?”

“பக்கத்து டவுன்ல இருக்கிற ஓட்டலுக்கு அவங்களைக் கூட்டிட்டு வான்னு சொல்லி, லெட்டரை என்கிட்டக் கொடுத்தார். அதைப் பார்த்தவுடனே அவங்களும் என்கூட வந்துட்டாங்க!”

“அன்னிக்கு ராத்திரி அவர் திரும்பி வந்துட்டாரா?”

“வரலை!”

ஷேர்லி டீச்சர் தனியாகத் தங்கியிருப்பது வின்செண்ட் ஃபாதருக்குத் தெரியும். எனவே, அப்படி வரவழைத்தற்கு பிரத்தியேகமான காரணம் ஏதாவது இருக்கும் என்று அவருக்குத் தோன்றியது.

மிகவும் செளகரியமாக லூக்கோ தானாகவே வந்து சேர்ந்ததால்... ஃபாதர் பிரான்சிஸின் வாழ்க்கை முறை பற்றித் தெரிந்து கொள்ள வின்செண்ட் ஃபாதர் முடிவெடுத்தார்.

“லூக்கோ, நான் உன்கிட்டச் சில விஷயங்கள் கேட்கணும். உண்மையைச் சொல்லுவியா?”

"நீங்க என்ன கேட்டாலும் நான் எனக்குத் தெரிஞ்ச உண்மையைச் சொல்றேன் ஃபாதர்! "

"அங்கே அவர் பிரார்த்தனை பண்றதை நீ பார்த்திருக்கியா?"

லூக்கோ பதிலளிக்காமல் மௌனம் சாதித்தான். எல்லா விபரங்களையும் வெளிப்படையாகச் சொல்லி விட்டால், ஒரு வேளை தானும் குற்றவாளிக்கூண்டில் நிற்க நேருமென்று லூக்கோ பயந்தான். அதற்கும் காரணம் இருந்தது. பெற்றி ஸ்டூவர்ட்டின் கல்லறைக்கு மேலிருந்த சிலுவையை, கல்லறையைத் திறந்து எடுத்தது அவன்தான். பிரான்சிஸ் ஃபாதர் சொன்னதால் அதைச் செய்தான். அவர் அப்படி ஒவ்வொன்றாகக் கிளறிக் கிளறிக் கேட்க, தானும் அவசரத்தில் உண்மைகளை உளறி வைக்க நேரலாம். எனவே, சொன்னது வரைக்கும் போதும் என்று முடிவு செய்தவனாக உட்கார்ந்திருந்தான்.

"லூக்கோ நீ எதையோ மறைக்கிறேன்னு நெனைக்கிறேன். இங்கே பார். நேத்து நான் உன்னைக் காப்பாத்தினது இந்தச் சிலுவையோட உதவியாலதான். அதனால, நீ இதைக் கையில பிடித்துக் கொண்டு உண்மையைச் சொல். இல்லேன்னா உனக்கும் அழிவுகாலம் தான்கிறதை ஞாபகம் வெச்சுக்க!" என்றபடி அவன் கண்களை உற்றுப் பார்த்தார் ஃபாதர்.

அந்தப் பார்வை அவனை பயப்படுத்தியது. அவனையும் மீறி அவன் வலக்கை அந்தச் சிலுவையைத் தொட்டது.

"பயப்படாதே, உண்மையைச் சொல். அவர் அங்கே பிரார்த்தனை செய்வதை நீ பார்த்திருக்கிறியா?"

"ஒரு தடவையோ, ரெண்டு தடவையோ பார்த்திருக்கிறேன்".

"எப்படிப் பிரார்த்தனை பண்றார்?"

"ஒரு தடிமனான புத்தகத்தை வைத்துக் கொண்டு பிரார்த்தித்தார்..."

"அது வேதப் புத்தகமில்லையா?"

"வேதப் புத்தகமே அங்கு எங்கேயும் கிடையாது! "

"நீ எப்படி பிரார்த்தனை பண்றே?"

"நான் பாட்டுக்கு தனியா உட்கார்ந்து, நெஞ்சிலே சிலுவை போட்டுப் பிரார்த்திப்பேன்..."

"அவர் ஸ்தோத்திரம் சொல்றது உண்டா?"

"அங்கே எங்கேயுமே சிலுவை கிடையாதே!"

"நான் உன்கிட்ட ஒரு ரகசியம் சொல்லட்டுமா? யார்கிட்டேயும் சொல்லக்கூடாது. அதுவும் உனது பாதுகாப்புக்காகத்தான் சொல்றேன்".

"சொல்லுங்க ஃபாதர்! "

"அங்கே ஒரு புஸ்தகம் இருக்கிறதா நீ சொன்னே இல்லையா? அதை உன்னால எடுத்துட்டு வர முடியுமா?"

"ஃபாதர், உண்மையைச் சொன்னா. அதை எங்கே வெச்சிருக்கார்னே எனக்குத் தெரியாது".

"அங்குதான் எங்கேயாவது இருக்கும். நீ கவனமாகத் தேடினா கிடைக்காமப் போகாது. ஒரு வேளை அது கிடைச்சதுன்னா, திறந்து பாக்காம அதை அப்படியே நேரா என்கிட்டக்கொண்டு வந்து கொடு. ஆனா, ஃபாதர் அங்கே இருக்கிறபோது அதை எடுக்காதே! "

"முயற்சி பண்றேன் ஃபாதர்! "

"அது போதாது. அது இங்கே வந்து சேர்ந்தால்தான், நீ இதிலிருந்து தப்பிக்க முடியும்! "

"நீ இங்கே வந்துட்டுப் போறதும் அவருக்குத் தெரிய வேண்டாம்".

"கவனமா இருக்கேன் ஃபாதர்! "

**லூ**க்கோ அங்கிருந்து கிளம்பினான்.

போகும்போதே அவன் கொஞ்சம் சரக்கை உள்ளே இறக்கிக் கொண்டான். தனது இருப்பிடத்துக்கு வந்தபோது பர்னாண்டஸ் நல்ல தூக்கத்திலிருந்தான். அவனுக்கும் களைப்பாகத் தோன்றவே அப்படியே சமையலறை கட்டிலில் ஏறிப்படுத்தான்.

அவன் திரும்பக் கண்விழித்த போது நேரம் இரவாகியிருந்தது. பர்னாண்டஸை அங்கு எங்கும் காணவில்லை. கடிகாரம் பத்து முறை மணியடித்தது.

விளக்கை ஏற்றிக் கொண்டு லூக்கோ, பர்னாண்டஸின் அறைக்குள் நுழைந்தான். அந்தப் புத்தகத்தைத் தேடிக் கண்டுபிடிப்பது அவனது நோக்கம். எங்கு தேடியும் அது அகப்படவே இல்லை. ஒரு தடவை. அவன் கை யதேச்சையாகத் தலையணை மீது பட்டது மட்டுமின்றி அந்தப் பகுதி மட்டும் சற்று மேடாகவும் தெரிந்தது.

தலையணை உறையைப் பிரித்தான். உள்ளே பருமனான அந்தப் புத்தகம் இருந்தது.

அதைக் கையில் எடுத்தவுடன் அந்த அறைக்குள் ஒரு காலடியோசை கேட்டது. அவன் கவனித்தான். ஆனால், எவரும் கண்ணுக்குத் தட்டுப்படவில்லை. முந்தைய நாள் இரவில் நடந்த சம்பவம் சட்டென்று அவன் நினைவில் எழுந்தது.

பயம் அவன் கால் கட்டை விரலிலிருந்து மேல்நோக்கி வேகமாக ஊடுருவத் தொடங்கியது!

# 27

"யாரது?" - லூக்கோ கேட்டான்.

ஆனால், பதில் கிடைக்கவில்லை!

அந்த அறையில் யாரோ இருக்கிறார்கள். ஆனால், தன் கண்ணால் ஆளைக் காண முடியவில்லை என்று லூக்கோவுக்கு விளங்கியது. அத்துடன் அவனது பயம் அதிகரித்தது.

இருப்பினும், அந்தப் புத்தகத்தை எடுத்துக் கொண்டு வெளிப்புறமாக ஓடினான். அந்தச் சமயத்தில் அவனுக்கு இருந்த ஒரே பாதுகாப்பு ஃபாதர் வின்சென்ட் மட்டுமே என்று அவனுக்குத் தோன்றியது. எனவே, சர்ச்சை லட்சியமாக்கி ஓடினான்.

வேகவேகமாக ஓடி வந்தவன், மூச்சு வாங்கியபடி ஃபாதரின் அறைக் கதவைத் தட்டினான்.

'கதவை யாரோ உடைத்துத் தள்ளுகிறார்களோ?' என்று ஃபாதருக்குத் தோன்றியது. துள்ளியெழுந்த அவர் கதவைத் திறந்தார். வெளியே லூக்கோ பயந்து மிரண்டவனாக நின்றிருந்தான்.

"ஃபாதர் இதோ அந்தப் புத்தகம்! " - புத்தகத்தை அவரிடம் கொடுத்தான்.

அது அவன் கையை விட்டுப் போன பிறகுதான்

அவனுக்கு நிம்மதியாக இருந்தது.

"ஃபாதர், திரும்பவும் நான் அங்கே போக மாட்டேன்!" - லூக்கோ கூறினான்.

"இனிமேல் நீ அங்கே போக வேண்டாம்!" என்ற ஃபாதர், தன் சமையற்காரரை அழைத்து, லூக்கோவையும் அவனுடன் தங்க வைக்குமாறு கூறினார். லூக்கோ அங்கு இருப்பதை யாரிடமும் சொல்ல வேண்டாம் என்றும் அவனிடம் எச்சரித்தார்.

சற்று நேரத்துக்குப் பிறகு ரவீந்திரன் வந்தான்.

"இதுதான் ரவி புத்தகம்!" - மிகவும் பழைய அந்தப் புத்தகத்தைப் பரிசோதித்தபடி கூறினார் ஃபாதர்.

**தோ**லாலான அட்டை போட்டு, பைண்டிங் செய்யப் பட்டிருந்த அந்தப் புத்தகம், எத்தனையோ நூற்றாண்டுகளுக்கு முற்பட்டது என்பது அவருக்கு விளங்கியது.

ஒரு தடவை புரட்டினார். உடனே மூடினார்.

"இந்தப் புத்தகத்தை அழிப்பது அவ்வளவு சுலபமல்ல. இது எரியவும் செய்யாது. இற்றும் போகாது. அப்படிப்பட்ட இது யார் கையிலாவது கிடைத்தாலும் ஆபத்துதான்!"

ஃபாதர் அந்தப் புத்தகத்தை மேஜை மீது வைத்து, அதன் மீது சிலுவை ஒன்றை எடுத்து வைத்தார்.

பைசாசிகமான வேறு எந்தச் சக்தியும் அதை மீண்டும் எடுத்துக் கொண்டு போகாதிருக்கவே, அவர் இப்படிச் செய்தார். ஆனால், மிகவும் விசித்திரமும், வியப்புக்கு உரியதுமான ஒரு காட்சியையே அதன் பிறகு அவர்கள் கண்டனர்.

உடனே அந்தப் புத்தகத்திலிருந்து நூல் போல் சன்னமாகப் புகை உயரத் தொடங்கியது. சிக்கலவிழ்க்கப் பட்ட நூல் போல் புகை மேற்புறமாக உயர்ந்தது. நேரம் செல்லச்

செல்ல... புகையின் பருமன் அதிகரித்தது.

ஃபாதர் சட்டென்று சிலுவையுடன் சேர்த்து அந்தப் புத்தகத்தை எடுத்துத் தரையில் வைத்தார்.

அப்போதும் அதிலிருந்து புகைச் சுருள்கள் உயர்ந்து கொண்டிருந்தன. சற்று நேரத்திற்குள் புகையின் வெண்மை நிறம் மாறிக் கருமையடைந்தது. அடர்த்தியான அந்தக் கரும்புகை ஜன்னல் பக்கமாக வெளியேறியது.

நேரம் செல்லச் செல்லப் புகையின் அடர்த்தி அதிகமாகிச் சற்று நேரத்தில் புத்தகமும் சிலுவையும் அதில் மறைந்தன. பறவையின் இறகுகள் நெருப்பில் எரிவது போன்ற நாற்றம் அறை முழுக்கப் பரவியது. ஆனால், நெருப்பு ஜுவாலைகள் எதுவும் கண்ணுக்குத் தெரியாமல் அதிலிருந்து புகை மட்டும் உயர்ந்து கொண்டிருந்தது.

படிப்படியாகப் புத்தகத்தின் பருமன் குறைந்து கொண்டே வந்தது. கடைசியில் புகைச்சுருள்களின் திண்மை குறைந்து இறுதியில் அது பார்வையிலிருந்து மறைந்தே போனது. வெறும் சிலுவை மட்டும் புத்தகம் கிடந்த இடத்தில் மீதமானது.

ஃபாதர் சிலுவையை எடுத்து மேஜை மீது வைத்தார்.

"ஃபாதர், நாம் அந்த டீச்சரின் வீட்டுக்குப் போக வேண்டாமா?" ரவீந்திரன் கேட்டான்.

"நான் அதற்குத் தயாராக இருந்தபோதுதான் லூக்கோ புத்தகத்துடன் வந்தான். வா, உடனே புறப்படலாம்!"

இருவரும் ஷேர்லியின் வீட்டை நோக்கிப் புறப்பட்டனர்.

**ஷே**ர்லியின் வீட்டை அடைந்ததும் மறைவான ஓரிடத்தில் ஒளிந்து கொண்டனர் அவர்கள். சற்று நேரத்துக்குள் பர்னாண்டஸ் அங்கு வந்து சேர்ந்தான். கதவை

நெருங்கியவன், மெல்லத் தட்டினான்.

ஷேர்லி கதவைத் திறந்தாள்.

"லிஸி வந்திருக்கிறாளா?"

"இல்லையே ஃபாதர், இன்னும் வரலையே? "

"போச்சு. இந்த பதிலைச் சொல்றதுக்காகவா உனக்கு நகையும் பணமும் கொடுத்தேன்?" - அவனது குரல் உயர்ந்தது.

"நான் எவ்வளவோ வற்புறுத்தியும் அவள் வரலை ஃபாதர். அவளுக்காகக் காத்துக்கிட்டிருக்கிற உங்கள் நண்பர் எங்கே?" - ஷேர்லி கேட்டாள்.

"அதெல்லாம் உனக்கு எதற்கு? உன்னால் ஒரு சிறு பெண்ணைக் கொண்டு வரமுடியவில்லையே!"

"கண்டிப்பாக நான் நாளைக்குக் கூட்டிட்டு வர்றேன் ஃபாதர். ஆமாம்... நீங்க உள்ளே வரலையா?"

அவன் வீட்டுக்குள் நுழைந்தான்.

"என்ன சாப்பிடுறீங்க?"

"எனக்கு எதுவும் வேண்டியதில்லை. சொன்ன சொல்லை நிறைவேற்றாத உன்னைக் கொல்லணும் போலத் தோணுது. நாளைக்கு மட்டும் நீ லிஸியைக் கூட்டீட்டு வரலேன்னா, நான் யாருன்னு அப்ப உனக்குத் தெரியும்! "

"இன்னிக்கு மட்டும் பொறுத்துக்கங்க. நான் ஒருத்தி இருக்கிறேன் இல்லையா?" ஷேர்லி அவனுக்கு முன்பாக நெஞ்சை நிமிர்த்தி நின்றாள்.

அரைகுறை மனத்துடன் பர்னாண்டஸ் அவளின் இரு தோள்களையும் பிடித்தான்.

ஃபாதர் வின்சென்ட்டும் ரவீந்திரனும் மறைந்திருந்து

எல்லாவற்றையும் கவனித்துக் கொண்டிருந்தனர்.

ஏறத்தாழ இரண்டு மணி நேரம் கழித்துத்தான் பர்னாண்டஸ் அங்கிருந்து வெளியேறினான்.

நேராகத் தனது அறைக்கு வந்து படுத்தான்.

காலையிலிருந்து லூக்கோவைக் காணவில்லை. சொல்லாமல் கொள்ளாமல் பக்கத்தில் எங்காவது போயிருப்பான் என்றே முதலில் நினைத்தான். மதியமும், மாலை நேரத்திலும் கூட அவன் வரவே இல்லை. வழக்கம் போல் இரவு நேரத்தில் ஷேர்லியின் வீட்டுக்கு வந்தான். அங்கு ஷேர்லியும் இல்லை.

மிகுந்த ஏமாற்றத்துடன் பர்னாண்டஸ் அங்கிருந்து திரும்பினான். தலையணையின் கீழிருந்து புத்தகத்தை எடுப்பதற்காகக் கையை விட்டான். ஆனால், புத்தகத்தை அங்கு காணவில்லை. சட்டென்று பயம் மின்சாரம் போல் அவன் மூளையில் பாய்ந்தது.

"எனது புத்தகம் எங்கே?" பர்னாண்டஸ் யாரிடம் என்றில்லாமல் கேட்டான்.

"பயப்படாதே! அந்தப்புத்தகம் அழிந்து விட்டது. ஆனால், நான் எப்போதும் உன்னுடன் இருக்கிறேன். நீதான் நான்; நான் தான் நீ!"

"என்ன! "பர்னாண்டஸ் வியப்புடன் கேட்டான்.

"அந்தப்புத்தகம் அழிந்து விட்டதால், இனிமேல் எனது இருப்பிடம் நீ மட்டுமே. முன்னெப்போதையும் விட உனது சக்தி இப்போது அதிகம்".

"உண்மையாகவா? "

அதற்கு பதில் கிடைக்கவில்லை.

மறுநாள் ஃபாதர் வின்சென்ட்டும் ரவீந்திரனும் பிஷப்பைச் சந்திக்கச் சென்றனர். ரவீந்திரனை, பிஷப்புக்கு அறிமுகப் படுத்தினார். பின்பு அன்று வரை நடந்துள்ள எல்லாவற்றையும் வின்சென்ட் ஃபாதர் அவரிடம் விவரித்தார்.

நம்ப முடியாத ஒரு கற்பனைக் கதையைக் கேட்பது போல் பிஷப் வியப்புடன் அதைக் கேட்டுக் கொண்டார்.

"என்னால் இதையெல்லாம் நம்ப முடியவில்லையே? ரவீந்திரன், நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்?" - பிஷப் கேட்டார்.

"ஃபாதர் சொன்னது அவ்வளவு சத்தியம், பிஷப் சார்!"

"நான் கண்ணாரக் காணாத ஒரு புரோகிதனைப் பற்றியோ, அவ்வளவு ஏன் எனக்குத் தெரியாத ஒரு நபரைப் பற்றியோ நீங்கள் சொன்னால்கூட நான் அதையெல்லாம் நம்ப முடியாது. நீங்கள் சொன்னவற்றை நிரூபிக்க ஏதாவது ஆதாரமிருந்தால், நான் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க முயற்சி செய்வேன்!"

"நாங்கள் அதற்கும் வேண்டிய ஏற்பாட்டைச் செய்து விட்டுத்தான் வந்திருக்கிறோம். வருகிற ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் மாதாவின் திருநாள் நிகழ்ச்சியில் நீங்களும் பங்கெடுக்க வேண்டுகிறோம். அதை நடத்த நீங்கள் ஃபிரான்சிஸ் ஃபாதரை அழையுங்கள் போதும்?"

"ஓ!... தாராளமாக. அப்படியே செய்யலாமே... அதிலென்ன சிக்கல்?"

"பிரான்சிஸ் ஃபாதரால் நமது வழக்கமான பிரார்த்தனையைச் சொல்ல முடியாது என்று எனக்கு உறுதியாகத் தெரியும்!"

"நீங்கள் என்ன சொல்கிறீர்கள் ஃபாதர்! இது, ஏதோ குழந்தை விளையாட்டு போல் இருக்கிறது!"

“ஃபாதர் பிரான்சிஸ் அன்று மட்டும் நமது சர்ச்சில் பிரார்த்தனை சொல்லிவிட்டால், அவர் மீது குற்றம் சுமத்திய தண்டனையும் நான் ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறேன்!” ஃபாதர் வின்சென்ட் உறுதியான குரலில் கூறினார்.

அவரது உறுதியைப் பார்த்த பிஷப், மறுப்பு ஏதுவும் சொல்லாமல் அதற்குச் சம்மதித்தார்.

ஒரு வார காலம் கடந்து போனது. மாதாவின் திருநாளும் வந்தது.

சர்ச், தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. பிஷப் அன்று விடியற் காலையிலேயே தேவாலயத்துக்கு வந்து சேர்ந்தார்.

சர்ச்சுக்கு வந்தவர், திருச்சபை ஊழியர் ஒருவர் மூலமாகத் தனது உத்தரவை பர்னாண்டஸுக்கு அனுப்பி வைத்தார். ‘என்ன இருந்தாலும் திருநாள் பிரார்த்தனையை நீங்கள் தான் நடத்த வேண்டும்!’ என்று அதில் குறிப்பிட்டிருந்தார்.

அந்த உத்தரவைப் பெற்ற பர்னாண்டஸின் கைகள் நடுங்கின. பிஷப்பின் கட்டளை! எந்தக் காரணத்தை முன்னிட்டு இதை மறுக்க முடியாது!

கடைசியில் பர்னாண்டஸ் அந்த ஊழியருடன் சர்ச்சுக்குப் புறப்பட்டான்.

பர்னாண்டஸ் சர்ச்சின் அருகில் வந்தபோது, பிஷப் குழந்தைகள் சிலருடன் பேசிக் கொண்டிருப்பதைப் பார்த்தான்.

“பிரான்சிஸ் ஃபாதர், வந்துட்டீங்களா?” - பிஷப் கேட்டார்.

உடல் முழுக்க வியர்வையால் நனைந்திருந்த பர்னாண்டஸ், பிஷப்பின் முன்பாக மண்டியிட்டான்.



# சிவப்பு அங்கி

கோட்டயம் புஷ்பநாத்

தமிழில்: சிவன்